
தமிழ் அர்த்தத்துடன் கூடிய

ஸ்ரீமத்கீதாபாஷியம்.

இரண்டாவது பாகம்.

(7-வது முதல் 12-வது அத்தியாயம் உள்பட)



கும்பகோணம்

ஸ்ரீ ஜனார்த்தன பிரிண்டிங் ஒர்க்ஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

லை] 1929 [ரூ. 1—0—0

குறிப்பு.

(2-வது அத்தியாயம் 28-வது சுலோகம் 43-வது பக்கம் தமிழ் உரைக்குப் பதிலாக கீழ் அச்சிட்டிருப்பதைத் வைத்துக் கொள்ள வேண்டியது)

மனிதன் முதலான உடம்புக்கு இப்போது இருக்கும் உருவம் அதைவிட்டு பிரியாத ஸ்வபாவமல்ல அப்படியே இதற்கு முன்னே இருந்த இருப்பும், இதற்குப் பிற்பாடு வரப்போகிற இருப்பும் ஸ்வபாவமல்ல. ஆகையால் அதற்கு மாறுவது என்பதுதான் ஸ்வபாவம். ஆகையால் இந்த உடம்புக்கு வரப்போகிற மாறுதலைப்பற்றி கவலைப்படக்கூடாது. இந்த உடம்பு உண்டானது தானே. இதற்கு முன்பு இது ஒருவிதமாக இருந்திருக்குமே. அதை இதற்கு ஸ்வபாவமென்று சொல்லுகிறாயோ? அப்படிச் சொன்னால், அந்தஸ்வபாவம்போய், இப்படி உடம்பாக ஆனதற்கு நீ அழவேணும். இப்போது இருக்கும் உருவமே ஸ்வபாவம்; ஒருவித இடஞ்சலால் மாறுதல் வருகிறது என்று சொன்னால், அந்த இடஞ்சல் தடுக்க முடியாததாக இருந்தால், அது வந்தே தீரும். துக்கப்படுவதில் பிரயோஜனமில்லை. மேலும் அந்த இடஞ்சல் போகாதோ. போகக்கூடியதுதானே. அதுபோனால் ஸ்வபாவமான இந்த உடம்பு உருவம் வருகிறது; அழுவானேன். வஸ்துக்களுக்கு மாறுதலே ஸ்வபாவம். ஒருவன் அதைப் பொறுக்காமல் வருத்தப்பட்டால், அவன் எல்லா வஸ்துக்களையும் பார்த்து அழுது கொண்டேதான் இருப்பன். இப்போது புதிதாய் அழவேண்டியதற்கு என்ன காரணம்.

விஷய அட்டவணை.

ஏழாவது அத்தியாயம். ச்லோகம்.

8-வது அத்தியாயம்.

9-வது அத்தியாயம்.

10-வது அத்தியாயம்

11-வது அத்தியாயம்.

12-வது அத்தியாயம்.



𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌾𑌯 𑌨𑌮𑌃 ॥

𑌸𑌪𑍍𑌤𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

𑌅𑌥 — 𑌪𑍍𑌰𑌥𑌮𑍇𑌨𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌷𑌟𑍍𑌕𑍇𑌨 𑌪𑌰𑌮𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌭𑍂𑌤𑌸𑍍𑌯 𑌪𑌰𑌸𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌨𑌿𑌰𑌵𑌦𑍍𑌯𑌸𑍍𑌯 𑌨𑌿𑌖𑌿𑌲𑌜𑌗𑌦𑍇𑌕𑌕𑌾𑌰𑌣𑌸𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌸𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌸𑍍𑌯 𑌸𑌤𑍍𑌯𑌸𑌂𑌕𑌲𑍍𑌪𑌸𑍍𑌯 𑌮𑌹𑌾𑌵𑌿𑌭𑍂𑌤𑍇𑌃 𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍋 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍍𑌯𑍁𑌪𑌾𑌯𑌭𑍂𑌤𑌂 𑌤𑌦𑍁𑌪𑌾𑌸𑌨𑌂 𑌵𑌕𑍍𑌤𑍁𑌂 𑌤𑌦𑌙𑍍𑌗𑌭𑍂𑌤𑌂 𑌆𑌤𑍍𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌕𑌰𑍍𑌮𑌾𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑌸𑌾𑌧𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍁𑌃 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌗𑌾𑌤𑍍𑌮𑌨𑍋 𑌯𑌾𑌥𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌦𑌰𑍍𑌶𑌨𑌮𑍁𑌕𑍍𑌤𑌮𑍍 ।

𑌇𑌦𑌾𑌨𑍀𑌂 𑌮𑌧𑍍𑌯𑌮𑍇𑌨 𑌷𑌟𑍍𑌕𑍇𑌨 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌭𑍂𑌤𑌪𑌰𑌮𑌪𑍁𑌰𑍁𑌷𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌂 𑌤𑌦𑍁𑌪𑌾𑌸𑌨𑌂 𑌚 𑌭𑌕𑍍𑌤𑌿𑌶𑌬𑍍𑌦𑌵𑌾𑌚𑍍𑌯𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 । 𑌤𑌦𑍇𑌤𑌦𑌾𑌹 "𑌯𑌤𑌃 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑍍𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌯𑍇𑌨 𑌸𑌰𑍍𑌵𑌮𑌿𑌦𑌂 𑌤𑌤𑌮𑍍 । 𑌸𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌤𑌮𑌭𑍍𑌯𑌰𑍍𑌚𑍍𑌯 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌵𑌿𑌨𑍍𑌦𑌤𑌿 𑌮𑌾𑌨𑌵𑌃" 𑌇𑌤𑍍𑌯𑌾𑌰𑌭𑍍𑌯 "𑌵𑌿𑌮𑍁𑌚𑍍𑌯 𑌨𑌿𑌰𑍍𑌮𑌮𑌃 𑌶𑌾𑌨𑍍𑌤𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌭𑍂𑌯𑌾𑌯 𑌕𑌲𑍍𑌪𑌤𑍇 । 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌭𑍂𑌤𑌃 𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑌾𑌤𑍍𑌮𑌾 𑌨 𑌶𑍋𑌚𑌤𑌿 𑌨 𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑌤𑌿 । 𑌸𑌮𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁 𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌿𑌂 𑌲𑌭𑌤𑍇 𑌪𑌰𑌾𑌮𑍍" 𑌇𑌤𑌿 𑌸𑌂𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌯 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇 । 𑌉𑌪𑌾𑌸𑌨𑌂 𑌤𑍁 𑌭𑌕𑍍𑌤𑌿𑌰𑍂𑌪𑌾𑌪𑌨𑍍𑌨𑌮𑍇𑌵 𑌪𑌰𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍍𑌯𑍁𑌪𑌾𑌯𑌭𑍂𑌤𑌮𑌿𑌤𑌿 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌵𑌾𑌕𑍍𑌯𑌸𑌿𑌦𑍍𑌧𑌮𑍍 । "𑌤𑌮𑍇𑌵 𑌵𑌿𑌦𑌿𑌤𑍍𑌵𑌾𑌽𑌤𑌿𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌮𑍇𑌤𑌿, 𑌤𑌮𑍇𑌵𑌂 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑌮𑍃𑌤 𑌇𑌹 𑌭𑌵𑌤𑌿" 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌨𑌾𑌭𑌿𑌹𑌿𑌤𑌂 𑌵𑍇𑌦𑌨𑌮𑍍 - "𑌆𑌤𑍍𑌮𑌾 𑌵𑌾 𑌅𑌰𑍇 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌵𑍍𑌯𑌃 ...𑌨𑌿𑌦𑌿𑌧𑍍𑌯𑌾𑌸𑌿𑌤𑌵𑍍𑌯𑌃, 𑌆𑌹𑌾𑌰𑌶𑍁𑌦𑍍𑌧𑍌 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌶𑍁𑌦𑍍𑌧𑍌 𑌧𑍍𑌰𑍁𑌵𑌾 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌃 । 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌲𑌮𑍍𑌭𑍇 𑌸𑌰𑍍𑌵𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑍀𑌨𑌾𑌂 𑌵𑌿𑌪𑍍𑌰𑌮𑍋𑌕𑍍𑌷𑌃, 𑌭𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 𑌹𑍃𑌦𑌯𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑌿𑌶𑍍𑌛𑌿𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌸𑌂𑌶𑌯𑌾𑌃 । 𑌕𑍍𑌷𑍀𑌯𑌨𑍍𑌤𑍇 𑌚𑌾𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌦𑍃𑌷𑍍𑌟𑍇 𑌪𑌰𑌾𑌵𑌰𑍇" 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌭𑌿𑌰𑍈𑌕𑌾𑌰𑍍𑌥𑍍𑌯𑌾𑌤𑍍 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌸𑌨𑍍𑌤𑌾𑌨𑌰𑍂𑌪𑌂 𑌦𑌰𑍍𑌶𑌨𑌸𑌮𑌾𑌨𑌾𑌕𑌾𑌰𑌂 𑌧𑍍𑌯𑌾𑌨𑍋𑌪𑌾𑌸𑌨𑌶𑌬𑍍𑌦𑌵𑌾𑌚𑍍𑌯𑌮𑌿𑌤𑍍𑌯𑌵𑌗𑌮𑍍𑌯𑌤𑍇 । 𑌪𑍁𑌨𑌶𑍍𑌚 '𑌨𑌾𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌪𑍍𑌰𑌵𑌚𑌨𑍇𑌨 𑌲𑌭𑍍𑌯𑍋 𑌨 𑌮𑍇𑌧𑌯𑌾 𑌨 𑌬𑌹𑍁𑌨𑌾

[illegible]

[illegible]

ஜீவன்கள் அழிவில்லாத ஸுகத்தை அடைவதற்காக, மஹாலக்ஷ்மியோடு கூடின நாராயணனை அடைய வேண்டியது. அதற்காக அவனைத் தியானம் செய்ய வேண்டியது. அந்தத் தியானத்தைச் சொல்லுவதற்காக, ஸ்ரீ கிருஷ்ணபகவான் முதல் ஆறு அத்தியாயங்களினாலே அந்தத் தியானத்திற்கு உதவியான ஜீவாத்மாவின் உள்ளபடி பார்வையையும், ஆத்மாவை உள்ளபடி அறிந்து கர்மங்களைச் செய்வதினால் அந்தப் பார்வை உண்டாகும் என்பதையும் சொன்னார். இப்போது நடுவிலிருக்கும் ஆறு அத்தியாயங்களாலே அடைய வேண்டிய பகவானுடைய ஸ்வரூபத்தையும், பக்தி யென்று சொல்லப்படுகிற தியானத்தையும் சொல்லுகிறார். இந்த ஸங்கதியை 18-வது அத்தியாயத்தில் 46-வது சுலோகம் முதல் ஒன்பது சுலோகங்களினாலே சுருக்கிச் சொல்லப்போகிறார்.

உபநிஷத்துக்களில் "பகவானைப்பற்றின அறிவினால் அவனை அடைய வேண்டும்" என்று சொல்லியிருக்கிறது. இன்னுமொரு இடத்தில் நினைவினால் என்று இருக்கிறது. இன்னுமொரு இடத்தில் இடைவிடாத நினைவினால் என்று இருக்கிறது. வேறு இடத்தில பகவானைப்பார்ப்பதினால் என்று இருக்கிறது. அறிவு, நினைவு, இடைவிடாத நினைவு, பார்வை-என்கிற சொற்களுக்கு ஒரேபொருள் கொள்ள வேண்டியது. ஏனென்றால், வேதத்தில் "பசுவை (நாலுகாலுள்ள பிராணியை)க் கொன்று யாகம் செய்ய வேண்டியது" என்று சொல்லியிருக்கிறது. இன்னுமொரு இடத்தில் "வெள்ளாட்டினுடைய வயிற்றிலிருக்கும் வபையை ஹோமம் பண்ணுவதற்குத் தகுந்த மந்திரத்தைச் சொல்லு என்று அத்வர்யு ஹோதாவை ஏவுகிறான்" என்று சொல்லியிருக்கிறது. அதினால் பசு என்கிற சொல்லுக்கு வெள்ளாடு என்று பொருள் என்று மீமாம்ஸையில் நிர்மானிக்கப்பட்டிருக்கிறது. இதை ஸாமான்ய—விசேஷ நியாயம் என்று வடமொழியில் சொல்லுகிறார்கள். அதாவது பொதுவான சொல்லுக்கு ஒரு காரணத்தைக்கொண்டு அதின் பொருளில் அடங்கிய ஒரு வஸ்துவை மாத்திரம் பொருளாகக் கொள்ளுவது. அந்த நியாயப்படி இங்கே பொருள் கொள்ள வேண்டும். அறிவு என்பது பொதுவான சொல். அதன் பொருளில் அடங்கினது நினைவு என்பது. அதுவும் பொதுவான சொல். அதில் அடங்கினது இடைவிடாத நினைவு. அது கண்ணாலே பார்ப்பதுபோல் தெளிவாயிருக்கலாம். அல்லது தெளிவில்லாமலிருக்கலாம். ஆகையினாலே இந்தப் பொதுவான சொற்களுக்கெல்லாம் கண்ணாலே பார்ப்பதுபோல் தெளிவாய், இடைவிடாமல் நினைப்பது என்று பொருள்.

மேலும் வேதத்தில் ஒரு இடத்தில், பெரியவர்களிடத்தில் பகவானைப்பற்றி கேட்க வேணுமென்றும், கேட்ட ஸங்கதியை யோசிக்க வேணுமென்றும், பிறகு பகவானைத் தியானம் செய்ய வேணுமென்றும், தியானத்தினால் அவனை அடையலாமென்றும் சொல்லியிருக்கிறது. இன்னொரு இடத்தில் "பகவானைக் கேட்பதினாலும், யோசிப்பதினாலும், தியானம் பண்ணுவதினாலும், அடைய முடியாது. பின்னை எப்படி அடையலாமென்றால், அவன்

எவனைக்கூப்பிடுகிறானோ, அவனால்தான் அவனை அடைய முடியும். அவனுக்குத்தான் அவன் தன்னைக் காட்டுவான்'' என்று சொல்லியிருக்கிறது. இப்படி வேதம் சொல்லுகிறதே. நாம் எதைச்செய்கிறது? நாம் தியானம் செய்கிறதா? அல்லது அவனாக நம்மைக்கூப்பிடுவானென்று ஒன்றும் செய்யாமலிருக்கிறதா என்று ஸந்தேஹம் உண்டாகிறது. இந்த ஸந்தேஹத்தைப் பெரியோர்கள் இரண்டு இடங்களையும் ஒட்டி தீர்த்திருக்கிறார்கள். உலகத்தில் ராமன் என்பவன் கிருஷ்ணன் என்பவனை எப்போது கூப்பிடுவான். அவனுக்குக் கிருஷ்ணனிடத்தில் மிகுந்த பிரீதி இருந்தால் தான் கூப்பிடுவான். ராமனுக்கு எப்போது மிகுந்த பிரீதியிருக்கும். கிருஷ்ணனுக்கு ராமனிடத்தில் மிகுந்த பிரீதி இருந்தால் தான் இருக்கும். ஆகையால் நமக்கு பகவானுடைய இடைவிடாத நினைவு மாத்திரம் போதாது. நமக்குப் பிள்ளை பெண்டாட்டிகளிடம் பிரீதி இருப்பதுபோல், பிரீதியோடே நாம் பகவானை இடைவிடாமல் நினைத்தால், அவனுக்கு நம்மிடத்தில் அளவில்லாத பிரீதி உண்டாகும். அப்போது அவன் நம்மைக் கூப்பிடுவான். ஆகையால் பிரீதியுடன் தியானம்பண்ணினால், பகவானை அடையலாம் என்று பொருள் கொள்ள வேணும். அப்படிக் கொண்டால் எல்லாச் சொற்களுக்கும் பொருத்தமான பொருள் ஏற்படும்.

பகவானுக்கு நம்மிடத்தில் அளவில்லாத பிரீதியிருக்கிறது. இது இன்றைக்கோ நேற்றைக்கோ உண்டானதன்று. இதுமுதல் என்று இல்லாத காலமாய் இருக்கிறது. நாமோ அவனை அநாதி காலமாய் தெரிந்து கொள்ளவேயில்லை. அதுவும் தவிர, அவனுக்குப் பிடிக்காத—மிகுந்த வருத்தத்தைக் கொடுக்கக்கூடிய—வேலைகளைக் கணக்கில்லாமல் செய்திருக்கிறோம். இப்பவும் செய்கிறோம். இப்படி யிருக்கையில், பெரியோர்கள் மூலமாய் அவனைத் தெரிந்து, அவனிடத்தில் கொஞ்சம் பிரீதியை நாம் பண்ணினால், அவன் தயையினாலே நம்மிடத்தில் அளவில்லாத பிரீதியைப் பண்ணி, நம்மைத் தன்னிடம் அழைத்துக் கொண்டு போகிறான். இப்படிப் பிரீதியுடன், கண்ணாலே பார்ப்பதுபோல் தெளிவாய், இடைவிடாமல் நினைப்பதை பக்தி யென்றும், பக்தி யோகம் என்றும் சொல்லுகிறது.

ஏழாவது அத்தியாயத்தில் தியானம் பண்ண வேண்டிய பகவானுடைய ஸ்வரூபத்தின் உண்மையையும், உடம்புடன் சேர்ந்திருப்பதால் அந்த உண்மை நமக்கு மறைந்திருக்கிறது என்பதையும், அந்த மறைவு நீங்குவதற்கு பகவானைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளவேணுமென்பதையும், அவனைத் தியானம் செய்கிறவர்களின் பிரிவுகளையும், அவர்களில் பகவான் தான் வேணுமென்று தியானம் செய்கிறவர்களின் உயர்த்தியையும் சொல்லுகிறார்.

ஸ்ரீபகவாநுவாச—

மய்யாஸக்தமநா: பார்த்த யோகம் யுஞ்ஜந் மதாஸ்ரய: ।
அஸம்ஸயம் ஸமக்ரம் மாம் யதா ஜ்ஞாஸ்யஸி தச்ச்ருணு ॥

மயி ஆதிசயேந ஸக்தமநா:-மத்ப்ரியத்வாதிசயேந மத்ஸ்வரூபேண மத்குணைஸ்சேஷ்டிதேந மத்விபூத்யா ச விஸ்லேஷே ஸதி தத்க்ஷணாதேவ விஸீர்யமாணஸ்வபாவதயா மயி ஸுஸங்கமநா:, மதாஸ்ரய:-ததா ஸ்வயம் ச மயா விநா விஸீர்யமாணதயா மதாஸ்ரய: மதேகாதார:, மத்யோகம் யுஞ்ஜந்-யோகம் யுஞ்ஜாந:, யோகவிஷயபூதம் மாம் அஸம்ஸயம்-நிஸ்ஸம்ஸயம் ஸமக்ரம்-ஸகலம் யதா ஜ்ஞாஸ்யஸி - யேந ஜ்ஞாநேந ஜ்ஞாஸ்யஸி। தத்-ஜ்ஞாநம், மயோச்யமாநம் ஸ்ருணு ॥ ௧ ॥

பகவான் சொல்லுகிறார்.

என்னிடத்தில் உயர்ந்தபிரீதி இருப்பதினாலே, என்னுடைய ஸ்வரூபத்தையும், என் குணங்களையும், நான்செய்த லீலைகளையும், என்னுடைய சொத்துக்களையும் விட்டுப் பிரிந்தால், அரைக்ஷணம் கூடத் தாங்கமுடியாமலிருப்பதால், எப்போதும் என்னையே நினைத்துக்கொண்டும், என்னால் எப்பொழுதும் தூக்கப்பட்டும் இருந்து கொண்டு, என்னைத் தியானம் செய்ய ஆரம்பிப்பதற்காக ஸந்தேஹமில்லாமல் என்னுடைய எல்லாஸங்கதிகளையும், எப்படிச்சொன்னால் நீ அறிவாயோ, அந்தமாதிரி சொல்லுகிறேன். நீ மிகவும் ஜாக்கிரதையாய்க் கேள். [1]

ஜ்ஞாநம் தேঽஹம் ஸவிஜ்ஞாநமிதம் வக்ஷ்யாம்யஶேஷத: |
யஜ்ஜ்ஞாத்வா நேஹ பூ⁴யோঽந்யஜ்ஜ்ஞாதவ்யமவஶிஷ்யதே ||

அஹம் தே மத்³விஷயமித³ம் ஜ்ஞாநம் விஜ்ஞாநேந ஸஹா ஶேஷதோ வக்ஷ்யாமி। விஜ்ஞாநம்-விவிக்தாகாரவிஷயம் ஜ்ஞாநம்। யதா²ஹம் மத்³வ்யதிரிக்தாத் ஸமஸ்தாச்சித³சித்³வஸ்துஜாதாத³கி²லஹேய ப்ரத்யநீகதயாঽநந்தகல்யாணகு³ணக³ணாகரதயா ச விவிக்த: - தேந விவிக்தவிஷய ஜ்ஞாநேந ஸஹ மத்³விபூ⁴திவிஷயஜ்ஞாநம் வக்ஷ்யாமி। கிம்ப³ஹுநா? யஜ்ஜ்ஞாநம் ஜ்ஞாத்வா மயி புநரந்யஜ்ஜ்ஞாதவ்யம் நாவஶிஷ்யதே || ||௨||

நான் என்னைப் பொதுவாகவும், விசேஷமாகவும் சொல்லு கிறேன். விசேஷமாவது—உலகத்தில் இருக்கும் அறிவுள்ள ஜீவன் களோ, அறிவில்லாத வஸ்துக்களோ, அவைகளைக் காட்டிலும் நான் வேறு ஜாதியானவன். இருட்டை ஸூர்யன் போக்குவது போல், எல்லாக் கெடுதிகளையும் போக்கக் கூடியவன். எல்லையில் லாத கணக்கில்லாத உயர்ந்த குணங்கள் என்னிடத்திலிருக்கின் றன. எல்லா உலகங்களும் என்னுடைய சொத்து. இந்த மாதிரி ஸங்கதிகள். அதிகமாகச் சொல்லுவானேன்? மறுபடியும் என்னைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டிய ஸங்கதி மீதியில்லாமல் சொல் லுகிறேன். [2]

அத² —வக்ஷ்யமாணஸ்ய ஜ்ஞாநஸ்ய து³ர்லப⁴தாமாஹ —

மநுஷ்யாணாம் ஸஹஸ்ரேஷு கஶ்சித்³யததி ஸித்³த⁴யே |
யததாமபி ஸித்³தா⁴நாம் கஶ்சிந்மாம் வேத்தி தத்த்வத: || ||௩||

மநுஷ்யா: ஶாஸ்த்ராதி⁴காரயோக்³யா:, தேஷாம் ஸஹஸ்ரேஷு கஶ்சிதே³வ ஸித்³தி⁴பர்யந்தம் யததே | ஸித்³தி⁴பர்யந்தம் யதமாநாநாம் ஸஹஸ்ரேஷு கஶ்சிதே³வ மாம் விதி³த்வா மத்த: ஸித்³த⁴யே யததே| விது³ஷாம் ஸஹஸ்ரேஷு கஶ்சிதே³வ தத்த்வதோ யதா²வஸ்தி²தம் மாம் வேத்தி, நகஶ்சித்³த்வதிவ்யாய:|. வஸுதே³வ: ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுது³ர்லப⁴:, மாம் து வேத³ ந கஶ்சந" இதி ஹி வக்ஷ்யதே || ||௩||

அவ—ஒருவனுக்கு நான் சொல்லப்போகிற அறிவுவருகிறது வருத்தமென்று சொல்லுகிறார்.

சாஸ்திரத்தில் சொல்லிய வேலைகளை நடத்தக்கூடிய ஆயிரம் பேர்களில் ஒருவன்தான் பலன் கிடைக்கும் வரையில் ஒரு வேலையைச் செய்கிறான். அப்படி வேலை செய்கிற ஆயிரம் பேர்களில் ஒருவன்தான் என்னை அறிந்து, என்னிடத்தில் இருந்து பலனை அடைவதற்காகப் பாடுபடுகிறான். என்னை அறிந்த ஆயிரம்பேர்களில் ஒருவன்தான் என்னை 1 உள்ளபடி அறிகிறான்—என்று சொன்னார். இப்படிச் சொன்னதிற்கு இப்படிப்பட்ட ஒருவனும் இல்லையென்று கருத்து. அதாவது அரிது என்று கருத்து. "அப்படிப்பட்ட மஹாத்மா (ரொப்பப் பெரியவன்) அகப்படுவது மிகவும் அரிது" என்றும், "என்னை ஒருவனும் அறியவில்லை" என்றும் மேலே சொல்லப் போகிறார். (சுலோகம்—19-26) [3]

𑌭𑍂𑌮𑌿𑌰𑌾𑌪𑍋𑌽𑌨𑌲𑍋 𑌵𑌾𑌯𑍁𑌃 𑌖𑌂 𑌮𑌨𑍋 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍇𑌵 𑌚 ।
𑌅𑌹𑌂𑌕𑌾𑌰 𑌇𑌤𑍀𑌯𑌂 𑌮𑍇 𑌭𑌿𑌨𑍍𑌨𑌾 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌰𑌷𑍍𑌟𑌧𑌾 ॥ [௪]

𑌅𑌸𑍍𑌯 𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌰𑌾𑌨𑌨𑍍𑌤𑌭𑍋𑌗𑍍𑌯𑌭𑍋𑌗𑍋𑌪𑌕𑌰𑌣𑌭𑍋𑌗𑌸𑍍𑌥𑌾𑌨𑌰𑍂𑌪𑍇𑌣𑌾𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌸𑍍𑌯 𑌜𑌗𑌤𑌃 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌰𑌿𑌯𑌂 𑌗𑌨𑍍𑌧𑌾𑌦𑌿𑌗𑍁𑌣𑌕𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑌪𑍍𑌤𑍇𑌜𑍋𑌵𑌾𑌯𑍍𑌵𑌾𑌕𑌾𑌶𑌾𑌦𑌿𑌰𑍂𑌪𑍇𑌣 𑌮𑌨𑌃𑌪𑍍𑌰𑌭𑍃𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌰𑍂𑌪𑍇𑌣 𑌮𑌹𑌦𑌹𑌂𑌕𑌾𑌰𑌰𑍂𑌪𑍇𑌣 𑌚𑌾𑌷𑍍𑌟𑌧𑌾 𑌭𑌿𑌨𑍍𑌨𑌾 𑌮𑌦𑍀𑌯𑍇𑌤𑌿 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 ॥ [௪]

இந்த ஆச்சரியமான எல்லையில்லாத ஜகத்தானது அநுபவிக்கத் தகுந்த வஸ்துக்களாகவும், அநுபவத்துக்கு உதவிகளாகவும், அநுபவத்துக்கு வேண்டிய இடங்களாகவும் இருக்கிறது அதையுண்டு பண்ணுகிற பூமி, ஜலம், நெருப்பு, காற்று, ஆகாசம், மனது முதலான இந்திரியங்கள், மஹத், அஹங்காரம்—இப்படி எட்டு விதமாய் பிரிந்திருக்கிற 2 பிரகிருதியானது

---

1. சுலோகத்தில் பின்பாதி ஒரேவாக்கியமாயிருந்தாலும், அதை இரண்டு வாக்கியமாக வியாக்கியானத்தில் பண்ணியிருக்கிறது. ஏனென்றால், பொதுவாக அறிந்த பிற்பாடுதானே உள்ளபடி அறிவது கூடும்.

2. பிரகிருதி என்பது ஸத்வம், ரஜஸ்ஸு, தமஸ்ஸு என்கிற மூன்று குணங்களையுடைய வஸ்து. அது சுத்தஸத்வம் இருக்குமிடம் தவிர, மற்ற இடங்களில் எங்கும் நிறைந்திருக்கிறது. அதினுடைய

1 என்னுடையது என்றறிநீ. [4]

மூன்று குணங்களும் ஸமமாயிருக்கும்போது, பிரளயம் என்கிற இருப்பு. ஒருகுணம் மேலிட்டு மற்றவைகள் குறைந்து இருக்கும்போது ஜகத்து உண்டாகிறது. ஜகத்து உண்டாகும் விதமாவது:— முதலில் பிரகிருதி மஹத்து என்கிற வஸ்துவாக ஆகிறது. மஹத்து அஹங்காரமாக ஆகிறது. அந்த அஹங்காரம் மூன்று பிரிவாக இருக்கிறது, ஸத்வகுணம் மேலிட்டதும், ரஜஸ்ஸு மேலிட்டதும், தமஸ்ஸு மேலிட்டதும் என்று. ஸத்வகுணம் மேலிட்டதிலிருந்து மனது முதலான பதினொன்று இந்திரியங்கள் உண்டாகின்றன. (7-வது பக்கத்தில் 1-உகுறிப்பைப்பார்க்க). தமோகுணம் மேலிட்டதிலிருந்து ஆகாசமும், அதிலிருந்து காற்றும், காற்றிலிருந்து நெருப்பும், நெருப்பிலிருந்து ஜலமும், ஜலத்திலிருந்து பூமியும் உண்டாகின்றன. இவைகளைப் பஞ்சபூதங்கள் என்று சொல்லுகிறது. அஹங்காரமானது ஆகாசமாக மாறும்போது, நடுவில் சப்த தந்மாத்திரம் என்கிற ஒரு வஸ்துவாக ஆகி ஆகாசமாக ஆகிறது. அப்படியே மற்றநாலுபூதங்களும் அந்தந்த தந்மாத்திரங்கள்வழியாக உண்டாகின்றன. ஐந்துபூதங்கள், ஐந்து தந்மாத்திரங்கள், பதினொன்று இந்திரியங்கள், மஹத், அஹங்காரம்—ஆக இருபத்து மூன்று தத்வங்கள். இவைகளுக்குக் காரணமான பிரகிருதியையும்சேர்த்து இருபத்துநாலுதத்வங்கள் என்று சொல்லுகிறது. சுலோகத்தில் காரணமான பிரகிருதியை எட்டுவிதமாய் பிரித்திருக்கிறது என்று சொன்னது எப்படியென்றால், பதினொன்று இந்திரியங்களை ஒருவகுப்பாகப்பண்ணியும், தந்மாத்திரங்களைப் பூதங்களுடன் சேர்த்தும் எட்டு என்கிற கணக்கு ஏற்படுகிறது. இவைகள் சேர்ந்து பலவிதமான இந்த ஜகத்து உண்டாகிறது. காரணமான இவைகளை உண்டுபண்ணுவதை ஸமஷ்டி-ஸ்ருஷ்டி என்றும், இவைகளிலிருந்துபல்விதமாய் தோன்றுகிற ஜகத்தை உண்டுபண்ணுவதை வியஷ்டி-ஸ்ருஷ்டி என்றும் சொல்லுகிறது. ஸமஷ்டியும், வியஷ்டியும் இன்னதென்று உதாரணத்தைக் கொண்டு தெரிந்து கொள்ளலாம் சமையல் பண்ணுகிறவன் தனித்தனியாயிருக்கும் உப்பு, புளி, மிளகாய், கடுகு, வெந்தயம், காயம், கரிகாய் முதலான ஸாமான்களைப் பல விதமாய்ச் சேர்த்து, குழம்பு ரஸம், கரி, என்று பெயருள்ள பதார்த்தங்களாகச் செய்கிறான். தனித்தனியாய் இருந்தவைகளை ஸமஷ்டி (பொது) என்றும், அவைகளைச் சேர்த்து உண்டானதை வியஷ்டி-(பிரிந்தவைகள்) என்றும் சொல்லுகிறது. இதுபோல ஒன்றோடொன்று சேராத பூமி முதலானவைகள் ஸமஷ்டி. அவைகளைச் சேர்த்து உண்டான ஜகத்து வியஷ்டி.

1. பிரகிருதி என்னுடையது என்று சொல்வதாலே, அது பகவானைக்காட்டிலும் வேறுஎன்று ஏற்படுகிறது. உலகத்தில் ஸொத்து வேறு, ஸொத்தையுடையவன் வேறு என்று பார்க்கிறோம். அப்படியே பகவான் வேறு, பிரகிருதி வேறு.

𑌅𑌪𑌰𑍇𑌯𑌮𑌿𑌤𑌸𑍍𑌤𑍍𑌵𑌨𑍍𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌮𑍇 𑌪𑌰𑌾𑌮𑍍 ।
𑌜𑍀𑌵𑌭𑍂𑌤𑌾𑌂 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋 𑌯𑌯𑍇𑌦𑌂 𑌧𑌾𑌰𑍍𑌯𑌤𑍇 𑌜𑌗𑌤𑍍 ॥𑍫॥

𑌇𑌯𑌂 𑌮𑍇𑌽𑌪𑌰𑌾 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌃। 𑌇𑌤𑌸𑍍𑌤𑍍𑌵𑌨𑍍𑌯𑌾𑌂-𑌇𑌤𑍋𑌽𑌚𑍇𑌤𑌨𑌾𑌯𑌾𑌶𑍍𑌚𑍇𑌤𑌨𑌭𑍋𑌗𑍍𑌯𑌭𑍂𑌤𑌾𑌯𑌾𑌃 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍇𑌰𑍍𑌵𑌿𑌸𑌜𑌾𑌤𑍀𑌯𑌾𑌕𑌾𑌰𑌾𑌂, 𑌜𑍀𑌵𑌭𑍂𑌤𑌾𑌂 𑌪𑌰𑌾𑌂-𑌤𑌸𑍍𑌯𑌾 𑌭𑍋𑌕𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑍇𑌨 𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑌭𑍂𑌤𑌾𑌂 𑌚𑍇𑌤𑌨𑌰𑍂𑌪𑌾𑌂 𑌮𑌦𑍀𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿। 𑌯𑌯𑍇𑌦𑌮𑍍-𑌅𑌚𑍇𑌤𑌨𑌂 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌂 𑌜𑌗𑌦𑍍𑌧𑌾𑌰𑍍𑌯𑌤𑍇 ॥ ॥𑍫॥

இது என்னுடைய 1 தாழ்ந்த 2 பிரகிருதி. அறிவுள்ள ஜீவன்களால் அநுபவிக்கப்படுகிற அறிவில்லாத இந்தப் பிரகிருதியைக் காட்டிலும் வேறான—அதை அநுபவிப்பதாலே உயர்ந்ததான அறிவுள்ள ஜீவன்களை 3 என்னுடைய உயர்ந்த மற்றொரு பிரகிருதி

---

1. ஜீவன்கள் அறிவில்லாத வஸ்துக்களை அநுபவிக்கிறார்கள். அநுபவிக்கிற ஜீவன்களை உயர்ந்தவர்களாகவும், அநுபவிக்கப்படுகிற அறிவில்லாத வஸ்துக்களைத் தாழ்ந்தனவாகவும் சுலோகம் சொல்லுகிறது.

2. பிரகிருதி என்கிற சொல்லுக்குக் காரணம் என்று பொருள். அறிவுள்ள ஜீவன்கள்—அறிவு இல்லாத வஸ்துக்கள் இவைகளிரண்டும் சேர்ந்து உலகம் உண்டாகிறது. ஆதலால் உலகத்தை காரியம்(உண்டாகிறது)என்றும், இவை யிரண்டையும் காரணம(உண்டுபண்ணுகிறது) என்றும் சொல்லுகிறது. அவைகளில் மாறுகிற—அறிவில்லாத வஸ்துக்களை உண்டாகிறது என்று சொல்லலாம். மாறுதலும் அறிவுமில்லாத அறிவுள்ள ஜீவன்களை உண்டாகிறதென்றும் உண்டுபண்ணுகிற தென்றும் சொல்லலாமா? என்றால், பதில்—ஜீவன்களுக்கு இரண்டு விதமான இருப்பு இருக்கிறது. பிரளய காலத்தில் எல்லாரும் ஒரேமாதிரியாகவும், அறிவில்லாத வஸ்துக்களைப் போலவும் இருக்கிறார்கள். ஸிருஷ்டி காலத்தில் வெவ்வேறு உடம்புகளோடும், இந்திரியங்களோடும் சேருகிறார்கள். இந்த சேர்க்கையாலே அவர்களுடைய அறிவிலும், அவர்கள் செய்யும் வேலைகளிலும், அவர்களுடைய அநுபவங்களிலும், பல வேறுபாடுகள் இருக்கின்றன. இந்த இருப்பு வியஷ்டியான இருப்பு. முன் இருப்பு ஸமஷ்டி இருப்பு. முன் இருப்பு காரணம். பின் இருப்பு காரியம் (செய்யப்பட்டது). காரணம் என்பது காரியத்துக்கு முன் இருக்கும் இருப்பு.

3. இதனாலே பகவான் ஜீவன்களைக் காட்டிலும் வேறு என்று ஏற்படுகிறது. முன் சுலோகம் அவர் ஜகத்தைக் காட்டிலும் வேறு

யாக நினை. அந்த ஜீவன்களால்தான் இந்த அறிவில்லாத லோகங்கள் 1 தாக்கப்படுகின்றன. [5]

ஏதத்₃யோநீநி பூ₄தாநி ஸர்வாணீத்யுபதா₄ரய ।
அஹம் க்ருத்ஸ்நஸ்ய ஜக₃த꞉ ப்ரப₄வ꞉ ப்ரலயஸ்ததா₂ ॥ ॥௬॥

ஏதத₃சேதநசேதநஸமஷ்டிரூபமதீ₃யப்ரக்ருதித்₃வயயோநீநி ப்₃ரஹ்மாதி₃ஸ்தம்ப₃பர்யந்தோச்சாவசபா₄வேநாவஸ்தி₂தாநி சித₃சின்மிஶ்ராணி மதீ₃யாநி ஸர்வாணி பூ₄தாநீத்யுபதா₄ரய। மதீ₃யப்ரக்ருதித்₃வயயோநீநி ஹி தாநி மதீ₃யாந்யேவ। ததா₂ ப்ரக்ருதித்₃வயயோநித்வேந க்ருத்ஸ்நஸ்ய ஜக₃த꞉ தயோர்த்₃வயோரபி மத்₃யோநித்வேந மதீ₃யத்வேந ச க்ருத்ஸ்நஸ்ய ஜக₃த꞉ அஹமேவ ப்ரப₄வோ ஹமேவ ச ப்ரலயோ ஹமேவ ச ஶேஷீத்யுபதா₄ரய । தயோஶ்சித₃சித்ஸமஷ்டிபூ₄தயோ꞉ ப்ரக்ருதிபுருஷயோரபி பரமபுருஷயோநித்வம் ஶ்ருதிஸ்ம்ருதிஸித்₃த₄ம்। 'மஹாநவ்யக்தே லீயதே। அவ்யக்தமக்ஷரே லீயதே। அக்ஷரம் தமஸி லீயதே। தம꞉ பரே தே₃வ ஏகீ ப₄வதி', 'விஷ்ணோ꞉ ஸ்வரூபாத் பரதோதி₃தே த்₃வே ரூபே ப்ரதா₄நம் புருஷஶ்ச விப்ர', 'ப்ரக்ருதிர்யா மயா ப்ரோக்தா வ்யக்தாவ்யக்தஸ்வரூபிணீ । புருஷஶ்சாப்யுபா₄வேதௌ லீயேதே பரமாத்மநி। பரமாத்மா ச ஸர்வேஷாமாதா₄ர꞉ பரமேஶ்வர꞉ । விஷ்ணுநாமா ஸ வேதே₃ஷு வேதா₃ந்தேஷு ச கீ₃யதே' இத்யாதி₃கா ஹி ஶ்ருதிஸ்ம்ருதய꞉ ॥ ॥௬॥

என்று சொல்லிற்று. ஆகையாலே அவர் அறிவுள்ளதோ அறிவில்லாததோ, எல்லாவற்றைக் காட்டிலும் வேறு ஜாதி. ஜீவன்கள் அறிவில்லாத வஸ்துக்களைக் காட்டிலும் வேறு என்று சொல்லப்பட்டது. ஆகையாலே உலகத்தில் மூன்று தத்வங்கள் இருக்கின்றன—பிரகிருதி, ஜீவன்கள், பகவான்—என்று.

1. *ஜீவன்கள் தூங்குகிற காலத்தில் அறிவில்லாத வஸ்துக்களை (உடம்புகளை) தங்களுடைய ஸ்வரூபத்தாலே தாங்குகிறார்கள். விழித்துக் கொண்டிருக்கும்போது தங்களுடைய ஸங்கல்பத்தாலே (எண்ணத்தாலே)யும் தாங்குகிறார்கள்.*

1 என்னுடையதான, அறிவுள்ளதும்—அறிவில்லாததும் என்று இருவகைப்பட்ட—ஸமஷ்டியான (பொதுவான) இந்த இரண்டு பிரகிருதிகளால் உண்டான—பிரும்மா முதல் புழுவரையில் உயர்ந்தவைகளாகவும்,தாழ்ந்தவைகளாகவு மிருக்கும்—உடம்புடன் சேர்ந்திருக்கிற எல்லாப் பிராணிகளும் என்னுடையதுஎன்றறிநீ. என்னுடைய இரண்டு பிரகிருதிகளால் எல்லாமுண்டானபடியாலே அவைகளும் என்னுடையவைகள்தான். இப்படியிருப்பதாலே, அதாவது—ஜகத்து இரண்டு பிரகிருதிகளிலிருந்து உண்டானபடியாலும், அந்த இரண்டு பிரகிருதிகளும்என்னிடமிருந்து உண்டான படியாலும்—எல்லா லோகங்களும் என்னிடத்திலிருந்து தான் 2 உண்டாகின்றன. என்னிடம்தான் வந்து முடிவில் அடங்குகின்

---

1. முன் இரண்டு சுலோகங்களாலே ஸமஷ்டியான அறிவில்லாத வஸ்துக்களும், ஸமஷ்டியான ஜீவன்களும் பகவானுடைய ஸொத்து என்று சொல்லப்பட்டது. இந்த சுலோகம் அறிவில்லாத வஸ்துக்களும், ஜீவன்களும் சேர்ந்து உண்டான வியஷ்டி வஸ்துக்கள் பகவானுடைய ஸொத்துக்கள் என்று சொல்லுகிறது.

2. இரண்டு பிரகிருதிகளும் பகவானிடமிருந்து உண்டாகின்றன என்று வேதத்தில் எங்கே சொல்லியிருக்கிறது என்றால், பதில்-வேதத்தில் இரண்டு பிரகிருதிகளும் பகவானிடத்தில் பிரளய காலத்தில் லயத்தை அடைகின்றன என்று சொல்லியிருக்கிறது. இதைக்கொண்டு, பகவானிடமிருந்து அவைகள் உண்டாகின்றன என்று வேதத்தினுல் சொல்லப்படுகிறதென்று ஒப்புக்கொள்ள வேண்டும். பகவானிடத்தில் இவைகள்லயத்தைஅடைகிறது(அடங்குகிறது)என்பது,பாலில்ஜலத்தை விட்டால்,இதுபால்,இதுஜலம்,என்றுஎப்படிப்பிரித்துஅறியமுடியாதோ அப்படியே பகவானிடத்தில்இந்த இரண்டும் பிரித்துஅறியமுடியாதபடி சேருகிறதுதான்.பாலோடுசேர்ந்த ஜலத்தைஎப்படிப்பால் என்றுசொல்லுகிறோமோ,அப்படியே இரண்டு பிரகிருதிகளோடு சேர்ந்த பகவானைப் பிரும்மம் என்று சொல்லுகிறது. இரண்டுதத்வங்களுக்கும் ஸ்வரூபத்தில் அழிவில்லை.ஆகையாலே அவைகளை நித்தியங்கள் என்றுசொல்லுகிறது. பிரிக்கமுடியாதபடி ஒன்றாயிருப்பதாலே அவைகளை ஒன்று என்றும் சொல்லுகிறது.

பகவான் தான் ஜகத்துக்கு உபாதாநகாரணமும், நிமித்தகாரணமும். ஒரு குயவன் மண் கட்டியிலிருந்து சட்டியையும் பானையையும் செய்கிறான். மண்கட்டியை உபாதாநகாரணம் என்றும்,குயவனை நிமித்

றன. எல்லாம் என்னுடையவைகளாக இருப்பதாலே நானே[1] சேஷி என்று நினை. ஸமஷ்டியான அறிவுள்ள பிரகிருதியும், அறிவில்லாத பிரகிருதியும் பகவானிடமிருந்து உண்டாகிறது என்பது வேதத்திலும் ஸ்மிருதிகளிலும் சொல்லப் பட்டிருக்கிறது. (6)

𑌮𑌤𑍍𑌤𑌃 𑌪𑌰𑌤𑌰𑌂 𑌨𑌾𑌨𑍍𑌯𑌤𑍍 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌦𑌸𑍍𑌤𑌿 𑌧𑌨𑌂𑌜𑌯 ।

𑌯𑌥𑌾 𑌸𑌰𑍍𑌵𑌕𑌾𑌰𑌣𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌦𑍍𑌵𑌯𑌸𑍍𑌯 𑌕𑌾𑌰𑌣𑌤𑍍𑌵𑍇𑌨 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯𑍈𑌤𑌸𑍍𑌯 𑌶𑍇𑌷𑌿𑌣𑌸𑍍𑌤𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌶𑍇𑌷𑌿𑌤𑍍𑌵𑍇𑌨 𑌕𑌾𑌰𑌣𑌤𑌯𑌾 𑌶𑍇𑌷𑌿𑌤𑌯𑌾 𑌚𑌾𑌹𑌂 𑌪𑌰𑌤𑌰𑌃, 𑌤𑌥𑌾 𑌜𑍍𑌞𑌾𑌨𑌶𑌕𑍍𑌤𑌿𑌬𑌲𑌾𑌦𑌿 𑌗𑍁𑌣𑌯𑍋𑌗𑍇𑌨 𑌚𑌾𑌹𑌮𑍇𑌵 𑌪𑌰𑌤𑌰𑌃 । 𑌮𑌤𑍍𑌤𑍋𑌽𑌨𑍍𑌯𑌨𑍍𑌮𑌦𑍍𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑌿𑌕𑍍𑌤𑌂 𑌕𑌿𑌂𑌚𑌿𑌤𑍍 𑌜𑍍𑌞𑌾𑌨𑌬𑌲𑌾𑌦𑌿𑌗𑍁𑌣𑌾𑌨𑍍𑌤𑌰𑌯𑍋𑌗𑌿 𑌪𑌰𑌤𑌰𑌂 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 ॥ ॥௭॥

எல்லாவற்றையு முண்டுபண்ணுகிற இரண்டு பிரகிருதிகளை உண்டுபண்ணுகையாலும், எல்லா அறிவில்லாத வஸ்துக்களுக்கு சேஷிகளான ஜீவன்களுக்கும் சேஷியாயிருப்பதாலும், எப்படி நான் பரதரனே (மிகவும் உயர்ந்தவனே)[2] அப்படியே, ஞானம், சக்தி, வலிமை, முதலான குணங்களாலேயும் நான்தான் பரதரன்.

தகாரணம் என்றும் சொல்லுகிறது. இங்கே இரண்டுகாரணமும் வேறாயிருக்கிறது.இப்படியேஉலகத்தில்எங்குமிருக்கிறது.அப்படியிருக்க எப்படி பகவானே இரண்டுகாரணமுமாய்இருக்கக்கூடும் என்றால், பதில்— இரண்டு பிரகிருதிகளோடும் சேர்ந்த பகவானே ஜகத்தாக ஆகிறான். தாயாருடைய கர்ப்பத்தில்வைக்கப்பட்டஜீவனோடுகூடியரேதஸ்ஸானது குழந்தையாய்வளர்ந்து, வெளியே வந்து, வளர்ந்து பாலனாகவும்,யுவாவாகவும் எப்படிஆகிறதோ; அப்படியே இரண்டுபிரகிருதிகளோடு சேர்ந்திருக்கிற பகவான் மஹத், அஹங்காரம், ஆகாசம் முதலானவைகளாய் வரிசையாய் ஆகி,பிறகுஜகத்தாகஆகிறான்.இதைத்தான் வேதத்தில்“ நான்பஹுவாக(பலவஸ்துக்களாக)ஆகவேணும்”என்று பகவான் நினைத்ததாகச் சொல்லியிருக்கிறது.

1. எவனுக்காகவே (அதாவது-எவனுடைய உபயோகத்துக்காகவே) எந்தவஸ்து இருக்கிறதோ, அதை அவனுக்கு சேஷம் என்றும், அவனைச்சேஷி என்றும் சொல்லுகிறது.

2 இது சுலோகத்தில் சொல்லாமல் போனபோதிலும், அப்படியே அர்த்தம் கொள்ளவேணும். முன் சுலோகங்களில் எல்லாவஸ்துக்களுக்கு

1 என்னைத்தவிர குணங்களாலே பரதரமான வஸ்து உலகத்தில் கிடையாது. (7)

மயி ஸர்வமிதம் ப்ரோதம் ஸூத்ரே மணிகணா இவ || ||எ||

ஸர்வமிதம் சிதசித்வஸ்துஜாதம் கார்யாவஸ்தம் காரணாவஸ்தம் ச மச்சரீரபூதம் ஸூத்ரே மணிகணவதாத்மதயாவஸ்திதே மயி ப்ரோதம் ஆஶ்ரிதம் | “யஸ்ய ப்ருதிவீ ஶரீரம்... யஸ்யாத்மா ஶரீரம் .. ஏஷ ஸர்வபூதாந்தராத்மாபஹதபாப்மா திவ்யோ தேவ ஏகோ நாராயண:” இத்யாதிஶ்ருதிஶதா வேத கார்யாவஸ்தம் ச [illegible] ஷ்டம் வித்தி || ||எ||

உண்டுபண்ணப் பட்டதும், அவைகளை யுண்டுபண்ணுகிறதுமான எல்லாஉலகமும், 2 நூலில் மணிகளை கோர்ப்பதுபோல்,

---

ம் யஜமானனையும், அவைகளை உண்டுபண்ணுகிறவனையும் சொன்னபடியாலே, பகவானே மிகவும் உயர்ந்தவன் என்று ஏற்படுகிறது. அதையே இந்த சுலோகம் உறுதிப்படுத்துகிற தென்றால், அவ்வளவு பிரயோஜன முள்ளதாக ஆகாது. புதிதான ஸங்கதியைச் சொல்லக்கூடுமேயானால் அதைச்சொல்லுவதுதான் தகுதி. ஆகையாலே குணங்களால் உயர்த்தி சொல்லப்பட்டது.

1. சுலோகத்தில்“பரதரம்” என்றும், “அந்யத்” என்றும் சொற்கள் இருக்கின்றன. “அந்யத்” என்ற சொல்லை “மத்த:”என்ற சொல்லுடன் சேர்த்து,என்னைததவிர வேறான மிகவு முயர்ந்த வஸ்து இல்லையென்று அர்த்தம் பண்ணவேணும். அப்படியில்லாமல் என்னைக்காட்டிலும் மிகவு முயர்ந்தது—என்று அர்த்தம் பண்ணினால் “அந்யத்”என்ற சொல் வேண்டியதில்லை. கீழே சொன்னபடி அர்த்தம் பண்ணினால், நான்தான் மிகவும் உயர்ந்தவன் என்று பொருள் கிடைக்கும். ஆகையால்,எனக்குஸமானனும், மேல்பட்டவனு மில்லை என்றுஏற்படும்.

2. நூல் அறுபட்டால் மணிகள் சிதறிப்போய்விடும். உடம்பில் ஆத்மா போய்விட்டால் அது அழிந்துபோய்விடும். அதுபோல் பகவான் இல்லாவிட்டால் உலகம்முடிய சிதறிப்போய்விடும். நூல் உதாரணத்தாலே எப்படி ஒரேநூல் எல்லாமணிகளையும் தூக்குகிறதோ, அப்படியே பகவானும் எல்லா உலகங்களையும் தூக்குகிறான் என்றும், மணிகள் நெருங்கி யிருந்தால் எப்படி நூல் மறைந்திருக்குமோ, அப்படியே பக

என்னிடத்தில் கோர்க்கப் பட்டிருக்கிறது.1 (6½)

வான் எல்லா வஸ்துக்களிலு மிருந்தாலும், எல்லாருக்கும் தெரியாமல் மறைந்திருக்கிறான் என்றும், நூலாலே மணிகளுக்கு உபயோகமே யல்லாமல், மணிகளால் நூலிற்கு எப்படி உபயோக மில்லையோ,அப்படியே பகவானாலே எல்லா லோகங்களும தூக்கப்படுகிறதே யல்லாமல், அவன் அவைகளின் அதீனமா யிருக்கவில்லை என்றும் ஏற்படுகிறது.

1.இந்த சுலோகத்தில் எல்லாவஸ்துக்களில் பகவான் நுழைந்து, அவைகளைத் தூக்கிக் கொண்டிருக்கிறா னென்று சொல்லியிருக்கிறது. வஸ்துக்களுக்குள்ளே நுழைந்திருப்பது அவைகளை ஏவி அவைகளைக் கொண்டு வேலைசெய்வதற்காக. இப்படி பகவான் எல்லாருடைய ஹிருதயத்தி லிருந்து ஏவி வேலை வாங்குகிறா னென்று 18-வது அத்தியாயம் 61-வது சுலோகததில் சொல்லப் போகிறது. 4-வது சுலோகம் முதல் இதுவரையில் பகவானைப் பற்றிச்சொன்னதாவது—பகவான் எல்லாவற்றையும் தூக்குகிறான். எல்லாவற்றையும் ஏவி வேலை வாங்குகிறான்.எல்லாம் அவனுடைய சொத்து. அதாவது-அவனுக்கு வேலைசெய்து அவனை ஸந்தோஷப் படுத்தவேண்டியது. ஆகையாலே எல்லாம் அவனுக்கு உடம்புகள். அவைகளுக்கு அவன் ஆத்மா. ஆத்மா என்பது-ஒருவஸ்துவைத் தூக்கிக்கொண்டு, அதை ஏவி வேலைவாங்கி, அதைத் தன்னிஷ்டப்படி உபயோகப் படுத்துகிறவன். உடம்பு என்பது—ஒரு அறிவுள்ளவனாலே தூக்கப்பட்டு,அவனால் ஏவப்பட்டு, அவன் இஷ்டப்படி உபயோகிக்கத் தகுந்த வஸ்து.

பகவானே எல்லா வஸ்துக்களாக ஆகிறான் என்று கீழே சொல்லப் பட்டது. இதினாலே அவனுக்கு உடம்பாகிய ஜீவன்களுக்கும், பிரகிருதிக்கும் போல அவனுக்கு மாறுதல் உண்டோ என்று ஸந்தேஹம் உண்டாகலாம். ஜீவன்களுக்கு ஸ்வரூபத்தில் வேறுபாடு இல்லை. அது ஒரேமாதிரியாக இருக்கிறது. ஆனால் அவனுடைய அறிவுஎன்கிற குணமானது சிலவேளைகளில் சுருங்கியும், சிலவேளைகளில் விரிவையடைந்து கொண்டு மிருக்கிறது. பிரகிருதியின் ஸ்வரூபமே மாறி, வேறு உருவங்கள்வந்து, வேறுபெயர்களை அடைகிறது. பகவானுக்கு இந்த இரண்டு விதமானவேறுபாடுகளும் கிடையாது. ஏனென்றால், அவன் ஆத்மாவாகவும், மற்றவைகள் அவனுக்கு உடம்பாகவும் இருக்கின்றன. நம்முடைய உடம்புகளுக்கு குழந்தைப்பருவமும், யௌவனமும், கிழத்தனமும் வருகிறபடியால் அதற்கு மாறுதல் இருக்கிறது. இது அந்த உடம்புக்குள் இருக்கும் ஜீவனுக்குக் கிடையாது. அதுபோல், இந்த சுலோகத்தாலே இன்னொரு ஸங்கதி ஏற்படுகிறது. "ஜீவன்களும், பிரகிருதியும் ஒன்றினால் தூக்கப்படவில்லை,அவைகள்தனியாகவெஇருக்கின்றன" என்றுசிலர் சொல்லுகிறார்கள்.அந்தமதம்பிசகுஎன்று காட்டப்படுகிறது.

அவ — [illegible] —

புண்யோ கந்த⁴: ப்ருதி²வ்யாம் ச தேஜஶ்சாஸ்மி விபா⁴வஸௌ |
ஜீவநம் ஸர்வபூ⁴தேஷு தபஶ்சாஸ்மி தபஸ்விஷு || ||௯||

பீ³ஜம் மாம் ஸர்வபூ⁴தாநாம் வித்³தி⁴ பார்த² ஸநாதநம் |
பு³த்³தி⁴ர்பு³த்³தி⁴மதாமஸ்மி தேஜஸ்தேஜஸ்விநாமஹம் || ||௧௦||

ப³லம் ப³லவதாம் சாஹம் காமராக³விவர்ஜிதம் |
த⁴ர்மாவிருத்³தோ⁴ பூ⁴தேஷு காமோऽஸ்மி ப⁴ரதர்ஷப⁴ ||௧௧||

[illegible] ||அ-௧௧||

அவ — ஆகையால் எல்லாம் பகவானுக்கு உடம்புகள், அவன் அவைகளுக்கு ஆத்மா. ஆகையால் எல்லாம் அவனுக்குப் [1] பிரகாரங்கள். அவன் எல்லாப்பிரகாரமா யிருக்கிறான். எல்லா சொற்களும் அவனையே சொல்லுகின்றன. இந்தக்காரணத்தாலே அந்தந்த சொற்களாலே பகவானையே அடுத்தநாலு சுலோகங்கள் சொல்லுகின்றன—

1. உலகத்தில் ஒரு ரோஜாப்பூவைப் பார்க்கும்போது, ''இது ரோஜா, இது சிகப்பு'' என்று அறிகிறோம். ''சிகப்பு'' என்கிற அறிவு சிகப்பு என்கிற குணத்தையும், அது உடையவஸ்துவையும், ரோஜா என்கிற அறிவு ரோஜா என்கிற ஜாதியையும், அதுஉள்ள வஸ்துவையும் காட்டுகின்றன. இருப்பதாகத் தோன்றுகிற சிகப்பு என்கிற குணத்தையும், ரோஜாஎன்கிற ஜாதியையும் ''பிரகாரம்'' என்றும், அவைகளை உடையதாகத்தோன்றுகிற வஸ்துவை ''பிரகாரி'' என்றும் வடமொழியில்சொல்லுவது வழக்கம். அந்தகுணமும் ஜாதியும் அந்தவஸ்துவைவிட்டுத் தனியாய் இருக்கிறதில்லை. அப்படியேபகவானிடத்தில் எல்லாவஸ்துக்

1ரஸம், வெளிச்சம் முதலான 2 விலக்ஷணமான எல்லா வஸ்துக்களும் என்னிடமிருந்துதான் உண்டாகின்றன. என்னுடைய உபயோகத்துக்காகவே தான் இருக்கின்றன. என் உடம்பாகையால் என் அதீனமாகவே இருக்கின்றன. ஆகையால் நானே எல்லாப்பிரகாரமாக இருக்கிறேன்—அதாவது அவையெல்லாம் எனக்குப் பிரகாரம். (8–11)

களும் ஒருபோதும் பிரியாமல் இருக்கின்றன. ஆகையாலே அவைகளைக் காட்டும்சொற்களாலே பகவானைவேதமும், வேதமறிந்தவர்களும் சொல்லுவது வழக்கம்.

1. ரஸம், வெளிச்சம் முதலான சொற்களாலே பகவானையே சொல்லுவதற்குக் காரணம் காட்டப்படுகிறது. உலகத்தில் "ராஜா தான் ராஜ்யம்" என்று சொல்லுகிறார்கள். அதற்கு ராஜாவின் அதீனமாக ராஜ்யம் இருக்கிறதென்று பொருள். இங்கே அப்படிப் பொருள் கொள்ளக் கூடாது. முக்கியமான பொருள் கிடைக்கும்போது, அதை விடுவதற்கு நியாயமில்லை.

2. 12-வது சுலோகத்தில் சொல்லப்போகிற ரஜோகுணமும் தமோகுணமும் மேலிட்ட பதார்த்தங்களைக் காட்டிலும் வேறு என்று பொருள். இந்த நாலு சுலோகங்களில் சொல்லுகிற ரஸம்கந்தம் முதானவைகள் அந்தந்த திரவியங்களுக்கு முக்கியமான குணங்கள்.

சுலோகங்களுக்குப் பொழிப்புரை—ஜலத்திலுள்ள ரஸம் என்கிற குணம் நான். சந்திரனுடையவும் ஸூரியனுடையவும் வெளிச்சம் நான். எல்லாவேதங்களுக்கு முக்கியமான பிரணவமும், ஆகாசத்தில் சப்தம் என்கிறகுணமும், ஜீவன்களிடத்திலுள்ள வேலைசெய்யும் சக்தியும், நான். (குறிப்பு:—ரஸமென்பது ஜலத்தின் முக்கியமானகுணம். ஜலம் நெருப்பிலிருந்து உண்டாகும்போது- நெருப்பிலில்லாமல் ஜலத்துக்கு இந்தகுணம் புதிதாய் உண்டாகிறது. வெளிச்சம்என்பது—அது இருக்கும் ஸூரியனையும் சந்திரனையும் காட்டிலும் வேறான நாலுபக்கத்திலும் பரவுகிற தேஜஸ்ஸான திரவியம். இந்த வெளிச்சத்தைக் கொண்டு ஜகத்துக்குச் சந்திரனும், ஸூரியனும் உபகாரம் பண்ணுகிறபடியாலே அது முக்கியமானது. பிரணவமானது எல்லாவேதங்களின் அர்த்தத்தைச் சுருக்கமாகச் சொல்வதால் அது முக்கியமானது.)

9-வது சுலோகம்-பூமியிலுள்ள நல்லவாஸனையும், அக்னியிலுள்ள கொளுத்துகிற சக்தியும், உடம்போடு கூடிய எல்லா பிராணிகளும்

பிழைத்திருப்பதற்குக் காரணமும், தபஸ்ஸை செய்கிறவர்களின் தபஸ்ஸும் நான். (குறிப்பு—துளஸி முதலானவைகளின் நல்வாஸனையாலே பூமி ஸத்வகுணத்தை அதிகப்படுத்துவதாலும், ஸாகத்தை உண்டு பண்ணுவதாலும் அது முக்கியமான குணம். உடம்போடு கூடிய எல்லாரிடத்திலும் என்று சொல்வதில் பிரும்மாமுதலானவர்களைச் சேர்த்து சொல்லப்பட்டது.)

10-வது சுலோகம். அநந்த வஸ்துக்களுக்கு இருக்கும் இன்னொரு வஸ்துவாக ஆகிற சக்தியை நான் என்று தெரிந்து கொள். மண்ணோடு சேர்ந்த விதைக்கு மரமாக ஆகிறசக்திபோல. புத்தியுள்ளவர்களுடைய புத்தியாகவும், தேஜஸ்ஸையே ஸ்வபாவமாக உடையவர்களுடைய தேஜஸ்ஸாகவும் நான் இருக்கிறேன். (குறிப்பு-தேஜஸ்ஸு என்பது ஒருவனாலும் அவமானப்படுத்த முடியாதபடி இருப்பது. ஒருவனை அவமானப்படுத்தும் ஸாமர்த்தியம் என்றும் சொல்லுவது உண்டு.

11-வது சுலோகம் பலமுள்ளவர்களுடைய காமத்தாலும், ராகத்தாலும் விடப்பட்ட பலம் என்கிறகுணம் நான் தேவர்களிடத்திலும் மனிதர்களிடத்திலுமிருக்கிற தர்மத்திற்கு விரோதமில்லாத காமமும் நான். (குறிப்பு:-ராகம் என்றால் ஆசை. அதுமுற்றினால் காமமாகிறது. இவைகளோடு சேர்ந்த பலமானது அயலாருக்கு ஹிம்ஸையை உண்டு பண்ணுமாகையால், அதுடன்சேராத-தர்மம் செய்வதற்கு உபயோகமான-பலம் இங்கே சொல்லப்பட்டது. தர்மத்துக்கு விரோதமில்லாத் காமமாவது-ஒருவனுக்குத்தன் மனைவியினிடத்தில் இருக்கும் ப்ரீதி முதலானது.)

வேதத்தில் சில இடங்களில் பகவான் வேறு, ஜகத்து வேறு என்று சொல்லியிருக்கிறது. இதைப்பேதச்ருதி என்று சொல்கிறது. வேறு சில இடங்களில் ஜகத்தே பகவான் என்று சொல்லியிருக்கிறது இதை அபேதச்ருதி என்று சொல்லுகிறது. இந்த இரண்டு சுருதிகளுக்கும் பொருந்தும்படியாக அர்த்தம் சொல்லவேண்டியது. உண்மையில் பகவான் வேறு, ஜகத்து வேறு. ஜகத்தைப் பகவானுக்கு உடம்பாகவும், பகவான் ஜகத்துக்கு ஆதமாவாகவும், ஜகத்துப் பகவானுடனே எப்போதும் சேர்ந்தும், ஒருக்ஷணமும் அவனைவிட்டுப் பிரியாமலும் இருப்பதால், ஜகத்தையே பகவானென்று சொல்லுகிறது. ஜீவனும், அவன் உடம்பும் எப்போதும் சேர்ந்திருக்கிறபடியால், அவர்களை உடம்பாகச் சொல்லுவது உலக வழக்கம். "நான் மனிதன்" என்று ஒருவன் சொல்லுகிறான். 'நான்" என்பது அழிவில்லாத ஜீவன். 'மனிதன்" என்பது அழியக்கூடிய உடம்பு. இவையிரண்டும் ஒன்றாக இருக்கமாட்டாது.

𑌬𑌹𑍁— 𑌕𑌿𑌂 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌯𑌾𑌭𑌿𑌧𑍀𑌯𑌤𑍇—

𑌯𑍇 𑌚𑍈𑌵 𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑌾 𑌭𑌾𑌵𑌾 𑌰𑌾𑌜𑌸𑌾𑌸𑍍𑌤𑌾𑌮𑌸𑌾𑌶𑍍𑌚 𑌯𑍇 ।
𑌮𑌤𑍍𑌤𑌏𑌵𑍇𑌤𑌿 𑌤𑌾𑌨𑍍𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌨𑌤𑍍𑌵𑌹𑌂 𑌤𑍇𑌷𑍁 𑌤𑍇 𑌮𑌯𑌿 ॥௧௨॥

𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑌾 𑌰𑌾𑌜𑌸𑌾𑌸𑍍𑌤𑌾𑌮𑌸𑌾𑌶𑍍𑌚 𑌜𑌗𑌤𑌿 𑌦𑍇𑌹𑌤𑍍𑌵𑍇𑌨𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌤𑍍𑌵𑍇𑌨 𑌭𑍋𑌗𑍍𑌯𑌤𑍍𑌵𑍇𑌨 𑌤𑌦𑍍𑌧𑍇𑌤𑍁𑌤𑍍𑌵𑍇𑌨 𑌚𑌾𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌾 𑌯𑍇 𑌭𑌾𑌵𑌾𑌃, 𑌤𑌾𑌨𑍍 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍 𑌮𑌤𑍍𑌤 𑌏𑌵𑍋𑌤𑍍𑌪𑌨𑍍𑌨𑌾𑌨𑍍 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿। 𑌤𑍇 𑌮𑌚𑍍𑌛𑌰𑍀𑌰𑌤𑌯𑌾 𑌮𑌯𑍍𑌯𑍇𑌵𑌾𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌇𑌤𑌿 𑌚। 𑌨𑌤𑍍𑌵𑌹𑌂 𑌤𑍇𑌷𑍁—𑌨𑌾𑌹𑌂 𑌕𑌦𑌾𑌚𑌿𑌦𑌪𑌿 𑌤𑌦𑌾𑌯𑌤𑍍𑌤𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌃। 𑌅𑌨𑍍𑌯𑌤𑍍𑌰𑌾𑌤𑍍𑌮𑌾𑌯𑌤𑍍𑌤𑌸𑍍𑌥𑌿𑌤𑍇𑌃 𑌶𑌰𑍀𑌰𑌸𑍍𑌯 𑌶𑌰𑍀𑌰𑌿𑌣𑌸𑍍𑌤𑌤𑍍𑌸𑍍𑌥𑌿𑌤𑍍𑌯𑌾𑌉𑌪𑌕𑌾𑌰𑍋 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇। 𑌇𑌹 𑌤𑍁 𑌨 𑌤𑌤𑍍𑌸𑍍𑌥𑌿𑌤𑍍𑌯𑌾 𑌮𑌮𑌾𑌪𑌿 𑌉𑌪𑌕𑌾𑌰𑌃। 𑌕𑍇𑌵𑌲𑌂 𑌲𑍀𑌲𑍈𑌵 𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑌮𑌿𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥ ॥௧௨॥

தனித்தனியாய்ச் சொல்லுவானேன். உலகத்தில் சில வஸ்துக்களில் ஸத்வகுணமும், சிலவஸ்துக்களில் ரஜோகுணமும்,

---

ஆகையால் நான் உடம்பு என்பதற்கு, உடம்பிலே நான் இருக்கிறேன் என்று பொருள். அப்படியே "ஜகத்து பகவான்" என்றால், ஜகத்தில் பகவான் இருக்கிறான் என்று பொருள். இப்படித்தான் பொருள் கொள்ள வேணுமென்பது "ஜகத்து பகவானுக்கு உடம்பு" என்று சொல்லுகிற சில வேதவாக்கியங்களால் ஏற்படுகிறது. இவைகளுக்குக் கடகச்ருதி என்று பெயர். 4-5-6—வது சுலோகங்களில் பேதச்ருதியின் அர்த்தமும், 8—11—வது சுலோகங்களில் அபேதச்ருதியின் அர்த்தமும், 7-வது சுலோகத்தில் கடகச்ருதியின் அர்த்தமும் சொல்லப்படுகிறது.

வேறுசிலர்-"அபேதம்(பேதமில்லாமை)தான் உண்மை. பேதச்ருதி பேதத்தைக்காட்டுகிறது. பேதத்தைத்தெரிந்துகொண்டுதானே அதை இல்லையென்றுசொல்லவேண்டும், அதற்காக"-என்றுசொல்லுகிறார்கள். அது ஸரியானதன்று. ஏனென்றால், பேதம் என்று ஒன்று இருப்பதாக வேறு பிரமாணங்களாலே தெரிந்தாலன்றோ, அதை இல்லை யென்று வேதம்சொல்லக்கூடும். பகவானை வேதத்தால் அல்லதுஅறியமுடியாததாலே அவனுக்கும் உலகத்துக்கும் பேதத்தை வேறுபிரமாணங்களாலே அறியமுடியாது. வேதத்திலேயே அதைத் தெரிந்துகொள்ளவேண்டியது. வேதம் முதலில் பேதத்தைச் சொல்லி, பிறகு அதை இல்லை யென்று சொன்னால், அது பயித்தியக்காரன் வார்த்தை போலாகும். ஆகையாலே கீழே சொன்னபடிதான் பொருள் கொள்ளவேணும்.

சிலவஸ்துக்களில தமோகுணமும் மேலிட்டிருக்கின்றன. அவை கள உடம்புகளாகவும, இந்திரியங்களாகவும், அவைகளால் அநுபவிக்கத்தக்கதாத வைகளாகவும, [1] அவைகளை உண்டுபண்ணு கிறவைகளாகவும் இருக்கின்றன. இவைகள எல்லாம் [2] என னிடமிருந்தே உண்டானவைகள் என்று நினை என உடம்பு களாய இருப்பதால், என அதீநமாயுமிருக்கின்றன ஒருக்காலத் திலும் அவைகள அதீநமாய் நான் இருக்கவில்லை. உலகத்தில ஆத்மாவின அதீநமாக உடம்புகள் இருந்தபோதிலும், உடம் பினுலே ஆத்மாவுக்கு உதவி உண்டு. அப்படி அவைகளாலே எனக்குத் துளிக்கூட உதவி இல்லை அவைகளை நான் விளையாட்டு (லீலை)க்காக வைத்துக் கொண்டிருக்கிறேன். (12)

த்ரிபிர்குணமயைர்பாவைரேபிஃ ஸர்வமிதம் ஜகத் ।
மோஹிதம் நாபிஜாநாதி மாமேப்யஃ பரமவ்யயம் ॥ ॥௧௩॥

ததேவம் சேதநாசேதநாத்மகம் க்ருத்ஸ்நம் ஜகந்மதீயம் காலே காலே உத்பத்யதே, மயி ச ப்ரலீயதே, மய்யேவாவஸ்திதம், மச்சரீரபூதம், மதாத்மகம் சேதி மத்த ஏவ காரணாவஸ்தாயாம் கார்யாவஸ்தாயாம் ச ஸர்வசரீரதயா ஸர்வப்ரகாரோऽவஸ்திதஃ | அதஃ காரணத்வேந சேஷித்வேந ச ஜ்ஞாநாத்யஸங்க்யேயகல்யாணகுணகணைஶ்ச ஸ்வாஸ்ரயேவ ஸர்வைஃ ப்ரகாரைஃ பரதரம், மத்தோऽந்யூநாபி கல்யாணகுணகணேந பரதரம் ந வித்யதே | யதஃ ஸர்வம் இதம் த்ரிபிஃ ஸாத்த்விகராஜஸதாமஸகுணமயைர் பாவைர் ஏபிஃ பரி-மோஹிதம், அநேந கல்யாணகுணைகதாநத்வேந ஸ்வேந ஸர்வப்ரகாரேண பரமோத்க்ருஷ்டதமம், அவ்யயம்-ஸதைகரூபமேவ

---

1. இதனல் ஸம்ஹாரம் இருப்பு சொல்லப்படுகிறது.

2 "என்னிடமிருந்தே" என்பதாலே உலகத்திற்கு உபாதாந காரணமும், நிமித்தகாரணமும் பகவானே ஒருவனே என்று காட்டப்படு கிறது. மேலும், ஸத்வகுணம் மேலிட்டது முதலான பலவஸ்துக்களைச் சொல்லுவதாலே அத்தற்குத் தகுந்த அநேககாரணங்கள் உண்டோ என்ற ஸந்தேஹமும் தீர்க்கப் படுகிறது

ஏபி: ஸைதேரவ த்ரிபிர்குணமயைர்பாவைர்விகாரை: க்ஷண
த்வம்ஸிபி: புண்யபாபாநுகுணதேஹஸம்பந்தி ஸ்வ
நாவஸ்திதை: வ்யவஹாரயோக்யதயா மோஹிதம் தேவதிர்யங்மநு
ஷ்யஸ்தாவராத்மநாவஸ்திதமிதம் ஜகந்நாபிஜாநாதி || ||௧௩||

அவ—இப்படி பகவானுடைய உண்மையான ஸ்வரூபம் சொல்லப்பட்டது. மேல் பிரகிருதியினாலே அது மறைக்கப்படுகிறது என்று சொல்கிறார்.

இப்படி அறிவுள்ளது, அறிவில்லாததுஎன்று இருவகையான இந்த எல்லா உலகமும் என்னுடையது. அந்தந்த காலத்தில் என்னிடமிருந்துதான் உண்டாகிறது. பிறகு என்னிடம்தான் வந்து அடங்குகிறது. என்னிடத்திலேயே இருக்கிறது, அது எனக்கு உடம்பு. நான் அதுக்கு ஆத்மா. இந்தக்காரணங்களாலே, பிரளயகாலத்தில் அழியாமலிருக்கிற ஜீவன்கள் உருவமாயும் பிரகிருதி உருவமாயும நான்தான் இருக்கிறேன். இப்போது காணப்படுகிற அனேக வஸ்துக்களின உருவமாயு மிருக்கிறேன். ஆதலால் உண்டு பண்ணுவதாலும், எல்லா வஸ்துக்களையும் உபயோகித்துக் கொள்வதாலும், அறிவு முதலான கணக்கில்லாத உயர்ந்த நல்ல குணங்களாலும் எல்லாவிதத்தாலும் நானே மிகவும் உயர்ந்தவன். என்னிடத்திலிருக்கும் ஒரு ஸங்கதியாலாவது மிகவும் உயர்ந்தவஸ்து வேறொன்றும் கிடையாது. இப்படி ஸத்வம் முதலான மூன்று குணங்களுள்ள மற்ற எல்லாவஸ்துக்களைக் காட்டிலும், என்னிடத்தில் மாத்திரமிருக்கிற நல்ல குணங்களின் கூட்டங்களாலும், 1 பலவிதத்தாலே நான் இன்பமாயிருப்பதினு

1. பிரகிருதியிலிருந்து உண்டான வஸ்துக்கள் சப்தம் முதலான தங்களுடைய குணங்களாலே ஸுகத்தைக்கொடுக்கின்றன. பகவானோ ஞானம் சக்திமுதலான குணங்களாலும்,திருமேனியினுடையபலவிதங்களான குணங்களாலும், சுத்த ஸத்வம் என்கிற திரவியத்தினுடைய சப்தம் முதலான குணங்களாலும், பிராகிருத வஸ்துக்களையும் பகவானுடையது என்கிற எண்ணத்தினால் ஸுகத்தைக் கொடுப்பதாகப்பண்ணுகையாலும் பகவான் மிகுந்த ஸுகத்தைக் கொடுக்கக் கூடியவன். அந்த ஸுகங்களின் உயர்த்திக்கு எல்லையில்லை.

னும் மிகவும் உயர்ந்தவனையும், இவைகளுக்கு ஒருக்காலும் குறை வில்லாதவனையும், எப்போதும் ஒரே மாதிரியாயும இருக்கிற என்னை-தேவன், மாடு(திர்யக்) மனிதன், மரம்(ஸ்தாவரம்)என்று 1 நான்கு வகைப்பட்ட உலகம், 2 ஸத்வம் முதலான குணங்க ளால் ஏற்பட்டதாயும், மிகவும் இளப்பமாயும், நிலையில்லாததாயும் அவரவர்கள் கர்மங்களுக்குத் தக்கபடி உடம்புகளாயும், இந்திரியங் களாயும், பிள்ளை பெண்டாட்டி முதலான அநுபவிக்கத் தகுந்த வஸ்துக்களாயுமிருக்கிற பதார்த்தங்களினாலே 3 மயங்கி அறிய வில்லை. (13)

[illegible]

1. சுலோகத்தில் 'இந்த எல்லா ஜகத்' என்ற சொற்கள் இருக் கின்றன. அதில்" எல்லா" என்கிற சொல்லானது தேவஜாதியில் சேர் ந்த பிரும்மா முதலானவர்களை மற்றவர்களுடன் சேர்த்துச் சொல்லுகி றது. "இந்த" என்கிற சொல்லாலே கண்ணாலேபார்க்கப் படுகிற மரம் மாடு மனிதன் முதலான வேறுபாடுகளைக் காட்டுகிறது. "ஜகத்" என்ற சொல்லானது உடம்புகளோடு சேர்ந்த ஜீவன்களைச் சொல்லு கிறது.

2. "ஸத்வம் முதலானகுணங்களால் ஏற்பட்ட" என்பதாலே ஸுகத்தில் துக்கத்தின் கலப்பு சொல்லப்பட்டது. ரஜஸும் தமஸு ம் துக்கத்திற்கும் மோஹத்திற்கும் காரணம் என்று 14-வது அத்தியா யத்தில் சொல்லப்போகிறார் "கர்மங்களுக்கு தக்கபடி" என்பதாலே இவைகளுண்டாகி போகிறதென்றும், ஆகையாலே நிலையில்லாதது என்றும், இளப்பம் என்றும் ஏற்படுகிறது.

3. சுலோகத்தில் "மூன்று வகையான வஸ்துக்களாலே மயங்கி" என்று சொல்லியிருக்கிறது. அவைகளில் ஸத்வகுணம் மேலிட்டவைகள் ஒருவகை. ஸத்வகுணத்தால் அறிவன்றோ உண்டாகிறது. அதினாலே எப்படி மயக்கமுண்டாகும் என்றால், பதில்--விஷம்கலந்த அன்னத்தில தேனைச்சொட்டவிட்டால் முட்டாளுக்கு அதைச் சாப்பிடவேணுமெ ன்று ஆசைஉண்டாகும். அப்படியே அவனவன் கர்மத்துக்குத் தகுந்த படி துக்கத்தைக்கொடுக்கக் கூடிய வஸ்துக்களில் துளி ஸுகமிருப்ப தாலே, அந்தஸுகத்தின் ஆசையாலே ஜனங்கள் மயங்கக்கூடும். ஸத்வம என்பது ஸுகத்தில் ஆசையை யுண்டு பண்ணும் குணம.

[illegible]
[illegible] —

[illegible]

[illegible]

அ—— தேவரீர் இருக்கும்போது எல்லா ஜனங்களுக்கும் மற்ற வஸ்துக்கள் எப்படிப் பிடிக்கின்றன. தேவரீரோ, இயற்கையாகவே அளவில்லாமல், உயர்ந்த ஆநந்தத்தைக் கொடுக்கிறவர், அழிவில்லாதவர். எப்போதும் ஓரேவிதமாயிருப்பவர். உலகத்திலுள்ள வஸ்துக்களைக் காட்டிலும் மிகவும் இன்பமானவர். உலகத்திலுள்ள வஸ்துக்களோ மூன்று குணமுள்ளவைகள். ஆதலால்

துக்கம் கலந்த ஸுகத்தைக் கொடுக்குமவைகள். இளப்பமானவை கள். நிலையில்லாதவைகள் என்றால், பதில் சொல்லுகிறார்—

உலகத்தை யுண்டு பண்ணுவது முதலான வேலைகளை விளையாட்டாகச் செய்து கொண்டிருக்கிற நான் ஸத்வம் முதலான மூன்று குணங்களோடுகூடிய பிரகிருதி என்கிற 1 என்னுடைய வஸ்துவை ஜீவன்களை மயக்கும்படி 2 செய்திருக்கிறேன். ஆகை

---

1. மாயை என்பது, பிரகிருதி. அதை வைத்துக்கொண்டு வேலை செய்கிறவன் மாயீ. கிருஷ்ணபகவான்தான் மாயீ. மாயீ வேறு, கிருஷ்ணபகவான் வேறு என்று உண்டாகும் ஸந்தேஹத்தைத் தீர்ப்பதற்காக சுலோகத்தில் "மம மாயா" (என்னுடைய மாயை) என்கிற சொல் இருக்கிறது.

2. பகவான் மிகுந்த இரக்கமுள்ளவனல்லவா? எல்லாரையும் காப்பாற்ற வேண்டியவன் எப்படி பிரகிருதியைக் கொண்டு மயக்கலாம்— என்றால், பதில்—உலகத்தில் ஒருகுழந்தை நடக்க ஆரம்பிக்கும்போது? அதற்கு நடை பழக்கு வதற்காக ஒரு பொம்மையை முன்னாலே வைக்கிறார்கள். அதை எடுப்பதற்காக ஆசைப்பட்டு குழந்தைத் தட்டுத்தடுமாறி நடந்து வருகிறது. அப்படியே பகவானும் ஜீவன்கள் தன்னைத்தியாகம் செய்வதற்காக வேண்டிய சில குணங்களைப் பழக்கத்தினாலே ஸம்பாதிக்கும்படி உலகத்திலுள்ள வஸ்துக்களை நம் மனதையும், இந்திரியங்களையும் இழுக்கும்படி செய்திருக்கிறான். அவர்கள் அவைகளால் இழுக்கப்பட்டு அந்தவஸ்துக்களை ஸம்பாதிக்கப் பிரயத்தினப்படுகிறார்கள். இப்படி வேண்டிய குணங்களைப் பழக்கத்தினாலே அடைகிறார்கள். அந்த குணங்களாவன—கட்டாயம் செய்யவேண்டிய வேலையைச் செய்யும்போது உண்டாகும் வருத்தத்தைப் பொறுத்துக் கொள்ளுதல். இதை வடமொழியில் "திதிக்ஷா" என்று சொல்லுகிறது. இரண்டாவது குணம் விடாமுயற்சி. ஒரு வேலையைச் செய்து பலன் பெறாவிட்டாலும், பலன் வருகிறவரையில் திருப்பித் திருப்பி அந்த வேலையைச் செய்வது. இதை "த்ருதி" என்று வடமொழியில் சொல்லுகிறது. செய்யவேண்டிய வேலையில் மனதை வைத்து, வேறொன்றிலும் அதை விடாதிருப்பது. இதை வடமொழியில் "ஜாக்ரியம்" என்று சொல்லுகிறது. இது மூன்றாவது குணம். இன்னொரு குணம் உத்ஸாஹம். இவை முதலானவை. இவைகளைப் பிச்சைக்குப் போகிறவனிடம் பார்க்கலாம். பிச்சை கேட்கும்போது அவனை வைதால், அதைப் பொறுத்துக் கொள்கிறான். சிலவீடுகளில் ஒரு தடவையில் பிச்சை கிடைக்

யாலே 1 ஒருவனும் அதைத்தாண்ட முடியாது. ஆகையால் என்னுடையமாயையினுல்மயங்கிக்கிடக்கிற எல்லா ஜகத்தும்"நான் எல்லையில்லாத ஆநந்தத்தைக் கொடுக்கிறவன்" என்று தெரிந்து கொள்ளவில்லை.

இந்த சுலோகத்தில் இருக்கும் "மாயா"என்கிற சொல்லுக்கு ஆச்சரியமான வேலையைச் செய்கிற வஸ்து என்று பொருள். ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் "சம்பரன் என்கிற அஸுரனுடைய ஆயிரம் மாயைகளை பெருமாளுடைய சக்கிரம் அறுத்து விட்டது." என்று சொல்லி யிருக்கிறது. அந்த இடத்தில் மாயா என்பதற்கு ஆச்ச ரியமான வேலைகளைச் செய்யும் ஆயுதம் என்று பொருள். ஆகை யால் அந்த சொல்லுக்குப் பொய் என்று பொருள் இல்லை. இந்திர ஜாலம் செய்கிறவனை மாயாவீ (மாயையுள்ளவன்) என்று சொல்வ துண்டு.பார்க்கிறவர்களுக்குஉண்மையில்லாதவஸ்துக்களைத்தோ ன்றும்படிபண்ணுகிறமந்திரம்,பச்சிலை முதலானவைகளைவைத்துக் கொண்டிருப்பதாலே அவனுக்கு இந்தப் பெயர் வருகிறது. மந் திரம், பச்சிலை முதலானவைகளை அந்த விடத்தில் மாயை. அவைகள் பொய்யன்று அவைகளால் உண்டாகும் புத்தியும் பொய் யன்று. மாயை என்கிற சொல்லை உபயோகப்படுத்துகிற எல்லா

காவிட்டாலும் உறுதியுடன் பலதடவை அதே இடங்களுக்குப் போகி றுன். பிச்சை வாங்குவதிலேயே அவன் மனது நிற்கிறது. அவன் உத் ஸாஹத்தைச் சொல்ல வேண்டியதில்லை. என்ன மழை பெய்தாலும், என்ன இடி இடித்தாலும், அவன் வேலை நிற்கிறதில்லை.

இப்படிப் பிரகிருதியிலிருந்து உண்டான வஸ்துக்களை ஜீவன்களை இழுக்கும்படி செய்வதாலே அவர்கள் அவைகளிலேயே மூழ்கிப் போவார் கள் என்று அவைகளில் துக்கத்தையும் கலந்து வைத்திருக்கிறுன். அவைகளை ஸம்பாதிக்கும்போதும் அநுபவிக்கும்போதும் அவைகளில் உண்டாகும் துக்கத்தைப் பார்த்து, ஜீவன்கள் அவைகளை விட்டுவிட வேணுமென்ற பகவானுடைய கருத்து.

1. பகவான் தன் இஷ்டப்படி நடக்கிறவன். அவன் ஒருவரா லும் செய்ய முடியாத வேலைகளை செய்யும் சக்தியுள்ளவன். அவன் விளை யாட்டுக்காகப்பிரகிருதியை எல்லாரையும் இழுக்கும்படி செய்திருக்கி றுன். எல்லா ஜீவன்களும் அவனுக்குள்பட்டவர்கள். எவன் அதைத் தாண்டக்கூடும்?

விடங்களுக்கும் பொருத்தமான ஒரே பொருளைச் சொல்ல வேண்டியது. சில இடங்களில் பொய்யான ஸங்கதியை மாயை என்று சொல்வதுண்டு. அந்த இடங்களில் அந்தப் பொய்யான வஸ்துக்கள் மாயையல்ல. மாயையினால் தோன்றுகின்றன. அதனால் அவைகளை மாயை என்று சொல்லுகிறது. ஒருவன் ஒருவீட்டு ஜனங்களால் தொந்திரவை அடையும்போது, அந்த வீட்டுத்தொந்திரவு தாங்கமுடியவில்லை என்று சொல்லுகிறான். அந்த வீடா தொந்திரவு பண்ணிற்று? அல்ல. வீடு என்கிற சொல்லுக்கு வீட்டிலுள்ள ஜனங்கள் என்று பொருள். அதுபோல் மாயை என்பதற்கு மாயையினால் தோன்றுகிறது என்று பொருள். எல்லா சொற்களுக்கும் இன்ன இன்ன பொருளென்று ஏற்பட்டிருக்கிறது. வீடு என்கிற சொல்லுக்கு வீடுதான் பொருள். அதை முக்கியமான பொருள் என்று சொல்லுகிறது. வீடு என்கிற சொல்லுக்கு வீட்டிலிருப்பவர்களைப் பொருளாகக் கொண்டால், அந்தப் பொருளை கௌணம் என்று சொல்லுகிறது. அவைகளை தோன்றப் பண்ணுகிற மாயை என்கிற வஸ்து உண்மைதான். உபநிஷத்துக்களில் இந்த சொல்லானது பிரகிருதியைச் சொல்லுகிறது. அதை அடக்கி ஆளுகிற பகவானை "மாயி" (மாயையுடையவன்) என்று சொல்லுகிறது. இது என்ன ஆக்சரியமான வேலையைச் செய்வதுஎன்றால், நாம் பகவானுடைய ஸ்வரூபத்தை அறியவொட்டாமல் பண்ணுறதும், பிரகிருதியினால் உண்டான பல தொந்தரவுகளைக்கொடுக்கிற பிள்ளை பெண்டாட்டி முதலான வஸ்துக்களை இன்பமென்று நினைக்கும்படி செய்வதும், இதுமுதலானபல வேலைகளைச் செய்கிறது. (13½)

௧௪ — 𑌮𑌾𑌯𑌾𑌵𑌿𑌮𑍋𑌚𑌨𑍋𑌪𑌾𑌯𑌮𑌾𑌹 —

𑌮𑌾𑌮𑍇𑌵 𑌯𑍇 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌮𑌾𑌯𑌾𑌮𑍇𑌤𑌾𑌂 𑌤𑌰𑌨𑍍𑌤𑌿 𑌤𑍇 ॥௧௪॥

𑌮𑌾𑌮𑍇𑌵-𑌸𑌤𑍍𑌯𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑌂 𑌪𑌰𑌮𑌕𑌾𑌰𑍁𑌣𑌿𑌕𑌮𑌨𑌾𑌲𑍋𑌚𑌿𑌤𑌵𑌿𑌶𑍇𑌷𑌾𑌶𑍇𑌷𑌲𑍋𑌕𑌶𑌰𑌣𑍍𑌯𑌂 𑌯𑍇 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇, 𑌤𑍇 𑌏𑌤𑌾𑌂 𑌮𑌦𑍀𑌯𑌾𑌂 𑌗𑍁𑌣𑌮𑌯𑍀𑌂 𑌮𑌾𑌯𑌾𑌂 𑌤𑌰𑌨𑍍𑌤𑌿-𑌮𑌾𑌯𑌾𑌮𑍁𑌤𑍍𑌸𑍃𑌜𑍍𑌯 𑌮𑌾𑌮𑍇𑌵𑍋𑌪𑌾𑌸𑌤 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । ॥௧௪॥

அவ— இந்த மாயையைப் போக்குவதற்கு வழி சொல்லுகிறார்—

1 நினைத்த வேலையை முடிக்கிறவனும் அளவில்லாத தயையுள்ளவனும், தாரதம்மியம் பார்க்காமல் எல்லாப்பிராணிகளையும் காப்பாற்றுகிறவனுமான 2 என்னையே எவர்கள் கெஞ்சிக்கேட்டுக் கொள்ளுகிறார்களோ, அவர்கள் இந்தப் பிரகிருதியால் மயங்காமல் என்னையே தியானம் செய்கிறார்கள். [14]

𑌅𑌵— 𑌕𑌿𑌮𑌿𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑌦𑍁𑌃𑌖𑌵𑌾𑌸𑌨𑌾𑌵𑌾𑌰𑌿𑌣𑍀𑌂 𑌸𑌰𑍍𑌵𑌸𑍁𑌖𑌪𑍍𑌰𑌦𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌨 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑍀𑌤𑍍𑌯𑌤𑍍𑌰𑌾𑌹—

𑌨 𑌮𑌾𑌂 𑌦𑍁𑌷𑍍𑌕𑍃𑌤𑌿𑌨𑍋 𑌮𑍂𑌢𑌾𑌃 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌨𑌰𑌾𑌧𑌮𑌾𑌃।
𑌮𑌾𑌯𑌯𑌾𑌽𑌪𑌹𑍃𑌤𑌜𑍍𑌞𑌾𑌨𑌾 𑌆𑌸𑍁𑌰𑌂 𑌭𑌾𑌵𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌃 ॥௧௫॥

---

1. நான்போட்ட விலங்கை நான்தான் தறிக்கவேணும். எனக்கு விலங்கு போடுவதில் மாத்திரம் எண்ணமில்லை. கெஞ்சிக்கேட்டுக்கொண்டால், முன் எண்ணத்தை மாற்றி விலங்கைத்தறித்து விடுவேன். ஆகையால் என்னைத்தான் கெஞ்சவேணும். என்னைக்கெஞ்சினால் பிரயோஜனமுண்டு. மயக்கத்தைத் தீர்க்கும் சக்தி மாத்திர மிருந்தால், போதாது. தயையும் கூட இருக்கவேணும். இல்லாவிட்டால் அவனைக் கெஞ்சிக்கேட்டுக் கொள்ளுவதில் பிரயோஜனமில்லை தயையிருந்தாலும் "இவனைச்சேர்த்துக் கொள்ளலாம், இவனைச்சேர்த்துக் கொள்ளக் கூடாது" என்று லோகத்தாரைப்போல் கட்டுப்பாடு பண்ணினால், பொறுக்கமுடியாத குற்றங்களைச் செய்த சிலர் அவனிடம் போகமுடியாது. ஆகையால் தாரதம்மியம் பாராமல் எல்லாரையும் ரக்ஷிக்கிறவனை இருக்கவேண்டும். இந்த குணம் பகவானுக்கு இருக்கிறதென்று காக்கை, குரங்கு (ஸுக்ரீவன்) ராக்ஷஸன் (விபீஷணன்,) த்ரௌபதி முதலானவர்கள் சரித்திரத்தால் நன்றாய் தெரிந்து கொள்ளலாம், "ராவணனே வந்தாலும் சேர்த்துக்கொள்வேன்" என்றுசொல்லியிருக்கிறான்.

2. பகவானுடைய ஸ்வரூபத்தை மறைக்கிறபடியால். பிரகிருதி ஒரு திரைபோல் இருக்கிறது. அவனைக்கெஞ்சி கேட்டுக் கொள்ளுகிறவனுக்கு அது மறைக்கிறதில்லை. மறைக்காததும் தவிர அந்தப்பிரகிருதியே கண்ணாடிபோல் இருந்து பகவானுடைய குணங்களையும் தன்னுடைய கெடுதிகளையும் காட்டுகிறது.

ந மாம் து³ஷ்க்ருதிந:-பாபகர்மாணோ மாம் ந ப்ரபத்³யந்தே| து³ஷ்க்ருததாரதம்யேந சதுர்விதா⁴ ப⁴வந்தி-மூடா⁴:-நராத⁴மா:-மாயயாபஹ்ருதஜ்ஞாநா:-ஆஸுரம் பா⁴வமாஶ்ரிதாஶ்சேதி| மூடா⁴:-விபரீதஜ்ஞாநா: பூர்வோக்தப்ரகாரேண ப⁴க³வச்சே²ஷதைகரஸாத்மாநம் போ⁴க்³யஜாதம் ச ஸ்வஶேஷதயா மந்வாநா:| நராத⁴மா:-ஸாமாந்யேந ஜ்ஞாதேऽபி மதீ³யே ஸ்வரூபே மது³ந்முக்²யாநர்ஹா:| மாயயாபஹ்ருதஜ்ஞாநா:-மத்³விஷயம் மதை³ஶ்வர்யவிஷயம் ச ஜ்ஞாநம் ஸம்பா⁴விதம் யேஷாம் தத³ஸம்பா⁴வநாபாதி³பி⁴: குயுக்திபி⁴ரபஹ்ருதம், தே ததோ²க்தா:| ஆஸுரம் பா⁴வமாஶ்ரிதா:-மத்³விஷயம் மதை³ஶ்வர்யவிஷயம் ச ஜ்ஞாநம் ஸுத்³ருட⁴முபபந்நம் யேஷாம் த்³வேஷாயைவ ப⁴வதி. தே ஆஸுரம் பா⁴வமாஶ்ரிதா:| உத்தரோத்தரா: பாபிஷ்ட²தமா:||

அவ—இப்படியிருந்தால் பகவானுடைய தியானத்தை உண்டு பண்ணக்கூடிய பிரபத்தியை அவனிடத்தில் ஏன் எல்லாரும் செய்கிறதில்லை என்றால், சொல்லுகிறார்—

பாபம் பண்ணினவர்கள் என்னிடத்தில் வந்து கெஞ்சிக் கேட்டுக் கொள்வதில்லை. அவர்கள் பாபத்தின் தாரதம்மியத்தாலே நாலுவகைப்பட்டவர்கள். (1) மூடர்கள். அதாவது முன் சொன்னபடி நமக்கு யஜமானனாக பகவான் என்று ஒருவன் இருக்கிறானென்று அறியாமல், இயற்கையாக அவனுக்குச் சேஷமாயிருக்கிற தன்னையும், மற்ற எல்லா வஸ்துக்களையும் தனக்காகவே இருப்பதாக நினைக்கிறவர்கள். (2) நராதமர்கள் 1 (மனிதர்களுக்குள்ளே மிகவும் தாழ்ந்தவர்கள்.) அதாவது—தைவம் என்று ஒன்று

---

1. *அறிவில்லாதவர்களுக்கும் கெட்டயுக்திகளால் அறிவைக்கெடுக்கிறவர்களுக்கும் நடுவில் நராதமன் என்ற சொல்லினாலே பகவானுடைய அறிவுவர்தவரைத்தான் சொல்லவேணும். உபநிஷத்துக்களின் அர்த்தத்தை ஸந்தேஹமில்லாமல் தெரியாவிட்டாலும், எல்லா லோகங்களிலும் பிரஸித்தமான புராணக்கதைகளாலே பகவானைப் பொதுவாகத் தெரியும். ஆனால் அவனுடைய நல்ல குணங்கள் நன்றாய் தெரியாது. அதனால் அவனிடம் போக வேணுமென்று எண்ணமுண்டாகவில்லை. த்வேஷமுமில்லை.*

இருப்பதாகப்பொதுவாகத்தெரிந்தாலும், அவனிடம் போகவேணும், அவனை நினைக்கவேணும் என்று எண்ணமில்லாதவர்கள். (3) சாஸ்திரங்களைக் கொண்டு தைவத்தையும், அது எல்லா உலகங்களுக்கும் யஜமாநன் என்பதையும் அறியும்போது, "அது எப்படியிருக்கக்கூடும்" என்கிற தப்பு யுக்திகளைக் கொண்டு அதைத் தூஷிக்கிறவர்கள். (4) தைவம் எல்லா உலகத்துக்கும் யஜமானன், எல்லாவற்றையு மூண்டு பண்ணுகிறவன் என்று தீர்மானமாய் தெரிந்தும், அவனிடத்தில் த்வேஷம் பண்ணுகிறவர்கள். இவர்களில் முதல் வகுப்பைக் காட்டிலும் இரண்டாவது வகுப்பார்கெட்டவர். இரண்டாவது வகுப்பாரைக் காட்டிலும் மூன்றாவது வகுப்பார் இன்னும் கெட்டவர்கள். நாலாவது வகுப்பார் எல்லாரையும் காட்டிலும் கெட்டவர்கள். 1 [15]

𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌿𑌧𑌾 𑌭𑌜𑌨𑍍𑌤𑍇 𑌮𑌾𑌂 𑌜𑌨𑌾𑌸𑍍𑌸𑍁𑌕𑍃𑌤𑌿𑌨𑍋𑌽𑌰𑍍𑌜𑍁𑌨।
𑌆𑌰𑍍𑌤𑍋 𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑍁𑌰𑌰𑍍𑌥𑌾𑌰𑍍𑌥𑍀 𑌜𑍍𑌞𑌾𑌨𑍀 𑌚 𑌭𑌰𑌤𑌰𑍍𑌷𑌭 ॥

𑌸𑍁𑌕𑍃𑌤𑌿𑌨𑌃-𑌪𑍁𑌣𑍍𑌯𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌃, 𑌮𑌾𑌂 𑌶𑌰𑌣𑌮𑍁𑌪𑌗𑌮𑍍𑌯 𑌮𑌾𑌮𑍇𑌵 𑌭𑌜𑌨𑍍𑌤𑍇। 𑌤𑍇 𑌚 𑌸𑍁𑌕𑍃𑌤𑌤𑌾𑌰𑌤𑌮𑍍𑌯𑍇𑌨 𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌿𑌧𑌾𑌃। 𑌸𑍁𑌕𑍃𑌤𑌗𑌰𑍀𑌯𑌸𑍍𑌤𑍍𑌵𑍇𑌨 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌤𑍍𑌤𑌿𑌵𑍈𑌶𑍇𑌷𑍍𑌯𑌾𑌚𑍍𑌚𑍋𑌤𑍍𑌤𑌰𑍋𑌤𑍍𑌤𑌰𑌾𑌧𑌿𑌕𑌤𑌮𑌾 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿। 𑌆𑌰𑍍𑌤𑌃-𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌹𑍀𑌨𑌃 𑌭𑍍𑌰𑌷𑍍𑌟𑍈𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌃 𑌪𑍁𑌨𑌸𑍍𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌕𑌾𑌮𑌃। 𑌅𑌰𑍍𑌥𑌾𑌰𑍍𑌥𑍀-𑌅𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍈𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌤𑌯𑌾 𑌐𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌕𑌾𑌮𑌃। 𑌤𑌯𑍋𑌰𑍍𑌮𑍁𑌖𑌭𑍇𑌦𑌮𑌾𑌤𑍍𑌰𑌮𑍍, 𑌐𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌵𑌿𑌷𑌯𑌤𑌯𑍈𑌕𑍍𑌯𑌾𑌦𑍇𑌕𑌏𑌵𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑌃। 𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑍁𑌃-𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌵𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌤𑍍𑌮𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌾𑌵𑌾𑌪𑍍𑌤𑍀𑌚𑍍𑌛𑍁𑌃। 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍇𑌵𑌾𑌸𑍍𑌯 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌮𑌿𑌤𑌿 𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑍁𑌰𑌿𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑍍। 𑌜𑍍𑌞𑌾𑌨𑍀 𑌚 "𑌇𑌤𑌸𑍍𑌤𑍍𑌵𑌨𑍍𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌮𑍇 𑌪𑌰𑌾𑌮𑍍" 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌨𑍋𑌦𑌿𑌤𑌭𑌗𑌵

---

1. அறியாதவன் குற்றம் பண்ணுவதைக் காட்டிலும் அறிந்தவன் குற்றம் பண்ணினால், அவனுக்கு அதிக தண்டனை உண்டு. இந்த நியாயப்படி இவர்களுக்கு நல்ல ஞானமிருப்பதே அவர்களை மிகுந்த பாபிகள் என்று சொல்லுவதற்குக் காரணம். ஏனென்றால் அறிவு த்வேஷத்துக்கு மாத்திரம் உதவுகிறது. நன்றாக பகவானை அறிந்தும் அவனை த்வேஷிப்பதற்குக் காரணம் முன்செய்த பாபத்தின் கொடுமை.

चतुर्विधा भजन्ते मां जनाः सुकृतिनोऽर्जुन । आर्तो जिज्ञासुरर्थार्थी ज्ञानी च भरतर्षभ ॥ ॥ கசு ॥

புண்ணியம் பண்ணினவர்கள் என்னிடத்தில் பிரபத்தி பண்ணி, அதாவது என்னைக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டு, என்னையே தியானம் பண்ணுகிறார்கள். அவர்களும் புண்ணியத்தின் தாரதம்மியத்தினாலே நாலுவகைப் பட்டவர்கள். (1) பணம் ஏராளமாய் இருந்து, அது போய், மறுபடியும் அது வேணும் என்று ஆசைப்படுகிறவர்கள். (2) மிகவும் ஏழையாகவே யிருந்து, புதிதாகப் பணம் வேணுமென்று ஆசைப்படுகிறவர்கள். இந்த இரண்டு வகுப்பாரும் ஒரே வகுப்புதான். அவர்களுக்கு வேண்டிய பிரயோஜநம் பணம் மாத்திரம் தான். பணம் என்கிற சொல்லாலே பிரும்மப்பட்டம் வரையிலுள்ள ஸம்பத்தைச் சொல்லுகிறது. (3) உடம்பை விட்டு 1 ஜீவாத்மாவின் ஸ்வரூபத்தை மாத்திரம் பார்த்துக் கொண்டிருக்க வேணுமென்று ஆசைப்படுகிறவர்கள். (4) ஞானிகள். அதாவது—தாங்கள் பகவானுக்காகவே ஏற்பட்டவர்கள் என்று அறிந்து பகவானையே யடையவேணும் என்றும், அவனே எல்லாப் பிரயோஜநங்களுக்கும் மேல்ப்பட்ட பிரயோஜநம் என்றும் எண்ணுகிறவர்கள். அவர்கள் ஜீவாத்மஸ்வரூபத்தை

1. முதலிரண்டு வகுப்பார்கள் வெளியிலிருக்கும் பிரயோஜநங்களை ஆசைப்பட்டவர்கள். ஞானி என்பவர்கள் பகவானை ஆசைப்பட்டவர்கள். ஆகையால் மூன்றாவது வகுப்பார் ஜீவாத்மஸ்வரூபத்தைமாத்திரம் பார்க்கிறவர்கள் என்றே கொள்ளவேணும். ஜீவாத்மஸ்வரூபத்தை மாத்திரம் பார்ப்பது விஷயங்களைக்காட்டிலும் மிகுந்த ஆனந்தத்தை கொடுக்கக்கூடியது. அதுவும் ஜீவன் அடையவேண்டிய வஸ்து. பணம் வேண்டுகிறவர்களைஒரு வகுப்பாக சொன்னபடியாலே, மூன்றே வகுப்பு ஏற்படுகிறது. இந்த மூன்று வகுப்பைப்பற்றியே எட்டாவது அத்தியாயத்தில் பேசப்போகிறார்.

ஜீவாத்மஸ்வரூபத்தை மாத்திரம் பார்ப்பதற்கு ஒரு இடம் ஏற்பட்டிருக்கிறது, சிலர் அதற்கு வேண்டிய வேலைகளைச்செய்து, அந்த இடத்திற்குப் போய், கொஞ்சகாலம் ஜீவாத்மஸ்வரூபத்தைப் பார்த்து மறுபடியும் பிறக்கிறார்கள். அவர்களன்றோ இந்த சுலோகத்தில் சொல்லப்பட்டவர்கள். வேறுசிலர் மோக்ஷத்தை அடைவதற்காக, மோக்ஷத்

மாத்திரம் பார்ப்பதில் நிற்காதவர்கள். இவர்களில் முதல் இரண்டாவது வகுப்பாரைக் காட்டிலும் மூன்றாவது வகுப்பார் உயர்ந்தவர். நாலாவது வகுப்பார் எல்லாரைக்காட்டிலு முயர்ந்தவர்] ஏனென்றால், பிரபத்திக்கு வேண்டிய நம்பிக்கை முதலானவைகள் எல்லாருக்கும் இருந்தாலும், அவர்கள் ஆசைப்படும் பலத்தின் பேதத்தால் பிரபத்திகளுக்கு பேதமும், அவைகளைச் செய்தவர்களின் பேதமும் ஏற்படுகிறது. [16]

தேஷாம் ஜ்ஞாநீ நித்யயுக்த ஏகபக்திர் விஶிஷ்யதே ।
ப்ரியோ ஹி ஜ்ஞாநிநோऽத்யர்த²மஹம் ஸ ச மம ப்ரிய:॥

தேஷாம் ஜ்ஞாநீ விஶிஷ்யதே, குத: ? நித்யயுக்த ஏகபக்திரிதி ச- தஸ்ய ஹி மதேகப்ராப்யஸ்ய மயா யோகோ நித்ய:॥ இதரயோஸ்து யாவத்ஸ்வாபிலஷிதப்ராப்தி மயா யோக: । ததா ஜ்ஞாநிந ஏகஸ்மிந்நேவ பக்தி: । இதரயோஸ்து ஸ்வாபிலஷி

தைக்கொடுக்கக்கூடிய வேலைகளை செய்கிறார்கள். அவர்கள் சிலகாரணத்தால் முன் சொன்ன இடத்துக்குப்போய்,கொஞ்சகாலம் ஜீவாத்மஸ்வரூபத்தை மாத்திரம் பார்த்து, பிறகு ஸம்ஸாரத்துக்குத்திரும்பாமல் மோக்ஷத்தை அடைகிறார்கள். அவர்கள்தான் இங்கே சொல்லப்பட்டவர்கள். இவர்களும் ஞானிகளும் மோக்ஷத்தை அடைகிறபடியால், இவர்களை இரண்டுவகுப்பாகப் பிரிக்கலாமோ வென்றால்,பதில்—ஒருவர் கொஞ்சகாலம் பகவானை அனுபவிக்காமல் தன்னைமாத்திரம் பார்த்துக் துக் கொண்டிருக்கிறார். இந்த இளப்பத்தைப்பற்றி இவர்களைத் தனியாக பிரித்தது. இவர்கள் சாஸ்திரத்தினால் ஜீவஸ்வரூபத்தை அறிந்து கர்மயோகத்தையும் ஞானயோகத்தையும் செய்து, ஜீவஸ்வரூபத்தை உள்ளபடி பார்த்தார்கள். அதை அனுபவிப்பதில் ஆசை உண்டாயிற்று. அதினால் நான் பிரும்மத்துக்கு உடம்பு என்று தன்னை முக்கியமாகவைத்துத்தியானம்செய்தார்கள்.பிரும்மத்தைச் சேர்த்துத்தியானம்பண்ணினதால், பகவான்ஸந்தோஷத்தைஅடைந்துஅவர்களுக்குமோக்ஷத்தைக் கொடுக்கிறான். தன்ஸ்வரூபத்தைஅனுபவிப்பதில் ஆசையினாலே“நான்’ ‘நான்’என்று தன்னை முக்கியமாகத்தியானம் செய்ததற்குதண்டனையாகவும்,தன்னைஅனுபவிப்பதில்ஆவலிருந்ததால்அதைகொடுப்பதற்காகவும் கைவல்யத்தில் கொஞ்சம்காலம் வைத்து, பிறகு மோக்ஷத்தை கொடுக்கிறான்.

𑌸𑍍𑌥𑌿𑌤𑍇 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌵𑌿𑌦𑍇𑌕𑌭𑌕𑍍𑌤𑌿𑌶𑍍𑌚 । 𑌅𑌤 𑌏𑌵 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌯𑌤𑍇 । 𑌕𑌿𑌂𑌚
𑌪𑍍𑌰𑌿𑌯𑍋 𑌹𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑌿𑌨𑍋𑌽𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌮𑌹𑌂 𑌸 𑌚 𑌮𑌮 𑌪𑍍𑌰𑌿𑌯𑌇𑌤𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌯𑌮𑌰𑍍𑌥𑌃
𑌯𑌦𑍇𑌵𑌮𑌨𑌃 । 𑌜𑍍𑌞𑌾𑌨𑌿𑌨𑍋𑌽𑌹𑌂 𑌯𑌥𑌾 𑌪𑍍𑌰𑌿𑌯𑌃, 𑌤𑌥𑌾 𑌸 𑌚 𑌮𑌮
𑌜𑍍𑌞𑌾𑌨 𑌮𑌮𑌾𑌤𑍍𑌮𑌭𑌕𑍍𑌤𑌿𑌨𑌾𑌵𑍍𑌯𑌭𑌿𑌚𑌾𑌰𑌂 𑌨 𑌶𑌕𑍍𑌯𑌤𑍇 𑌵𑌕𑍍𑌤𑍁𑌮𑍍, 𑌪𑍍𑌰𑌿
𑌯𑌤𑍍𑌵𑌸𑍍𑌯𑌾𑌤𑌿𑌶𑌯𑌿𑌤𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌯𑌥𑌾 𑌜𑍍𑌞𑌾𑌨𑌿𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑌹𑍍𑌲𑌾𑌦𑌸𑍍𑌯
"𑌮𑌹𑌾𑌵𑌿𑌷𑌂 𑌦𑌂𑌷𑍍𑌟𑍍𑌰𑌾𑌭𑌿𑌃 𑌦𑌷𑍍𑌟𑍍𑌰𑌃 𑌅𑌵𑌾𑌨𑌾𑌃
𑌪𑌤𑌤𑌃 । 𑌨 𑌵𑌿𑌵𑍇𑌦𑌾𑌤𑍍𑌮𑌨𑍋 𑌗𑌾𑌤𑍍𑌰𑌂 𑌤𑌤𑍍𑌸𑍍𑌮𑍃𑌤𑍍𑌯𑌾𑌹𑍍𑌲𑌾𑌦𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌃"
𑌇𑌤𑌿 । 𑌸𑍋𑌽𑌪𑌿 𑌤𑌥𑍈𑌵 𑌮𑌮 𑌪𑍍𑌰𑌿𑌯𑌃 ॥ ॥ ௧௭ ॥

இந்த வகுப்புகளுக்குள் ஞானீ என்பவன் மிகவும் உயர்ந்தவன். ஏனென்றால், என்னை அறிந்தது முதல் ஒருநாளும் அவன் என்னை விடவில்லை. என்னைக்கொஞ்சகாலம் தியானம் செய்தான். பிறகு என்னையே அடைந்தான். மற்ற இரண்டு வகுப்பார்களும் பணம் முதலானவை கைக்கு வந்தவுடன், என்னை விட்டு விடுகிறார்கள். அவர்களுக்குப் பணம் முதலானவை களிலும், அதைக் கொடுப்பதாலே என்னிடத்திலும் பிரீதி இருக்கிறது. அதுவும்நான் கொடுக்கும்வரையில். ஞானிக்குப் பிரீதிமுழுமையும்என்னிடத்தில் தான்இருக்கிறது. அவனுக்கு என்னைத்தவிர வேறுபிரயோஜநத்தில் ஆசையில்லை. எல்லாம் தெரிந்த என்னாலும் ஞானிக்கு என்னிடத்திலிருக்கிற பிரீதியை இவ்வளவுஎன்று சொல்லமுடியாது. ஏனென்றால், அந்தப் பிரீதிக்கு அளவில்லை. அதைப் பார்க்கும்போது எனக்கு அவனிடத்தில்இருக்கும் பிரீதி மிகவும் கொஞ்சம் என்று தோன்றுகிறது. ஞானிகளுக்குள் மிகவுமுயர்ந்த[1]பிரஹ்லாதன் என்னைநினைத்து ஸந்தோஷப்பட்டுக் கொண்டிருந்ததாலே, பெரிய பாம்பு கடித்ததைக்கூட அறியவி

---

1. பிறந்ததுமுதலே உயர்ந்தஞானமுடையவன். பகவான் எல்லா லோகத்துக்கும் ராஜா அல்லஎன்று தன் தகப்பன் சொன்னதையும் கேட்காதவன். ஆயிரம் வழியாக பயமுறுத்தியும் மனது கலங்காதவன். கொடுமையான துக்கத்திற்குக் காரணம் இருந்தபோதிலும், துக்கத்தை அநுபவிக்க வில்லை. இதற்குக் காரணம் பகவானிடத்தில் இருந்த எல்லையில்லாத ப்ரீதி.

ல்லையாம். ஞானியிடத்தில் எனக்கும் அப்படியே 1 அளவில்லாத பிரீதி இருக்கிறது. [17]

உதாராஸ்ஸர்வ ஏவைதே ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம் ।
ஆஸ்தித: ஸ ஹி யுக்தாத்மா மாமேவாநுத்தமாம் கதிம் ॥௧௮॥

ஸர்வே ஏதே மாமேவோபாஸநபரா உதாரா:- வதாந்யா:, யே மத்த: யத்கிஞ்சிதபி க்ருஹ்ணந்தி தே ஹி மம ஸர்வஸ்வதாயிந:। ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம்- ததாயத்தாத்மதாரணோஹமிதி மந்யே। கஸ்மாதேவம்- யஸ்மாதயம் மயா விநா ஆத்மதாரணாஸம்பாவநயா மாமேவ அநுத்தமம் ப்ராப்யமாஸ்தித:। அதஸ்தேந விநா மமாத்மதாரணம் ந ஸம்பவதி, ததோ மமாத்மா ஹி ஸ: ॥ ॥௧௮॥

இவர்கள் எல்லாரும் எனக்கு 2 தங்கள் ஸொத்து முழுமையும் மிகவும் பிரீதியுடன் கொடுக்கிறவர்கள். ஏனென்றால் என்னைத் தியானம் செய்து, என்னிடமிருந்து ஏதாவது ஒன்றை வாங்கிக் கொள்கிறவர்களை எனக்கு எல்லாவற்றையும் கொடுக்கிறவர்களாக நினைக்கிறேன். ஆனால் ஞானிதான் எனக்கு ஆத்மா. நான் அவனுக்கு உடம்பு என்று என் எண்ணம். அதாவது—ஆத்மாவாலே தான் உடம்பு நிற்கிறது. அப்படியே அவனாலேதான் நான் இருக்கிறேன். அவனால் என்னை விட்டுப்பிரிந்து அரைவினாடி கூடத் தாங்கமுடியாது. ஆதலால் என்னையே எல்லாவற்றைக் காட்டிலும் உயர்ந்த பிரயோஜனமாக நினைத்திருக்கிறான். நானும்

1. ஞானீ பகவானிடத்தில் அவன் ஸ்வரூபத்தையும் அவனுடைய கணக்கில்லாத குணங்களையும், ஸொத்துக்களையும் பார்த்து, பிரீதி பண்ணுகிறான். பகவானுக்கோவென்றால் அவ்வளவு பிரீதியும் ஞானி ஒருவனிடத்திலேயெ உண்டாகிறது.

2. என்னை அடைந்தவர்களுக்கு எல்லாபலன்களையும் கொடுப்பது (பரமௌதார்யம்) என்கிற ஒரு ஸங்கதியைத்தான் நான் எனக்கு எல்லா ஸொத்தாகவும் நினைத்திருக்கிறேன். அந்த ஸொத்து என்னிடமிருந்து வாங்குகிறவர்கள் இல்லாமல் போனால், எனக்கு எப்படிக் கிடைக்கும் ஆகையால் என்னிடமிருந்து வாங்கிக் கொள்ளுகிறவர்கள் எனக்குஎல்லாஸொத்தையும் கொடுக்கிறவர்கள்.

அவன் இல்லாமல் போனால் அரைநிமிஷம்கூட தாங்க மாட்டேன். ஆகையால் அவன் எனக்கு ஆத்மா. [18]

बहूनां जन्मनामन्ते ज्ञानवान्मां प्रपद्यते ।
वासुदेवः सर्वमिति स महात्मा सुदुर्लभः ॥१९॥

नाल्पसंख्यासंख्यातानां पुण्यजन्मनाम् अन्ते [illegible] ज्ञानवान् [illegible] बहूनां जन्मनाम् अन्ते [illegible] वासुदेवशेषतैकरसोऽहं [illegible] ज्ञानवान् मां प्रपद्यते [illegible] वासुदेवः सर्वमिति [illegible] स महात्मा – महामनाः सुदुर्लभः [illegible]

वासुदेवः सर्वमिति [illegible] ज्ञानिनोऽत्यर्थमहं [illegible] ज्ञानी त्वात्मैव मे मतम् [illegible] ज्ञानवान् [illegible] [illegible] वासुदेवः सर्वमिति [illegible] सुदुर्लभः [illegible] ॥१९॥

ஜீவன் என்னுடைய உபயோகத்திற்காகவே தான் ஏற்பட்டவன் என்று தன்னுடைய ஸ்வரூபத்தைஉள்ளபடிஅறிந்து,என்னை அடைந்து, என் வேலைகளைத்தான் செய்ய வேணுமென்று எண்ணி, என்னை அடைவதற்கு உதவியான என் தியானத்தை பண்ணுகிறது என்பதற்கு சில ஜந்மங்களில் மாத்திரம் செய்த புண்ணியங்கள் போதாது.1 அநேக ஜந்மங்களில்பண்ணினபுண்ணியங்களாலேஅந்தஜந்மங்களின்கடைசியில்"நான்பகவானுக்குவேலை செய்வதற்காகவே ஏற்பட்டவன்.என்ஸ்வரூபமும்,இருப்பும்,வேலைகளும் எல்லாம் அவன் அதீநம். அவனிடத்தில் கணக்கில்லாத நல்ல குணங்கள் கூட்டம் கூட்டமாக இருப்பதாலே, அவனே மிகவும் உயர்ந்தவன்'' என்கிற 2 எண்ணம் உண்டாகி, "வாஸுதேவன்தான் நான் அடைய வேண்டிய வஸ்து, அவன்தான் என்னைத் தன்னிடம் அழைத்துக் கொண்டு போகக்கூடியவன். அவன்தான் இன்னும் எனக்கு வேண்டிய எல்லா வஸ்துக்களும்"என்று எண்ணி, என்னைத்தியானம் செய்கிறான். இப்படிப்பட்ட பெரிய மனதை உடையவன் உலகத்தில் அகப்படுவது மிகவும் அரிது.

1. சுலோகத்தில் அநேகஜந்மங்கள் என்று பொதுவாகச்சொன்ன போதிலும், நல்ல அநேகஜன்மங்கள் என்றுதான் பொருள். ஜந்மங்கள் அதிகமாயிருப்பதாலே ஞானம் வந்துவிடாது. அப்படி வருவதாயிருந்தால், எல்லாரும் பிரயாஸமில்லாமல், ஞானியாக ஆய்விடுவார்களே.

2. ஒருவன் இங்கே சொல்லுகிறபடி ஞானியாவதற்கு இடஞ்சல் அவன் முன்செய்த பாபம். இந்தப் பாபமானது அனேக ஜந்மங்களில் செய்த புண்ணியங்களாலே போக வேண்டும். இங்கு ஓர் கேள்வி— பாபம் என்பது அதின் பலனை அனுபவிப்பதாலும், அதற்கு ஏற்பட்ட பிராயச்சித்தங்களாலும் போகுமே ஒழிய, புண்ணியத்தினால் எப்படி போகும்—என்று. பதில்—இங்கு புண்ணியம் என்பது பணம் பிள்ளை பெண்டாட்டி முதலானபலன்களுக்காக பகவானுக்கு ஸந்தோஷத்தை உண்டுபண்ணக் கூடிய சிலவேலைகள். இந்த வேலைகளைச் செய்தவர்களுக்கு பகவான் அந்தவேலைகளால்ஸந்தோஷத்தை அடைந்து,அந்தந்த பலன்களைக் கொடுப்பதுமன்றி,மிகுந்த தயையினால் தன்னுடையஉண்மையானஅறிவுக்கு இடஞ்சலான முன்னேசெய்தபாபங்களையும் போக்குகிறான்.இதைப் பற்றித்தான் புண்ணியங்களால் பாபம் போகுமென்று சொன்னது. இதற்கு வெகு காலம் ஆகும். அதனாலேதான் வெகு ஜன்மங்களின் கடைசியிலென்று சொல்லி யிருக்கிறது.

“வாஸுதேவன்தான் எல்லாம்” என்று சுலோகத்திலிருப்பதற்குக் கீழ் சொன்னதுதான் பொருள். எல்லா உலகமும் வாஸுதேவன்தான், அதாவது—அவனைத்தவிர வேறு வஸ்து கிடையாது—என்று பொருள் அல்ல. ஏனென்றால் முன் இரண்டு சுலோகங்களில் “ஞானிக்கு என்னிடத்தில் அளவில்லாத ப்ரீதி இருக்கிறதெ”ன்றும், “அவன் என்னைத்தான் மிகவும் உயர்ந்த பிரயோஜநமாக நினைத்துக் கொண்டிருக்கிறான்” என்றும் சொல்லப்பட்டது. இந்த சுலோகத்தில் “ஜ்ஞாநவான்” (ஞானமுடையவன்) என்று சொன்னது முன் சுலோகங்களில் சொன்ன ஞானியைத்தான். மேலும், இந்த அத்தியாயம் 4-வது சுலோகம் முதல் 12-வது சுலோகம் வரையில் அறிவில்லாத பிரகிருதியும், அறிவுள்ள ஜீவன்களும் பகவானுடைய சொத்துக்கள், பகவானுக்காகவே ஏற்பட்டவைகள் என்றும், இந்த இரண்டு பிரகிருதியினுடையவும், அவைகளால் உண்டு பண்ணப்பட்ட உலகத்தினுடையவும் ஸ்வரூபமும், இருப்பும், வேலைகளும் பகவானுக்கு அதீநம் என்றும், அவன்தான் எல்லாவிதத்தாலும் உயர்ந்தவன் என்றும் சொல்லப்பட்டது. ஆகையாலே பகவானும் உலகமும் ஒன்றன்று.

அவ— தஸ்ய ஜ்ஞாநிநோ துர்லபத்வே ஹேதுமாஹ—

காமைஸ்தைஸ்தைர்ஹ்ருதஜ்ஞாநா: ப்ரபத்யந்தே(அ)ந்யதேவதா: ।
தம் தம் நியமமாஸ்தாய ப்ரக்ருத்யா நியதா: ஸ்வயா ॥

ஸர்வோ ஹி லௌகிக: புருஷ: ஸ்வப்ரக்ருத்யா-வாஸநயா குணமயபதார்த்தவிஷயயா நியத:-நித்யாந்வித: தைஸ்தைஸ்ஸ்வவாஸநாநுகுணை: குணமயை: காமை:-ஹ்ருதமத்ஸ்வரூபவிஷயஜ்ஞாந: தத்தத்காமஸித்த்யர்த்தம், அந்யதேவதா:-மத்வ்யதிரிக்தா: கேவலேந்த்ராதிதேவதா:-தம் தம் நியமமாஸ்தாய - தத்தத்தேவதாவிஶேஷமாத்ரப்ரீணநாஸாதாரணம் நியமமாஸ்தாய, ப்ரபத்யந்தே-தா ஏவாஶ்ரித்யார்ச்சயந்தே ॥ ॥20॥

அவ—கீழ்ச்சொன்ன ஞானி அகப்படுவது அரிது என்பதற்கு காரணம் சொல்லுகிறார்.

உலகத்திலிருக்கும் எல்லாப்பிராணிகளும் நெடுநாளாய் வந்த பாபவாஸனையோடு சேர்ந்திருக்கிறார்கள். ஒருவனாவது அதை விட்டவனில்லை. அந்த வாஸனையினால் எல்லாருக்கும் என்னைத்த விர மற்றஸங்கதிகளிலேயே ஆசையுண்டாகிறது. அந்த ஆசை வலிமையுள்ளதாயிருப்பதாலே, என் ஸ்வரூபத்தைப் பற்றி அவர்களால் அறிய முடியவில்லை. ஆசைப்பட்ட அந்தந்த வஸ்துக்கள் கிடைப்பதற்காக,என்னைக்காட்டிலும் வேறான இந்திரன்முதலான தேவர்களை,என்னைச் சேர்க்காமல்,சாஸ்திரங்களில் சொல்லியபடி, அந்தந்த தேவதைகளுக்கு மாத்திரம் ஸந்தோஷத்தை உண்டுபண்ணுவதற்காக வேலைகளைச்செய்து, அவர்களையே ஸந்தோஷப்படுத்துகிறார்கள். ஆகையால் என்னிடத்தில் ஆசையுள்ளவன் மிகவும் அரிது. (20)

யொ யொ யாஂ யாஂ தநுஂ ஹக்தஃ ஶ்ரஜயாzவிதுமிச்ஹதி ।
தஸ்ய தஸ்யாசலாஂ ஶ்ரஜாஂ தாமெவ விடயாம்யஹம் ॥உக॥

தா அபி டெவதா மதீயாஸ்தநவஃ "யஸ்யாதித்யஃ ஶரீரம் யமாதித்யோ ந வெட யஸ்யாதித்யஃ ஶரீரம்" த்யாதிஶ்ருதிஹிஃ ஸ்ருதிவாதிதா மதீயாஸ்தநவஉத்யஜாநந்நபி யொ யொ யாஂ யாஂ-மதீயாஂதநூதிகாஂ தநுஂ ஹக்தஃ ஶ்ரஜயாவிதுமிச்ஹதி, தஸ்ய தஸ்யாஜாநதொzபி மத்தநுவிஷயெயஷா ஶ்ரஜெதி ஹமதநுஸந்தாய தாமெவாசலாஂ-நிவிஜ்நாஂ விடயாம்யஹம் ।

இப்படி அவர்களால் ஸந்தோஷப்படுத்தப்பட்ட இந்திரன் முதலான தேவதைகள் என்னுடைய உடம்புகள் என்று வேதம் சொல்லுகிறது. இந்த ஸங்கதியை அவர்கள் அறியாவிட்டாலும், எவனெவன் எந்த எந்த என்னுடைய உடம்பான அந்தந்த தேவதைகளைப் பிரீதியுடனும் சிரத்தையுடனும் பூஜிப்பதற்கு ஆசைப் படுகிறானோ, அவனுடைய அந்தப்பிரீதியையும் சிரத்தையையும் என் உடம்பைப்பற்றினவையென்று நினைத்து, நானே அவைகளை இடஞ்சலில்லாமலும், நிலையாகவும் செய்கிறேன். (21)

ஸ தயா ஶ்ரஜயா யுக்தஸ்தஸ்யாராயநமீஹதெ ।
லஹதெ ச ததஃ காமாந் மயைவ விஹிதாந் ஹி தாந் ॥உஉ॥

स तया निर्विघ्नया श्रद्धया युक्तस्तस्येन्द्रादे-
राराधनं प्रतिसमीहते । ततः मत्तनुभूतेन्द्रादि
देवताराधनात्, तानेव हि स्वाभिलषितान् कामान्
मयैव विहितान् लभते । यद्यप्याराधनकाले इन्द्राद-
यो मदीयास्तनवः, तत्तदवस्थितं च मदाराधनमिति
न जानाति, तथापि तस्य वस्तुतो मदाराधनरूपत्वादारा
धकाभिलषितं तन्मयैव विहितमिति ॥ ॥௨௨॥

அவ—என்னைத்தவிர வேறுபலன்களில் ஆசைப்பட்டு, வேறு தேவதையினிடம் ஒருவன் போனாலும், அந்த தேவதையைப்பூஜிப்பது ஸரியாய் நடக்காமல், பலன் கிடைக்காவிட்டால், சாஸ்திரத்தில் கூடாது என்று சொல்லப்பட்டு மிகுந்த துக்கத்தைக் கொடுக்கக்கூடிய பாபங்களைச்செய்து, கெட்டுப்போய் விடுவார்களே என்று பயந்து, மிகுந்த கருணையாலே நானே அந்த தேவதைகளைப்பூஜிப்பதற்கு சிரத்தையைக் கொடுத்து, அதின் இடைஞ்சலைத்தீர்த்து, ஸரியாய் நடத்தி, அந்தந்த பலன்களையும் கொடுக்கிறேன் என்று சொல்லுகிறார்—

அவன் தடங்கலில்லாத அந்த சிரத்தையோடு கூடினவனாய் என்னுடைய உடம்புகளான அந்தந்த தேவதைகளைப்பூஜிக்கிறான். அதினால் அவன் வேண்டின பலனையும் அடைகிறான். அதை நானே கொடுக்கிறேன். பூஜை செய்யுங்காலத்தில் பூஜை செய்யப்பட்டவர்கள் என் உடம்புகள் என்றும், ஆகையால் அவர்களைப் பூஜைசெய்வது என்னுடைய பூஜையென்றும், அவனுக்குத் தெரியாத போதிலும், உண்மையில் அது என் பூஜையானதால், நான் தான் அவர்களுக்கு பலனைக் கொடுக்கிறேன். (22)

अन्तवत्तु फलं तेषां तद्भवत्यल्पमेधसाम् ।
देवान् देवयजो यान्ति मद्भक्ता यान्ति मामपि ॥ ॥௨௩॥

तेषामल्पमेधसां- अल्पबुद्धीनामिन्द्रादिमात्रयाजि-
नां तदाराधनफलमल्पमन्तवच्च भवति । कुतः- देवान्देव
यजो यान्ति- यत इन्द्रादीन् देवान् तद्याजिनो यान्ति-
इन्द्रादयो हि परिच्छिन्नभोगाः परिमितकालवर्तिनश्च ।

ததஸ்தத்யாஜ்யம் ப்ராப்தாந்யேவோத்ஸஹ ப்ராப்யவந்தே ॥ ஸஹக்ஷீ
கவி தேஷாமேவ கர்மணாம் ஸமாராதநரூபதாம் ஜ்ஞாத்வா
பரிஷ்க்ருதஸமஸ்தம் த்யக்த்வா, தீர்ணமேகமப்ராயோஜநா: ஸம்
ப்ராப்நுவந்தி, ந ச புநராவர்தந்தே । "மாமுபேத்ய
து கௌந்தேய புநர்ஜந்ம ந வித்யதே" இதி ஹி வக்ஷ்யதே ॥

அவ—இந்திரன் முதலான தேவதைகளைமாத்திரம் பூஜை செய்கிறவர்களுக்கு தேவரீரே பலன் கொடுத்தால், அவர்களைக் காட்டிலும் தேவரீரையே பூஜிக்கிறவர்களுக்கு என்ன விசேஷம் என்றால், சொல்லுகிறார்—

ஆனால், இந்திரன் முதலானவர்களை மாத்திரம் பூஜை செய்கிறவர்கள் கட்டாயம் அறியவேண்டியதான—அவர்கள் என் உடம்புகள் என்பதை 1 தெரிந்து கொள்ளாதபடியால், அந்தப் பூஜையால் வரப்பட்டப் பிரயோஜநம் கொஞ்சமாயிருக்கும். சீக்கிரமும் போய் விடும். ஏனென்றால், இந்திரன் முதலானவர்களை மாத்திரம் பூஜிக்கிறவர்கள் அவர்கள் இருக்குமிடம் போகிறார்கள். அந்த தேவர்கள் அநுபவிக்கும் ஸுகம் கொஞ்சம். அவர்கள் கொஞ்சகாலம் தானிருப்பார்கள். அவர்கள் இருக்கிறவரைக்கும் இருந்து அவர்களுடன் கூட அவர்களைப்போல் கொஞ்சம் ஸுகத்தை அனுபவித்து, அவர்கள் போகும்போது போய்விடுகிறார்கள். என்னிடத்தில் பிரீதியுள்ளவர்களாய் அந்த கர்மங்கள்தானே எனக்குத் திருப்தியுண்டுபண்ணுகிறது என்று அறிந்து, அவைகளுக்கு ஏற்பட்ட ஸுவர்க்கம் முதலான கொஞ்சமான பிரயோஜநங்களை

---

1. சுலோகத்தில் "அல்பமேதஸாம்" என்றுசொல்லி யிருக்கிறது. அதின் பொருள்—அல்பமான இந்திரன் முதலானவர் களிடத்திலும், அவர்கள் கொடுக்கும் பலன்களிலும் மேதை-(எண்ணம்) உள்ளவர்கள்—என்று. தேவர்களிடத்தில் அறிவு (எண்ணம்) என்றால், அவர்களே பலன் கொடுக்கிறார்கள் என்கிற அறிவும், அவர்களுக்கு பகவான் ஆத்மாவாயிருந்து பலனைக் கொடுக்கிறான் என்கிற அறிவில்லாமையும். அவர்கள் கொடுக்கும் பலன்களில் அறிவு (எண்ணம்) என்றால், அவைகளை ஆசைப்படுவதும், அவைகளுக்கு மேற்பட்ட நிலையான ஸுகத்தை அறியாமையும்.

விரும்பாமல், என் ஸந்தோஷத்தை மாத்திரம் ஆசைப்பட்டு, அந்த கர்மங்களைச் செய்கிறவர்கள் என்னிடம் வந்து சேருகிறார்கள். என்னுடையஇருப்பிடத்திற்கு அழிவில்லாமையால்,அவர்கள்என்னிடம் நிலையாயிருப்பார்கள். திரும்பி வருகிறதில்லை. இந்த ஸங்கதியை மேலே எட்டாவது அத்தியாயத்தில் 16-வது சுலோகத்தில் சொல்லப்போகிறது. (23)

[illegible]

[illegible] ॥௨௪॥

[illegible] ॥௨௪॥

அவ—எல்லோரும் என்னிடம் வரவேண்டுமென்றுதான் நான் மனிதன் முதலான உருவத்துடன் வந்திருக்கிறேன். இப்படிச்செய்தும், சிலருக்கு அது 1 உபயோகப்படவில்லை என்று சொல்லுகிறார்.

---

1. ஜனங்கள் இந்திரன் முதலான தேவதைகளைப் பூஜிப்பதனால் உண்டான வாஸனையினால், உம்மைப் பற்றித்தெரிந்து கொள்ளவில்லை. தேவரீர் நேராக வராதிருக்கும்போது அந்த வாஸனை இப்படி இடஞ்சல் பண்ணலாம். தேவரீரே மனித உருவமாக வந்து எல்லாருடைய கண்களில் படும்போது, தேவரீரை விட்டு விட்டு இந்திரன் முதலானவர்களிடம் என்போகிறார்கள்என்றால், அதற்குப் பதில்இந்த சுலோகத்தில் சொல்லுகிறது.

சாஸ்திரத்தில் சொல்லிய 1 எல்லா கர்மங்களும் என்னை ஸந்தோஷப்படுத்துவதற்காகத்தான் ஏற்பட்டிருக்கின்றன. நான் எல்லா லோகங்களுக்கும் யஜமாநன். என்னையும் என்னுடைய ஸ்வபாவங்களையும் இவ்வளவென்று நினைக்கவும் சொல்லவும் முடியாது. இப்படி உயர்ந்தவனாயிருந்தாலும், மிகுந்த தயையினாலேயும் எல்லோரும் என்னுடைய ஜனங்களாகையாலே—அவர்கள் எப்படி இருந்தாலும் இருக்கட்டும், நான் அவர்களிடம் போக வேண்டியது என்கிற பிரீதியினாலேயும், எல்லோரும் என்னிடம் வருவதற்காகவும் தைவத்தன்மையை விடாமலே நான் வஸுதேவருக்குப் பிள்ளையாக வந்திருக்கிறேன். இந்த ஸங்கதியை அறியாமல், உலகத்தில் ராஜாக்களுக்கு பிள்ளை பிறக்கிறதுபோல் ஏதோ ஒரு கர்மத்தாலே இப்போது வந்து பிறந்திருக்கிறேன் என்று 2 முட்டாள்கள் நினைக்கிறார்கள் அதனாலே என்னிடம் வருகிறதில்லை. என்னைப்பூஜை செய்வதுமில்லை. (24)

𑌅𑌥 — 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌂 𑌨 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌯𑌤𑍀𑌤𑍍𑌯𑌾𑌹 —

𑌨𑌾𑌹𑌂 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌃 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌯𑍋𑌗𑌮𑌾𑌯𑌾𑌸𑌮𑌾𑌵𑍃𑌤𑌃 ।
𑌮𑍂𑌢𑍋𑌽𑌯𑌂 𑌨𑌾𑌭𑌿𑌜𑌾𑌨𑌾𑌤𑌿 𑌲𑍋𑌕𑍋 𑌮𑌾𑌮𑌜𑌮𑌵𑍍𑌯𑌯𑌮𑍍 ॥௨௫॥

𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌸𑌾𑌧𑌾𑌰𑌣𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌦𑌿𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌨𑌯𑍋𑌗𑌾𑌖𑍍𑌯𑌮𑌾𑌯𑌯𑌾 𑌸𑌮𑌾𑌵𑍃𑌤𑍋𑌽𑌹𑌂 𑌨 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌃 । 𑌮𑌯𑌿 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌦𑌿 𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌨𑌦𑌰𑍍𑌶𑌨𑌮𑌾𑌤𑍍𑌰𑍇𑌣 𑌮𑍂𑌢𑍋𑌽𑌯𑌂 𑌲𑍋𑌕𑍋 𑌮𑌾𑌂 𑌅𑌤𑌿𑌵𑌾𑌯𑍍𑌵𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌮𑌤𑌿𑌸𑍂𑌰𑍍𑌯𑌾𑌗𑍍𑌨𑌿𑌤𑍇𑌜

1. ச்லோகத்தில் "பரம் பாவம்" (உயர்ந்த ஸ்வபாவம்) என்று சொற்கள் இருக்கின்றன. அந்த ஸ்வபாவமாவது—எல்லை யில்லாத உயர்த்தியும், எவனும் கிட்ட வரும்படி ஸுலபனாயிருக்கையும். இந்த உயர்த்தியானது சாஸ்திரத்தில்...சொல்லவும் முடியாது" என்கிற வரையில் சொல்லப்பட்டது. கிட்ட வரும்படியான தன்மையானது "மிகுந்த...பிரீதியினாலேயும்" என்கிற வரையில் சொல்லப்பட்டது.

2. "முட்டாள்" என்கிற சொல்லாலே பகவானுடைய அவதாரத்தின் உண்மையைப் பற்றிக் கேட்பதும், நினைப்பதுமில்லையென்றும், மற்றவர்களைக் காட்டிலும் பகவான் வேறு என்று தெரிந்து கொள்ளக்கூடிய அடையாளங்களைக் கண்ணாலே பார்க்கும்போதும் அதை கண்டுபிடிக்க சக்தி யில்லை யென்றும் சொல்லப் பட்டது.

[illegible] மாமஜமவ்யயம் நிகிலஜகதேககாரணம் ஸர்வேஶ்வரம் ஸந்தம் ஸர்வஸமாஶ்ரயணீயத்வாய மநுஷ்யத்வஸம்ஸ்தாநஸம்ஸ்திதம் நாபிஜாநாதி ॥ ॥௨௫॥

அவ—உம்முடைய இந்தஸ்வபாவத்தைத்தேவரீர் ஏன்ஜனங்களுக்குக் காண்பிக்கிறதில்லை. அதாவது—எல்லாரும் நம்மிடம் வரவேண்டுமென்றுதானே தேவரீர் அவதாரம் செய்கிறீர். தேவரீரோ ஒரு தடங்கலில்லாமல் நினைத்தபடி முடிக்கிறவர் அல்லவா உம்முடைய எண்ணம் ஏன் நிறைவேறுகிறதில்லை-என்றால்,சொல்லுகிறார்.—

1நான் ஜீவன்களுக்கு மாத்திரம் ஏற்பட்டிருக்கிற மனிதன். முதலான உருவமாய் வந்திருப்பதால், எல்லாருக்கும் நான் தை

---

1. *சுலோகத்தில் "யோகமாயா" என்றசொல் இருக்கிறது. மாயா என்கிற சொல்லுக்கு ஆச்சரியமான வேலையைச் செய்கிறவஸ்து என்று பொருள். அந்தவஸ்து இங்கே எது என்றால், யோகம்என்கிற சொல்லாலே சொல்லப்பட்ட—மனிதஉருவமும், மனிதன்போல் அலங்காரமும்,பேச்சும். இது ஆச்சரியமான வேலையைச் செய்கிறது. அந்தவேலையாவது—கோவர்த்தனமலையை ஒரு சுண்டுவிரல் நுனியாலே ஏழுநாள் தூக்கியும், சிரமமில்லாமல் இருந்தார் என்பதைத்தவிர, தைவம் என்று தீர்மானிப்பதற்கு வேறு அடையாளம் வேணுமா? அந்த அடையாளத்தையும் தீர்மானிக்க வொட்டாதே பண்ணுகிறதே இந்த மனிதஉருவம். இதுதான் இது செய்கிற ஆச்சரியமான வேலை. மேலும் இது சிலர்க்கு மறைக்கிறது. சிலர்க்கு மறைக்கிறதில்லை. இதுவும் ஒரு ஆச்சரியம். மாயா என்ற சொல்லிற்கு 4—வது அத்தியாயம் 6-வது சுலோகத்தில் எண்ணம் என்றும், 7—வது அத்தியாயம்—17—வது சுலோகத்தில் முக்குண முள்ள பிரகிருதி என்றும் பொருள் சொல்லப்பட்டது. இந்த அர்த்தங்கள் இங்கே பொருந்தாது. ஏனென்றால், பிரகிருதியால் மறைக்கப்பட்டிருப்பது பகவானுடைய எல்லா இருப்புக்கும் பொதுவானது. அவதாரத்தில் மாத்திரமுள்ளதை இங்கே சொல்லவேண்டியது. அது கீழேசொன்ன மனித உருவம் முதலானவை. எண்ணமும் பகவானுக்கு எப்போது முள்ளது. யோகம் என்கிற சொல்லானது சேர்க்கையைச் சொல்லுகிறது. எதின்சேர்க்கை யென்றால், மனித உருவத்தின் சேர்க்கை என்று இந்த இடத்தால் ஏற்படுகிறது.*

வத்தன்மையுள்ளவன் என்று தெரியவில்லை. 1 முட்டாள் ஜனங்கள் வாயு இந்திரன் முதலானவர்களாலே செய்யமுடியாத வேலைகளை நான் செய்வதையும், ஸூரியனையும் அக்கினியையும் காட்டிலும் அதிக பளபளப்பாய் நான் இருப்பதையும் பார்த்தும், என் மனித உருவத்தை மாத்திரம் நினைத்து, நானும் மனிதன் தான் என்று தீர்மானித்து, "நான் எல்லா உலகங்களுக்கும் 2 ஒரே காரணம். நான் எல்லாருக்கும் யஜமானன், எல்லாரும் என்னிடம் வருவதற்காக நான் மனித உருவத்துடன் வந்திருக்கிறேன்" என்று 3 அறியவில்லை. (25)

வேதாஹம் ஸமதீதாநி வர்த்தமாநாநி சார்ஜுந ।
பவிஷ்யாணி ச பூதாநி மாம் து வேத ந கச்சந ॥௨௬॥

அதீதாநி வர்த்தமாநாந்யநாகதாநி ச ஸர்வாணி பூதாந்யஹம் வேத ஜாநாமி । மாம் து வேத ந கச்சந மத்யாந

---

1. பகவான் எல்லாரும் தன்னிடம் வருவதற்காக எடுத்துக்கொண்ட மனித உருவமே, அவனை விடுவதற்குக் காரணமானால், இது எவருடைய குற்றம்? என்றால், "முட்டாள் ஜனங்கள்" என்கிற சொல்லாலே பதில் சொல்லப்படுகிறது. பகவான் தன்னுடைய ஸ்வபாவத்தை முழுவதும் மறைக்கவில்லை. மற்றவர்களாலே செய்யக்கூடாத வேலைகளைச் செய்து, மற்றவர்களுக்கில்லாத பளபளப்பைக் காட்டினார். முட்டாள்கள் மனித உருவம் என்கிற சின்ன ஒரு ஸங்கதியை மாத்திரம் கவனித்து, பகவான் என்று அறியவில்லை. மேகத்தினால் மறைக்கப்பட்ட ஸூரியனை மினி மினிப்பூச்சியாக எண்ணுவதுபோல் இது இருக்கிறது.

2. சுலோகத்தில் "அஜம் (பிறப்பில்லாதவன்)" அவ்யயம் (குறைவில்லாதவன்) என்று இரண்டு சொற்கள் இருக்கின்றன. எல்லா உலகங்களுக்கும் காரணமாயிருப்பதாலே,பகவான் மற்றவர்களைப்போல் கர்மத்தால் பிறப்பில்லாதவன். குறைவில்லை என்பது ஸ்வரூபத்திலும், குணங்களிலும் மாறுதலில்லாமை. மஹாராஜா வாகையாலே தான் அவதாரம் செய்யும் போதும், ஈசுவரத்தன்மையில் ஒன்றையும் விடாமல் வருகிறான்

3. பின்னை எப்படி அறிகிறார்கள் என்றால், மற்ற மனிதர்களைப் போல கர்மத்தினால் பிறப்பும், அறிவுக் குறைவும் உள்ளவனாக எண்ணுகிறார்கள்

[illegible] कालत्रयवर्तिषु सर्वेषु भूतेषु [illegible]
[illegible] समाश्रयणीय [illegible]
[illegible] समाश्रयन् कश्चि [illegible]
कश्चित् ज्ञानी [illegible] ॥ ॥२६॥

இதற்கு முன்னாலே 1 செத்துப்போன எல்லாப் பிராணிகளையும், இப்போது இருக்கிற எல்லாரையும், நாளைக்கு வரப்போகிற எல்லாரையும் எனக்குத் தெரியும். இப்படி என்னால் அறியப்பட்ட மூன்று காலத்திலுள்ள எல்லாப் பிராணிகளுக்குள்ளே ஒருவனாவது என்னுடைய சொத்தான எல்லாரும் என்னிடம் வருவதற்காகப் பகவானான நான் வஸுதேவருக்குப் பிள்ளையாக வந்திருக்கிறேன் என்று அறிந்து, என்னிடத்திலேயே வருகிறவன் அகப்படவில்லை. ஆகையால் ஞானி அகப்படுவது மிகவும் அரிது. (26)

तथाहि,

इच्छाद्वेषसमुत्थेन द्वन्द्वमोहेन भारत ।
सर्वभूतानि संमोहं सर्गे यान्ति परंतप ॥२७॥

इच्छाद्वेषाभ्यां समुत्थितेन शीतोष्णादिद्वन्द्वाख्येन मोहेन सर्वभूतानि सर्गे जन्मकाल एव संमोहं यान्ति । [illegible] पूर्वपूर्वजन्मनि यद्विषयौ इच्छाद्वेषावभ्यस्तौ, तद्वासनया पुनरपि जन्मकाले तदेव संस्कारोद्भूतेच्छाद्वेषविषयभूतं द्वन्द्वं मोहनं भवति । तेन मोहेन सर्वभूतानि संमोहं यान्ति । तद्विषयेच्छाद्वेषस्वभावानि भवन्ति, न मत्संश्लेषवियोगसुखदुःखस्वभावानि । ज्ञानी

1. *பகவான் தனக்கு எல்லாம் தெரியுமென்று சொன்னது—பகவானைத் தெரிந்து கொள்ளவில்லை என்பது இப்போது மாத்திரமன்று. முன் காலத்திலும் அப்படித்தான் இருந்தது; இனிமேலும் அப்படித்தான் ஆகப்போகிறது—என்பதைக் காட்டுவதற்காக.*

இச்சாத்வேஷஸமுத்தேந த்வந்த்வமோஹேந பாரத | ஸர்வபூதாநி ஸம்மோஹம் ஸர்கே யாந்தி பரந்தப || ||௨௭||

அவ—1 உலகத்தில் அப்படித்தானே இருக்கிறது பாரென்கிறார்.

ஆசையாலும் த்வேஷத்தாலும் 2 உண்டாகிற குளுமை, சூடு முதலான இரண்டு வகைகளாலே எல்லாப் பிராணிகளும் பிறக்கும்போதே 3 மயங்குகிறார்கள். அதாவது—போன ஜன்மத்தில் எந்த வஸ்து பிடித்ததோ, எந்தவஸ்து அலுத்ததோ, அதேமாதிரி வாஸனையாலே பிறக்கிற காலத்திலேயே ஆசையும் அலுப்பும் உண்டாகிறது. அதினாலே ஜனங்கள் மயங்கி, அந்த விஷயங்களில் ஆசையும், அலுப்புமுள்ளவர்களாய் இருக்கிறார்கள். அந்த வாஸனை எல்லாருக்கும் என்னைத்தவிர மற்ற விஷயங்களிலேயே இருக்கிறது. ஆகையால் ஒருவனும் என்னைவிட்டு வருத்தப்படவுமில்லை. என்னோடு சேர்ந்து ஸந்தோஷப்படவுமில்லை. ஞானியோ என்னோடு சேர்ந்தால், ஸந்தோஷத்தையும், என்னை விட்டுப் பிரிந்தால், துக்கத்தையும் அடைகிறான். இவ்விதமான தன்மையுடையவன் ஒருவனாவது பிறப்பது மிகவும் அரிது. (27)

---

1. மூன்று காலங்களிலும் எல்லாரும் பகவானை அறியாமலிருப்பதற்குக் காரணம் சொல்லுகிறார்.

2. ஒருவன் பிறக்கும்போதே ஒரு வஸ்துவில் ஆசையும், மற்றொரு வஸ்துவில் அலுப்பும் எப்படி உண்டாகும். குழந்தைக்கு பிறந்த உடனே ஒன்றுமே தெரியாதே. ஆகையால் அப்படி உண்டாவதற்குக் காரணமில்லையே. அப்படி உண்டானாலும், பகவான் விஷயத்தில் என் ஆசை வரக்கூடாது? என்றால், பதில் சொல்லுகிறார். முன் ஜன்மத்தில் உண்டான வாஸனை ஜீவனுடன்கூட வருகிறது. அதனாலே ஆசையும் அலுப்பும் பிறந்த உடனேயே வருகின்றன. வாஸனை எந்த வஸ்துவில் இருக்கிறதோ, அதிலேதான் ஆசையுண்டாகும். பகவானிடத்தில் முன் ஜன்மத்தில் ஆசை யில்லாததினால், அந்த் விஷயமான வாஸனை உண்டாகவில்லை. இந்த ஜந்மத்தில் எப்படி பகவானிடத்தில் ஆசை உண்டாகக் கூடும்.

3. இங்கே மயக்கமாவது—இன்பமில்லாதவைகளை இன்பமாக எண்ணுவதும், அலுப்பு வரக்கூடாத வஸ்துவில் அலுப்பு வருவதும்.

யேஷாம் த்வந்தகதம் பாபம் ஜநாநாம் புண்யகர்மணாம் ।
தே த்வந்த்வமோஹநிர்முக்தா பஜந்தே மாம் த்ருடவ்ரதாஃ ॥ ௨௮ ॥

யேஷாம் து அநேகஜந்மார்ஜிதேநாத்யுத்க்ருஷ்டபுண்ய ஸஞ்சயேந குணமயபாவேச்சாத்வேஷஹேதுபூதம் மதௌந்முக்யவிரோதி சாநாதிகாலப்ரவ்ருத்தம் பாபம், அந்தகதம்-க்ஷீணம் । தே புண்யோக்தேந ஸுக்ருததாரதம்யேந மாம் ஶரணமுபாகம்ய குணமயாந்மோஹாத்விநிர்முக்தாஃ ஜராமரணமோக்ஷாய மஹதே கைவல்யாய மத்ப்ராப்தயே ச த்ருடவ்ரதாஃ - த்ருடஸங்கல்பாஃ மாமேவ பஜந்தே ॥ ॥ ௨௮ ॥

அ-வ—எல்லாரும் இப்படி மயங்கினால், எவன் பகவானைத் தியானம் செய்வன்? இந்த அத்தியாயம் 16-வது சுலோகத்தில் நாலு வகுப்பார் பகவானைத் தியானம் பண்ணுவர்கள் என்று சொன்னது எப்படி ஒட்டும் என்றால், சொல்லுகிறார்.—

எவர்களுக்கு 1 வெகு ஜன்மங்களில் பண்ணின உயர்ந்த புண்ணியங்களாலே என்னைத்தவிர மற்ற வஸ்துக்களில் ஆசையையும், என்னிடத்தில் அருப்பையும் உண்டுபண்ணக்கூடிய நெடுநாளாய் வந்த பாபம் போய்விட்டதோ, அவர்கள் என்னைக் கெஞ்சிக்கேட்டுக்கொண்டு, மயக்கம் தெளிந்து, அவரவர்கள் பண்ணின புண்ணியத்துக்குத் தகுந்தபடி சிலர் பணத்துக்காகவும், சிலர் ஸம்ஸாரம்போய் ஜீவஸ்வரூபத்தை உள்ளபடி அநுபவிப்பதற்காகவும், சிலர் என்னிடம் வருவதற்காகவும் உறுதியுடன் என்னையே தியானம் செய்கிறார்கள். (28)

---

1. சுலோகத்தில் புண்ணிய கர்மங்களைச் செய்தவர்கள் என்று போதுவாய் சொல்லியிருந்தபோதிலும், பகவானை அறிவதற்கு இடைஞ்சலான பாபத்தைப் போக்குவதற்கு உயர்ந்த புண்ணியம் வேண்டுமென்றும், அது ஒரேஜன்மத்தில் பண்ணினது போதாது என்றும், காட்டுவதற்காக "வெகுஜன்மங்களிலே பண்ணின உயர்ந்த" என்று பாஷியத்தில் சொல்லப்படுகிறது. இந்த ஸங்கதியை இந்த அத்தியாயம் 19-வது சுலோகத்திலும் சொல்லியிருக்கிறது. அதின் கீழே இருக்கும் குறிப்பைப் பார்க்க.

அவ— அத த்ரயாணாம் பகவதாம் பஜமாநாநாம் ஜ்ஞாதவ்யவிஶேஷாநுபாதேயாம்ஶ்ச ப்ரஸ்தௌதி—

ஜராமரணமோக்ஷாய மாமாஶ்ரித்ய யதந்தி யே ।
தே ப்ரஹ்ம தத்விது: க்ருத்ஸ்நமத்யாத்மம் கர்ம சாகிலம் ॥௨௯॥

ஜராமரணமோக்ஷாய-ப்ரக்ருதிவியுக்தாத்மஸ்வரூபதர்ஶநாய மாமாஶ்ரித்ய யே யதந்தே। தே தத் ப்ரஹ்ம விது:, அத்யாத்மம் ச க்ருத்ஸ்நம் விது:। கர்ம சாகிலம் விது: ॥ ॥௨௯॥

அவ—பகவானைத் தியானம் பண்ணுகிற மூன்று வகுப்பார்களும், அறியவேண்டிய ஸங்கதிகளையும், நினைக்கவேண்டிய ஸங்கதிகளையும், செய்யவேண்டியவைகளையும் சொல்ல ஆரம்பிக்கிறார்.—

கிழத்தனமும் சாவும் போவதற்காக-அதாவது-உடம்பு முதலான நினைவு இல்லாமல் ஜீவஸ்வரூபத்தை மாத்திரம் நீடித்துப் பார்த்துக்கொண்டிருப்பதற்காக, (கைவல்யத்திற் காக)எவர்கள் என்னைத்தியானம் செய்கிறார்களோ, அவர்கள் அந்த1ப்ரும்மத்தையும்,எல்லா அத்யாத்மத்தையும், எல்லாகர்மங்களையும் அறியவேண்டியது. (29)

ஸாதிபூதாதிதைவம் மாம் ஸாதியஜ்ஞம் ச யே விது: ।
ப்ரயாணகாலேऽபி ச மாம் தே விதுர்யுக்தசேதஸ: ॥௩௦॥

இதி ஸ்ரீ பகவத்கீதாஸூபநிஷத்ஸு ப்ரஹ்மவித்யாயாம் யோகஶாஸ்த்ரே ஸ்ரீக்ருஷ்ணார்ஜுநஸம்வாதே விஜ்ஞாநயோகோ நாம ஸப்தமோऽத்யாய: ॥

அத்ர ச இதி வசநாத் ஜராமரணமோக்ஷார்த்திப்யோऽந்யாவதிகாரிணௌ ஜ்ஞாயேதே । ஸாதிபூதம் ஸாதிதைவம் மாமைஶ்வர்யார்த்திநோ யே விதுரித்யுக்தயோ: ஸ்வரூபவைரூப்யஜ்ஞாபகமேவ। ததா ஸாதியஜ்ஞமித்யபி த்ரயாணாமதிகாரிணாமவிஶேஷேண விஷயமேவ, ஸர்வேஷாம் மஹாயஜ்ஞாத்ய। த்ரயாணாம் ஹி நித்யநைமித்திகரூபமஹ

1. இந்த சுலோகத்திலும் அடுத்த சுலோகத்திலும் வருகிற சொற்களுக்கு அடுத்த அததியாயத்தின் முதலிலே பகவானே அர்த்தம் சொல்லப்போகிறார்.

[illegible]

इति श्रीभगवद्रामानुजविरचिते श्रीमद्गीताभाष्ये
सप्तमोऽध्यायः
श्रीमते रामानुजाय नमः

பணத்தை விரும்பித்தியானம் பண்ணுகிறவர்கள், அதிபூதத்தோடும், அதிதைவத்தோடும் கூடிய என்னை அறியவேண்டியது. கீழ்ச்சொன்ன மூன்று வகுப்பார்களும் அதியஜ்ஞத்தோடுகூடிய என்னை அறியவேண்டும். மூன்று வகுப்பார்களும் இறந்துபோகிறகாலத்தில் அவரவர்கள் ஆசைப்படுகிற பிரயோஜனத்துக்குத்தகுந்தபடி என்னை நினைக்கவேண்டும்.

இந்த சுலோகத்தில் பின்பாதியில் இருக்கிற “ ச ”; என்கிற சொல்லை “ தே ”, என்கிற சொல்லுடன் சேர்க்கவேண்டியது. அப்போது அவைகளின் பொருள்—அவர்களும்—என்று. அதனாலே 29-வது சுலோகத்தில் சொன்ன ஸம்ஸாரம் போய் ஜீவஸ்வரூபத்தைப் பார்க்கவேண்டுமென்று ஆசைப் படுகிறவர்களையும் சேர்த்து, அவர்களும் இறந்துபோகிற காலத்தில் பகவானைத்தாங்கள் விரும்புகிற பிரயோஜனத்துக்குத் தகுந்தபடி நினைக்க வேணுமென்று சொல்லப் படுகிறது. பகவானிடம் போக வேணுமென்று ஆசைப்படுகிறவர்களுக்கும் இந்த இரண்டு எண்ணங்களும் வேண்டியபடியால் அவர்களையும் சேர்த்துக் கொள்ளவேண்டியது. அந்த இரண்டு எண்ணங்களாவன—பகவான் அதியக்ஞத்துடனே கூடினவன் என்று நினைப்பதும், இறந்துபோகிறகாலத்தில் தாங்கள்விரும்புகிற பிரயோஜனத்துக்குத்தருந்தபடி பகவானை நினைப்பதும். பகவானை அதியக்ஞத்தோடு கூடியவராக ஏன் நினைக்கவேண்டும்—என்றால், மூன்று வகுப்பார்களும், மஹா யக்ஞம் முதலான நித்திய கர்மங்களையும், நைமித்திக கர்மங்களையும் கட்டாயம் செய்யவேண்டிய தாகையால்.(30)

𑌅𑌷𑍍𑌟𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

𑌅𑌵 — 𑌸𑌪𑍍𑌤𑌮𑍇 𑌪𑌰𑌸𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌸𑍍𑌯𑍋𑌪𑌾𑌸𑍍𑌯𑌸𑍍𑌯 𑌨𑌿𑌖𑌿𑌲𑌚𑍇𑌤𑌨𑌾𑌚𑍇𑌤𑌨𑌵𑌸𑍍𑌤𑍁𑌶𑍇𑌷𑌿𑌤𑍍𑌵𑌂, 𑌕𑌾𑌰𑌣𑌤𑍍𑌵𑌂, 𑌆𑌧𑌾𑌰𑌤𑍍𑌵𑌂, 𑌸𑌰𑍍𑌵𑌶𑌰𑍀𑌰𑌤𑌯𑌾 𑌸𑌰𑍍𑌵𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌤𑍍𑌵𑍇𑌨 𑌸𑌰𑍍𑌵𑌶𑌬𑍍𑌦𑌵𑌾𑌚𑍍𑌯𑌤𑍍𑌵𑌂, 𑌸𑌰𑍍𑌵𑌨𑌿𑌯𑌨𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑌂, 𑌸𑌰𑍍𑌵𑍈𑌶𑍍𑌚 𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌗𑍁𑌣𑌗𑌣𑍈𑌸𑍍𑌤𑌸𑍍𑌯𑍈𑌵 𑌪𑌰𑌤𑌰𑌤𑍍𑌵𑌂, 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌰𑌜𑌸𑍍𑌤𑌮𑍋𑌮𑌯𑍈𑌰𑍍𑌦𑍇𑌹𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌤𑍍𑌵𑍇𑌨 𑌭𑍋𑌗𑍍𑌯𑌤𑍍𑌵𑍇𑌨 𑌚𑌾𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑍈𑌰𑍍𑌭𑌾𑌵𑍈𑌰𑌨𑌾𑌦𑌿𑌕𑌾𑌲𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌦𑍁𑌷𑍍𑌕𑍃𑌤𑌪𑍍𑌰𑌵𑌾𑌹𑌹𑍇𑌤𑍁𑌕𑍈𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌤𑌿𑌰𑍋𑌧𑌾𑌨𑌂, 𑌅𑌤𑍍𑌯𑍁𑌤𑍍𑌕𑍃𑌷𑍍𑌟𑌸𑍁𑌕𑍃𑌤𑌹𑍇𑌤𑍁𑌕𑌭𑌗𑌵𑌤𑍍𑌪𑍍𑌰𑌪𑌤𑍍𑌤𑍍𑌯𑌾 𑌚 𑌤𑌨𑍍𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌨𑌂, 𑌸𑍁𑌕𑍃𑌤𑌤𑌾𑌰𑌤𑌮𑍍𑌯𑍇𑌨 𑌚 𑌪𑍍𑌰𑌪𑌤𑍍𑌤𑌿𑌵𑍈𑌶𑍇𑌷𑍍𑌯𑌾𑌦𑍈𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌾𑌕𑍍𑌷𑌰𑌯𑌾𑌥𑌾𑌤𑍍𑌮𑍍𑌯 𑌭𑌗𑌵𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍍𑌯𑌪𑍇𑌕𑍍𑌷𑌯𑍋𑌪𑌾𑌸𑌕𑌭𑍇𑌦𑌂, 𑌭𑌗𑌵𑌨𑍍𑌤𑌂 𑌪𑍍𑌰𑍇𑌪𑍍𑌸𑍋𑌰𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌿𑌨𑍋 𑌨𑌿𑌤𑍍𑌯𑌯𑍁𑌕𑍍𑌤𑌤𑌯𑍈𑌕𑌭𑌕𑍍𑌤𑌿𑌤𑌯𑌾 𑌚𑌾𑌤𑍍𑌯𑌰𑍍𑌥[illegible] 𑌶𑍍𑌰𑍈𑌷𑍍𑌠𑍍𑌯𑌂, 𑌦𑍁𑌰𑍍𑌲𑌭𑌤𑍍𑌵𑌂 𑌚 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑍍𑌯, 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌤𑍍𑌰𑌯𑌾𑌣𑌾𑌂 𑌜𑍍𑌞𑌾𑌤𑌵𑍍𑌯𑍋𑌪𑌾𑌦𑍇𑌯𑌭𑍇𑌦𑌾𑌂𑌶𑍍𑌚 𑌪𑍍𑌰𑌾𑌸𑍍𑌤𑍌𑌷𑍀𑌤𑍍 । 𑌇𑌦𑌾𑌨𑍀𑌮𑌷𑍍𑌟𑌮𑍇 𑌪𑍍𑌰𑌸𑍍𑌤𑍁𑌤𑌾𑌨𑍍 𑌜𑍍𑌞𑌾𑌤𑌵𑍍𑌯𑍋𑌪𑌾𑌦𑍇𑌯𑌭𑍇𑌦𑌾𑌨𑍍 𑌵𑌿𑌵𑌿𑌨𑌕𑍍𑌤𑌿 ।

𑌅𑌰𑍍𑌜𑍁𑌨 𑌉𑌵𑌾𑌚

𑌕𑌿𑌂 𑌤𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌕𑌿𑌮𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌂 𑌕𑌿𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌮 ।
𑌅𑌧𑌿𑌭𑍂𑌤𑌂 𑌚 𑌕𑌿𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌮𑌧𑌿𑌦𑍈𑌵𑌂 𑌕𑌿𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ॥ ॥௧॥

𑌅𑌧𑌿𑌯𑌜𑍍𑌞𑌃 𑌕𑌥𑌂 𑌕𑍋𑌽𑌤𑍍𑌰 𑌦𑍇𑌹𑍇𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌮𑌧𑍁𑌸𑍂𑌦𑌨 ।
𑌪𑍍𑌰𑌯𑌾𑌣𑌕𑌾𑌲𑍇 𑌚 𑌕𑌥𑌂 𑌜𑍍𑌞𑍇𑌯𑍋𑌽𑌸𑌿 𑌨𑌿𑌯𑌤𑌾𑌤𑍍𑌮𑌭𑌿𑌃 ॥ ॥௨॥

𑌜𑌰𑌾𑌮𑌰𑌣𑌮𑍋𑌕𑍍𑌷𑌾𑌯 𑌮𑌾𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑍍𑌯 𑌯𑌤𑌮𑌾𑌨𑌾𑌨𑌾𑌂 𑌜𑍍𑌞𑌾𑌤𑌵𑍍𑌯𑌤𑌯𑍋𑌕𑍍𑌤𑌂 𑌤𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌅𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌂 𑌚 𑌕𑌰𑍍𑌮 𑌚 𑌕𑌿𑌮𑌿𑌤𑌿 𑌵𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 । 𑌐𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌿𑌨𑌾𑌂 𑌜𑍍𑌞𑌾𑌤𑌵𑍍𑌯𑌤𑌯𑍋𑌕𑍍𑌤𑌮𑌧𑌿𑌭𑍂𑌤𑌮𑌧𑌿𑌦𑍈𑌵𑌂 𑌚 𑌕𑌿𑌮𑍍 । 𑌤𑍍𑌰𑌯𑌾𑌣𑌾𑌂 𑌜𑍍𑌞𑌾𑌤𑌵𑍍𑌯𑌤𑌯𑍋𑌕𑍍𑌤𑌾𑌧𑌿𑌯𑌜𑍍𑌞𑌶𑌬𑍍𑌦𑌨𑌿𑌰𑍍𑌦𑌿𑌷𑍍𑌟𑌶𑍍𑌚 𑌕𑌃 । 𑌤𑌸𑍍𑌯 𑌚𑌾𑌧𑌿𑌯𑌜𑍍𑌞𑌭𑌾𑌵𑌃 𑌕𑌥𑌮𑍍 । 𑌪𑍍𑌰𑌯𑌾𑌣𑌕𑌾𑌲𑍇 𑌚 𑌤𑍈𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌭𑌿𑌃 𑌨𑌿𑌯𑌤𑌾𑌤𑍍𑌮𑌭𑌿𑌃 𑌕𑌥𑌂 𑌜𑍍𑌞𑍇𑌯𑍋𑌽𑌸𑌿 ॥ ॥௨॥

அவ—ஏழாவது அத்தியாயத்தில் பரப்பிரும்மமான வாஸுதேவன் தியானம் செய்யத்தருந்தவன்; அவன் அறிவுள்ளதும், அறிவில்லாததுமான எல்லா உலகத்துக்கும் சேஷி; எல்லாவற்றையு முண்டுபண்ணுகிறவன்; எல்லாவற்றையும் தூக்குகிறவன்; எல்லாம் அவனுக்கு உடம்பாயிருப்பதாலே, எல்லாம் அவனுக்கு பிரகாரம்; அதினுல் எல்லா சொற்களும் அவனையே சொல்லுகின்றன; எல்லாவற்றையும் அவன் ஏவுகிருன்; கூட்டம் கூட்டமான எல்லா நல்லகுணங்களாலும் அவனே மிகவுமுயர்ந்தவன்; ஸத்வம் முதலானகுணங்களோடு கூடியஉடம்புகளாகவும்,கண் முதலான இந்திரியங்களாகவும்,அவைகளால் அநுபவிக்கத்தகுந்தவைகளாகவும் நெடுநாளாய் வந்த பாபவரிசைகளினுலே உண்டான வஸ்துக்கள் அவனைஉள்ளபடி பார்க்கவொட்டாமல் மறைக்கின்றன; மிகவும் உயர்ந்த புண்ணியத்தாலே அவனைப்பிரபத்தி பண்ணி, அந்த மறைவைப் போக்கவேண்டும்; போக்கி அவனைத் தியானம் பண்ணுகிறவர்கள் புண்ணியங்களின் தாரதம்மியத்தாலே மூன்று விதமான பிரயோஜனங்களை விரும்புவதாலே, மூன்றுவிதமாயிருக்கிருர்கள்; அவர்களுக்குள்ளே பகவானை மாத்திரம் ஆசைப்படுகிறவன் அவனை ஒருக்காலும் விடாதபடியாலும், அவனிடத்தில்மாத்திரம் ஆசையுள்ளவனுகையாலும், அவனுக்கு மிகவும் வேண்டியவனுயிருப்பதாலும், மிகவும் உயர்ந்தவன்; அப்படிப்பட்டவன் அகப்படுவது மிகவும் அரிது—என்று இவைகளைச்சொல்லி, இந்த மூன்றுபேர்களுக்கும், அறிய வேண்டியவைகளிலும், செய்யவேண்டியவைகளிலும் வேறுபாடு இருக்கிறது என்பதைப் பிரஸ்தாபித்தார். இப்போது எட்டாவது அத்தியாயத்தில் கீழ்ப்பிரஸ்தாபித்த ஸங்கதிகளை விரிவாகச் சொல்லுகிருர்—

அர்ஜுநன் கேட்கிருன்.

கிழத்தனமும், சாவும் போவதற்காக—அதாவது—உடம்பு முதலானவைகளை நினையாமல் ஆத்மஸ்வரூபத்தை மாத்திரம் அநுபவிப்பதற்காக உண்மைத்தியானம்செய்கிறவர்களால் அறியவேண்டியதாகச் சொன்ன பிரும்மமும்,அத்யாத்மமும், கர்மமும் என்ன? பணத்தை ஆசைப்பட்டவன் அறியவேண்டிய அதிபூதமும்,அதிதைவமும் என்ன ? மூன்றுபேர்களும் அறியவேண்டிய அதியக்

ஞன் என்பவன் யார்? அவன் எதினால் அதியக்ஞன் என்று சொல்லப்படுகிறான்? மூன்று பேர்களும் சாகும் காலத்தில் மனதை அடக்கிக் கொண்டு உம்மை எப்படி அறியவேண்டும்? இவைகளைச் சொல்லவேண்டும் என்று. [1–2]

ஸ்ரீப4க3வாநுவாச—

அக்ஷரம் ப்3ரஹ்ம பரமம் ஸ்வபா4வோ(அ)த்4யாத்மமுச்யதே |
பூ4தபா4வோத்3ப4வகரோ விஸர்க3: கர்மஸம்ஜ்ஞித: ||௩||

தத்3 ப்3ரஹ்மேதி நிர்தி3ஷ்டம் பரமக்ஷரம்—நக்ஷரதீத்யக்ஷரம் க்ஷேத்ரஜ்ஞஸமஷ்டிரூபம் | ததா2 ச ஶ்ருதி: "அவ்யக்தமக்ஷரே லீயதே அக்ஷரம் தமஸி லீயதே" இத்யாதி3கா | பரமக்ஷரம் ப்ரக்ருதிவிநிர்முக்தாத்மஸ்வரூபம் | ஸ்வபா4வோ(அ)த்4யாத்மமுச்யதே—ஸ்வபா4வ: ப்ரக்ருதி: | அநாத்மபூ4தம் ஆத்மநி ஸம்ப3த்4யமாநம் பூ4தஸூக்ஷ்மதத்3வாஸநாதி3கம் பஞ்சாக்3நிவித்3யாயாம் ஜ்ஞாதவ்யதயோதி3தம் | தது3ப4யம் ப்ராப்யதயா த்யாஜ்யதயா ச முமுக்ஷுபி4ர்ஜ்ஞாதவ்யம் | பூ4தபா4வோத்3ப4வகரோ விஸர்க3: கர்மஸம்ஜ்ஞித:— பூ4தபா4வ: மநுஷ்யாதி3பா4வ:— தது3த்3ப4வகரோ யோ விஸர்க3: "பஞ்சம்யாமாஹுதாவாப: புருஷவசஸோ ப4வந்தி" இதி ஶ்ருதிஸித்3தோ4 யோஷித்ஸம்ப3ந்த4ஜ: ஸ கர்மஸம்ஜ்ஞித: | தச்ச ஸர்வம் ஸாம்ஸாரிகம் உத்3வேஜநீயதயா பரிஹரணீயதயா ச முமுக்ஷுபி4ர்ஜ்ஞாதவ்யம் | பரிஹரணீயதா சாநந்தரமேவ வக்ஷ்யதே "யதி3ச்ச2ந்தோ ப்3ரஹ்மசர்யம் சரந்தி" இதி || ||௩||

பகவான் சொல்லுகிறார்—

பிரும்மம் என்று சொன்னது உயர்ந்ததான 1 அக்ஷரம், அதாவது—உடம்பைக் காட்டிலும் வேறான ஆத்மஸ்வரூபம்.

1. அக்ஷரம் என்றால், ஒருவிதமான மாறுபாடில்லாத ஜீவனுடைய பொதுவான ஸ்வரூபம். ஜீவன் கர்மத்தாலே தேவன் முதலான பல வித உடம்புகளை அடைந்து, தேவன் என்றும், மனிதன் என்றும், வெவ்வேறாகச் சொல்லப்படுகிறான். அந்தக் கர்மம் போய்விட்டால், அவனு

அத்யாத்மம் என்பது ஸ்வபாவப்—பிரகிருதி, அதாவது—ஆத்மாவைக் காட்டிலும் வேறாயும், ஆத்மாவுடன் சேர்ந்துமிருக்கிற உடம்பும், அதுடன் கூடியிருப்பதாலே உண்டாகும் அக்ஞானமும், கர்மமும், வாஸனை முதலானதும். இது 1 பஞ்சாக்கினி (ஐந்து அக்கினி) தியானத்தில் அறிய வேண்டியதாகச் சொல்லப்படுகிறது. இவை இரண்டில் ஒன்றை அடைய வேண்டியதென்றும், ஒன்றைத் தள்ள வேண்டியதென்றும், மோக்ஷத்தை ஆசைப்

க்கு உடம்பு கிடையாது. கர்மம் இருக்கும் காலத்திலும், இன்ன உடம்பில்தான் இருக்க வேணுமென்று கட்டுப் பாடுமில்லை. உதாரணம்—கடையில் கத்திரிக்காய் இருக்கிறது. அதைக்கரியாகவும், துகையலாகவும், பச்சடியாகவும், பலவிதமாய்ச் செய்யலாம். கத்திரிக்காய் முன்னாலே எல்லாவற்றிற்கும் பொதுவாயிருந்தது. அதுபோல ஜீவன் பொதுவாயிருக்கிறான். கர்மத்தினால் அந்தந்த உடம்பில் நுழைந்து, அதற்குத் தகுந்த பெயரையடைந்து, அதற்கு உரிய வேலைகளைச் செய்கிறான். கத்திரிக்காயின் உருவம் மாறுகிறது. ஜீவனுக்கு உருவத்தில் மாறுபாடில்லை.

1. வேதத்தில் பஞ்சாக்கினி வித்யையென்று ஒரு தியானம் சொல்லப்படுகிறது. அதில் ஜீவன் சாகிறபோது பெரிய உடம்பைவிட்டுச் சின்ன உடம்புடன் போய், திரும்பி பெரிய உடம்புடன் பிறப்பதை விரிவாய்ச் சொல்லுகிறது. அவன் முதலில் தேவலோகத்திற்குப் போய், உயர்ந்த ஸுகத்தை அநுபவிப்பதற்குத் தகுந்த அழகான உடம்பை அடைகிறான். அங்கு சில காலம் ஸுகத்தை அநுபவித்து, அந்த ஸுகத்தை உண்டுபண்ணின புண்ணியம் செலவழிந்த பிறகு, அந்த உடம்பு போய், சின்ன உடம்புடன்மேகத்திற்கு வந்து சேருகிறான். அப்போது இது மேகம், இது அவன் உடம்பு என்று பிரிக்கக்கூடாதபடி அத்துடன் சேர்ந்திருக்கிறான். இதன் பிறகு மழையுடன் கூட பூமிக்கு வந்து தானியங்களுடன் சேருகிறான். அந்த தானியம் சமைக்கப்பட்டுச் சாப்பிடும்போது, ஒரு ஆணுடைய உடம்பில் வந்து சேருகிறான். பிறகு அவனுடைய ரேதஸ்ஸாக ஆகி, ஒரு பெண்ணுடைய கர்ப்பத்தில் வந்து சேருகிறான். அப்போதுதான் அவனுக்கு மனிதன் (புருஷன்) முதலான பெயர் உண்டாகிறது. ஜீவன் வரிசையாக தேவலோகத்தையும், மேகத்தையும், தானியத்தையும், ஆணையும், பெண்ணையும் வந்துசேருகிறான். இந்த ஐந்தையும் ஐந்து அக்கினியாகச் சொல்லி இவன் அவைகளைச் சேருவதை ஐந்து ஹோமங்களாகச் சொல்லியிருக்கிறது. ஐந்தாவது ஹோமத்தில் அவனுக்குப்புருஷன் என்று பெயர்

படுகிறவன் அறியவேண்டியது. கர்மமென்பது—ஆத்மாவை மனிதன் என்று சொல்லும்படி பண்ணுகிற விஸர்க்கம். அதாவது—ஆணும் பெண்ணும் சேரும்போது, பெண்ணின் உடம்பில் ரேதஸ்ஸை விடுவது. அதுவும், அதைச் சேர்ந்தவைகளும் அருவருக்கக்கூடியதாகையால், விடவேண்டியதென்று அவன் அறியவேண்டியது. விடவேண்டியது என்பதை 11-வது சுலோகத்தில் சொல்லப்போகிறார். [3]

[illegible]

[illegible]

வருகிறது என்றும் சொல்லியிருக்கிறது. தேவலோகத்தை விட்டுக் கர்ப்பத்தில் வந்துசேருகிற வரையில், ஜீவனுக்கு அறிவில்லாத்தினால் ஸுகமும் துக்கமுமில்லை. இந்த ஸங்கதியைத் தெரிந்துகொண்டு, ஒருவன் பெரிய உடம்போடும், சின்ன உடம்போடும் சேர்ந்திருப்பதில் வெறுப்புண்டாகி, உடம்பை அடியோடு தொலைப்பதற்கு முயற்சி செய்ய வேண்டியது. இதைத்தான் இந்த சுலோகத்தில் சொல்லியிருக்கிறது.

𑌨𑍈𑌮𑌿𑌤𑍍𑌤𑌿𑌕𑌾𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑌵𑍇𑌲𑌾𑌯𑌾𑌂 𑌤𑍍𑌰𑌯𑌾𑌣𑌾𑌮𑌧𑌿𑌕𑌾𑌰𑌿𑌣𑌾𑌮𑍍 𑌅𑌨𑍁𑌸𑌨𑍍𑌧𑍇𑌯𑌮𑍇𑌤𑌤𑍍 ॥ ॥௪॥

பணத்தை ஆசைப்படுகிறவன் அறியவேண்டியதாகச் சொல்லப்பட்ட அதிபூதமென்பது—பிரகிருதி என்கிற அறிவில்லாத வஸ்துவாலுண்டான—அழிவு முதலான மாறுபாட்டை அடையக்கூடிய—உயர்ந்த வர்ணம், வாஸனை, ரஸம் முதலானவைகளும், அவைகளையுடைய வஸ்துக்களும். அவன் இவைகளை அடைய வேண்டுமென்றிருப்பதால், அவைகளைத்தான் நினைக்க வேண்டியது. அதிதைவம் என்பது—இந்திரன், பிரும்மா, முதலானவர்களைக்காட்டிலும் உயர்ந்தலோகங்களை அநுபவிக்கிறவனுனதான். இவன் அந்த லோகங்களை அநுபவிக்கப் போகிறவனுகத் தன்னை நினைக்கவேண்டியது. அதியக்ஞம் என்பது—நான்தான் (பகவான்). ஏனென்றால், யக்ஞம் முதலான நல்ல கருமங்களினுலே பூஜிக்கப் படுகிறவன். என்னுடைய உடம்புகளான இந்திரன் முதலான எல்லா ஜீவன்களுக்கும் ஆத்மாவாயிருந்து, நான்தான் யக்ஞங்களால்பூஜிக்கப்படுகிறேன்—என்பதை மஹாயக்ஞம்முதலானநித்தியம், நைமித்திகம் என்கிற கர்மங்களைச் செய்யும்போது மூன்றுபேர்களும் நினைக்கவேண்டியது. (4)

𑌅𑌨𑍍𑌤𑌕𑌾𑌲𑍇 𑌚 𑌮𑌾𑌮𑍇𑌵 𑌸𑍍𑌮𑌰𑌨𑍍𑌮𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌕𑌲𑍇𑌵𑌰𑌮𑍍 ।
𑌯𑌃 𑌪𑍍𑌰𑌯𑌾𑌤𑌿 𑌸 𑌮𑌦𑍍𑌭𑌾𑌵𑌂 𑌯𑌾𑌤𑌿 𑌨𑌾𑌸𑍍𑌤𑍍𑌯𑌤𑍍𑌰 𑌸𑌂𑌶𑌯𑌃 ॥ ॥௫॥

𑌇𑌦𑌮𑌪𑌿 𑌤𑍍𑌰𑌯𑌾𑌣𑌾𑌂 𑌸𑌾𑌧𑌾𑌰𑌣𑌮𑍍 । 𑌅𑌨𑍍𑌤𑌕𑌾𑌲𑍇 𑌚 𑌮𑌾𑌮𑍇𑌵 𑌸𑍍𑌮𑌰𑌨𑍍 𑌕𑌲𑍇𑌵𑌰𑌂 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌯𑌃 𑌪𑍍𑌰𑌯𑌾𑌤𑌿, 𑌸 𑌮𑌦𑍍𑌭𑌾𑌵𑌂 𑌯𑌾𑌤𑌿— 𑌮𑌮 𑌯𑍋 𑌭𑌾𑌵𑌃 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌃 𑌤𑌂 𑌯𑌾𑌤𑌿, 𑌤𑌦𑌾𑌨𑍀𑌂 𑌯𑌥𑌾 𑌮𑌾𑌮𑌨𑍁𑌸𑌂𑌧𑌤𑍍𑌤𑍇, 𑌤𑌥𑌾𑌵𑌿𑌧𑌾𑌕𑌾𑌰𑍋 𑌭𑌵𑌤𑍀𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃, 𑌯𑌥𑌾 𑌆𑌦𑌿𑌭𑌰𑌤𑌾𑌦𑌯𑌸𑍍𑌤𑌦𑌾𑌨𑍀𑌂 𑌸𑍍𑌮𑌰𑍍𑌯𑌮𑌾𑌣𑌮𑍃𑌗𑌸𑌜𑌾𑌤𑍀𑌯𑌾𑌕𑌾𑌰𑌾𑌸𑍍𑌸𑌂𑌭𑍂𑌤𑌾𑌃 ॥ ॥௫॥

இப்போது சொல்லப் போகிறதும் மூன்றுபேர்களுக்கும் பொது. எவனுக்குச்செத்துப் போகிறகாலத்தில் வேறு நினைவுவராமல் என் நினைவுமாத்திரம் வருகிறதோ, அவன்தான் 1 என்மாதிரி

1. சுலோகத்தில் "மத்பாவம்" என்ற சொல் இருக்கிறது. அதில் பாவசப்தத்திற்கு ஸ்பாவம் (தன்மை) என்று பொருள். அதாவது—

ஆகிறான். என்னைப் பெரியபணக்காரன் என்று நினைத்தால், பணக்காரனாக ஆகிறான். என்னையே அடையவேணுமென்றுநினைத்தால், என்னையே அடைகிறான். தனக்குவேண்டிய என்னிடத்திலிருக்கிற ஸங்கதியை நினைப்பதினால், அது அவனுக்கு வருகிறது, ஆதிபாதன் (ஜடபாதர்) என்பவர் ஒருமானை வளர்த்துக் கொண்டு வந்து, செத்துப்போகிறகாலத்தில் அதையே நினைத்து, அடுத்தஜந்மத்தில் மானாகப் பிறந்தாராம். (5)

௬அ — அந்த்யப்ரத்யயவிஷயஸஜாதீயாகாரதாபத்திநியமஸ்ய ஸர்வஸாதாரண்யமாஹ —

யம் யம் வாபி ஸ்மரந் பாவம் த்யஜத்யந்தே கலேவரம் |
தம் தமேவைதி கௌந்தேய ஸதா தத்பாவபாவித: || ||௬||

எனக்குஎன்னதன்மையிருக்கிறதோ,அதேமாதிரி தன்மையைஅடைகிறான்.இந்தசொல்லிற்கு பகவானாகவேஆய்விடுகிறான் என்று பொருளன்று. அப்படிப் பொருள் சொல்வது வேதத்திற்கு விரோதம். இந்தசொல்லிற்கு பகவான் மாதிரியாயிருக்கிறான் என்று பொருள்கொள்ளாமல் வேறு பொருள் சொல்லமுடியாது. ஏனென்றால்—பகவானுடையதன்மையை அடைகிறது என்றால் என்ன? குளவியின் கூட்டில் வைக்கப்பட்ட புழு குளவிஜாதியாக ஆய்விடுகிறதே. அதுபோல பகவான் எப்படி ஈசுவரனோ (அடக்கி ஆளுகிறவனோ) அப்படி இவனும் இன்னொரு ஈசுவரனாக ஆய்விடுகிறான் என்றால், அப்போது இரண்டு ஈசுவரன் இருப்பதாக ஏற்படுமே. மேலும், மூன்றுபேர்கள் பகவானைத்தியானம் பண்ணுகிறார்கள்—பணத்தை ஆசைப்படுகிறவன்; தன்னுடைய உண்மையான ஸ்வரூபத்தை மாத்திரம் பார்க்க ஆசைப்படுகிறவன்; பகவானுடனே எப்போதும் கூடஇருக்கவேணும் என்று ஆசைப்படுகிறவன். இவர்கள் மூன்றுபேர்களும் தியானம்பண்ணி வெவ்வேறு ஈசுவரனாகப்போய்விட்டால், இந்த மூன்றுபேர்களுக்கும் பலனில் என்ன வித்தியாஸம். பலன் ஒன்றாயிருந்தால், தியானம் பண்ணுகிறவர்களுக்கு மூன்றுபிரிவு சொன்னதுதான் எப்படிக்கூடும். ஆகையால் எவன் பகவானை எந்த ஸங்கதியோடு நினைக்கிறானோ, அதேமாதிரி ஸங்கதிதான் வரும். அவனையும் பகவானையும் வேறாகக் காட்டக்கூடிய குணங்கள் இருக்கவே இருக்கின்றன. அவைகள் போகிறவையல்ல. இந்தஸங்கதி பாஷ்யத்தில் காட்டிய உதாரணத்தாலும் ஏற்படுகிறது. ஜடபாதர் எந்தமானை நினைத்தாரோ,அந்தமானாக ஆய்விடவில்லை,அதுபோல உருவம் வந்தது

𑌅𑌨𑍍𑌤𑍇-𑌅𑌨𑍍𑌤𑌕𑌾𑌲𑍇 𑌯𑌂 𑌯𑌂 𑌵𑌾𑌪𑌿 𑌭𑌾𑌵𑌂 𑌸𑍍𑌮𑌰𑌨𑍍 𑌕𑌲𑍇𑌵𑌰𑌂 𑌤𑍍𑌯𑌜𑌤𑌿, 𑌤𑌂 𑌤𑌂 𑌭𑌾𑌵𑌮𑍇𑌵 𑌮𑌰𑌣𑌾𑌨𑌨𑍍𑌤𑌰𑌮𑍇𑌤𑌿। 𑌅𑌨𑍍𑌤𑍍𑌯𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌶𑍍𑌚 𑌪𑍂𑌰𑍍𑌵𑌭𑌾𑌵𑌿𑌤𑌵𑌿𑌷𑌯 𑌏𑌵 𑌜𑌾𑌯𑌤𑍇 ॥ ॥௬॥

அவ—செத்துப் போகிறகாலத்தில் உண்டாகும் நினைவுக்கு ஒரு சக்தி இருக்கிறது. அதாவது-ஒருவன் எந்த ஸங்கதியை நினைக்கிறானோ, அதேமாதிரி ஸங்கதியை அவனுக்கு வரும்படி செய்கிறது-என்று, அதைத் தெளிவாய்ச் சொல்லுகிறார்—

ஒருவன் செத்துப்போகிற காலத்தில் எந்த எந்த ஸங்கதியை நினைத்து சாகிறானோ, அதேமாதிரி ஸங்கதியையே செத்தபிறகு அடைகிறான். இருக்கும் காலத்தில் எதை எப்போதும் நினைத்துக்கொண்டிருக்கிறானோ, அதின் நினைவுதான் செத்துப்போகிற காலத்தில் வரும். [6]

𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁 𑌕𑌾𑌲𑍇𑌷𑍁 𑌮𑌾𑌮𑌨𑍁𑌸𑍍𑌮𑌰 𑌯𑍁𑌧𑍍𑌯 𑌚 ।
𑌮𑌯𑍍𑌯𑌰𑍍𑌪𑌿𑌤𑌮𑌨𑍋𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌮𑌾𑌮𑍇𑌵𑍈𑌷𑍍𑌯𑌸𑍍𑌯𑌸𑌂𑌶𑌯𑌃 ॥ ॥௭॥

𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌾𑌲𑌾𑌭𑍍𑌯𑌸𑍍𑌤𑌵𑌿𑌷𑌯 𑌏𑌵𑌾𑌨𑍍𑌤𑍍𑌯𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑍋 𑌜𑌾𑌯𑌤𑍇, 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁 𑌕𑌾𑌲𑍇𑌷𑍁-𑌆𑌪𑍍𑌰𑌯𑌾𑌣𑌾𑌦𑌹𑌰𑌹𑌰𑍍𑌮𑌾𑌮𑌨𑍁𑌸𑍍𑌮𑌰। 𑌅𑌹𑌰𑌹𑌰𑌨𑍁𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌕𑌰𑌂 𑌯𑍁𑌦𑍍𑌧𑌾𑌦𑌿𑌕𑌂 𑌵𑌰𑍍𑌣𑌾𑌶𑍍𑌰𑌮𑌾𑌨𑍁𑌬𑌨𑍍𑌧𑌿 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌚𑍋𑌦𑌿𑌤𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌨𑍈𑌮𑌿𑌤𑍍𑌤𑌿𑌕𑌂 𑌚 𑌕𑍁𑌰𑍁 । 𑌏𑌵𑌂 𑌮𑌯𑍍𑌯𑌰𑍍𑌪𑌿𑌤𑌮𑌨𑍋𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑌨𑍍𑌤𑌕𑌾𑌲𑍇 𑌚 𑌮𑌾𑌮𑍇𑌵 𑌸𑍍𑌮𑌰𑌨𑍍 𑌯𑌥𑌾𑌭𑌿𑌮𑌤𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌂 𑌮𑌾𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌸𑍍𑌯𑌸𑌿 । 𑌨𑌾𑌤𑍍𑌰 𑌸𑌂𑌶𑌯𑌃 ॥ ॥௭॥

ஆகையால், செத்துப் போகிறவரையில் ஒவ்வொருநாளும் என்னையே நினை. 1 எப்பொழுதும் அந்த நினைவை உண்டுபண்

1. சுலோகத்தில் "என்னை நினை, சண்டைப்படு" என்று சொல்லியிருக்கிறது. நினைப்பதற்கு பலன் சொல்லியிருக்கிறது. அதாவது கடைசியில் அந்தநினைவுவருகிறது என்று. சண்டைப்படு என்பதற்குப்பலன் சொல்லவில்லை. இரண்டுவேலைகளைச் சேர்த்துச் சொல்லி,ஒன்றுக்கு மாத்திரம் பலனைச் சொன்னால், மற்றொன்று அதற்கு அங்கம், அதாவது—அதற்கு உதவிசெய்கிறது—என்று ஒருநியாயம். இந்தநியாயப்படி சண்டைப்படுவது நினைப்பதற்கு அங்கம். அதைக்காட்டுவதற்காகத்தான் "நினைவைஉண்டுபண்ணக்கூடிய" என்று சொல்லியிருக்கிறது.

ணக்கூடிய—நீ செய்யவேண்டியதாகச் சாஸ்திரத்தில் சொல்லிய—சண்டை முதலான நித்திய கர்மங்களையும், நைமித்திக கர்மங்களையும் முறைப்படி செய், இந்த மாதிரி உன் மனதையும் எண்ணத்தையும் 1 என்னிடத்தில் கொடுத்து, செத்துப்போகிற காலத்தில் என்னையே நினைத்தால், நீ வேண்டிய பலனை அடைவாய். இதில் ஸந்தேஹமில்லை. [7]

அத— ஏவம் ஸாமாந்யேந ஸ்வப்ராப்யப்ராப்திரந்த்யப்ரத்யயாநுஸாரிணீத்யுக்த்வா, இதாநீம் த்ரயாணாமந்திமப்ரத்யயப்ரகாரவிஶேஷம் வக்தும் ப்ரதமம் ஐஶ்வர்யார்த்திநாமந்திமப்ரத்யயப்ரகாரம், யோகாப்யாஸநம் ப்ரத்யயப்ரகாரம் சாஹ—

அப்யாஸயோகயுக்தேந சேதஸா நாந்யகாமிநா ।
பரமம் புருஷம் திவ்யம் யாதி பார்த்தாநுசிந்தயந் ॥ 8 ॥

அஹரஹரப்யாஸயோகாப்யாம் யுக்ததயா நாந்யகாமிநா சேதஸா அந்தகாலே பரமம் புருஷம் திவ்யம் தம் வக்ஷ்யமாணப்ரகாரம் சிந்தயந் தமேவ யாதி । [illegible] ஐஶ்வர்யவிஶிஷ்டதயா தத்ஸமாநாகாரோ பவதி । அப்யாஸ:- நித்யநைமித்திகாவிரோதேஷு ஸர்வேஷு காலேஷு மநஸோ த்யேயஸம்ஶீலநம் । யோகஸ்து அஹரஹர்யோககாலே அநுஷ்டீயமாநம் யதோக்தலக்ஷணம் த்யாநம் ॥ 8 ॥

அவ—கீழ்ச் சொன்ன மூன்று பேர்களும் செத்துப்போகிற காலத்தில் வரும் நினைவினால் தான் தங்களுக்கு வேண்டிய ஸங்கதிகளை அடைகிறார்கள் என்று பொதுவாகச் சொல்லி, அவர்கள் செய்கிற தியானத்தில் உள்ள வேறுபாட்டைச் சொல்ல ஆரம்பிக்கிறார். பணத்தைவிரும்புகிறவன் நினைக்கவேண்டிய விதத்தையும், அந்த நினைவுக்குத் தகுந்தபடி செத்துப்போகிற காலத்தில் நினைக்க வேண்டிய விதத்தையும் சொல்லுகிறார்.

---

1. மனதைக் கொடுப்பது—நினைப்பது. புத்தியைக் கொடுப்பது பகவான் நினைத்தஸங்கதியைக் கொடுப்பார் என்கிற தீர்மானம்.

நாள்தோறும் அப்யாஸத்தையும், யோகத்தையும் செய்வதால், என்னைத்தவிர வேறொன்றையும் நினைக்காத மனதால், செத்துப்போகிற ஸமயத்தில் மேலே சொல்லுகிறபடி என்னையே அடைகிறான். அதாவது—ஜடபரதர் மான் உருவத்தை அடைந்தது போல், ஐசுவரியத்தை யுடையவனாக என்னை நினைத்து, என்னைப் போல் ஐசுவரியத்தை அடைகிறான். அப்யாஸம் என்றால், பழக்கம். அதாவது—யோகம் செய்யாத காலத்திலும், சாஸ்திரத்தில் சொல்லியவேலைகளைச் செய்து மீந்த காலத்திலும் என்னையே நினைத்துக்கொண்டிருப்பது. யோகம் என்றால், ஒரு காலத்தில் தியானம் செய்ய வேண்டிய முறைப்படி என்னை இடைவிடாமல் நினைப்பது. [8]

𑌕𑌵𑌿𑌂 𑌪𑍁𑌰𑌾𑌣𑌮𑌨𑍁𑌶𑌾𑌸𑌿𑌤𑌾𑌰𑌮𑌣𑍋𑌰𑌣𑍀𑌯𑌾𑌂𑌸𑌮𑌨𑍁
𑌸𑍍𑌮𑌰𑍇𑌦𑍍𑌯𑌃 । 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌧𑌾𑌤𑌾𑌰𑌮𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌰𑍂𑌪𑌮𑌾𑌦𑌿𑌤𑍍𑌯
𑌵𑌰𑍍𑌣𑌂 𑌤𑌮𑌸𑌃 𑌪𑌰𑌸𑍍𑌤𑌾𑌤𑍍 ॥ ௯ ॥

𑌪𑍍𑌰𑌯𑌾𑌣𑌕𑌾𑌲𑍇 𑌮𑌨𑌸𑌾𑌽𑌚𑌲𑍇𑌨 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌯𑍁𑌕𑍍𑌤𑍋 𑌯𑍋𑌗
𑌬𑌲𑍇𑌨 𑌚𑍈𑌵 । 𑌭𑍍𑌰𑍁𑌵𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑍇 𑌪𑍍𑌰𑌾𑌣𑌮𑌾𑌵𑍇𑌶𑍍𑌯
𑌸𑌮𑍍𑌯𑌕𑍍 𑌸 𑌤𑌂 𑌪𑌰𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌮𑍁𑌪𑍈𑌤𑌿 𑌦𑌿𑌵𑍍𑌯𑌮𑍍 ॥ ௧௦ ॥

𑌕𑌵𑌿𑌂-𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌮𑍍 । 𑌪𑍁𑌰𑌾𑌣𑌂-𑌪𑍁𑌰𑌾𑌤𑌨𑌮𑍍। 𑌅𑌨𑍁𑌶𑌾𑌸𑌿𑌤𑌾𑌰𑌂-𑌵𑌿𑌶𑍍𑌵𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌶𑌾𑌸𑌿𑌤𑌾𑌰𑌮𑍍। 𑌅𑌣𑍋𑌰𑌣𑍀𑌯𑌾𑌂𑌸𑌂-𑌜𑍀𑌵𑌾𑌦𑌪𑌿 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌤𑌰𑌮𑍍।𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯𑌧𑌾𑌤𑌾𑌰𑌂-𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌸𑍍𑌰𑌷𑍍𑌟𑌾𑌰𑌮𑍍। 𑌅𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌰𑍂𑌪𑌂-𑌸𑌕𑌲𑍇𑌤𑌰𑌵𑌿𑌸𑌜𑌾𑌤𑍀𑌯𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌮𑍍 । 𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌵𑌰𑍍𑌣𑌂 𑌤𑌮𑌸𑌃 𑌪𑌰𑌸𑍍𑌤𑌾𑌤𑍍- 𑌅𑌪𑍍𑌰𑌾𑌕𑍃𑌤𑌸𑍍𑌵𑌾𑌸𑌾𑌧𑌾𑌰𑌣𑌦𑌿𑌵𑍍𑌯𑌰𑍂𑌪𑌮𑍍 । 𑌤𑌮𑍇𑌵𑌂𑌭𑍂𑌤𑌮𑌹𑌰𑌹𑌰𑌭𑍍𑌯𑌸𑍍𑌯𑌮𑌾𑌨𑌭𑌕𑍍𑌤𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑍋 𑌯𑍋𑌗𑌬𑌲𑍇𑌨𑌾𑌰𑍂𑌢𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌤𑌯𑌾 𑌅𑌚𑌲𑍇𑌨 𑌮𑌨𑌸𑌾 𑌪𑍍𑌰𑌯𑌾𑌣𑌕𑌾𑌲𑍇 𑌭𑍍𑌰𑍁𑌵𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑍇 𑌪𑍍𑌰𑌾𑌣𑌮𑌾𑌵𑍇𑌶𑍍𑌯-𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌪𑍍𑌯 𑌤𑌤𑍍𑌰 𑌭𑍍𑌰𑍁𑌵𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑍇 𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 𑌦𑌿𑌵𑍍𑌯𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌯𑍋𑌽𑌨𑍁𑌸𑍍𑌮𑌰𑍇𑌤𑍍 । 𑌸 𑌤𑌮𑍇𑌵𑍈𑌤𑌿 - 𑌤𑌦𑍍𑌭𑌾𑌵𑌂 𑌯𑌾𑌤𑌿 - 𑌤𑌤𑍍𑌸𑌮𑌾𑌨𑍈𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑍋 𑌭𑌵𑌤𑍀𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥ ௧௦ ॥

பணத்தை வேண்டுகிறவன் பகவானை எல்லாம் தெரிந்தவராகவும், எப்பொழுதுமிருக்கிறவராகவும், எல்லா லோகங்களையும் அட—

விஸ்தாரமாகக் கேட்டேன். 1 தாமரை யிதழ்போன்ற கண்களை உடையவரே! எல்லா உலகமும் எப்பொழுதும் உம்முடைய உப யோகத்துக்காகவே இருக்கிறது. ஞானம், பலம் முதலான நல்ல குணங்களின் கூட்டங்களாலே நீர் தான் மிகவும் உயர்ந்தவர். எல்லா உலகத்தையும் தாங்குகிறீர். உம்மால் தான் எல்லா உலக மும் ஒரு ஸங்கதியை நினைப்பது, இமைக் கொட்டுவது முதலான எல்லா வேலைகளையும் செய்கிறது. இது முதலான 2 எப்பொ ழுது மிருக்கிற அளவில்லாத உம்முடைய பெருமைகளையும் கேட் டேன். இவைகளைக் கேட்டேன் [2]

ஏவமேதத்₃யதா₂த்த₂ த்வமாத்மாநம் பரமேஶ்வர ।
த்₃ரஷ்டுமிச்சா₂மி தே ரூபமைஶ்வரம் புருஷோத்தம ॥

ஹே பரமேஶ்வர! ஏவமேதத் த்வம், யதா₂த்த₂ த்வமாத்மாநம் ப்ரவீஷி । புருஷோத்தம! தவைஶ்வரம்-ஸகலாதா₄ரணம் ஸர்வஸ்ய ப்ரஶாஸித்ருத்வேந பாலயித்ருத்வேந ஸ்ரஷ்ட்ருத்வேந ஸம்ஹர்த்ருத்வேந ப₄ர்த்ருத்வேந கல்யாணகு₃ணாகரத்வேந பரத்வேந ஸகலேதர விஸஜாதீயத்வேந உபலக்ஷிதம் ரூபம் த்₃ரஷ்டும் ஸாக்ஷாத்கர்த்துமிச்சா₂மி ॥ ॥௩॥

(முன் பக்கத்தின் குறிப்பு.) 1 அர்ஜுனனுக்குச் சங்கையில்லை. உத்ஸாஹத்தை உண்டுபண்ணுவதற்காக மாத்திரம் சொன்னதல்ல என்று கருத்து.

1. இதனால் தாமரைக்கண்ணோடு கூடிய அப்பிராக்ருதமான திரு மேனி கிருஷ்ணாவதாரத்திலும் இருந்ததென்று தெளிவாய்க் காணப்பட் டதாக ஏற்படுகிறது.

2 சுலோகத்தில் பெருமையை 'அவ்யயம்' என்று சொல்லியிருக்கி றது. அதற்கு 'குறைவில்லாத'' என்று பொருள். காலத்திலும், விஷ யத்திலும், கணக்காலும், உயர்த்தியாலும் அந்தப்பெருமைக்கு அள வில்லை. அதாவது—பகவானுடைய பெருமை எப்போதுமிருக்கிறது. அறிவு, அழகு, ஸொத்து முதலிய எல்லா விஷயங்களிலும் பெருமையுள் ளவன். இத்தனை விஷயங்களில்தான் பெருமையிருக்கிறதென்று விஷ யங்களுக்குக் கணக்கில்லை. பெருமைக்கு அளவுமில்லை—என்று கருத்து.

வராகவும், ஒவ்வொரு நாளும் பிரீதியுடன் தியானம் செய்யவேண்டியது. அந்தப் பழக்கத்தாலே ஸம்ஸ்காரம் 1 வலுத்து வேறொன்றையும் நினையாத மனதால் செத்துப் போகும் காலத்தில் புருவங்களுக்கு நடுவில் பிராணனை வைத்து, அந்த இடத்திலேயே 2 பகவானை அப்படியே நினைத்து உடம்பை விட்டால், என்னைப் போல 3 ஐசுவரியத்தை அடைகிறான். [9—10]

அவ— அத வேதவித்ராதி நாம ஸங்க்ரஹேண—

யதக்ஷரம் வேதவிதோ வதந்தி விஶந்தி யத்யதயோ வீதராகா: । யதிச்சந்தோ ப்ரஹ்மசர்யம் சரந்தி தத்தே பதம் ஸங்க்ரஹேண ப்ரவக்ஷ்யே ॥ ௧௧ ॥

யதக்ஷரம் அஸ்தூலத்வாதிகுணகம் வேதவிதோ வதந்தி। வீதராகாஶ்ச யதயோ யதக்ஷரம் விஶந்தி। யதக்ஷரம் ப்ராப்தும் இச்சந்தோ ப்ரஹ்மசர்யம் சரந்தி। தத்பதம் ஸங்க்ரஹேண தே ப்ரவக்ஷ்யே। பத்யதே கம்யதே சேதஸேதி பதம்- தந்நிஷ்ட வேதாந்தவேத்யம் ஶ்லோகாதிவைஶேஷம் யேனாகாரேண உபாஸ்யம் ததா ஸங்க்ஷேபேண ப்ரவக்ஷ்யாமீத்யர்த்த: ॥ ௧௧ ॥

வஸ்துக்களுக்கும் காரணமான பிரகிருதி என்கிற திரவியத்தைச் சொல்லுகிறது. அதைக்காட்டிலும் மேலான என்றால் சுத்தஸத்வம் என்ற திரவியத்தாலுண்டானது என்று ஏற்படுகிறது. அதிலிருந்து உண்டான திருமேனியானது காமத்துக்கு உட்பட்டதன்று. அழிவில்லாதது. ஒருவிதக்குற்றமுமில்லாதது. அது அநேகஸூரியர்கள் சேர்ந்தது போல் அளவில்லாத பிரகாசத்தை யுடையது.

1. யோகத்தைச் சொல்லுகிற இடங்களில் புருவங்களுக்கு நடுவில், பிராணனை அசையாமல் வைக்கவேணும் என்று சொல்லியிருக்கையால், அதை இங்கே சொல்லி இருக்கிறது.

2. புருவங்களின் நடுவில்தான் பகவானையும் இருப்பதாக நினைக்க வேணும். பகவானுக்கு வேறு இடத்தைச் சொல்லாததினாலும், யோகத்தைச் சொல்லுமிடங்களில் இந்த இடத்தையே சொல்லியிருப்பதாலும், பகவானுக்கும் இதுவே இடம்.

3. ஐசுவரியத்துக்காகக் கீழ்ச்சொன்ன குணங்களோடு பகவானை தியானம் பண்ணுகிறவனுக்கு பகவானைப் போல ஐசுவரியம் மாத்திரம் வருமே ஒழிய, பகவானுடைய குணங்கள் வாராது. மோக்ஷத்திற்காக பகவானைத் தியானம் பண்ணுகிறவனுக்கு குணங்களும் வரும்.

அவ—ஆத்மஸ்வரூபத்தை மாத்திரம் பார்க்க ஆசைப்படுகிறவர்கள் நினைக்கவேண்டிய விதத்தைச் சொல்லுகிறார்—

1 அஸ்தூலத்வம் (பெருமனு யில்லாமை) முதலான குணங்களுள்ளதாக எந்த அக்ஷரத்தை (ப்ரும்மத்தை) வேதமறிந்தவர்கள் சொல்லுகிறார்களோ, மற்ற வஸ்துக்களில் ஆசை யில்லாதவர்கள் எந்த அக்ஷரத்தை அடைகிறார்களோ, எந்த அக்ஷரத்தை அடைய வேணுமென்று ஆசைப்பட்டு, ஸ்திரீயை நினைப்பது முதலியவைகளைச்செய்யாமலிருக்கிறார்களோ, அந்த நானுகிற- எல்லா வேதாந்தங்களாலும் அறியத் தகுந்த— 2 அக்ஷரத்தை எப்படித் தியானம் செய்யவேண்டுமோ, அப்படிச் சுருக்கமாய்ச் சொல்லுகிறேன். [11]

ஸர்வத்வாராணி ஸம்யம்ய மநோ ஹ்ருதி நிருத்ய ச ।
மூர்த்ந்யாதாயாத்மந: ப்ராணமாஸ்திதோ யோகதாரணாம் ॥ ௧௨ ॥
ஓமித்யேகாக்ஷரம் ப்ரஹ்ம வ்யாஹரந் மாமநுஸ்மரந் ।
ய: ப்ரயாதி த்யஜந் தேஹம் ஸ யாதி பரமாம் கதிம் ॥ ௧௩ ॥

ஸர்வாணி ச்ரோத்ராதீநீந்த்ரியாணி ஜ்ஞாநத்வாரபூதாநி ஸம்யம்ய ஸ்வவ்யாபாரேப்யோ விநிவர்த்ய, ஹ்ருதயகமலநிவிஷ்டே மய்யக்ஷரே மநோ நிருத்ய, யோகாக்யாம் தாரணாமாஸ்தித: மய்யேவ நிச்சலாம் ஸ்திதிமாஸ்தித:, ஓமித்யேகாக்ஷரம் ப்ரஹ்ம மத்வாசகம் வ்யாஹரந், வாச்யம் மாமநுஸ்மரந், ஆத்மந: ப்ராணம் மூர்த்ந்யாதாய, தேஹம் த்யஜந் ய: ப்ரயாதி ஸ யாதி பரமாம் கதிம் — ப்ரக்ருதிவியுக்தம் மத்ஸமாநாகாரமபுநராவ்ருத்திமாத்மாநம் ப்ராப்நோதீத்யர்த்த: । ஏவம் ஸவே

1. தன் (ஆத்ம) ஸ்வரூபத்தை மாத்திரம் பார்க்கவேணு மென்று ஆசைப்படுகிறவன் தியானம் செய்யவேண்டிய பகவானுடைய குணங்கள்—முண்டக உபநிஷத்தில் முதல் முண்டகத்தில் சொன்ன இது பருத்ததுமன்று, இது சின்னதுமன்று, இதுமுதலான குணங்கள்.

2. இங்கே ஸ்வரூபத்தில் ஒருவிதமான மாறுதலில்லாத பகவானுடைய ஸ்வரூபத்தின் தியானம் சொன்னது—ஸ்வரூபத்தில் மாறுதலில்லாத ஜீவனுடைய ஸ்வரூபத்தை அடைவதற்காக.

ஷ்டா ஸமிதேஷ்டா நஸ்ருத்வா ந விநஸ்ருதி | ஸவ்ய தொஷர
உத்ய க்தஸமோஹாஃ யாமோம் மதி”இத்ய நஹாமேவ வக்ஷ்யதே॥

அறிவுக்கு வழிகளான காது முதலான இந்திரியங்களை அவைகளின் விஷயங்களில் போகாமல் 1 அடக்கி, ஹிருதயகமலத்தில் இருக்கும் அக்ஷரமாகிய என்னிடத்தில் மனதை 2 நிறுத்தி, என்னையே 3 நிலையாய் தியானம் பண்ணுகிறவன் என்னைச் சொல்லுகிற ஒற்றை எழுத்தான பிரணவத்தைச் சொல்லிக் கொண்டு, அந்த எழுத்துக்குப் பொருளான என்னை நினைத்துக் கொண்டு, தன் 4 பிராணனைத் தலையில் வைத்து, உடம்பைவிடவேண்டியது. அவன் உயர்ந்த இடத்தை அடைகிறான். அதாவது—பிரகிருதியின் நினைவில்லாமல் என்னைப் போலிருக்கிற மறுபடியும் திரும்பி வருவது இல்லாத 5 ஜீவஸ்வரூபத்தை அடைகிறான். அதாவது

---

1. இப்படி அடக்குவதை பிரத்யாஹாரம் என்று சொல்லுகிறது.

2. சுலோகத்தில் மனதை ஹிருதயத்தில் வைத்து என்றிருக்கிறது. அதற்கு மனது என்கிற இந்திரியத்தை ஹிருதயம் என்கிற இடத்தில்வைத்து—அதாவது மனதால் ஹிருதயத்தை நினைத்து—என்று தான்பொருளாகும். பகவானுடைய தியானத்தைசொல்லவந்தஇடத்தில் ஹிருதயத்தைத் தியானம்பண்ணும்படி சொல்லுவதுஸரியன்று. ஆகையால் மனதை ஹிருதயத்திலிருக்கும் பகவானிடத்தில் வைத்து என்று பொருள்கொள்ள வேணும்.

3. பிரத்யாஹாரம், தாரணை, தியானம் என்று யோகத்தின் படிகள் சொல்லியிருக்கின்றன. பிரத்யாஹாரம் என்பது கண்முதலான இந்திரியங்களை அடக்குவது. தாரணை என்பது மனதைத் தியானிக்க வேண்டியவஸ்துவைத் தவிர வெளியில்போகாதபடி அதில் நிறுத்துவது. தியானம் என்பது வேறுவஸ்துவின் நினைவு கலக்காமல் ஒன்றையே நினைப்பது. இந்தஇடத்தில் தாரணும் என்று சொன்னது இரண்டாவதான தாரணையைச் சொல்லவில்லை. அதற்கு அடுத்தபடியான தியானத்தைச் சொல்லுகிறது.

4. மோக்ஷத்தை ஆசைப்பட்டவனுடைய பிராணன் உடம்பை விட்டுப் போகும் காலத்தில் தலைவழியாய் போகவேண்டியதாகையால், “பிராணனைத்தலையில்வைத்து” என்று சொல்லியிருக்கிறது.

5. ஆத்மாவை மாத்திரம் பார்க்கவேணுமென்று ஆசைப்பட்டவன் அடையவேண்டியது தன் ஸ்வரூபம் மாத்திரம்தான். ஆனால்இவன் தன்

பார்க்கிறான். அடியோடு கர்மம்போன ஜீவஸ்வரூபத்தை உயர்ந்த அடையவேண்டிய வஸ்துவாக மேலே 24-வது சுலோகத்தில் சொல்லப் போகிறது. (12—13)

ஸ்வ: — ஸாமாந்யேந ஐஶ்வர்யார்த்திந: கைவல்யார்த்திநஶ்ச ஸ்வப்ராப்யாநுகுணம் பகவதநுஸந்தாநப்ரகார உக்த: | அத ஜ்ஞாநிநோ பகவதநுஸந்தாநப்ரகாரம் ப்ராப்திப்ரகாரஞ்சாஹ —

அநந்யசேதா: ஸததம் யோ மாம் ஸ்மரதி நித்யஶ: |
தஸ்யாஹம் ஸுலப: பார்த்த நித்யயுக்தஸ்ய யோகிந: ||14||

நித்யஶோ ஸர்வதா ஸததம் ஸர்வகாலம் அநந்யசேதா: ய: ஸ்மரதி — அத்யர்த்தமத்ப்ரியத்வேந மத்ஸ்ம்ருத்யா விநா ஆத்மதாரணாஸம்பாவநயா நிரதிஶயப்ரியாம் ஸ்ம்ருதிம் ய: கரோதி, தஸ்ய நித்யயுக்தஸ்ய — நித்யயோகம் காங்க்ஷமாணஸ்ய யோகிநோऽஹம் ஸுலப:, — அஹமேவ ப்ராப்ய:, ந மத்பாவைஶ்வர்யாதிக:; ஸுப்ராபஶ்ச — தத்வியோகமஸஹமாநோऽஹமேவ தம் வ்ருணே । ப்ராப்த்யநுகுணோபாஸநவிபாகம் தத்விரோதிநிரஸநம் அத்யர்த்தமத்ப்ரியத்வாதிகம் ச அஹமேவ ததாமீத்யர்த்த: | "யமேவைஷ வ்ருணுதே தேந லப்ய:" இதி ஹி ஶ்ரூயதே। வக்ஷ்யதி ச "தேஷாம் ஸததயுக்தாநாம் பஜதாம் ப்ரீதிபூர்வகம் । ததாமி புத்தியோகம் தம் யேந மாமுபயாந்தி தே ॥ தேஷாமேவாநுகம்பார்த்தமஹமஜ்ஞாநஜம் தம: । நாஶயாம்யாத்மபாவஸ்தோ ஜ்ஞாநதீபேந பாஸ்வதா" இதி ॥ ॥14॥

அவ—இப்படி பணத்தையும், தன் ஸ்வரூபத்தை மாத்திரம் அநுபவிப்பதையும் அடைய வேண்டியவர்கள் பகவானைத் தியானம் பண்ணவேண்டிய விதம் சொல்லப் பட்டது. இப்போது ஞானி பகவானைத் தியானம் செய்யும் விதத்தையும், பிரயோஜனத்தை அடைகிற விதத்தையும் சொல்லுகிறார்—

ஸ்வரூபத்தைமாத்திரம் கொஞ்சகாலம் அநுபவித்து, பிறகுபகவானிடம் போகிறான். ஸம்ஸாரத்துக்கு இவன் திரும்பி வருகிறதில்லை. ஆகையாலே ஜீவஸ்வரூபத்தையும் உயர்ந்த இடமாகச்சொல்லிற்று.

ஆரம்பித்தது முதல் பிறகு ஒருக்காலமும் விடாமல், அதாவது—பணம், தன்னைமாத்திரம் அநுபவிப்பது ஆகியபிரயோஜனங்களை விரும்பாமல்,பகவானைத் தவிர இன்னொரு இடத்தில் மனதை வைக்காமல்—என்னிடத்தில் அளவில்லாத ஆசையிருப்பதனுல், என்னை அரைக்ஷணம் நினைக்காத போனுல் தாங்கமுடியாமல், எவன் அளவில்லாத ப்ரீதியுடன் தியானம்செய்கிறுனே, எப்போதும் என்னுடனே இருக்கவேணுமென்று ஆசைப் பட்டுக் கொண்டிருக்கிற அந்த யோகி என்னைத் தான் அடைகிறுன். கீழே சொன்ன இரண்டு பேர்களைப் போல் என் மாதிரியான ஐசுவரியம் முதலானவைகளை அடைகிறதில்லை. பிரயாஸமில்லாமலும் என்னை அடைகிறுன். என்னை ஆசைப்படாமல் ஐசுவரியம் முதலானவைகளை ஆசைப் படுகிறவர்களுக்குப் பிரயாஸம் அதிகம். என்னையே அடையவேணுமென்று தியானம் பண்ணுகிறவனைவிட்டு என்னுல் பிரியமுடியவில்லை. ஆகையால் அவனுடைய தியானத்தை ச்சீக்கிரம் 1 பழுக்கும்படி செய்கிறேன். அதற்கு 2 இடைஞ்சலையும் போக்குகிறேன். அவனுக்கு என்னிடத்தில் அளவில்லாத ப்ரீதியையும் கொடுக்கிறேன். என்னோடுகூட பரமபதத்தில் ஒரு கட்டிலில் அவன் உட்காருகிறவரையில் நடுவில் அவனுல் செய்ய முடியாத—செய்யவேண்டிய—எல்லா வேலைகளையும் செய்கிறேன். இந்த வேலையை என்னுடைய சுமையாக நினைத்துக் கொண்டிருக்கிறேன். 3 (14)

---

1. பழுக்கும்படிசெய்வதாவது—நினைவு வேறு எண்ணங்கலக்காமல் ஒரே கம்பிபோலிருக்கும்படியும், கண்ணுல் பார்ப்பதுபோல் தெளிவாயிருக்கும்படியும் செய்வது, பகவானைப் பார்க்க வேணுமென்று அதிகமான ஆவலை யுண்டுபண்ணுவது முதலானவைகளைச் செய்வது.

2. இடைஞ்சல்கள்—கெட்ட கர்மங்கள், ரஜோகுணம்—தமோகுணம்மேலிடுதல், ஆசையும், த்வேஷமும், மயக்கமுமுண்டாவது முதலானவைகள்.

3. இங்கே சொன்னவைகளெல்லாம் வெறும் ஸ்தோத்திரமன்று, அப்படியே வேதம் சொல்லுகிறது. இதே ஸங்கதியை 10-வது அத்தியாயத்தில் 10-வது சுலோகத்தில் சொல்லப் போகிறது. பணத்தையும ஆத்மஸ்வரூபம் மாத்திரத்தின் பார்வையையும் ஆசைப்படுகிறவர்கள் தியானம் பண்ண வேண்டிய பகவானுடைய குணங்கள் இன்னது

அத— அத: ப்ராப்யபேதேந ஜ்ஞாநிந: கைவல்யார்த்திநஶ்ச புநராவ்ருத்திம், பகவந்தம் ப்ராப்தவத: அபுநராவ்ருத்திம் சாஹ—

மாமுபேத்ய புநர்ஜந்ம து:காலயமஶாஶ்வதம் ।
நாப்நுவந்தி மஹாத்மாந: ஸம்ஸித்திம் பரமாம் கதா: ॥ 15 ॥

மாம் ப்ராப்ய புநர்து:காலயமஸ்திரம் ஜந்ம நாப்நுவந்தி । யத ஏதே மஹாத்மாந: மஹாமநஸ:, யதாவஸ்திதஸ்வரூபவிஜ்ஞாநா அத்யர்த்தப்ரியத்வேந மயா விநா ஆத்மதாரணமலபமாநா மய்யாஸக்தமநஸோ மதாஶ்ரயா:, மதாராதநைகப்ரயோஜநா: பரமஸம்ஸித்திரூபம் மாம் ப்ராப்தா: ॥ 15 ॥

அவ—அவரவர்கள் அந்தந்த வேலைகளைச் செய்ய ஆரம்பிப்ப தற்குமுன் அவைகளால் வரும் பிரயோஜனங்களின் ஸங்கதிகளை அவசியம் அறியவேண்டியது. ஆகையால் இதன் பிறகு இந்த அத்தியாயத்தின் மேல்பாகத்தில் ஞானியும், ஆத்மாநுபவத்தை மாத்திரம் ஆசைப் படுகிறவனும் தங்கள் பிரயோஜனங்களை அடைந்த பிறகு திரும்பி வருகிறதில்லை என்றும், பணத்தை ஆசைப்பட்டவன், அதை அடைந்து மறுபடியும் பிறக்கிறானென்றும் சொல்லுகிறார்—

என்னை அடைந்தவர்கள் எல்லா துக்கங்களுக்கும் இருப்பிடமாயும் நிலையில்லாததுமான பிறப்பை மறுபடியும் அடைகிறதில்லை.

என்று கீழே சொல்லப்பட்டது. பகவானையே ஆசைப்படுகிறவர்கள் இன்ன குணங்களுடன் தியானம் பண்ணவேண்டியது என்று இங்கே சொல்லவில்லை. உபநிஷத்துக்களில் அனேக விதமானத் தியானங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்தந்தத்தியானத்தைச் செய்யும்போது, அததற்கு ஏற்பட்ட குணங்களுடன் தியானம்செய்யவேண்டியது என்று நினைத்து, அவைகளை இங்கே தனியாகச்சொல்லவில்லை என்று தோன்றுகிறது. இந்தசுலோகத்தின் அவதாரிகையில், "பகவானைத் தியானம்செய்யும் விதத்தையும்" என்று சொன்னது எது வென்றால், தியானத்தை ஆரம்பித்ததுமுதல் எப்போதும் பகவானையே நினைத்துக் கொண்டிருப்பது, மற்றதையும், மற்றப் பிரயோஜனங்களையும் நினைக்கக்கூடாது என்பது முதலானவை.

ஏனென்றால், அவர்கள் பெரிய மனதுடையவர்கள்; என்னை உள்ளபடி அறிந்தவர்கள்; என்னிடத்தில் அளவில்லாத பிரீதியினாலே என்னைவிட்டிருந்தால், ஒரு நிமிஷம்கூடத் தாங்க முடியாதவர்கள்; இவர்கள் என்னிடத்திலேயே மனதை வைத்து, என்னையே தியானம் செய்து, உயர்ந்த பிரயோஜனமான என்னை அடைந்திருக்கிறார்கள். [15]

அவ— ஐஶ்வர்யகதிம் ப்ராப்தாநாம் ஸஹவஸ்தம் ப்ராப்தாநாம் ச புநராவ்ருத்திம் அபுநராவ்ருத்திம் ச ஹேதுகிர்தேநாஹ—

ஆப்ரஹ்மபுவநால்லோகா: புநராவர்த்திநோऽர்ஜுந ।
மாமுபேத்ய து கௌந்தேய புநர்ஜந்ம ந வித்யதே ॥ ௧௬ ॥

ப்ரஹ்மலோகபர்யந்தா: ப்ரஹ்மாண்டோதரவர்த்திந: ஸர்வே லோகா: போகைஶ்வர்யாஶ்ரயா: புநராவர்த்திநோ விநாஶிந:; அத ஐஶ்வர்யகதிம் ப்ராப்தாநாம் ப்ராப்யஸ்தாநவிநாஶாத் விநாஶித்வமவர்ஜநீயம்। மாம் ஸர்வஜ்ஞம் ஸத்யஸங்கல்பம் நிகிலஜகதேககாரணம் அபரிச்சிந்நவிபூதியுக்தம் பரமகாருணிகம் ஸதைகரூபம் ப்ராப்தாநாம் விநாஶப்ரஸங்காபாவாத் தேஷாம் புநர்ஜந்ம ந வித்யதே । ॥ ௧௬ ॥

அவ—ஐசுவரியத்தை அடைந்தவர்கள் மறுபடியும் பிறக்கிறார்கள் என்பதற்கும், பகவானை அடைந்தவர்கள் மறுபடியும் பிறக்கிறதில்லை என்பதற்கும் காரணத்தைச் சொல்லுகிறார்—

1 பிரும்மலோகம் உள்பட 2 பிரும்மாண்டத்தின் நடுவிலுள்ள—ஸகல லோகத்திற்கும் ஐசுவரியத்திற்கு இருப்பிடமான—எல்

1. பிரும்மலோகம் உள்பட என்பது சுலோகத்திலிருக்கிற "ஆ" என்ற சொல்லுக்குப் பொருள்.

2. பிரும்மாண்டம் என்பது பிரும்மாவின் வீடு. பிரகிருதி பெரிய ஸமுத்திரம், பிரும்மாண்டங்கள் அதிலுண்டாகும் குமிழிகள். இப்படியானால் அதற்குள் இருப்பவர்கள் அழிந்து போவார்கள் என்று சொல்ல வேண்டுமோ.

லா லோகங்களும் ஒரு காலத்தில் அழிந்துவிடுகின்றன. அதனால் அவைகளை அடைந்தவர்கள் மறுபடியும் பிறக்கிறார்கள். வீடு இருந்த விடம்தெரியாமல் அழிந்துபோனால், அதிலிருந்தவர்கள் இன்னொருஇடம் போகமாட்டார்களோ. என்னுடைய இடமான பரமபதம் நிலையானது. அதற்கு ஒருக்காலும் அழிவில்லை. அந்தஇடத்தில் 1 எல்லாம் தெரிந்த—நினைத்தபடி தவராமல் நடத்துகிற—எல்லாலோகங்களையு முண்டுபண்ணி, காப்பாற்றி, அழிப்பதை விளையாட்டாகச் செய்கிற—அளவில்லாத தயையுள்ள—எப்போதும் ஒருமாதிரியாயிருக்கிற—என்னை அடைந்தவர்களுக்கு அழிவுக்குப் பேச்சேயில்லாமையாலே, மறுபடியும் பிறப்பே கிடையாது. [16]

அத² ப்³ரஹ்மலோகபர்யந்தாநாம் லோகாநாம் தத³ந்தர்வர்திநாம் ச ஸர்வேஷாம் ஸங்க்²யாதோத்பத்திவிநாஶகாலவ்யவஸ்தா²மாஹ—

ஸஹஸ்ரயுக³பர்யந்தமஹர்யத்³ப்³ரஹ்மணோ விது³: ।
ராத்ரிம் யுக³ஸஹஸ்ராந்தாம் தேঽஹோராத்ரவிதோ³ ஜநா: ॥

அவ்யக்தாத்³வ்யக்தய: ஸர்வா: ப்ரப⁴வந்த்யஹராக³மே ।
ராத்ர்யாக³மே ப்ரலீயந்தே தத்ரைவாவ்யக்தஸம்ஜ்ஞகே ॥ ௧௭ ॥

பூ⁴தக்³ராம: ஸ ஏவாயம் பூ⁴த்வா பூ⁴த்வா ப்ரலீயதே ।
ராத்ர்யாக³மேঽவஶ: பார்த² ப்ரப⁴வத்யஹராக³மே ॥ ௧௮ ॥

யே மநுஷ்யாதி³சதுர்யுகா³நாம் ஸஹஸ்ராந்தா அஹோராத்ரவ்யவஸ்தா²விதோ³ ஜநா:, தே ப்³ரஹ்மண: ப்ரப்⁴ருதீநாம்

1. பகவானிடம் போனவன் மறுபடி பிறக்கிறதில்லை என்பதற்கு காரணங்கள் இந்த சொற்களாலே சொல்லப்படுகின்றன. பகவானைத்தவிரமற்றவர்களுக்கு எல்லாம் தெரியாது. நினைத்தபடி செய்யமுடியாது. பகவானாலுண்டு பண்ணப் பட்டவர்கள். இரக்கமில்லாதவர்கள். ரஜஸ்ஸும் தமஸ்ஸும் முள்ளவர்களாய், அதனால் ஆசையும்த்வேஷமும் உள்ளவர் களாயிருப்பார்கள். அவர்கள் ஒரேமாதிரியாய் இருக்கமாட்டார்கள். இப்படிப்பட்ட தாழ்ந்த தேவதையை யடைந்தவன் அந்ததேவதையாலேயோ, மற்றவர்களாலேயோ அந்தவிடம் விட்டுத் திரும்பிவரக்கூடும். இடமும் நிலையில்லை, அவர்களும் நிலையில்லை.

[illegible]

||௧௭—௧௮—௧௯||

அவ—பிரும்மலோகம் உள்பட எல்லா லோகங்களும், அவைகளிலிருக்கிறவர்களும் இத்தனை இத்தனை காலமிருந்து அழிய வேண்டியதென்று பகவான் ஏற்பாடு செய்திருக்கிறான் என்று சொல்லுகிறார்—

மனிதன் முதல் பிரும்மா வரையிலுள்ளவர்களுக்கு என்றுமே ஏற்படுத்தப்பட்ட நாள் கணக்கை அறிந்தவர்கள், பிரும்மாவின் ஒரு பகல் ஆயிரம் சதுர்யுகம் (நாலுயுகங்கள்) என்று அறிகிறார்கள். ராத்திரியும் அதேமாதிரி. பூலோகம், புவர்லோகம், ஸ்வர்லோகம் என்கிற லோகங்களில் 1 உடம்புகளாகவும், இந்திரியங்க

1. சுலோகத்தில் "அவியக்தாத்" என்றும், "வயக்தய:" என்றும் இரண்டு வடமொழிச்சொற்கள் இருக்கின்றன. இவைகளில் 'அவ்யக்த" என்றசொல்லுக்கு மூலப்பிரகிருதி யென்றும், "வியக்தய:" என்றசொல்லுக்கு அதிலிருந்து உண்டான மஹத் முதலானவைகள் என்றும் பொருள் ஏற்பட்டிருக்கிறது. இந்த இடத்தில் அப்படிப்பொரு

ளாகவும், அநுபவிக்கக்கூடிய வஸ்துக்களாகவும், அநுபவத்துக்கு வேண்டிய இடங்களாகவும் இருக்கிற எல்லா வஸ்துக்களும் பிரும்மாவுக்குப் பொழுது விடிகிற காலத்தில் பிரகிருதியினால் ஏற்பட்ட அவனுடைய உடம்பிலிருந்து உண்டாகின்றன. அஸ்தமன காலத்தில் அந்த உடம்பிலேயே அடங்கிவிடுகின்றன. இந்த மூன்றுலோகத்திலிருக்கும் காமத்துக்கு உட்பட்ட 1எல்லாப்பிராணிகளும் பிரும்ம வுக்கு பொழுதுவிடியும் போது உண்டாகி, அஸ்தமன் காலத்தில் செத்து, மறுபடியும் பொழுதுவிடியும்போது உண்டாகிறார்கள். இவையெல்லாம் இப்படி உண்டாகிறதும் போகிறதுமாயிருக்கின்றன. பிருமமாவுக்கு 2 நூறுவர்ஷமான பிறகு, பிரும்மலோகம் வரையிலுள்ள லோகங்களும், 3 அதனை

ளல்ல. ஏனென்றால், இந்த இடம் பிருமமாவுக்குப் பொழுது விடிகிற காலத்தில் உண்டாகிறவைகளைச் சொல்லுகிறது. மஹத் முதலானவைகள் பிருமமா உண்டாவதற்கு முன்பே உண்டானவைகள். அவியக்த என்பது—பிருமமாவின் உடம்பாக ஆகியிருக்கிற பிரகிருதியையும், "வியக்தய:" என்பது பிருமமாவினால் உண்டுபண்ணப்பட்ட எல்லாவஸ்துக்களையும் சொல்லுகின்றன.

1. இங்கு "அவச." என்ற சொல்லுக்கு ஒருவருக்கும் உட்படாதவனென்று பொருளல்ல. பிறக்கிறான், சாகிறான் என்று சொல்லுகையால், தன அதீனமில்லை—காமத்துக்கு உட்பட்டவன் என்றுபொருள்.

2. மேழசொன்னபடி, உலகமுண்டாவதையும் அழிவதையும் நைமித்திகப்பிரளயம் என்று சொல்லுகிறது. இதைச்சொன்னவருக்கு பிராகிருதப்பிரளயத்தையும் சொல்வதில் கருத்து. பிராகிருதப்பிரளயம் என்றால் பிருமமாண்டமும் அழிந்துபோவது. அப்போது பிருமமாவினுடைய இடத்துக்கும் பிருமமாவுக்கும் அழிவு ஏற்படும். இதுவே கீழ் 16-வதுசுலோகத்தில் சொல்லப்பட்டது.

3. பூமியானது ஜலமாக ஆகிறது. ஜலம் நெருப்பாகவும், நெருப்பு காற்றாகவும் ஆகின்றன. இந்தவரிசையாய் எல்லாம் பிரகிருதியாக ஆகி, அதுவும், ஜீவன்களும் பகவானிடத்தில் சேர்ந்துவிடுகின்றன. மண் ஜலமாவதுபோல பிரகிருதிக்கும் ஜீவன்களுக்கும் அழிவில்லை. அவைகளுக்கு பகவானிடம் சேர்க்கைதான். அப்போது அவைகளைத் தனி உருவாக அறியமுடியாது. இப்படி பூமிமுதலானவைகளே அழிந்தால், அவைகளின் சேர்க்கையாலுண்டான பிருமமாண்டத்திற்கும், பிருமமாவினுடைய உடம்புக்கும் அழிவுண்டென்று சொல்லவேண்டுமோ.

யுண்டாக்கும் வஸ்துக்களில் வரிசையாய் அடங்கி, கடைசியில் என்னிடம் வந்து சேருகின்றன. பிரும்மாவும் போய்விடுகிறார். இப்படி என்னைத்தவிர எல்லா வஸ்துக்களுக்கும் ஒரு காலத்தில் என்னிடத்திலிருந்து பிறப்பும், என்னிடத்தில் வந்து அடங்குவதும் இருக்கிறபடியாலே, அவர்களுக்கு அழிவு கட்டாயம் வந்தே தீரும். ஆகையால் ஐசுவரியத்தை அடைந்தவர்கள் மறுபடியும் பிறக்காமலிருக்க முடியாது. எனக்கும் என்னிடத்துக்கும் இப்படி அழிவில்லாமையாலே, என்னிடம் வந்தவர்களுக்கு மறு பிறப்பில்லை. [17-18-19]

𑌅𑌥 𑌕𑍈𑌵𑌲𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌸𑍍𑌯𑌾𑌪𑍍𑌯𑌪𑍁𑌨𑌰𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌂 𑌵𑌿𑌶𑌦𑌯𑌤𑌿 —

𑌪𑌰𑌸𑍍𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌤𑍁 𑌭𑌾𑌵𑍋𑌽𑌨𑍍𑌯𑍋𑌽𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑍋𑌽𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌾𑌤𑍍𑌸𑌨𑌾𑌤𑌨𑌃 ।
𑌯𑌃 𑌸 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁 𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌨𑌶𑍍𑌯𑌤𑍍𑌸𑍁 𑌨 𑌵𑌿𑌨𑌶𑍍𑌯𑌤𑌿 ॥

𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑍋𑌽𑌕𑍍𑌷𑌰 𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌸𑍍𑌤𑌮𑌾𑌹𑍁𑌃 𑌪𑌰𑌮𑌾𑌂 𑌗𑌤𑌿𑌮𑍍 ।
𑌯𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌨 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇 𑌤𑌦𑍍𑌧𑌾𑌮 𑌪𑌰𑌮𑌂 𑌮𑌮 ॥ ॥௨௧॥

𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌾𑌤𑍍-𑌅𑌚𑍇𑌤𑌨𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌰𑍂𑌪𑌾𑌤𑍍𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌰𑍍𑌥𑌤𑌯𑌾 𑌪𑌰𑌃-𑌉𑌤𑍍𑌕𑍃𑌷𑍍𑌟𑌃 𑌭𑌾𑌵𑍋𑌽𑌨𑍍𑌯𑌃-𑌜𑍍𑌞𑌾𑌨𑍈𑌕𑌾𑌕𑌾𑌰𑌤𑌯𑌾 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌵𑌿𑌸𑌜𑌾𑌤𑍀𑌯𑌃। 𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌃-𑌕𑍇𑌨𑌚𑌿𑌤𑍍𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑍇𑌨 𑌨 𑌵𑍍𑌯𑌜𑍍𑌯𑌤 𑌇𑌤𑍍𑌯𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌃-𑌸𑍍𑌵𑌸𑌂𑌵𑍇𑌦𑍍𑌯𑌸𑍍𑌵𑌾𑌸𑌾𑌧𑌾𑌰𑌣𑌾𑌕𑌾𑌰 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । 𑌸𑌨𑌾𑌤𑌨𑌃-𑌉𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌵𑌿𑌨𑌾𑌶𑌾𑌨𑌰𑍍𑌹𑌤𑌯𑌾 𑌨𑌿𑌤𑍍𑌯𑌃। 𑌯𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁 𑌵𑌿𑌯𑌦𑌾𑌦𑌿𑌷𑍁 𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌸𑌕𑌾𑌰𑌣𑍇𑌷𑍁 𑌸𑌕𑌾𑌰𑍍𑌯𑍇𑌷𑍁 𑌵𑌿𑌨𑌶𑍍𑌯𑌤𑍍𑌸𑍁 𑌤𑌤𑍍𑌰 𑌤𑌤𑍍𑌰 𑌸𑍍𑌥𑌿𑌤𑍋𑌽𑌪𑌿 𑌨 𑌵𑌿𑌨𑌶𑍍𑌯𑌤𑌿। 𑌸𑍋𑌽𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑍋𑌽𑌕𑍍𑌷𑌰 𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌃-“𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌮𑌕𑍍𑌷𑌰𑍇 𑌲𑍀𑌯𑌤𑍇, 𑌅𑌕𑍍𑌷𑌰𑌂 𑌤𑌮𑌸𑌿 𑌲𑍀𑌯𑌤𑍇” 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌷𑍁। 𑌤𑌂 𑌵𑍇𑌦𑌵𑌿𑌦𑌃 𑌪𑌰𑌮𑌾𑌂 𑌗𑌤𑌿𑌮𑌾𑌹𑍁𑌃 । 𑌅𑌯𑌮𑍇𑌵 “𑌯𑌃 𑌪𑍍𑌰𑌯𑌾𑌤𑌿 𑌤𑍍𑌯𑌜𑌨𑍍𑌦𑍇𑌹𑌂 𑌸 𑌯𑌾𑌤𑌿 𑌪𑌰𑌮𑌾𑌂 𑌗𑌤𑌿”𑌮𑌿𑌤𑌿 𑌚 𑌪𑌰𑌮𑌗𑌤𑌿𑌶𑌬𑍍𑌦𑌨𑌿𑌰𑍍𑌦𑌿𑌷𑍍𑌟𑍋𑌽𑌕𑍍𑌷𑌰𑌃। 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌸𑌂𑌸𑌰𑍍𑌗𑌵𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑍇𑌣𑌾𑌵𑌸𑍍𑌥𑌿𑌤 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃। 𑌯𑌮𑍇𑌵𑌂𑌭𑍂𑌤𑌂 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑍇𑌣𑌾𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌂

ப்ராப்ய ந நிவர்த்தந்தே | தத்தாம பரமம் மம - பரம் நியமந
ஸ்தாநம்| அசேதநப்ரக்ருதிரேகம் நியமநஸ்தாநம்| தத்ஸம்ஸ்ருஷ்ட
ரூபா ஜீவப்ரக்ருதிர்த்விதீயம் நியமநஸ்தாநம்| அசித்ஸம்ஸர்க்கவி
யுக்தம் ஸ்வரூபேணாவஸ்திதம் முக்தஸ்வரூபம் பரமம் நிய
மநஸ்தாநம் நிர்திஶ்யதே | ததநாவ்ருத்திரூபம் | அத்ர
ப்ரகாஶவாசீ தாமஶப்த:| ப்ரகாஶஶ்ச ஜ்ஞாநமிதி
ப்ரக்ருதிஸம்ஸ்ருஷ்டாத் ஸங்குசிதஜ்ஞாநரூபாதஸங்குசித
ஜ்ஞாநரூபதயா முக்தஸ்வரூபம் பரமம் தாம || ௨௧ ||

அவ—கைவல்லியத்தை (ஜீவாத்மாமாத்திரத்தின் அநுபவத்தை) அடைந்தவர்களும் மறுபடியும் பிறக்கிறதில்லை என்று சொல்லுகிறார்—

கீழே அவியக்தம் என்று சொல்லப்பட்ட அறிவில்லாத பிரகிருதியைக் காட்டிலும் ஜீவன் என்கிற வஸ்து உயர்ந்தப் பிரயோஜநமாயிருப்பதாலே, உயர்ந்தது. எப்போதும் அறிவுள்ளதாயிருக்கையாலே பிரகிருதியைக்காட்டிலும் அது வேறுஜாதி. சப்தம் முதலிய பிரமாணங்களால் ஜீவன் என்று ஒன்று ஏற்பட்டாலும், நான் என்று தன்னாலே தான் தனக்குத் தோன்றுகிறது. பிறப்புக்கும் அழிவுக்கும் தகுதியில்லாமையால், நித்தியம் என்று சொல்லப்படுகிறது. அது அக்ஷரம்-அதாவது 1 எல்லா உடம்புகளிலிருந்தாலும் அவைகள் அழியும்போது அது

---

1. *சுலோகத்தில் "பூதேஷு" என்கிற சொல் இருக்கிறது. அது பூமி முதலான ஐந்து மஹாபூதங்களைச் சொல்லி, அவைகளால் உண்டான உடம்புகளைச்சொல்லுகிறது. உடம்புகள் எல்லாம் அழியும்போதும், அதிலிருக்கும் ஜீவனுக்கு அழிவில்லை. ஜீவன் அழிவில்லைஎன்று இங்கேசொல்லுவானேன் என்றால், பதில்—எள்ளில் எண்ணெயிருக்கிறது. எள்ளை நெருப்பில்போட்டால், எள்ளும் எண்ணெயும் சாம்பலாய் விடுகிறது. அதுபோல உடம்புகளில் ஜீவனிருப்பதாலே, ஒரு உயிர் பிராணியை நெருப்பில்போட்டால், உடம்புகள் சாம்பலாவதுபோல-அதிலுள்ள ஜீவனுக்கும் அழிவுண்டோவென்று ஸந்தேஹம் உண்டாகக் கூடும். அதைத்தீர்ப்பதற்காக அதற்கு அழிவில்லை என்று இங்கே சொல்லப்பட்டது.*

க்கு அழிவில்லை. 12-வது அத்தியாயம் 3-வது ச்லோகத்திலும், 15-வது அத்தியாயம் 16-வது ச்லோகத்திலும், இது அக்ஷரம் என்று சொல்லப்படுகிறது. வேதம்தெரிந்தவர்கள் இதைப் பரமகதி யாக (உயர்ந்த அடையத்தகுந்த வஸ்துவாக)ச் சொல்லுகிறார்கள். இந்த அத்தியாயம் 13-வது ச்லோகத்தில் இதையே "பரமகதி" என்கிற சொல்லாலே சொல்லியிருக்கிறது. அதாவது—பிரகிருதியை விட்டுப் பிரிந்த சுத்தமான ஜீவ ஸ்வரூபம். இப்படிப் பட்ட ஆத்ம ஸ்வரூபத்தை அடைந்தவர்கள் மறுபடியும் பிறக்கிற தில்லை. அது என்னுடைய ஸொத்துக்களில்மிகவுமுயர்ந்தது அதாவது—அறிவில்லாத பிரகிருதி என்பது ஒரு ஸொத்து. அத்துடன் சேர்ந்திருக்கிற ஜீவன் இரண்டாவது. 2 முக்தன்—அதை விட்டுப் பிரிந்த ஜீவன் மூன்றாவது. இவன் இவைகளுக்குள் மிகவும் உயர்ந்தவன். ஏனென்றால், இவன் மறுபடியும் பிறக்கிறதில்லை.

---

1. மோக்ஷத்தை அடைந்தவனும் பகவானுக்கு உட்பட்டவன்தானே. ஒருவருக்கு முட்படாதபகவான் அவனைமறுபடியும் ஸம்ஸாரத்தில் தள்ளக்கூடாதோ? ஸ்வர்க்கத்துக்குப்போனவர்களை இந்திரன் மறுபடியும் பூமியில் தள்ளிவிடுகிறானென்று சொல்லியிருக்கிறதே. ஒருவருக்குட்பட்ட இந்திரனே இப்படிச்செய்தால்,ஒருவருக்கு முட்படாத பகவான் என்னசெய்யக்கூடாதுஎன்றுஸந்தேஹமுண்டாகலாம், அதைத்தீர்ப்பதற்காகச்லோகத்தில் "மறுபடியும் பிறக்கிறதில்லை" என்றுசொல்லியிருக்கிறது. ஒருவன் ஸம்ஸாரத்திற்குத் திரும்பிவருவதற்கு கர்மம் தான்காரணம். பகவானுக்கு உட்பட்டிருப்பது அல்ல. கர்மமோ அடியோடுபோய்விட்டது. பகவானுடைய தயையோ அளவில்லாதது. அது அவனுக்கு இயற்கையாக உள்ளது. அவன் எப்படி ஜீவனை ஸம்ஸாரத்திற்கு அனுப்புவன். இந்தஸந்தேஹத்தை இன்னொருவிதமாயும் தீர்க்கலாம்—ஒருவன் ஸம்ஸாரத்திற்குத் திரும்பிவராமலிருப்பதற்குக் காரணம்-பகவானை அடைவது மாத்திரமன்று. ஜீவன் ஜீவனுடையஸ்வரூபத்தை அடைவதும் காரணம். அதை அடைந்தவனுக்குத்திரும்பி வருகிற பேச்சே கிடையாது.

2. ஏழாவது அத்தியாயம் 5—வது ச்லோகத்தில் ஜீவன் பகவானுடையஸொத்து என்று சொல்லப்பட்டதே. அதை இங்கேமறுபடியும் சொல்லுவானேன்? என்றால், பதில்—அந்தஇடத்தில் ஸமஷ்டி ஜீவனைச்சொன்னது.அதாவது—தேவன் முதலான உடம்புகளில் நுழையாமல் பிரகிருதியுடன் சேர்ந்த ஜீவனைச்சொன்னது. இந்த இடத்தில் மோக்ஷத்தை அடைந்தவனும் பகவானுக்கு ஸொத்து என்று சொல்லுகிறது.

ச்லோகத்தில் "பரமம் தாம" என்கிற சொற்கள் இருக்கின்றன. அவைகளுக்கு மிகவுமுயர்ந்த ஸொத்து என்று அர்த்தம் பண்ணி, கீழேவியாக்கியாநம் பண்ணப்பட்டது. "தாம" என்கிற சொல்லானது வெளிச்சத்தையும் சொல்லுகிறது. அந்த வெளிச்சம் என்பது இங்கே அறிவு. பிருகிருதியுடன் சேர்ந்திருக்கும் ஜீவனுக்கு அறிவு கொஞ்சமாயிருக்கிறது. மோக்ஷத்தை அடைந்தவனுடைய அறிவுக்கு அளவில்லை. ஆகையால் அளவில்லாத வெளிச்சமுடையவன் என்றும்சொல்லலாம். [20-21]

𑌅𑌵— 𑌜𑍍𑌞𑌾𑌨𑌿𑌨𑌃 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌂 𑌤𑍁 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌵𑌿𑌭𑌕𑍍𑌤𑌮𑌿𑌤𑍍𑌯𑌾𑌹 ॥—

𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌸 𑌪𑌰𑌃 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌲𑌭𑍍𑌯𑌸𑍍𑌤𑍍𑌵𑌨𑌨𑍍𑌯𑌯𑌾 ।
𑌯𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌃𑌸𑍍𑌥𑌾𑌨𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌯𑍇𑌨 𑌸𑌰𑍍𑌵𑌮𑌿𑌦𑌂 𑌤𑌤𑌮𑍍 ॥௨௨॥

"𑌮𑌤𑍍𑌤𑌃 𑌪𑌰𑌤𑌰𑌂 𑌨𑌾𑌨𑍍𑌯𑌤𑍍𑌕𑌿𑌂𑌚𑌿𑌦𑌸𑍍𑌤𑌿 𑌧𑌨𑌂𑌜𑌯 । 𑌮𑌯𑌿 𑌸𑌰𑍍𑌵𑌮𑌿𑌦𑌂 𑌪𑍍𑌰𑍋𑌤𑌂 𑌸𑍂𑌤𑍍𑌰𑍇 𑌮𑌣𑌿𑌗𑌣𑌾 𑌇𑌵, 𑌮𑌤𑍍𑌸𑍍𑌥𑌾𑌨𑌿 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌿" 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌨𑌾 𑌨𑌿𑌰𑍍𑌦𑌿𑌷𑍍𑌟𑌸𑍍𑌯 𑌯𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌃𑌸𑍍𑌥𑌾𑌨𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿, 𑌯𑍇𑌨 𑌚 𑌪𑌰𑌮𑌪𑍁𑌰𑍁𑌷𑍇𑌣 𑌸𑌰𑍍𑌵𑌮𑌿𑌦𑌂 𑌤𑌤𑌮𑍍, 𑌸 𑌪𑌰𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 "𑌅𑌨𑌨𑍍𑌯𑌚𑍇𑌤𑌾𑌃 𑌸𑌤𑌤𑌮𑍍" 𑌇𑌤𑍍𑌯𑌨𑌨𑍍𑌯𑌯𑌾 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌲𑌭𑍍𑌯𑌃 ॥ ॥௨௨॥

அவ—ஞானி அடையும் வஸ்து முன்னே சொல்லப்பட்ட ஜீவனைக்காட்டிலும் மிகவும் உயர்ந்ததென்று சொல்லுகிறார்.—

"என்னைக் காட்டிலுமுயர்ந்த வஸ்து இல்லை" என்றும் (7-வது அத். 7-வது ச.) "எல்லாவற்றைக்காட்டிலும் நான்1 உயர்ந்தவன்" என்றும் (7-வது அத். 13-வது ச.) சொல்லப்பட்ட

1. சுலோகத்தில் "து" என்கிற சொல் இருக்கிறது. அது முன் சொன்னதைக் காட்டிலும் சொல்லப்போவது வேறு என்று காட்டுகிறது. முன் இரண்டு சுலோகங்களில் ஜீவஸ்வரூபம் சொல்லப்பட்டது. இந்த சுலோகம் பகவானைச்சொல்லுகிறது. ஜீவஸ்வரூபத்தைக் காட்டிலும் பகவான் மிகவுமுயர்ந்தபிரயோஜனம் என்று ஏற்படுகிறது. "து" என்கிற சொல் வேறு என்று தானே சொல்லும். அது உயர்ந்தது என்றுசொல்லுமோ என்றால்,உயர்ந்ததுஎன்பதற்குஅடையாளங்கள் சுலோகத்தில் இருக்கின்றன-(1) வேறுஒருபிரயோஜனத்தையும்ஆசை

யாதொரு பகவானுக்கு உள்ளேயிருக்கிறதோ எல்லாவுலகமும்; எந்த பகவானால் எல்லா உலகமும் நிரம்பியிருக்கிறதோ, இப்படிப்பட்ட உயர்ந்த பகவானை என்னை 8—வது அத்தியாயம் 14—வது சுலோகத்தில் சொன்னபடி வேறொரு பிரயோஜநத்தையும் ஆசைப்படாதவர்கள் அடைகிறார்கள். [22]

[illegible]

ப்படாமல் செய்த பக்தியாலே அடையக்கூடியது என்று சொல்லியிருப்பது. (2) புருஷன் என்கிற சொல். அது பகவானைத்தான் சொல்லுகிறது. எப்படியென்றால், ஹிருதயத்திலிருக்கிறவன், எல்லா வஸ்துக்களாலும் நிறைந்தவன். அவனுக்கு ஒரு வஸ்து இல்லையென்று கிடையாது, எப்போது மிருப்பவன், அளவில்லாத பதார்த்தங்களைக் கொடுக்கிறவன்" என்றுஅந்தச்சொல்லுக்கு பொருள். இப்படிப்பட்டவன் பகவான்தான். சுலோகத்தில் "யஸ்யாந்த:" "யேநஸர்வம்" என்று சொல்லியிருக்கிறது. அதற்கு "எந்த உயர்ந்தவனுக்குள் எல்லா உலகமுமிருக்கிறதோ, எவனால் எல்லா உலகமும் நிறைந்திருக்கிறதோ" என்று பொருள். எற்கனவே தெரிந்தவனைத்தான் யாதொருவன் என்று சொல்லுகிறது வழக்கம். பகவானிடத்தில்தான் எல்லா உலகமுமிருக்கிறதென்றும், அவனால் தான் எல்லாஉலகமும் நிறைந்திருக்கிறதென்றும் உபநிஷத்துக்களிலும் 7-வது அத்தியாயம் 7-வதுசுலோகத்திலும் சொல்லியிருக்கிறது.

வித்யாயாம் ச "இதி [illegible] ஶ்ரத்தா [illegible] ஸம்பவந்தீ"தி, "ரமணீயசரணா: கபூயசரணா:" இதி [illegible] ஸம்ஸாரிணாம் [illegible] [illegible] — [illegible], [illegible] [illegible]" இதி [illegible] [illegible] இத்யாதி [illegible]। ஆத்மயாதாத்ம்யவித: பரமபுருஷநிஷ்டஸ்ய ச "ஸ ஏதாந் ப்ரஹ்ம கமயதீ"தி ப்ரஹ்மப்ராப்திவசநாத் அசித்வியுக்தஸ்ய ஆத்மந: ப்ரஹ்மாத்மகதயா ப்ரஹ்மஶேஷதைகரஸத்வாநுஸந்தேயம் — தத்க்ரதுந்யாயாச்ச பரஶேஷதைகரஸத்வம் ச "ய ஆத்மநி திஷ்டந் — யஸ்யாத்மா ஶரீர"மித்யாதிஶ்ருதிஸித்தம் ||

யத்ர காலே த்வநாவ்ருத்திமாவ்ருத்திம் சைவ யோகிந: ।
ப்ரயாதா யாந்தி தம் காலம் வக்ஷ்யாமி பரதர்ஷப ||௨௩||
அக்நிர்ஜ்யோதிரஹஶ்ஶுக்ல: ஷண்மாஸா உத்தராயணம் |
தத்ர ப்ரயாதா கச்சந்தி ப்ரஹ்ம ப்ரஹ்மவிதோ ஜநா: ||௨௪||

அத்ர காலஶப்தோ மார்கஸ்யாஹராதிகாலாபிமாநிதேவதாபூயஸ்தயா மார்கோபலக்ஷணார்த்த:। யஸ்மிந் மார்கே ப்ரயாதா யோகிநோऽநாவ்ருத்திம், புண்யகர்மாணஶ்சாவ்ருத்திம் யாந்தி, தம் மார்கம் வக்ஷ்யாமீத்யர்த்த:| அக்நிர்ஜ்யோதிரஹஶ்ஶுக்ல: ஷண்மாஸா உத்தராயணமிதி ஸம்வத்ஸராதீநாம் ப்ரதர்ஶநம் ||

அவ—ஜீவாத்மாவின் உண்மையை அறிந்தவனும், பகவானைத்தியானம் செய்கிற ஞானியும் போகிற-அந்த 1 அர்ச்சிராதி என்கிற-வழியைச் சொல்லுகிறார். அர்சிராதி (வெளிச்சம் முதலான) வழி

1. வெளிச்சம் முதலான வழியைச்சொன்னது பிரும்மத்தைத் தியானம் பண்ணுகிறவர்கள் தினம்தோறும் நினைத்துக்கொண்டிருப்ப

பகவானுடையஇடம் போகிறவனுக்கு எப்படி உண்டோ, அப்படியே ஆத்மஸ்வரூபத்தை மாத்திரம் அடைகிறவனுக்கு முண்டு. அந்த வழியால்போனவன் திரும்பிவருகிறதில்லை. இந்த இரண்டு ஸங்கதிகளையும் வேதமே பஞ்சாக்கினி வித்யையைச்சொல்லுகிற இடத்தில் சொல்லியிருக்கிறது. (இந்த அத்தியாயம் 3-வது சுலோகம் 2-வது குறிப்பைப் பார்க்க). ஜீவன் உடம்பை விட்டுப் புறப்பட்டு ஸ்வர்க்கதிற்குப் போய், திரும்பி வந்து, பிறக்கிற விதத்தைச் சொல்லி, மேலே ஜீவனுடையவும், பிரகிருதியினுடையவும் உண்மையைச்சொல்லி, அவைகளில் பிரகிருதியை விடவேண்டியதென்றும், உண்மையான ஜீவஸ்வரூபத்தை அடைய வேண்டுமென்றும் அறிந்து, எவர்கள் தியானம் பண்ணுகிறார்களோ—அவர்களையும், “எவர்கள் காட்டிலிருந்து கொண்டு பகவானைச் சிரத்தையுடன் தியானம் செய்கிறார்களோ, அவர்களையும்-அமாநவன் இந்த வழியால் பகவானிடம் சேர்க்கிறான். அவர்கள் ஸம்ஸாரமாகிய சுழலுக்குத் திரும்பி வருகிறதில்லை.” என்று சொல்லியிருக்கிறது. இவர்களில் முதலில் சொன்னவர்கள் ஜீவாத்மஸ்வரூபத்தை தியானம் செய்கிறவர்கள். அவர்களையும், பகவானைத் தியானம் பண்ணுகிறவர்களையும் வேதம் பிரித்தே சொல்லுகிறது. ஜீவாத்மஸ்ரூபத்தைத் த்தியானம் பண்ணுகிறவர்கள் தங்களைப் பகவானுடைய உடம்புகளாகவும் தியானம் செய்யவேண்டியது. இல்லாவிட்டால் இந்த வழியும், இதுவழியால் பகவானை அடைவதும் கிடைக்காது. இவையிரண்டும் இவர்களுக்கு இருக்கிறதாக வேதத்தில் சொல்லியிருக்கிறது. அந்தத் தியானத்தில் பகவானும் சேர்ந்திருப்பதால், தங்கள் ஸ்வரூபத்தை மாத்திரம் கொஞ்சகாலம் அநுபவித்தபிறகு பகவானிடம் போகிறார்கள். பகவானுக்கு ஜீவன்கள் உடம்புகள் என்பதுதான் ஜீவனுடைய உண்மையான ஸ்வரூபம். இப்படியே வேதம் அந்தர்யாமி பிராம்மணத்தில் சொல்லியிருக்கிறது.

தற்காக. மற்றொருவழியைச் சொன்னது—அது இளப்பமானது; அந்த வழி நாம் போகக்கூடாது என்று எண்ணுவதற்காக.

எந்த 1 வழியால் போகிற யோகிகள் ஸம்ஸாரத்தையடைய மாட்டார்களோ, அந்த வழியையும், எந்த வழியால் போன 2 புண்ணியம் செய்தவர்கள் இந்த உலகத்துக்கு திரும்பி வருகிறார்களோ, அந்தவழியையும் சொல்லுகிறேன். அதாவது—நெருப்பாகிய வெளிச்சம், பகல், சுக்லபக்ஷம், (வளர்பிறை) உத்தராயணம்—இந்தவழியால் போகிற யோகிகள் திரும்புகிறதில்லை. பிரும்மத்தைத் தியானம் பண்ணுகிறவர்கள் தான் இந்த வழியில் போவார்கள். பிரும்மத்தைக் கட்டாயம் அடைவார்கள். பிரும்மத்தை அடையாதிருக்கமாட்டார்கள். நெருப்பின் வெளிச்சம் முதலான நான்கைச் சொன்னதைக் கொண்டு அவைகளுக்கு மேலே யிருக்கிற 3 வர்ஷம் முதலானவைகளைச் சொன்னதாக வைத்துக் கொள்ள வேண்டியது. [23–24]

தூமோ ராத்ரிஸ்ததா க்ருஷ்ண: ஷண்மாஸா தக்ஷிணாயநம் ।
தத்ர சாந்த்ரமஸம் ஜ்யோதிர்யோகீ ப்ராப்ய நிவர்த்ததே ॥
ஸூதஶ்ச யத்ராபிமாநிதேவதாலோகா: ப்ராப்யந்தே । தத்ர யோகிபி: புண்யகர்மஸம்பந்திவிஷய: ॥ 25 ॥

1. 23-வது சுலோகத்தில் "காலே" என்ற சொல் இருக்கிறது. அது வழியைத்தான் சொல்லுகிறது. காலத்தைச் சொல்லவில்லை. எனென்றால், 24-வது சுலோகத்தில் நெருப்பாகிய வெளிச்சம் என்று ஆரம்பித்து 27-வது சுலோகத்தில் "ஸ்ருதீ" (வழி) என்று முடிக்கிறது. அதைக்காலம் என்று சொல்லுவானேன் என்றால், இந்தவழியில் காலத்துக்கு அபிமானியான தேவதைகள் பலர் இதில் போகிறவனை நடத்துகிறார்கள். அதனால் அந்தச்சொல்லை உபயோகித்தது.

2. சுலோகத்தில் "யோகிந:" என்ற சொல்லிற்கு ஞானிகள் என்றும், புண்ணியகர்மத்தின் ஸம்பந்தமுள்ளவர்கள் என்றும் பொருள்.

3. உத்தராயணத்துக்குமேலே, வர்ஷம், வாயு, ஸூரியன், சந்திரன், மின்னல், வருணன், இந்திரன், பிரஜாபதி. இவர்கள் பகவானாலே ஏவப்பட்டு அவரிடம் போகிறவர்களை அழைத்துக்கொண்டு போகிறார்கள். அவர்களுக்கு வடமொழியில் "ஆதிவாஹிகர்கள்" என்றுபெயர். அவர்களில் மின்னல்என்பவனை வைகுண்டத்திலிருக்கும் நித்தியஸூரி என்று வேதமே சொல்லுகிறது. அவனுக்கு அமாநவன் என்றுபெயர். அவனோடு சேர்த்துச்சொல்லியிருப்பதாலே, மற்றவர்களும்நித்தியஸூரிகள். சிலர் அல்லவென்றும் சொல்லுகிறார்கள்.

புண்ணியம் செய்து புகை, ராத்திரி, கிருஷ்ணபக்ஷம், 1 தக்ஷிணாயநம், இந்த வழியால் போகிறவன் சந்திரனை அடைந்து திரும்பி வருகிறான். (25)

𑌶𑍁𑌕𑍍𑌲𑌕𑍃𑌷𑍍𑌣𑍇 𑌗𑌤𑍀 𑌹𑍍𑌯𑍇𑌤𑍇 𑌜𑌗𑌤𑌶𑍍𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑍇 𑌮𑌤𑍇 ।
𑌏𑌕𑌯𑌾 𑌯𑌾𑌤𑍍𑌯𑌨𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌮𑌨𑍍𑌯𑌯𑌾𑌽𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 𑌪𑍁𑌨𑌃 ॥௨௬॥

𑌶𑍁𑌕𑍍𑌲𑌾 𑌗𑌤𑌿𑌃 𑌅𑌰𑍍𑌚𑌿𑌰𑌾𑌦𑌿𑌕𑌾, 𑌕𑍃𑌷𑍍𑌣𑌾 𑌧𑍂𑌮𑌾𑌦𑌿𑌕𑌾 । 𑌶𑍁𑌕𑍍𑌲𑌯𑌾𑌽𑌨𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌂 𑌯𑌾𑌤𑌿। 𑌕𑍃𑌷𑍍𑌣𑌯𑌾 𑌤𑍁 𑌪𑍁𑌨𑌰𑌾𑌵𑌰𑍍𑌤𑌤𑍇। 𑌏𑌤𑍇 𑌶𑍁𑌕𑍍𑌲𑌕𑍃𑌷𑍍𑌣𑍇 𑌗𑌤𑍀 𑌜𑍍𑌞𑌾𑌨𑌿𑌨𑌾𑌂 𑌵𑌿𑌵𑌿𑌧𑌾𑌨𑌾𑌂 𑌚 𑌕𑌰𑍍𑌮𑌿𑌣𑌾𑌂 𑌚 𑌶𑍍𑌰𑍁𑌤𑍌 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑍇 𑌮𑌤𑍇 । “𑌤𑌦𑍍𑌯 𑌇𑌤𑍍𑌥𑌂 𑌵𑌿𑌦𑍁𑌃 𑌯𑍇 𑌚𑍇𑌮𑍇𑌽𑌰𑌣𑍍𑌯𑍇 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾 𑌤𑌪 𑌇𑌤𑍍𑌯𑍁𑌪𑌾𑌸𑌤𑍇 𑌤𑍇𑌽𑌰𑍍𑌚𑌿𑌷𑌮𑌭𑌿𑌸𑌂𑌭𑌵𑌨𑍍𑌤𑌿, 𑌅𑌥 𑌯 𑌇𑌮𑍇 𑌗𑍍𑌰𑌾𑌮 𑌇𑌷𑍍𑌟𑌾𑌪𑍂𑌰𑍍𑌤𑍇 𑌦𑌤𑍍𑌤𑌮𑌿𑌤𑍍𑌯𑍁𑌪𑌾𑌸𑌤𑍇 𑌤𑍇 𑌧𑍂𑌮𑌮𑌭𑌿𑌸𑌂𑌭𑌵𑌨𑍍𑌤𑍀”𑌤𑌿 ॥ ॥௨௬॥

இந்த இரண்டு வழிகளில் ஒன்று 2. வெளுப்பு. ஒன்று கருப்பு. நெருப்பு முதலான வழி வெளுப்பு. புகை முதலான வழி கருப்பு. வெளுப்பு வழியால் போனவன் திரும்பி வருகிறதில்லை. இது ஜீவனுடைய உண்மையை அறிந்து, அவனை பகவானுடைய உடம்பென்று தியானம் பண்ணுகிறவர்களுக்கும், பகவானை ஜீவன்களுக்கு ஆத்மாவென்று தியானம்பண்ணுகிறவர்களுக்கும் ஏற்பட்டது. கருப்பு வழியால் போனவன் திரும்பிவருகிறான். இது ஸ்வர்க்கம் முதலான லோகங்களை அடைவதற்காக புண்ணியம் செய்தவர்களுக்கு ஏற்பட்டது. இந்த இரண்டுவழிகளும் அழிவில்லாதவைகள். அதாவது உலகத்துடன் உண்டாகின்றன-உலகத்துடன் போகின்றன என்று வேதம் சொல்லுகிறது. (26)

---

1. இவைகளுக்குமேலே பித்ருலோகமும் ஆகாசமும் இருக்கின்றன.

2. இந்த வழிகளை வெளுப்பு என்றும், கருப்பு என்றும் சொல்வதற்குக் காரணம்—ஒன்றில் சுக்லபக்ஷமிருப்பதும், மற்ற ஒன்றில் கிருஷ்ணபக்ஷம் இருப்பதும். ஒன்று சுத்தமாயிருப்பதும், மற்றொன்று அசுத்தமாயிருப்பதும் என்றும் சொல்லலாம்.

நைதே ஸ்ருதீ பார்த்த ஜாநந் யோகீ முஹ்யதி கஶ்சந ।
தஸ்மாத்ஸர்வேஷு காலேஷு யோகயுக்தோ பவார்
ஜுந ॥ ॥௨௭॥

ஏதே ஸ்ருதீ ஜாநந் யோகீ ப்ரயாணகாலே ச
ந முஹ்யதி । அபி து ஸ்வேநைவ தேவயாநேந பதா
யாதி । தஸ்மாதஹரஹரர்சிராதிகதிசிந்தநாக்யயோக
யுக்தோ பவ ॥ ॥௨௭॥

இந்த இரண்டு வழிகளில் ஒன்று இளப்பமானது, தள்ளவேண்டியதென்றும், மற்றொன்று உயர்ந்தது எடுத்துக்கொள்ளவேண்டியதென்றும் அறிந்து, உயர்ந்தவழியை எப்பொழுதும் தியானம் பண்ணுகிறவன் செத்துப் போகிறகாலத்தில் மயங்குகிறதில்லை. அதாவது அவன் தனக்கு ஏற்பட்ட தேவயாநம் என்று சொல்லப்பட்ட வெளுப்பு வழியை அறிந்து அதாலேயே போகிறான். ஆகையால் ஒவ்வொருநாளும் வெளுப்பான வழியைத் தியானம் செய்துகொண்டிரு. (27)

அத அத்யாயத்வயோதிதஶாஸ்த்ரார்த்தவேதநபலமாஹ—

வேதேஷு யஜ்ஞேஷு தப:ஸு சைவ தாநேஷு
யத்புண்யபலம் ப்ரதிஷ்டம் । அத்யேதி தத்ஸர்வமிதம் விதித்வா
யோகீ பரம் ஸ்தாநமுபைதி சாத்யம் ॥ ௨௮ ॥

இதி ஸ்ரீமத்பகவத்கீதாஸூபநிஷத்ஸு ப்ரஹ்மவித்யாயாம் யோக
ஶாஸ்த்ரே ஸ்ரீக்ருஷ்ணார்ஜுநஸம்வாதே அக்ஷரப்ர
ஹ்மயோகோ நாமாஷ்டமோऽத்யாய:॥

வேதாத்யயநயஜ்ஞதபோதாநப்ரப்ருதிஷு ஸர்வேஷு புண்யேஷு யத்பலம் நிர்திஷ்டம் । இதமத்யாயத்வயோதிதம் பகவந்மாஹாத்ம்யம் விதித்வா தத் ஸர்வமத்யேதி—ஏதத்வேதநஸுகாதிரேகேண தத்ஸர்வம் த்ரு

[illegible] । யோகீ ஜ்ஞாநீ [illegible] ஜ்ஞாநீ [illegible]
பரமாத்யம் ஸ்தாநமுபைதி ॥ ॥௨௮॥

இதி ஸ்ரீமத்பகவத்ராமாநுஜவிரசிதே ஸ்ரீகீதாபாஷ்யே
அஷ்டமோத்யாய: ॥

அவ—7-வது அத்தியாயத்திலும், இந்த அத்தியாயத்திலும் சொல்லப்பட்ட ஸங்கதிகளை அறிவதற்குப் பிரயோஜநம் சொல்லுகிறார்—

இந்த இரண்டு அத்தியாயங்களில் சொன்ன பகவானுடைய பெருமையை அறிவதால் வரும் பிரயோஜநம்—நாலுவேதங்களை ஒவ்வொருநாளும் சொல்வதாலும், யக்ஞத்தையும் தபஸ்ஸையும் தானத்தையும் இவைபோன்ற புண்ணியகர்மங்களைச் செய்வதாலும் என்ன பிரயோஜநங்கள் கிடைக்குமென்று சாஸ்திரம் சொல்லுகிறதோ, அவைகளைக்காட்டிலும் கோடிபங்கு உயர்ந்தது. இதை அறிவதே உயர்ந்த ஸுகம். அதை அநுபவிக்கிறவன் மற்றப்பிரயோஜநங்களைத் திருணமாக எண்ணுவன். அவன் ஞானியாக ஆகி, ஞானிகள் அடையும்படியான உயர்ந்ததும் எப்பொழுதுமிருப்பதுமான ஸ்ரீவைகுண்டத்தை அடைகிறான். (28)

குறிப்பு.

கீழே 24-வது சுலோகத்தில் தன் ஸ்வரூபத்தை மாத்திரம் அநுபவிக்க வேணுமென்று ஆசைப்பட்டுப் பகவானைத் தியானம் செய்கிறவன் வெளிச்சம் முதலான வழியால் பகவானிடம் போகிறானென்றும், அவன் ஸம்ஸாரத்திற்குத் திரும்பி வருகிறதில்லையென்றும் சொல்லப்பட்டது. அவன் தன் ஸ்வரூபத்தை மாத்திரம் அநுபவிக்கவேண்டும் என்று ஆசைப்பட்டபடியால், பகவானிடம் சேரப் போகிறதில்லை. நடுவில் தங்கியிருந்து, கொஞ்சகாலம் தன் ஸ்வரூபத்தை மாத்திரம் பார்த்து ஸுகத்தை அநுபவித்து, பிறகு பகவானிடம் போகிறான். இந்த அநுபவத்துக்குக் கைவல்லியம் என்று பெயர். அதாவது—பகவானையும் பிரகிருதியையும் நினையாமல் தன் ஸ்வரூபத்தை மாத்திரம் அநுபவிப்பது.

2. இந்த அநுபவம் தூக்கத்தில் அநுபவிக்கும் ஸுகத்தைப்போல் இருக்கிறது. தூங்கி எழுந்தவன் மிகவும் ஸுகமாய் தூங்கினே என்றுசொல்லுகிறான். அப்போது தன்னைமாத்திரம் அறிகிறான். வேறொன்றையும் அறிகிறதில்லை. கைவல்யத்தை அநுபவிக்கிறவனும் தன்னை மாத்திரம் பார்க்கிறான். வேறொன்றையும் பார்க்கிறதில்லை. தூங்குகிற ஸுகத்துக்கும் கைவல்ய ஸுகத்துக்கும் கொஞ்சம் வித்தியாஸமுண்டு. தூக்கத்தினால் வரும் ஸுகம் தெளிவில்லாததும், கொஞ்சகாலமும் தானிருக்கும். கைவல்ய ஸுகம் தெளிவாயும் நீடித்துமிருக்கும். அது 6-வது அத்தியாயம் 20-வது முதல் நாலு சுலோகங்களில் சொல்லப்பட்ட ஸுகம்போல் அளவில்லாததாயிருக்கும். தூக்கத்தில் வரும் ஸுகம் இவ்வளவு உயர்ந்ததன்று.

3. அந்த கைவல்ய ஸுகமும் பகவானை இரண்டு விபூதிகளுடனும் சேர்த்து அநுபவிப்பதைக்காட்டிலும் மிகவும் தாழ்ந்தது. ஆகையாலே வெளிச்சமான வழியால் போனவனுக்கு இந்த ஸுகம் நீடித்திருக்காது. அவனைப் பகவான் சீக்கிரம் தன்னிடம் அழைத்துக்கொள்வன்.

4. எவன் தன் ஸ்வரூபத்தைமாத்திரம் அனுபவிக்க வேணுமென்று ஆசைப்பட்டு, தான் பகவானுக்காக இருக்கிறவன் என்றும், பகவானுக்குட்பட்டவனென்றும் தன் ஸ்வரூபத்தை முழுவதும் அறியாமல், உடம்பைக்காட்டிலும் வேறான தன் ஸ்வரூபத்தைமாத்திரம் தியானம் பண்ணுகிறானோ, அவனுக்கும் கைவல்யானுபவம் வருகிறது. ஆனால் அவன் தியானத்தில் பகவானைச்சேர்த்து கொள்ளாததினாலே, வெளிச்சம் முதலான வழி அவனுக்குக்கிடையாது. ஆகையாலே அவன் இந்த அநுபவம் ஆனபிறகு மறுபடியும் பிறக்கிறான்.

5. தியானத்தில் பகவானைச் சேர்க்கிறவனுக்கும், பகவானைச்சேர்க்காதவனுக்கும் உண்டாகும் கைவல்யானுபவம் வைகுண்டமென்கிற தேசத்தில் இருக்கக்கூடாது. ஏனென்றால், பரமபதம்என்பது அளவில்லாத உயர்ந்த இடம். ஒருவன் அந்த இடத்தில் மட்டமான ஸுகத்தை, நிலையாக அநுபவிக்கிறதாக இருந்தால், அந்த இடத்திற்கு உயர்த்தி எப்படி? அங்கும் ஸுகங்களுக்குத் தாரதம்மியமிருந்தால், பிரகிருதி மண்டலத்திற்கும், அதற்கும் வித்தியாஸம் என்ன? மேலும், அதை அநுபவித்து ஒருவன் ஸம்ஸாரத்துக்குத்திரும்பிவரவேண்டியது. வைகுண்டலோகத்துக்குப் போனவனோ திரும்பிவருகிறதில்லை. ஆதலால் கைவல்யாநுபவமானது பிரகிருதி மண்டலத்திலேயே இருக்கவேண்டியது.

6. இப்படியிருக்க, ஸ்ரீ பாஷ்யகாரர் ம[illegible]தைச் சேர்ந்த சிலர் கைவல்யமென்கிற அநுபவம் நிலையாயிருக்கும் என்றும், அதை அநுப

வீச்ருமிடம் வைகுண்டமென்றும் சொல்லுகிறார்கள். கீழே சொன்ன காரணங்களாலே இது பிசகு. இது தவிர, தத்வத்தையும், ஹிதத்தையும் அவர்கள் வேறாக எண்ணுகிறார்கள். தத்வம் என்றால், அந்தந்த வஸ்துக்களின் உண்மை. ஹிதமென்றால், அடையவேண்டிய பிரயோஜநங்களுக்காகச்செய்யவேண்டிய வேலை. ஸ்ரீபாஷ்யகாரர் மதத்தில் பகவானை நாராயணன் எல்லாருக்கும் தகப்பன் என்றும், மஹாலக்ஷ்மீ தாயாரென்றும், ஜீவன்களை அவர்களுக்குப் பிள்ளையென்றும் சொல்லியிருக்கிறது. மஹாலக்ஷ்மியைத் தைவகுப்பில் சேர்த்திருக்கிறது. இது வேதத்துக்கும், ருஷிகளுடைய வார்த்தைகளுக்கும், நம்முடைய பெரியோர்களின் வார்த்தைகளுக்கும் பொருந்தியிருக்கிறது. அப்படியிருக்க அவர்கள் மஹாலெக்ஷ்மியை ஜீவனென்று சொல்லி, பிள்ளை வகுப்பில் சேர்க்கிறார்கள். மேலும் நாம் பகவானிடத்தில் போவதற்காகச் செய்யவேண்டிய வேலை சரணாகதி. கீதையில் கடைசி சுலோகத்தில் இதைச் செய்யவேண்டியதாக ஸ்ரீபகவான் சொல்லுகிறார். அவர்கள் "இதைச் செய்யவேண்டியதில்லை, பகவானே தன்னுடைய ஸொத்தான நம்மைத்தானே காப்பாற்றுவான்" என்று சொல்லுகிறார்கள். அவர்களில் சிலர் சரணாகதி செய்யவேண்டியதை ஒப்புக்கொண்டு, பஞ்சஸம்ஸ்காரம் செய்யும்போதே (சங்கு சக்கிரங்களை தரித்துக்கொள்வது முதலானது) இது செய்யப்படுகிறதென்றும், இன்னும் சிலர் ஸ்ரீ பாஷ்யகாரர் நமக்காக முன்னேயே செய்துவிட்டாரென்றும் சொல்லுகிறார்கள்.

7. வேதத்துக்கு வெவ்வேறாக அர்த்தம்சொல்வதாலே மூன்று மதங்கள் எர்பட்டிருக்கின்றன. அவைகளில் ஒன்றான விசிஷ்டாத்வைத மதம் என்பது ஸ்ரீ பாஷ்யகாரரால் நன்றாய் வெளியிடப்பட்டது. அதைச்சேர்ந்த எல்லாரும் ஒரேமாதிரியாக இருக்கவேண்டியது. இப்படியிருக்க, இதிலேயே இரண்டு மதங்கள் எர்பட்டிருக்கிறது வருத்தத்தைக் கொடுக்கிறது. இப்படி அனேக மதங்கள் உலகத்தில் எற்படுவதற்குக்காரணம்-எந்தமதம் நல்லது என்று கவனிக்காமலிருப்பதுதான். அதற்கும் காரணம் ஆத்மாவின் ஸௌக்கியத்தைப்பற்றி சிரத்தைக்குறைவு. அதுவும்தவிர, ஒருவன் ஒருமதத்தின் உண்மையை அறிந்து, அதனால் ஸுகத்தை அநுபவித்தால், அவனுக்கு மற்றவர்களும் இப்படியநுபவிக்கவில்லையே யென்று அவர்களிடத்தில் தடுக்கமுடியாத-அளவில்லாத-தயையுண்டாகும். ஆகையால் நல்லமதத்தை அடைந்தும், அதின் உண்மையை அறிந்து ஸுகப்பட்டு, மற்றவர்களிடத்தில் எல்லையில்லாத தயை யுள்ளவர்கள் இப்போது அரிதாயிருக்கிறார்கள். இரண்டு மதக்காரர்கள் சேர்ந்து வார்த்தை சொல்வது முடியவில்லை. கலியுகத்தில் நல்

லஸங்கதிகள் நடப்பது மிகவும் அரிது. ஆனாலும் அடியோடு இல்லையென்றும் சொல்லமுடியாது. நல்லவர்களும் இருப்பார்கள். நல்லஸங்கதிகளை விசாரித்து அறிந்து நிலையான ஸுகத்தை அடைவார்கள். அப்படி ஸ்ரீ ஆசார்யர்களும் பகவானும் கிருபை பண்ணவேணும்.

ஸ்ரீமதே பகவதே பாஷ்யகாராய மஹாதேசிகாய நம:

எட்டாவது அத்தியாயம்
முற்றிற்று



உபாஸகபேதநிபந்தநா விசேஷா: ப்ரதிபாதிதா: । இதாநீமுபாஸ்யஸ்ய பரமபுருஷஸ்ய மாஹாத்ம்யம், ஜ்ஞாநிநாம் ச விசேஷம் விசோத்ய, பக்திரூபஸ்யோபாஸநஸ்ய ஸ்வரூபமுச்யதே ।

ஸ்ரீபகவாநுவாச—

இதம் து தே குஹ்யதமம் ப்ரவக்ஷ்யாம்யநஸூயவே ।
ஜ்ஞாநம் விஜ்ஞாநஸஹிதம் யஜ்ஜ்ஞாத்வா மோக்ஷ்யஸேऽஶுபாத் ॥ க ॥

இதம் து தே குஹ்யதமம் பக்திரூபமுபாஸநாக்யம் ஜ்ஞாநம் விஜ்ஞாநஸஹிதம்-உபாஸநகதவிசேஷஜ்ஞாநஸஹிதம் அநஸூயவே தே ப்ரவக்ஷ்யாமி । மத்விஷயம் ஸகலேதரவிஸஜாதீயமபரிமிதப்ரகாரம் மாஹாத்ம்யம் ஶ்ருத்வா ஏவமேவ ஸம்பவதீதி உந்நாய தே ப்ரவக்ஷ்யாமீத்யர்த்த: । யஜ்ஜ்ஞாநமநுஷ்டாநபர்யந்தம் ஜ்ஞாத்வா மத்ப்ராப்திவிரோதிந: ஸர்வஸ்மாதஶுபாந்மோக்ஷ்யஸே ॥ க ॥

தியானம் செய்கிறவர்களுடைய பிரிவுக்குத் தகுந்தபடி அவர்கள் அறியவேண்டியவைகளும், செய்யவேண்டியவைகளும் சொல்லப்பட்டன. இப்போது, தியானம் செய்யத் தகுந்த பகவானுடைய பெருமையையும், ஞானியினுடைய உயர்த்தியையும் தெளிவாகச் சொல்லி, பக்தி யென்கிற தியானத்தினுடைய ஸ்வரூபம் சொல்லப்படுகிறது.

பகவான் சொல்லுகிறார்—

மிகவும் 1 ரஹஸ்யமான பக்தி யென்கிற தியானத்தை அதின் எல்லா ஸங்கதிகளுடன் பொறாமைப்படாதவனான உனக்

---

1. கீழே சொன்ன கர்மயோகம் ரஹஸ்யமானது. ஞானயோகம் அதைக்காட்டிலும் ரஹஸ்யமானது. சொல்லப்போகிற தியானம் இவையிரண்டைக்காட்டிலும் மிகவும் ரஹஸ்யமானது இந்த ஸங்கதி சுலோகத்தில் "து" என்றசொல்லால் காட்டப்பட்டது. இதைக் கேட்க வேண்டுமென்று மிகுந்த ஆவலுண்டாவதற்காகவும், இதைக் கண்டவர்

குச் சொல்லுகிறேன். என்னைத் தவிர வேறொருவருக்கும் இல்லாத—அனேக விதமான—என்னுடைய பெருமையைக் கேட்டு, இப்படி இருக்குமா என்று ஸந்தேஹப்படாமல் நீ நம்புகிறாய்; ஆகையால் நீ இதைக் கேட்பதற்குத் தகுந்தவன். எல்லாவற்றையும் ஸுகமாக உனக்குப் புரியும்படி சொல்லுகிறேன். எந்த ஸங்கதியையறிந்து, அறிந்தபடி செய்து, 1 என்னை அடைவதற்கு இடைஞ்சலான 2 எல்லாப்பாபங்களையும் போக்கப்போகிறாயோ.[1]

𑌰𑌾𑌜𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌰𑌾𑌜𑌗𑍁𑌹𑍍𑌯𑌂 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌮𑌿𑌦𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 ।
𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌾𑌵𑌗𑌮𑌂 𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑌂 𑌸𑍁𑌸𑍁𑌖𑌂 𑌕𑌰𑍍𑌤𑍁𑌮𑌵𑍍𑌯𑌯𑌮𑍍 ॥

𑌰𑌾𑌜𑌵𑌿𑌦𑍍𑌯𑌾-𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌰𑌾𑌜𑌾। 𑌰𑌾𑌜𑌗𑍁𑌹𑍍𑌯𑌂-𑌗𑍁𑌹𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌰𑌾𑌜𑌾। 𑌰𑌾𑌜𑍍𑌞𑌾𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑍇𑌤𑌿 𑌵𑌾 𑌰𑌾𑌜𑌵𑌿𑌦𑍍𑌯𑌾। 𑌰𑌾𑌜𑌾𑌨𑍋 𑌹𑌿 𑌵𑌿𑌸𑍍𑌤𑍀𑌰𑍍𑌣𑌾𑌗𑌾𑌧𑌮𑌨𑌸𑌃; 𑌮𑌹𑌾𑌮𑌨𑌸𑌾𑌮𑌿𑌯𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑍇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃। 𑌮𑌹𑌾𑌮𑌨𑌸 𑌏𑌵 𑌹𑌿 𑌗𑍋𑌪𑌨𑍀𑌯𑌗𑍋𑌪𑌨𑌕𑍁𑌶𑌲𑌾𑌃; 𑌤𑍇𑌷𑌾𑌮𑌿𑌦𑌂 𑌗𑍁𑌹𑍍𑌯𑌮𑍍। 𑌇𑌦𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌂 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌮𑍍-𑌮𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌵𑌿𑌰𑍋𑌧𑍍𑌯𑌶𑍇𑌷𑌕𑌲𑍍𑌮𑌷𑌕𑍍𑌷𑌪𑌣𑌮𑍍। 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌾𑌵𑌗𑌮𑌮𑍍-𑌅𑌵𑌗𑌮𑍋 𑌵𑌿𑌷𑌯𑌃; 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌭𑍂𑌤𑍋𑌽𑌵𑌗𑌮𑍋 𑌵𑌿𑌷𑌯𑍋 𑌯𑌸𑍍𑌯 𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌯 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌾𑌵𑌗𑌮𑌮𑍍; 𑌭𑌕𑍍𑌤𑌿𑌰𑍂𑌪𑍇𑌣𑍋𑌪𑌾𑌸𑍍𑌯𑌮𑌾𑌨𑍋𑌽𑌹𑌂 𑌤𑌦𑌾𑌨𑍀𑌮𑍇𑌵𑍋𑌪𑌾𑌸𑌿𑌤𑍁𑌃 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌤𑌾𑌮𑍁𑌪𑌗𑌤𑍋 𑌭𑌵𑌾𑌮𑍀𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃। 𑌤𑌥𑌾𑌪𑌿 𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑌮𑍍-𑌧𑌰𑍍𑌮𑌾𑌦𑌨𑌪𑍇𑌤𑌮𑍍। 𑌧𑌰𑍍𑌮𑍋 𑌹𑌿 𑌨𑌿𑌃𑌶𑍍𑌰𑍇𑌯𑌸𑌸𑌾𑌧𑌨𑌮𑍍। 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑍇𑌣𑍈𑌵 𑌅𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌪𑍍𑌰𑌿𑌯𑌤𑍍𑌵𑍇𑌨 𑌤𑌦𑌾𑌨𑍀𑌮𑍇𑌵 𑌸𑍁𑌸𑍁𑌖𑍋𑌪𑌾𑌦𑌾𑌨𑌤𑌯𑌾𑌽𑌵𑍍𑌯𑌯𑌮𑍍 𑌅𑌕𑍍𑌷𑌯𑌂 𑌚 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑍇𑌣𑌾𑌪𑌿 𑌨𑌿𑌰𑌤𑌿𑌶𑌯𑌨𑌿𑌃𑌶𑍍𑌰𑍇𑌯𑌸𑌰𑍂𑌪𑌤𑍍𑌵𑌾𑌚𑍍𑌚

களுக்குச் சொல்லாமல் காப்பாற்ற வேண்டுமென்பதற்காகவும் இது சொல்லப்படுகிறது.

1. பக்தி உண்டாவதற்கு விரோதியான பாபங்களைப் போக்குவது கர்மயோகம் முதலானவை. பகவானை அடைவதற்கு விரோதியான பாபங்களைப் போக்குவது சொல்லப்போகிற பக்தி.

2. பாபம் என்கிற சொல்லாலே ஸ்வர்க்கம் முதலானதைக்கொடுக்கும் புண்ணியமும் சொல்லப்படுகிறது. இதை 58-வது பக்கத்துக் குறிப்பில் பார்க்க.

[illegible] ||உ||

சொல்லப்போகிற தியானமானது எல்லாத் தியானங்களுக்குள்ளே 1 உயர்ந்தது. எல்லா ரஹஸ்யங்களுக்குள்ளும் 2 உயர்ந்தது. என்னை அடைவதற்கு இடைஞ்சலான எல்லாப்பாபங்களையும் போக்கக்கூடியது. இந்தத் தியானத்தைச் செய்யும்போது, செய்கிறவனுக்கு அப்போதே கண்ணால் காணப்படுவதுபோல் தியானம் செய்யப்பட்ட நான் தோன்றுகிறேன். அது தியான காலத்தில் மிகுந்த ஸுகமாயிருப்பதும் தவிர, அளவில்லாத ஸுகமான மோக்ஷத்தையும் கொடுக்கிறது. இந்த ஸங்கதிகளாலே அதைச் செய்வது மிகவும் இன்பமாயிருக்கும். பலனைக் கொடுத்தும், அழிந்து போகிறதில்லை 3 அதாவது—என்னைத் தியானம் செய்தவனுக்கு

---

1. சுலோகத்தில் "ராஜவித்யா" என்கிற சொல்லுக்கு இது பொருள். ராஜாக்களுடைய வித்யை என்றும் பொருள் கொள்ளலாம். ராஜாக்களுடைய வித்யை என்று சொன்னதாலே, மற்ற இரண்டு வர்ணத்தாரும் இதைச் செய்யக் கூடாதென்று கருத்தன்று. இதைப் பெரிய ஆழமான மனதுடையவர்களாலேதான் செய்யமுடியும். ராஜாக்கள்தான் அப்படிப்பட்டவர்கள். அதனாலேதான் இதை அவர்களுடைய தென்று சொல்லிறது அப்பேர்ப்பட்ட மனதுடைய மற்ற இரண்டு வர்ணத்தாரும் இதைச் செய்யலாம்.

2. இந்தும் ராஜாக்களுடைய ரஹஸ்யம் என்றும் பொருள் கொள்ளலாம். பெரிய ஆழமான மனதுடையவர்கள்தான் நல்ல ஸங்கதிகளைக் கண்டவர்களுக்குச் சொல்லாமல் ரக்ஷிப்பார்கள். இவ்விதமான மனதில்லாதவர்கள் நல்லதோ—பொல்லாததோ—மனதில்பட்டால், தாமதிக்காமல் அதைச் சீக்கிரம் வெளியிடுவார்கள்.

3. எந்தக்கர்மமும் அதின் பலனைக் கொடுத்ததும் போய்விடும். இத்தத்தியானமோ பலன் கொடுத்த பிறகும் போகிறதில்லை. அதாவது மோக்ஷமாகிற பலனும் இதற்குப் போதாதென்று கருதது.

நான் மோக்ஷத்தைக் கொடுத்தும், “ஐயோ! இவனுக்குத்தகுந்த படி நான் ஒன்றும் செய்யவில்லையே” என்று எனக்குத் தோன்றுகிறது. [2]

𑌅𑌶𑍍𑌰𑌦𑍍𑌦𑌧𑌾𑌨𑌾𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌯 𑌪𑌰𑌨𑍍𑌤𑌪 ।
𑌅𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌮𑌾𑌂 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌸𑌂𑌸𑌾𑌰𑌵𑌰𑍍𑌤𑍍𑌮𑌨𑌿 ॥௩॥

𑌅𑌸𑍍𑌯 𑌉𑌪𑌾𑌸𑌨𑌾𑌖𑍍𑌯𑌸𑍍𑌯 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌨𑌿𑌰𑌤𑌿𑌶𑌯𑌪𑍍𑌰𑌿𑌯𑌮𑌦𑍍𑌵𑌿𑌷𑌯𑌤𑌯𑌾 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌨𑌿𑌰𑌤𑌿𑌶𑌯𑌪𑍍𑌰𑌿𑌯𑌰𑍂𑌪𑌸𑍍𑌯 𑌪𑌰𑌮𑌨𑌿𑌃𑌶𑍍𑌰𑍇𑌯𑌸𑌰𑍂𑌪𑌮𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌸𑌾𑌧𑌨𑌸𑍍𑌯 𑌅𑌶𑍍𑌰𑌦𑍍𑌦𑌧𑌾𑌨𑌾𑌃 - 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌸𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌤𑍍𑌵𑌰𑌾𑌰𑌹𑌿𑌤𑌾𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌃 𑌮𑌾𑌮𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌰𑍂𑌪𑍇 𑌸𑌂𑌸𑌾𑌰𑌵𑌰𑍍𑌤𑍍𑌮𑌨𑌿 𑌨𑌿𑌤𑌰𑌾𑌂 𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇। 𑌅𑌹𑍋 𑌮𑌹𑌦𑌿𑌦𑌮𑌾𑌶𑍍𑌚𑌰𑍍𑌯𑌮𑌿𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥௩॥

என்னைப்பற்றின இந்தத்தியானமென்கிற தர்மமானது-அதை செய்கிறவர்களுக்கு என்னிடத்தில் அளவில்லாத பிரீதியிருப்ப தால்-மிகவும் இன்பமாயும், அளவில்லாத ஸுகமான மோக்ஷத் தைக் கொடுப்பதாயும், பலனைக் கொடுத்தும் அழிவில்லாததாயு மிருக்கிறது. இதைச் செய்யத் 1தகுந்த நிலைமையை யடைந்தும், நம்புதலோடு இதைச் செய்யவேணுமென்று பரபரப்பில்லாதவர் கள் என்னை அடையாமல், யமனைப்போல் நடுக்கத்தைக்கொடுக்கக் கூடிய ஸம்ஸாரத்தில் முழுகிக் கிடக்கிறார்கள். 2 இந்த ஆச்சரி யத்தை என்ன என்று சொல்லுவேன். [3]

1. இந்த யுத்தகளத்தில் லக்ஷக்கணக்காய் இருக்கிற ஜனங்களுக் குள்ளே இதைச்செய்யக்கூடியவர்கள் இருந்தாலும்,பெரியோர்களிடம் இதைக் கேட்கவில்லை. கேட்டாலும், கவனிக்கவில்லை. கவனித்தா லும், நம்புதலில்லை. நம்பிக்கையிருந்தாலும், இதைச் செய்வதில் பர பரப்பில்லை.

2. இந்தத்தியானம் செய்யும்போதே அளவில்லாத ஸுகத்தைக் கொடுக்கிறது. பிறகு அளவில்லாத ஸுகமான மோக்ஷத்தையும் கொ டுக்கிறது. செய்வதில் கஷ்டமுமில்லை. ஸம்ஸாரமோ அளவில்லாத துக்கத்தைக் கொடுக்கிறது. இந்த இரண்டுக்கு மிருக்கும் வித்தியா ஸத்தைத் தெரிந்தும், தியானத்தைவிட்டு, ஸம்ஸாரத்தையே மிகவும் ஆசையுடனேபற்றுகிறார்களேயென்றுபகவானுக்கே ஆச்சரியமுண்டாகி,

ஶ்ருணு தாவத் ப்ராப்யஸ்ய மமாசிந்த்யமஹிமாநம்—

மயா ததமிதம் ஸர்வம் ஜகதவ்யக்தமூர்த்திநா |
மத்ஸ்தாநி ஸர்வபூதாநி ந சாஹம் தேஷ்வவஸ்தித: ||௪||

ந ச மத்ஸ்தாநி பூதாநி பஶ்ய மே யோகமைஶ்வரம் |
பூதப்ருந்ந ச பூதஸ்தோ மமாத்மா பூதபாவந: ||௫||

இதம்—சேதநாசேதநாத்மகம் க்ருத்ஸ்நம் ஜகத், அவ்யக்தமூர்த்திநா—அப்ரகாசிதஸ்வரூபேண மயாந்தர்யாமிணா ததம்—அஸ்ய ஜகதோ தாரணார்த்தம் நியமநார்த்தம் ச ஶேஷித்வேந வ்யாப்தமித்யர்த்த: | யதாந்தர்யாமிப்ராஹ்மணே "ய: ப்ருதிவ்யாம் திஷ்டந்-யம் ப்ருதிவீ ந வேத, ய ஆத்மநி திஷ்டந்—யமாத்மா ந வேத" இதி சேதநாசேதநவஸ்துஜாதப்ரத்யகாத்மநாந்தர்யாமிணா தத்தத்வ்யாப்திருக்தா | ததோ மத்ஸ்தாநி ஸர்வபூதாநி—ஸர்வாணி பூதாநி மய்யந்தர்யாமிணி ஸ்திதாநி | தத்ரைவ ப்ராஹ்மணே "யஸ்ய ப்ருதிவீ ஶரீரம்—ய: ப்ருதிவீமந்தரோ யமயதி, யஸ்யாத்மா ஶரீரம்—ய ஆத்மாநமந்தரோ யமயதீ"தி ஶரீரத்வேந நியாம்யத்வப்ரதிபாதநாத் தததீநே ஸ்திதிநியமநே ப்ரதிபாதிதே, ஶேஷித்வஞ்ச | ந சாஹம் தேஷ்வவஸ்தித:—அஹம் து ந தததீநஸ்திதி: | மத்ஸ்திதௌ தைர்ந கஶ்சிதுபகார இத்யர்த்த: | ந ச மத்ஸ்தாநி பூதாநி—ந கடாதீநாம் ஜலாதேரிவ மம தாரகத்வம் | கதம்? மத்ஸங்கல்பேந | பஶ்ய மமைஶ்வரம் யோகம்—அந்யத்ர கஸ்மிந்நபி அஸம்பாவநீயம் மதஸாதாரணமாஶ்சர்யம் யோகம் பஶ்ய |

இப்படிச் சொன்னது. இது பாபத்தின் பெருமை. சுலோகத்தில் "பரம்தப" என்ற சொல் இருக்கிறது. அதற்குச் சத்துருக்களைக் கொளுத்துகிறவன் என்று பொருள். நீ வெளியேயிருக்கிற உன் சத்துருக்களைக் கொளுத்துவதுபோல்,, உள்ளேயிருக்கிற—பரபரப்பில்லாமைக்குக் காரணமான—உன் சத்துருக்களையும் நீ கொளுத்தவேணுமென்று கருத்து.

கோऽஸாவைஶ்வரோ யோக: ? பூதப்ருந்ந ச பூதஸ்தோ மமாத்மா பூதபாவந:— ஸர்வேஷாம் பூதாநாம் பர்தாபி ந ச தை: கஶ்சிதபி மமோபகார: । மமாத்மைவ பூதபாவந: மம மநோமய: ஸங்கல்ப ஏவ பூதாநாம் தாரயிதா போஷயிதா நியந்தா ச ॥ ॥௪—௫॥

அவ—அடைய வேண்டியவனுன என்னுடைய நினைக்கமுடியாத பெருமையைச் சொல்லுகிறேன். கேள்—

அறிவுள்ளது, அறிவில்லாதது என்று இருவகையான இந்த எல்லா உலகத்துக்குள்ளும், நான் ஒருவனுக்கும் தெரியாமல், அதைத் தாக்குவதற்காகவும்,ஏவுகிறதற்காகவும் யஜமானனுயிருந்து 1 நிறைந்திருக்கிறேன். ஆகையால் எல்லா வஸ்துக்களும் உள்ளேயிருந்து ஏவுகிற என்னிடத்தில் இருக்கின்றன. அதாவது—என் அதீனமாயிருக்கின்றன. நான் அவைகளில் இல்லை. அதாவது—அவைகளின் அதீனமாயில்லை. என் இருப்புக்கு அவைகளால் துளிக்கூட உபகாரமில்லை. (4)

ஆனால் அவைகள் என்னிடத்தில் இல்லை. அதாவது—ஜலத்தைக் குடம் தாக்குவதுபோல், அவைகளை நான் 2 தாக்கவில்லை.

---

1. ஆகாசம் என்பது எங்கும் நிறைந்திருக்கிறது. ஆனால் அது ஒன்றையும் ஏவுகிறதில்லை. ராஜா தன் ஜனங்களை ஏவுகிறான் ஆனால் அவன் எங்கும் நிறைந்திருக்கவில்லை. பகவானே ஆகாசம்போல் எங்கும்நிறைந்து, ராஜாவைப்போல் எல்லாரையும் ஏவுகிறான். இப்படியே உபநிஷத்து ஒருவஸ்துவாலும் அறியப்படாமல் அதற்குள்ளேயிருந்து அதை ஏவுகிறானென்று சொல்லுகிறது. இப்படியே எல்லாம் பகவானுக்கு உடம்பென்றும், அவனால் ஏவப்படுகிறதென்றும், சொல்லுவதாலே, அவைகளுடைய இருப்பும் பகவானுககு அதீநமென்று சொன்னதாக ஆகிறது.

2. முதல் சுலோகத்தில் என்னிடத்தில் எல்லா வஸ்துக்களுமிருக்கின்றன என்று சொன்னதால், பகவான் எல்லாவற்றையும் தாக்குகிறானென்றும்,இரண்டாவது சுலோகத்தில் அவைகள் என்னிடத்தில் இருக்கவில்லையென்றும் சொன்னதால், அவன் தாக்கவில்லையென்றும் ஏற்படுகிறது.இவைகள் ஒன்றுக்கொன்றுவிரோதியாகாதோவென்றால்,பதில்-

பின்னை யெப்படி யென்றால்-எல்லாவற்றையும் நினைவினால் தாங்குகிறேன். என்னைத் தவிர இன்னொருவனிடத்தில் இருக்குமோ என்று நினைக்க முடியாத-என்னிடத்தில் மாத்திரமுள்ள—ஆச்சரியமான நினைவைப்பார். அந்த நினைவு என்னவென்றால் - உண்டாகிற எல்லா வஸ்துக்களும் உண்டாகட்டும்; அவைகள் இருக்கும்வரையில் ஒரு குறைவுமில்லாமலிருக்கட்டும்; அவைகளுக்கு ஏற்பட்ட வேலைகளை அவைகள் ஸரியானபடி செய்யட்டும்; ஸூரியன் முதலான வஸ்துக்கள் கீழே விழாமல் அங்கேயே இருக்கட்டும்—இவைமுதலான எண்ணங்கள். அந்த நினைவுகளின்படி எல்லா வேலைகளும் நடக்கின்றன. என் நினைவுக்கு அவ்வளவு சக்தி இருக்கிறது. [4—5]

ஸர்வஸ்ய ஸர்வேஶ்வரஸங்கல்பாயத்தஸ்திதிப்ரவ்ருத்தித்வே நிதர்ஶநமாஹ—

யதா''காஶஸ்திதோ நித்யம் வாயு: ஸர்வத்ரகோ மஹாந் |
ததா ஸர்வாணி பூதாநி மத்ஸ்தாநீத்யுபதாரய ||௬||

யதா ஆகாஶே'நாலம்பநே மஹாந் வாயு: ஸ்தித: ஸர்வத்ர கச்சதி | ஸ து வாயுர்நிராலம்பநோ மதாயத்தஸ்திதிரித்யவஶ்யாப்யுபகமநீய:- மத்த ஏவ த்ருதமிதி விஜ்ஞாயதே | ஏவமேவ ஸர்வாணி பூதாநி தாந்யத்ருஷ்டே மயி ஸ்திதாநி மத்த ஏவ த்ருதாநீத்யுபதாரய | யதாஹுர்வேதவித: 'மேகோதயஸ்ஸாகரஸந்நிவ்ருத்திரிந்தோர்விபாக: ஸ்புரிதாநி வாயோ: | வித்யுத்விபங்கோ கதிருஷ்ணரஶ்மேர்விஷ்ணோர்

குடம் ஜலத்தைத் தாக்குவதுபோல் நான் தாக்கவில்லை. நினைவினால் தாக்குகிறேன். மேலும், குடம்போல் ஒருவனுக்கு உட்பட்டுத் தாக்கவில்லை. ஒருவனுக்கும் உட்படாமல் தாக்குகிறேன். அதாவது-ஒரு குடத்தில் ஜலத்தை வைத்தால், அந்தக் குடத்தினால் ஜலத்தைத் தாக்காமலிருக்க முடியாது. அதுபோலல்ல நான். வேணுமென்றால் தாக்குவேன். வேண்டாமென்றால் நினைத்தபோதே கீழேபோட்டுவிடுவேன். நான் ஒருவனுக்கும் உட்படாதவன். ஆகையால் முன்சொன்ன விரோதமில்லை.

விப்ருதா: ப்ரபவந்தி காயா:” இதி | விஷ்ணோரநந்யஸாபா ரணாநி சேஷாஸ்ய பூர்ணீத்யர்த்த: | ச்ருதிரபி “ஏதஸ்ய வா அக்ஷரஸ்ய ப்ரசாஸநே கார்கி ஸூர்யாசந்த்ரமஸௌ வித்ருதௌ திஷ்டத:, பீஷாஸ்மாத்வாத: பவதே | பீஷோ தேதி ஸூர்ய: | பீஷாஸ்மாதக்நிச்சேந்த்ரச்ச” இத்யாதிகா ||சு௱||

அவ—நினைவினால் எல்லா வேலையும் செய்யப்படுகிறது என்பதற்கு உதாரணம் சொல்லுகிறார்—

ஒருவிதமான 1 பிடிப்பில்லாத இடத்தில், அதாவது ஆகாசத்தில், ஒருபெரியகாற்று இருந்துகொண்டு எங்கும் போகிறதே. அதை யார் தூக்குகிறார்கள். ஒருவனும் தூக்காமல் ஒருபிடிப்புமில்லாமல் எப்படி நிற்கும். ஆகையால் அதை நான்தான் தூக்குகிறேன்; என்னால்தான் நிற்கிறது என்று ஒப்புக்கொள்ளவேணும். அதுபோல 2 எல்லா உலகத்தையும் நான்தான் தூக்குகிறேன். ஆனால் என்னை ஒருவனுக்கும் தெரியாது. இப்படியே வேதத்தை நன்றாய் அறிந்தவர்கள் சொல்லுகிறார்கள்:— “ஆகாசத்தில் திடீரென்று ஒரு நிமிஷத்தில் ஜலம் நிறைந்த மேகங்கள் வருகின்றன. ஸமுத்திரத்தில் பெரிய பெரிய அலைகள் ஓயாமல் வந்துகொண்டிருந்தாலும், கரைக்கு வந்து திரும்பி விடுகின்றன. சந்திரன் வரவர வளர்ந்து நிறைந்து, பிறகு கொஞ்சம் கொஞ்சமாய்க் குறைந்து போகிறது. ஒரு விநாடிக்கு முன் இலைகூட

1. இந்த சுலோகத்தில் “வாயு: ஆகாசஸ்தித:” என்று இரண்டு சொற்கள் இருக்கின்றன. அவைகளுக்கு ஆகாசத்திலிருக்கும் காற்றென்று ஏற்பட்டபொருள். இவ்விடத்தில் அப்படிப்பொருளல்ல. பின்னை என்னவென்றால்-ஒருவிதமான பிடிப்புமில்லாத காற்று என்று பொருள். வேறு ஒன்றால் தூக்கப்படாமலும், ஏவப்படாமலும் உம்மாலேயே தூக்கப்படுவதும் ஏவப்படுவதுமான ஒருபொருளைக்காட்டும் என்ற கேள்விக்குப்பதிலாக அப்படிப்பட்ட பொருளைக் காட்டுகிறது இந்த சுலோகம். ஆகையால் காற்றை ஆகாசம் தூக்குகிறது என்று சொல்வது ஒட்டாது.

2. ஒரு பெரிய பக்ஷியின் உடம்பு ஒரு விதமான பிடிப்பில்லாத இடத்தில் இருந்துகொண்டு பறக்கிறது. அதின் உடம்பில் ஜீவாத்மா இல்லாவிட்டால், அது நிற்குமோ? பறக்குமோ? அதுபோல்.

அச்சங்கவில்லை; நிமரென்று பெருங்காற்று அடிக்கிறது. நிமரென்று மின்னல் உண்டாகிறது. ஒருநாள்கூடத் தவறாமல் காலையில் ஸூரியன் கிளம்புகிறான். இவையெல்லாம் ஸ்ரீமானான நாராயணனுடைய ஆச்சரியமான சக்தியினாலுண்டாகின்றன” என்று. இப்படியே வேதத்திலும் “எல்லா லோகங்களும் பகவானுடைய ஆக்ஞையினால் இருக்கின்றன” என்றும், “ஸூரியன், இந்திரன், அக்கினி, காற்று, யமன் முதலானவர்கள் எந்த வேளையில் எந்தக் குற்றம் வருமோவென்று பகவானுக்கு நடுங்கி, தங்கள் தங்கள் வேலைகளைச் செய்கிறார்கள்” என்றும் சொல்லியிருக்கிறது. 1 [6]

ஏவம் ஸகலேதரநிரபேக்ஷஸ்ய மம ஸங்கல்பாத் ஸர்வேஷாம் ஸ்திதிஃ ப்ரவ்ருத்திச்சோக்தா। ததா தத்ஸங்கல்பாதேவ ஸர்வேஷாமுத்பத்திப்ரளயாவபீத்யாஹ—

ஸர்வபூதாநி கௌந்தேய ப்ரக்ருதிம் யாந்தி மாமிகாம்।
கல்பக்ஷயே புநஸ்தாநி கல்பாதௌ விஸ்ருஜாம்யஹம்॥ 7 ॥

ஸ்தாவரஜங்கமாத்மகாநி ஸர்வாணி பூதாநி மாமிகாம் மதீயாம் சரீரபூதாம் ப்ரக்ருதிம் தமச்சப்தவாச்யாம் நாமரூபவிபாகாநர்ஹாம் கல்பக்ஷயே சதுர்முகாவஸாநஸமயே மத்ஸங்கல்பாத் யாந்தி। தாந்யேவ பூதாநி கல்பாதௌ புநர்விஸ்ருஜாம்யஹம்। யதாஹ மநுஃ “ஆஸீதிதம் தமோபூதம்”, “ஸோऽபித்யாய சரீராத்ஸ்வாத்” இதி। ச்ருதிரபி “யஸ்யாவ்யக்தம் சரீரம்” இத்யாதிகா। “அவ்யக்தமக்ஷரே லீயதே - அக்ஷரம் தமஸி லீயதே, தமஃ பரே தேவ ஏகீபவதி” இதி ச॥ 7 ॥

---

1. 7-வது அத்தியாயம் 7-வது சுலோகத்தில் பகவான் எங்கும் நிறைந்து, எல்லாவற்றையும் தாங்குகிறானென்று சொல்லப்பட்டது. அதையே இங்கே சொல்லி, இரண்டு ஸங்கதிகளைப் புதிதாகச் சொல்லுகிறார். அவையாவன—(1) பகவான் எல்லாவற்றையும் எண்ணத்தினால் தான் தாங்குகிறான். (2) அவனை ஒருவனுக்கும் தெரியாது-என்று. இந்த இரண்டாவது ஸங்கதி நூலில் கோத்த மணி உதாரணத்தாலும் ஏற்படும். ஆனால் அதை இங்கே வெளிப்படையாகச் சொல்லுகிறது.

அவ—தன்னைத்தவிர வேறொன்றை எதிர்பார்க்கவேண்டாமல் இருக்கிற பகவானுடைய நினைவினால் எல்லாம் இருக்கிறதென்றும், அந்தந்த வேலையைச்செய்கிறதென்றும் சொல்லப்பட்டது. அப்படியே அவருடைய நினைவினாலேதான் எல்லாஉலகங்களும் உண்டாகி, அழிகின்றன என்றும் சொல்லுகிறார்—

1 குந்தியின்பிள்ளையே! பிரும்மாவுக்கு நூறுவயதாகி முடிகிற்காலத்தில் அசைகிறது, அசையாதது என்று இருவகைப்பட்ட இப்போதிருக்கும் எல்லாவஸ்துக்களும், இப்போதிருக்கும் உருவங்களையும் பெயர்களையும் விட்டு, என் எண்ணத்தால் என்னுடைய உடம்பாயும்—தமஸ் என்று சொல்லப்பட்டதுமான பிரகிருதி என்கிற வஸ்துவாக ஆய்விடுகிறது. மறுபடியும் பிரும்மாவை உண்டுபண்ணுவதாகிற ஸ்ருஷ்டிகாலம் வரும்போது, அந்தப்பிரகிருதியிலிருந்தே முன்னிருந்ததுபோலவே வெவ்வேறு உருவங்களையும் பெயர்களையும் உள்ளவஸ்துக்களை உண்டுபண்ணுகிறேன். இந்தவங்சதி மநுஸ்மிருதியிலும்வேதத்திலும்சொல்லியிருக்கிறது.(7)

ப்ரக்ருதிம் ஸ்வாமவஷ்டப்⁴ய விஸ்ருஜாமி புந: புந: ।
பூ⁴தக்³ராமமிமம் க்ருத்ஸ்நமவஶம் ப்ரக்ருதேர்வஶாத் ॥ ॥௮॥

ஸ்வீயாம் விசித்ரபரிணாமிநீம் ப்ரக்ருதிமவஷ்டப்⁴ய- அஷ்டதா பரிணமய்ய இமம்-சதுர்விதம் தே³வதிர்யங்மநுஷ்யஸ்தா²வராத்மகம் பூ⁴தக்³ராமம் மதீயாயா மோஹிந்யா: கு³ணமய்யா: ப்ரக்ருதேர்வஶாத³வஶம் புந:புந: காலே காலே விஸ்ருஜாமி ॥ ॥௮॥

ஆச்சரியங்களான வெவ்வேறு பதார்த்தங்களாக ஆகிற பிரகிருதி என்கிற என்னுடையதான வஸ்துவை 2 எட்டு

---

1. நீ குந்தியின் உடம்பிலிருந்துஉண்டானதை நீ அறியாவிட்டாலும், வேண்டியவர்கள் சொல்லைக்கேட்டு நீ நம்புகிறாய். அப்படியே என் உடம்பிலிருந்து இந்த உலகம் உண்டானதென்று என் சொல்லைக்கேட்டு நீ நம்பு என்று கருத்து.

2. 7-வது அத்தியாயம் 4-வது சுலோகத்தில் சொன்னபடி எட்டுவிதம் இதினால் ஸமஷ்டி வியஷ்டி செய்வது சொல்லப்பட்டது.

விதமாக முதலில் ஆக்குகிறேன். அவைகளிலிருந்து காணப்படுகிற தேவன்—பக்ஷி—மனிதன்—மரம்—என்று நாலுவிதமான எல்லாப்பிராணிகளையும் வெவ்வேறு உருவம், பெயர், இடம், காலம், அநுபவம், இவைகளுள்ளவைகளாக அப்போதப்போது திரும்பத் திரும்ப உண்டுபண்ணுகிறேன். ஸத்வம் முதலான மூன்று குணங்களோடு கூடியதும், எல்லாரையும் மயக்குகிறதுமான என்னுடைய பிரகிருதிக்கு அவைகள் உட்பட்டிருக்கின்றன. அவைகளால் அதை மீறமுடியாது. (8)

𑌅𑌵 — 𑌏𑌵𑌂 𑌤𑌰𑍍𑌹𑌿 𑌵𑌿𑌷𑌮𑌸𑍃𑌷𑍍𑌟𑍍𑌯𑌾𑌦𑍀𑌨𑌿 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌨𑍈𑌰𑍍𑌘𑍃𑌣𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑌾𑌪𑌾𑌦𑌨𑍇𑌨 𑌭𑌵𑌨𑍍𑌤𑌂 𑌬𑌧𑍍𑌨𑌨𑍍𑌤𑍀𑌤𑍍𑌯𑌤𑍍𑌰𑌾𑌹 —

𑌨 𑌚 𑌮𑌾𑌂 𑌤𑌾𑌨𑌿 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌨𑌿𑌬𑌧𑍍𑌨𑌨𑍍𑌤𑌿 𑌧𑌨𑌂𑌜𑌯 ।
𑌉𑌦𑌾𑌸𑍀𑌨𑌵𑌦𑌾𑌸𑍀𑌨𑌮𑌸𑌕𑍍𑌤𑌂 𑌤𑍇𑌷𑍁 𑌕𑌰𑍍𑌮𑌸𑍁 ॥ ॥௯॥

𑌨 𑌚 𑌤𑌾𑌨𑌿 𑌵𑌿𑌷𑌮𑌸𑍃𑌷𑍍𑌟𑍍𑌯𑌾𑌦𑍀𑌨𑌿 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌮𑌾𑌂 𑌨𑌿𑌬𑌧𑍍𑌨𑌨𑍍𑌤𑌿 — 𑌮𑌯𑌿 𑌨𑍈𑌰𑍍𑌘𑍃𑌣𑍍𑌯𑌾𑌦𑌿𑌕𑌂 𑌨𑌾𑌪𑌾𑌦𑌯𑌨𑍍𑌤𑌿 । 𑌯𑌤𑌃 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑍃𑌤𑌾𑌨𑍍𑌯𑍇𑌵 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌦𑍇𑌵𑌾𑌦𑌿𑌵𑌿𑌷𑌮𑌭𑌾𑌵𑌹𑍇𑌤𑌵𑌃, 𑌅𑌹𑌂 𑌤𑍁 𑌤𑌤𑍍𑌰 𑌵𑍈𑌷𑌮𑍍𑌯𑍇 𑌅𑌸𑌕𑍍𑌤𑌃 𑌤𑌤𑍍𑌰𑍋𑌦𑌾𑌸𑍀𑌨𑌵𑌦𑌾𑌸𑍀𑌨𑌃 । 𑌯𑌥𑌾𑌹 𑌸𑍂𑌤𑍍𑌰𑌕𑌾𑌰𑌃 — "𑌵𑍈𑌷𑌮𑍍𑌯𑌨𑍈𑌰𑍍𑌘𑍃𑌣𑍍𑌯𑍇 𑌨 𑌸𑌾𑌪𑍇𑌕𑍍𑌷𑌤𑍍𑌵𑌾𑌤𑍍", "𑌨 𑌕𑌰𑍍𑌮𑌾𑌵𑌿𑌭𑌾𑌗𑌾𑌦𑌿𑌤𑌿 𑌚𑍇𑌨𑍍𑌨𑌾𑌨𑌾𑌦𑌿𑌤𑍍𑌵𑌾𑌤𑍍" 𑌇𑌤𑌿 ॥ ॥௯॥

அவ—இந்த உலகமானது பேசத்தெரிந்ததும், பேசத்தெரியாததும், ஏழையும், பணக்காரனும், வியாதியும், உடம்பு வெளுக்கியமும், அழகும், கண்ணுக்குப்பிடிக்காமையும்— இவையுள்ளதாயும் என்று இப்படிப்பலவிதமாயிருக்கிறது. இவைகளைப் பகவான் உண்டு பண்ணுகிறான் என்றால், அவனுக்குச்சிலரிடத்தில் ஸ்நேஹமும், சிலரிடத்தில் த்வேஷமும், சிலரிடத்தில் தயையில்லாமையும் ஆகியகெடுதல்கள் இருப்பதாகஏற்படுமே என்றால், சொல்லுகிறார்—

கீழ்ச்சொன்னபடி உலகத்தைப் பலமாதிரியாக நான் உண்டு பண்ணுவதால், என்னிடத்தில் இரக்கமில்லாமை, பக்ஷபாதம் பண்ணுகை என்கிற குற்றங்கள்வராது. ஏனென்றால், ஜீவன்கள்

நெடுநாளாய் ஒன்றின்பின் ஒன்ருக வரிசையாகச் செய்துவந்த கர்மங்களே அந்த தாரதம்மியங்களுக்குக் காரணம். நானுகச்செய்யவில்லை. ஒருவனை இளப்பமாகவோ, உயர்ந்தவனுகவோ பண்ணவேண்டுமென்று எனக்கு ஆசையில்லை. 1 யார் எப்படியிருந்தால்எனக்குஎன்ன? என்றுஇருப்பவன்போல் இருக்கிறேன். வேதத்திற்கு அர்த்தமான பிரும்மஸூத்ரங்களிலும் இந்த ஸங்கதி சொல்லியிருக்கிறது. (9)

மயாத்⁴யக்ஷேண ப்ரக்ருதி꞉ ஸூயதே ஸசராசரம் |
ஹேதுநாநேந கௌந்தேய ஜக³த்³ விபரிவர்த்ததே || ||௧௦||

தஸ்மாச்ச க்ஷேத்ரஜ்ஞகர்மாநுகு³ணம் மதீ³யா ப்ரக்ருதி꞉ ஸத்யஸங்கல்பேந மயா அத்⁴யக்ஷேணேக்ஷிதா ஸசராசரம் ஜக³த் ஸூயதே | அநேந க்ஷேத்ரஜ்ஞகர்மாநுகு³ணமதீ³க்ஷணேந ஹேதுநா ஜக³த் பரிவர்த்ததே இதி மம ஸ்வாம்யம் ஸத்யஸங்கல்பத்வம் நைர்க்⁴ருண்யாதி³தோ³ஷரஹிதத்வாதி³கம் மம ஸர்வ-ஶ்ருதிஸித்³தா⁴ந்தோ நாமைஶ்வரம் யோக³ம் பஶ்ய | யதா²ஹ ஶ்ருதி꞉ "அஸ்மாந்மாயீ ஸ்ருஜதே விஶ்வமேதத் தஸ்மிம்ஶ்சாந்யோ மாயயா ஸந்நிருத்³த⁴꞉, மாயாம் து ப்ரக்ருதிம் வித்³யாந்மாயிநம் து மஹேஶ்வரம்" இதி || ||௧௦||

அவ—உண்டாகும் வஸ்துக்களின் தாரதம்மியங்கள் கர்மத்தால் ஏற்படுகிறதென்ருல், எப்போதும் மாறுகிற தன்மையுள்ள பிரகிருதி தானுகவே கர்மத்தினுலே அந்தந்த வஸ்துக்களாக ஆகட்டுமே; அதில்உம்முடையவேலை எதற்கு? என்ருல், சொல்லுகிருர்—

நினைத்தபடி நடத்துகிற யஜமாநனுன என்னுல் ஜீவன்களுடைய கர்மத்துக்குத் தகுந்தபடி—என்னுடைய உடம்பான-பிர

1. ஒருவன் ஒருவேலையைச் செய்யும்போது மற்ருெருவன் அதைக் கவனிக்காமல் இருந்தால், அவன் அந்த வேலையைச் செய்ததாகவும் செய்வித்ததாகவும்எப்படிஏற்படாதோ, அப்படியே பகவான் உலகத்தை உண்டுபண்ணுகிறபோது, அதின் தாரதம்மியத்தை உண்டுபண்ணவேண்டுமென்று அவனுக்கு எண்ணமில்லாமையால், அவன் உதாஸீனன். அதாவது—அவன் செய்தவனுமல்ல. செய்வித்தவனுமல்ல.

கிருதியானது இன்னின்ன வஸ்துக்களை யுண்டுபண்ணட்டுமென்று நினைக்கப்பட்ட எல்லா உலகத்தையும் உண்டுபண்ணுகிறது. உலகத்தில் ஒருவேலைக்காரன் நல்லது பண்ணினாலும், கெட்டது பண்ணினாலும், அதைப்பார்த்து யஜமானன் தானே பலனைக் கொடுக்கிறான். அதுபோல உலகத்திலிருக்கும் தாரதம்மியங்கள் கர்மங்களினால் உண்டானதாயிருந்தாலும், அவைகளை அறிவுள்ள ஒருவன்தானே உண்டுபண்ணவேணும். ஆதலால் நான்தான் அவைகளை உண்டுபண்ணினேன். அறிவில்லாத கர்மமே யுண்டுபண்ணுமா? இப்படி என் நினைவினால் இந்த உலகமானது திரும்பித் திரும்பி வருகிறது. ஆதலால் நான் உலகத்திற்கு யஜமானன், நினைத்தபடி நடத்துகிறவன். பக்ஷபாதம் முதலான குற்றமில்லாதவன். இவைமுதலான என்னுடைய ஈசுவரத் தன்மையைப்பார்1. 7-வது சுலோகத்தில் நான்தான் உலகத்தை உண்டுபண்ணுகிறேன் என்று சொன்னதை இங்கே முடிக்கிறார். (10)

அவஜாநந்தி மாம் மூடா மாநுஷீம் தநுமாஶ்ரிதம் ।
பரம் பாவமஜாநந்தோ மம பூதமஹேஶ்வரம் ॥ ॥௧௧॥

ஏவம் மாம் பூதமஹேஶ்வரம் ஸர்வஜ்ஞம் ஸத்யஸங்கல்பம்
நிகிலஜகதேககாரணம் பரமகாருணிகதயா ஸர்வஸமாஶ்ர
யணீயத்வாய மாநுஷீம் தநுமாஶ்ரிதம் ஸ்வக்ருதை: பாபக
ர்மபி: மூடா: அவஜாநந்தி ப்ராக்ருதமநுஷ்யஸமம் மந்யந்தே।
பூதமஹேஶ்வரஸ்ய மமாபாரகாருண்யௌதார்யஸௌஶீல்ய

1. 7-வது அத்தியாயத்தில் 6-வது சுலோகத்தில் உலகமானது பகவானிடமிருந்து உண்டாகி, அவனிடத்திலேயே பிரளயகாலத்தில் வந்துஅடங்குகிறது என்று சொல்லப்பட்டது. அதையேஇந்த இடத்தில் 7-வது சுலோகம் முதல் நான்கு சுலோகங்களால் சொல்லுகிறார். இங்கே அதிகமாய் சொல்லுகிறவைகளாவன.—உலகம் பகவானுடைய உடம்பான பிரகிருதியிலிருந்து உண்டாகிறது. முதலில் ஆகாசம் முதலான ஸமஷ்டிகள் உண்டாகின்றன. அவைகளிலிருந்து வியஷ்டியான வெவ்வேறு வஸ்துக்கள் உண்டாகின்றன. உண்டாகும் தாரதம்மியங்களுக்குப் பகவான் காரணமன்று. ஜீவன்களுடைய கர்மங்கள்தான் காரணம். அப்படியிருந்த போதிலும், பகவானுடைய ஸங்கல்பமில்லாவிட்டால் உலகம் உண்டாகாது—என்று.

ஸ்வாத்மஸ்வரூபஸம்ஸ்தாநம் மநுஷ்யஸமஸ்தாநஸமாநம் ஸர்வம் மாமஜாநந்தோ மநுஷ்யஸஜாதீயம் மத்வா பரிபவந்தீத்யர்த்த: ॥ ॥௧௧॥

அவ—ஞானிகளுடைய பெருமையைச் சொல்லுவதற்காக, பகவானை உள்ளபடி அறியாதவர்களுடைய ஸ்வபாவத்தைச் சொல்லுகிறார்—

இப்படி எல்லா உலகங்களுக்கும் நான் பெரிய ராஜவாயும், எல்லாம் தெரிந்தவனுயும், நினைத்தபடி நடத்துகிறவனுயும், எல்லா உலகங்களையும் ஒருவனுய் உண்டுபண்ணுகிறவனுயும், அளவில்லாத தயையினுலே எல்லாரும் என்னிடம் வருவதற்காக 1 மனித உருவத்தை உடையவனுயு மிருக்கிற என்னை மூடர்கள் தாங்கள் பண்ணின பாபங்களினுலே உலகத்திலிருக்கும் மனிதர்களுக்குள் நானும் ஒருவன் என்று நினைத்து, என்னுடைய உயர்ந்த தன்மையை அறியாமல், மனிதஉருவத்தை மாத்திரம்பார்த்து, 2 அலக்ஷியம் பண்ணுகிருர்கள். என்னுடைய உயர்ந்த தன்மையாவது—கேட்டதைக் கொடுப்பது, தாழ்ந்தவர்களுடனும் இடைவிடாமல் பழகுவது, குற்றங்களைப்பார்க்காமல் ஜனங்களிடத்தில் ஆசையுள்ளவனுயிருப்பது. என் ஸொத்தான எல்லாமனிதர்களும் என்னிடம் வருவதற்காக மனித உருவத்துடன் லோகத்தில் வந்திருப்பதும். கீழ்ச்சொன்ன குணங்கள்என்னை இப்படிவரும்படி செய்தது. (11)

மோகாஸா மோககர்மாணோ மோகஜ்ஞாநா விசேதஸ: ।
ராக்ஷஸீமாஸுரீம் சைவ ப்ரக்ருதிம் மோஹிநீம் ஸ்ரிதா: ॥

1. பகவானுடைய திருமேனி மனித உருவம் போலிருந்த போதிலும், அதுவேறுஜாதியானவஸ்துவி (சுத்தஸத்வத்தி) லிருந்துஉண்டானது. ஒருகுடம்மண்ணுல்செய்யப்பட்டது.ஒன்று தங்கத்தால்செய்யப்பட்டது. இவையிரண்டுக்கும்உருவமும் பெயரும் ஒரேமாதிரியாயிருந்தாலும், அவைகள் வெவ்வேறு ஜாதியான வஸ்துக்களால் செய்யப்பட்டன. அதுபோல.

2. பகவானுடைய உருவம் மனித உருவம் போலிருக்கிறது. அதினுல் அவனிடம் காணப்படுகிற-மற்றவர்களைக் காட்டிலும் உயர்த்திக்கு அடையாளங்கள் மனதில் படாமல், அவனை மற்றவர்களைப் போல் எண்ணுவது. இது தான் அலக்ஷியம் பண்ணுவது.

ஏவம் மம மநுஷ்யத்வே பரத்வதிரோதாநகரீம் ராக்ஷஸீமாஸுரீம் ச மோஹிநீம் ப்ரக்ருதிமாஶ்ரிதாঃ மோகாஶாঃ - மோகவாஞ்சிதாঃ நிஷ்பலவாஞ்சிதாঃ, மோககர்மாணঃ - மோகாரம்பாঃ, மோகஜ்ஞாநாঃ - ஸர்வேஷு மதீயேஷு சராசரேஷு வஸ்துஷு விபரீதஜ்ஞாநதயா நிஷ்பலஜ்ஞாநாঃ, விசேதஸঃ - ததா ஸர்வத்ர விபரீதஜ்ஞாநாঃ மாம் ஸர்வேஶ்வரம் இதரஸமம் மத்வா மயி யத்கிஞ்சித்குர்வந்தி – யஜ்ஞாதிகமநுதிஷ்டந்தி, தத்ஸர்வம் மோகம் பவதீத்யர்த்தঃ ॥ ॥ ௧௨ ॥

நான் மனித உருவமாக இருக்கச்செய்தேயும், என்னிடத்தில் காணப்படும் அளவில்லாத தயை முதலான பெருமையை அறியவொட்டாமல் செய்கிற ரஜோகுணமும், தமோகுணமும் மேலிட்டிருக்கிறஸ்வபாவத்தைச்சிலர் அடைந்திருக்கிறார்கள். அவர்களுக்கு ஆசைப்படும் பலன்கள் கிடைக்கிறதில்லை. அவர்கள் ஆரம்பித்த வேலைகள் நடக்கிறதில்லை. என்னுடையதான எல்லா உலகங்களையும் பற்றி உள்ளபடி அறியாமல் 1 தப்பாக நினைக்கிறபடியால், அவர்களுக்கு அறிவு இருந்தும் பிரயோஜநமில்லை. அப்படியே எல்லா விஷயத்திலும் உண்மையை யறியாதவர்கள், எல்லா லோகங்களுக்கும் ராஜாவான என்னை மற்றவர்களைப்போல நினைத்து, என்விஷயத்தில் என்னவேலைகளைச் செய்ய நினைக்கிறார்களோ, பொதுவாய் எந்த பலனைக் குறித்து வேலையை ஆரம்பிக்கிறார்களோ, 2 அவைகள் எல்லாம் வீணாய்ப்போகின்றன. (12)

---

1. தப்பாக நினைப்பதாவது—பகவானுக்கு உட்பட்டதை அவனுக்குஉட்படாததென்றும்,பகவானுடைய சொத்தைத் தன்னதென்றும், ஸ்வயம்பிரகாசமாயும் அழிவில்லாததுமான ஜீவஸ்வரூபத்தைத்தடுத்தலைய்த்தோன்றாத அழிவுள்ளஉடம்பாகஎண்ணுவதும், நிலையில்லாத பலனை நிலையுள்ளதாக எண்ணுவதும்.

2. பகவான் ராமாவதாரம்பண்ணினபோது, ராவணன் பகவானைக் கொல்லவேணுமென்று நினைத்தான். அவன் நினைவெல்லாம் தப்பாயிருந்தபடியால், அவனுடைய ஒரு வேலையும் அவன் நினைத்தபடி நடக்க

𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌸𑍍𑌤𑍁 𑌮𑌾𑌂 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌦𑍈𑌵𑍀𑌂 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌃 ।
𑌭𑌜𑌨𑍍𑌤𑍍𑌯𑌨𑌨𑍍𑌯𑌮𑌨𑌸𑍋 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌭𑍂𑌤𑌾𑌦𑌿𑌮𑌵𑍍𑌯𑌯𑌮𑍍 ॥ ॥௧௩॥

[illegible] ॥௧௩॥

அவ— இப்படி உம்மைஅவமானம் செய்கிறமூடர்கள் நிறைந்த உலகத்தில் நீர் என் அவதாரம் பண்ணினீர்; ஒரு பிரயோஜநமும் இல்லையேஎன்று கேட்டால், என்னையுள்ளபடி அறிந்த சில பெரியோர்கள் இருக்கிறார்கள்; அவர்களுக்காக நான் அவதாரம் செய்திருப்பதாலே, அதற்குப் பிரயோஜநமுண்டென்றுகாட்டி, அவர்களின் நடவடிக்கையைச் சொல்லி, பக்தியைச் சொல்லுகிறார்—

அநேக ஜந்மங்களிலே பண்ணின கணக்கில்லாத புண்ணியங்களால் என்னைத் தைவம் என்று அறிந்து, என்னைப் பிரபத்திபண்ணி (கெஞ்சிக் கேட்டுக்கொண்டு), எல்லா பாபங்களும் நீங்கி, ஸத்வகுணம் மேலிட்ட சில பெரியோர்களுமிருக்கிறார்கள். அவர்கள் எல்லா உலகத்தை உண்டு பண்ணினவனும், ஒருவித 1 கெடுதியில்லாதவனும், மனதாலே நினைக்கவும், வாயால் சொல்லவும் முடியாத குணங்களையும், வேலைகளையும் உடையவனும் ஆயிருந்தும், அளவில்லாத தயையினால் ஸாதுக்களைக்கா

இல்லை. உண்மையான அறிவில்லாமையாலே தப்பான எண்ணமுண்டாகிறது. அதினால் ஆரம்பித்த வேலை நடக்கிறதில்லை. நடந்தாலும், ஆசைப்பட்ட பலன் கிடைக்கிறதில்லை.

1. அவதாரத்திற்குக்காரணம் தயை. கர்மமன்று. ஆகையால் ஞானத்தின் குறைவு முதலான கெடுதல்களில்லை.

ப்பாற்றுவதற்காக நான் மனிதனாகப் பிறந்திருக்கிறேனென்று அறிந்து, என்னிடத்தில் இருக்கும் அளவில்லாத பிரீதியினாலே என்னை ஒரு விநாடி நினையாவிட்டால், கண் முதலான இந்திரியங்களும், மனதும், ஆத்மாவும் தாங்கமுடியாமல், என்னை நினைப்பதையே பிரயோஜநமாக எண்ணித் தியானம் செய்கிறார்கள் (13)

𑌸𑌤𑌤𑌂 𑌕𑍀𑌰𑍍𑌤𑌯𑌨𑍍𑌤𑍋 𑌮𑌾𑌂 𑌯𑌤𑌨𑍍𑌤𑌶𑍍𑌚 𑌦𑍃𑌢𑌵𑍍𑌰𑌤𑌾𑌃 ।
𑌨𑌮𑌸𑍍𑌯𑌨𑍍𑌤𑌶𑍍𑌚 𑌮𑌾𑌂 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌨𑌿𑌤𑍍𑌯𑌯𑍁𑌕𑍍𑌤𑌾 𑌉𑌪𑌾𑌸𑌤𑍇 ॥௧௪॥

𑌅𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌮𑌤𑍍𑌪𑍍𑌰𑌿𑌯𑌤𑍍𑌵𑍇𑌨 𑌮𑌤𑍍𑌕𑍀𑌰𑍍𑌤𑌨𑌯𑌤𑌨𑌨𑌮𑌸𑍍𑌕𑌾𑌰𑍈𑌰𑍍𑌵𑌿𑌨𑌾 𑌕𑍍𑌷𑌣𑌾𑌣𑍁𑌮𑌾𑌤𑍍𑌰𑍇𑌽𑌪𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌧𑌾𑌰𑌣𑌮𑌲𑌭𑌮𑌾𑌨𑌾𑌃 𑌮𑌦𑍍𑌗𑍁𑌣𑌵𑌿𑌶𑍇𑌷𑌵𑌾𑌚𑍀𑌨𑌿 𑌨𑌾𑌮𑌾𑌨𑌿 𑌸𑍍𑌮𑍃𑌤𑍍𑌵𑌾 𑌪𑍁𑌲𑌕𑌾𑌞𑍍𑌚𑌿𑌤𑌸𑌰𑍍𑌵𑌾𑌙𑍍𑌗𑌾𑌃 𑌹𑌰𑍍𑌷𑌗𑌦𑍍𑌗𑌦𑌕𑌣𑍍𑌠𑌾𑌃 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣 𑌕𑍃𑌷𑍍𑌣 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑍇𑌤𑍍𑌯𑍇𑌵𑌮𑌾𑌦𑍀𑌨𑌿 𑌸𑌤𑌤𑌂 𑌕𑍀𑌰𑍍𑌤𑌯𑌨𑍍𑌤𑌃, 𑌤𑌥𑌾 𑌯𑌤𑌨𑍍𑌤𑌃 𑌮𑌤𑍍𑌕𑌰𑍍𑌮𑌸𑍁 𑌅𑌰𑍍𑌚𑌨𑌵𑌨𑍍𑌦𑌨𑌾𑌦𑌿𑌕𑍇𑌷𑍁 𑌤𑌦𑍁𑌪𑌕𑌰𑌣𑍇𑌷𑍁 𑌭𑌵𑌨𑌨𑌨𑍍𑌦𑌨𑌵𑌨𑌕𑌰𑌣𑌾𑌦𑌿𑌕𑍇𑌷𑍁 𑌚 𑌦𑍃𑌢𑌵𑍍𑌰𑌤𑌾𑌃, 𑌭𑌕𑍍𑌤𑌿𑌭𑌰𑌵𑌿𑌨𑌮𑌿𑌤𑌮𑌨𑍋𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌭𑌿𑌮𑌾𑌨𑌪𑌦𑌦𑍍𑌵𑌯𑌜𑌾𑌨𑍁𑌦𑍍𑌵𑌯𑌕𑌰𑌦𑍍𑌵𑌯𑌶𑌿𑌰𑍋𑌭𑌿𑌰𑌷𑍍𑌟𑌾𑌙𑍍𑌗𑍈𑌰𑌵𑌨𑌿𑌤𑌲𑍇 𑌦𑌣𑍍𑌡𑌵𑌨𑍍𑌨𑌮𑌸𑍍𑌯𑌨𑍍𑌤𑌃, 𑌸𑌤𑌤𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌃 𑌨𑌿𑌤𑍍𑌯𑌯𑍋𑌗𑌂 𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑌮𑌾𑌣𑌾 𑌮𑌦𑌾𑌸𑍍𑌯𑌵𑍍𑌯𑌵𑌸𑌾𑌯𑌿𑌨 𑌉𑌪𑌾𑌸𑌤𑍇 ॥ ॥௧௪॥

1என்னிடத்தில் அளவில்லாத பிரீதியிருப்பதனாலே, என் பெயர்களைச் சொல்லுவது, என் வேலைகளைச் செய்யப்பிரயத்தனப்படுவது, என்னை வணங்குவது—இவைகள் இல்லாவிட்டால் ஒரு விநாடியில் எத்தனையோ ஒரு பாகம்கூட ஆத்மா தாங்காமல், என்னுடைய உயர்ந்த குணங்களைச் சொல்லுகிற பெயர்களை நினைத்து, உடம்பெல்லாம் மயிர்க்கூச்சலடைந்து, ஸந்தோஷத்தினால் தொண்டை தழுதழுத்து, நாராயண! கிருஷ்ண! வாஸுதேவ! இவை முதலான

1, கீழ் சுலோகத்தில் தியானம் செய்கிறார்கள் என்று தியானத்தைச் சொன்னார். அதுவே அளவில்லாத பிரீதியுடனே செய்யப்படுகிறதென்றும், அதுவே பகவானுடைய திருநாமங்களைச் சொல்லவும், அவனுடைய வேலைகளைச் செய்யவும், அவனை வணங்கவும் தூண்டுகிறது என்று இந்த சுலோகம் சொல்லுகிறது.

என்பெயர்களை 1 எப்பொழுதும் சொல்லுகிறார்கள். அப்படியே என்னைப் பூஜிப்பது, அதற்கு உதவியான—கோவில் கட்டுவது, புஷ்பத் தோட்டம் போடுவது—முதலான வேலைகளில் மிகவும் 3 உறுதியோடு பிரயத்நம் பண்ணுகிறார்கள். மிகுந்த பக்தியாலே மனதோடும், கட்டாயம் ஸேவிக்கவேணுமென்கிற எண்ணத்தோடும், தாங்கள பகவானைச் சேர்ந்தவர்கள் என்கிற நினைவோடும், இரண்டு கால்களையும், இரண்டு கைகளையும் நீட்டி, தலையையும் பூமியில் வைத்து, இப்படி எட்டு அங்கங்களோடு புழுதி, சேறு, கல், பூமியிலிருப்பதைக் கவனிக்காமல், ஒருகன முள்ள கம்பைப் பூமியில் போட்டால் போல், முழு உடம்பையும் தரையில் போட்டு நமஸ்காரம் செய்கிறார்கள். இப்படி என்னுடன் எப்போதுமிருக்க வேணுமென்று ஆசைப்பட்டு, ஆத்மா இருக்கிற வரையில் எனக்கு வேலை செய்ய வேண்டுமென்று உறுதியோடு என்னை எப்போதும் தியானம் செய்கிறார்கள். (14)

𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑌜𑍍𑌞𑍇𑌨 𑌚𑌾𑌪𑍍𑌯𑌨𑍍𑌯𑍇 𑌯𑌜𑌨𑍍𑌤𑍋 𑌮𑌾𑌮𑍁𑌪𑌾𑌸𑌤𑍇 ।
𑌏𑌕𑌤𑍍𑌵𑍇𑌨 𑌪𑍃𑌥𑌕𑍍𑌤𑍍𑌵𑍇𑌨 𑌬𑌹𑍁𑌧𑌾 𑌵𑌿𑌶𑍍𑌵𑌤𑍋𑌮𑍁𑌖𑌮𑍍 ॥௧௫॥

𑌅𑌨𑍍𑌯𑍇𑌽𑌪𑌿 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑍋𑌕𑍍𑌤𑍈𑌃 𑌕𑍀𑌰𑍍𑌤𑌨𑌾𑌦𑌿𑌭𑌿𑌃, 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌖𑍍𑌯𑍇𑌨 𑌯𑌜𑍍𑌞𑍇𑌨 𑌚 𑌯𑌜𑌨𑍍𑌤𑍋 𑌮𑌾𑌮𑍁𑌪𑌾𑌸𑌤𑍇 । 𑌕𑌥𑌮𑍍? 𑌬𑌹𑍁𑌧𑌾 𑌪𑍃𑌥𑌕𑍍𑌤𑍍𑌵𑍇𑌨 - 𑌜𑌗𑌦𑌾𑌕𑌾𑌰𑍇𑌣 𑌵𑌿𑌶𑍍𑌵𑌤𑍋𑌮𑍁𑌖𑌂-𑌵𑌿𑌶𑍍𑌵𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌮𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌂, 𑌮𑌾𑌮𑍇𑌕𑌤𑍍𑌵𑍇𑌨𑍋𑌪𑌾𑌸𑌤𑍇 । 𑌏𑌤𑌦𑍁𑌕𑍍𑌤𑌂 𑌭𑌵𑌤𑌿 𑌸 𑌏𑌵 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌃 𑌨𑌾𑌮𑌰𑍂𑌪𑌵𑌿𑌭𑌾𑌗𑌾𑌨𑌰𑍍𑌹𑌾𑌤𑌿𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌚𑌿𑌦𑌚𑌿𑌦𑍍𑌵𑌸𑍍𑌤𑍁𑌶𑌰𑍀𑌰𑌃 𑌸𑌤𑍍𑌯𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑍋 𑌵𑌿𑌵𑌿𑌧𑌵𑌿𑌭𑌕𑍍𑌤𑌨𑌾𑌮𑌰𑍂𑌪𑌸𑍍𑌥𑍂𑌲𑌚𑌿𑌦𑌚𑌿𑌦𑍍𑌵𑌸𑍍𑌤𑍁𑌶𑌰𑍀𑌰𑌃 𑌸𑍍𑌯𑌾𑌮𑌿𑌤𑌿 𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑍍𑌯, 𑌸 𑌏𑌕 𑌏𑌵 𑌦𑍇𑌵𑌤𑌿𑌰𑍍𑌯𑌙𑍍𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌸𑍍𑌥𑌾𑌵𑌰𑌰𑍂𑌪𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌰𑌜𑌗𑌚𑍍𑌛𑌰𑍀𑌰𑍋𑌽𑌵𑌤𑌿𑌷𑍍𑌠𑌤 𑌇𑌤𑌿 𑌪𑍃𑌥𑌕𑍍𑌤𑍍𑌵𑌾𑌨𑍁𑌸𑌨𑍍𑌧𑌾𑌨𑍇𑌨 𑌚𑍋𑌪𑌾𑌸𑌤𑍇 ॥ ॥ ௧௫ ॥

1. எப்பொழுதும்—தனியாய் இருக்கும்போதும், ஜனங்கள் கூட இருக்கும் பொழுதும். இதனால் பகவானுடைய திருநாமங்களைச் சொல்லுவதற்கு வெட்கப்படவில்லை என்றும், ஒருவனுக்காகச் சொல்லவில்லையென்றும் காட்டப்படுகிறது.

1 வேறு சில பெரியோர்கள் கீழ் சுலோகத்தில் சொன்னபடியும், 2 நினைவு ரூபமான யக்ஞத்தினாலும் என்னை ஸந்தோஷப் படுத்திக் கொண்டு, தியானம் செய்கிறார்கள். எப்படி யென்றால், எல்லா உலக உருவமாகப் பல விதமாயிருக்கிற என்னை ஒரேவித மாகத் தியானம் பண்ணுகிறார்கள். அதாவது—பிரளய காலத்தில் பகவானான வாஸுதேவன் தான், 3 தனித்து இருப்பதாகச் சொல்லமுடியாத பிரகிருதி-ஜீவன்கள் ஆகிய இரண்டு உருவமுள்ளவனாயிருந்தான். அப்போது அவைகளுக்கு வெவ்வேறான உருவங்களும் பெயர்களும் இல்லை. அவைகள் மிகவும் ஸூக்ஷ்மமாய் (சின்னதாய்) இருந்தன. பிறகு, பலவிதமான உருவங்களும் பெயர்களுமுடைய உலக உருவமாக ஆகவேணுமென்று நினைத்து, நினைத்தபடி நடத்துகிறவனாகையாலே, அவன் ஒருவனே தேவன்-பக்ஷி-மனிதன்-மரம்-என்று சொல்லப்படுகிற ஆச்சரியமான உலகவடிவாக இருக்கிறான்—என்று நினைத்து, அவர்கள் தியானம் செய்கிறார்கள். (15)

கவ_தயாஹி_ விஶ்வஶ்ரீரொzஹாஃவோடஷி தஜ_த்ரஹ—
கஹம் கு_த்ராஹம் யஜ்ஞை: ஸ்வயாzஹாஹவோஷய்பு ।
ஹ்ரொத்ராzஹாஹவோஜ்ரஹாஹ்ஸ்ரஹம் ஹாதபு ‖ கரு ‖

---

1. இந்த சுலோகத்தில் சொல்லுகிறவர்கள் பகவானைப் பூர்ணமாகத் தியானம் பண்ணுகிறவர்கள். அதாவது—எல்லா உலக உருவமாக இருக்கிறானென்று தியானம்செய்கிறார்கள்.

2. 13-வது சுலோகத்தில் பகவானை நினைப்பதையே பிரயோஜனம் என்றும், 14-வது சுலோகத்தில், பகவானுடைய திருநாமங்களைச் சொல்லுவது முதலான பக்திக்குக்கிட்டினவைகளோடு தியானத்தைச் செய்யவேண்டுமென்றும்சொல்லி, இந்தசுலோகத்தில் தியானம் பண்ணப்பட்ட பகவானைத்தியானம்பண்ணவேண்டியவிதம்சொல்லப்படுகிறது.

3. பிரகிருதியும், ஜீவன்களும் அழிவில்லாதவைகள். பிரளயகாலத்தில் அவைகள் பகவானிடம் சேர்ந்திருக்கின்றன. ஆனால், சேர்ந்திருக்கின்றன என்று சாஸ்திரத்தைக் கொண்டு அறியவேணுமேயொழிய, பாலில் சேர்ந்த ஜலத்தைப் போலத் தனித்துக் காணமுடியாது.

𑌅𑌹𑌂 𑌕𑍍𑌰𑌤𑍁𑌃 𑌅𑌹𑌂 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌷𑍍𑌟𑍋𑌮𑌾𑌦𑌿𑌕𑌃 𑌕𑍍𑌰𑌤𑍁𑌃। 𑌅𑌹𑌂 𑌮𑌹𑌾𑌯𑌜𑍍𑌞𑌃। 𑌅𑌹𑌮𑍇𑌵 𑌪𑌿𑌤𑍃𑌗𑌣𑌪𑍋𑌷𑌿𑌣𑍀 𑌸𑍍𑌵𑌧𑌾। 𑌔𑌷𑌧𑌂 𑌹𑌵𑌿𑌶𑍍𑌚𑌾𑌹𑌮𑍇𑌵। 𑌅𑌹𑌮𑍇𑌵 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌃। 𑌅𑌹𑌮𑍇𑌵𑌾𑌜𑍍𑌯𑌮𑍍। 𑌉𑌪𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑌿𑌦𑌂 - 𑌸𑍋𑌮𑌾𑌦𑌿𑌕𑌂 𑌚 𑌹𑌵𑌿𑌰𑌹𑌮𑍇𑌵𑍇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃। 𑌅𑌹𑌮𑌾𑌹𑌵𑌨𑍀𑌯𑌾𑌦𑌿𑌕𑍋𑌽𑌗𑍍𑌨𑌿𑌃। 𑌹𑍋𑌮𑌶𑍍𑌚𑌾𑌹𑌮𑍇𑌵 ॥ ॥௧௬॥

அவ—நானே எல்லா உலக வடிவாகவும இருக்கிறேன் என்று சொல்லுகிறார்—

ஜ்யோதிஷ்டோமம் முதலான யாகங்களும் நான்தான் ஐந்து மஹாயக்ஞங்களும் நான்தான். பித்ருதேவதைகளை வளர்க்கிற ஸ்வதையென்பதும் நான்தான். பயிர் முதலானவைகளிலிருந்து உண்டாகிற மாவு-சோறுமுதலான ஹவிஸ்ஸும் நான்தான். ஹவிஸ்ஸைக் கொடுக்கும் காலத்தில் சொல்லுகிற மந்திரம் என்கிற சொற்களும் நான்தான். நெய்யும் நான்தான ஸோமம் முதலான ஹவிஸ்ஸும் நான்தான். இந்த ஹவிஸ்ஸை வாங்கிக் கொள்ளுகிற ஆஹவநீயம் என்கிற நெருப்பும் நான்தான். நெருப்பில் ஹவிஸ்ஸைப் போடுவதென்கிற ஹோமமும் நான்தான். [16]

𑌪𑌿𑌤𑌾𑌹𑌮𑌸𑍍𑌯 𑌜𑌗𑌤𑍋 𑌮𑌾𑌤𑌾 𑌧𑌾𑌤𑌾 𑌪𑌿𑌤𑌾𑌮𑌹𑌃।
𑌵𑍇𑌦𑍍𑌯𑌂 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌮𑍋𑌙𑍍𑌕𑌾𑌰 𑌋𑌕𑍍𑌸𑌾𑌮 𑌯𑌜𑍁𑌰𑍇𑌵 𑌚 ॥ ॥௧௭॥

𑌅𑌸𑍍𑌯 𑌸𑍍𑌥𑌾𑌵𑌰𑌜𑌙𑍍𑌗𑌮𑌾𑌤𑍍𑌮𑌕𑌸𑍍𑌯 𑌜𑌗𑌤𑌃 𑌤𑌤𑍍𑌤𑌤𑍍𑌪𑌿𑌤𑍃𑌤𑍍𑌵𑍇𑌨 𑌮𑌾𑌤𑍃𑌤𑍍𑌵𑍇𑌨 𑌧𑌾𑌤𑍃𑌤𑍍𑌵𑍇𑌨 𑌪𑌿𑌤𑌾𑌮𑌹𑌤𑍍𑌵𑍇𑌨 𑌚 𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑍋𑌽𑌹𑌮𑍇𑌵। 𑌅𑌤𑍍𑌰 𑌧𑌾𑌤𑍃𑌶𑌬𑍍𑌦𑍋 𑌮𑌾𑌤𑌾𑌪𑌿𑌤𑍃𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑌿𑌕𑍍𑌤𑍇 𑌉𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌕𑍇 𑌚𑍇𑌤𑌨𑌵𑌿𑌶𑍇𑌷𑍇 𑌵𑌰𑍍𑌤𑌤𑍇। 𑌯𑌤𑍍𑌕𑌿𑌂𑌚𑌿𑌦𑍍𑌵𑍈𑌦𑌿𑌕𑌂 𑌵𑍇𑌦𑍍𑌯𑌂 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌂 𑌪𑌾𑌵𑌨𑌂 𑌤𑌦𑌹𑌮𑍇𑌵। 𑌵𑍇𑌦𑌬𑍀𑌜𑌭𑍂𑌤𑌃 𑌪𑍍𑌰𑌣𑌵 𑌓𑌙𑍍𑌕𑌾𑌰𑌃 𑌋𑌕𑍍𑌸𑌾𑌮𑌯𑌜𑍁𑌰𑌾𑌤𑍍𑌮𑌕𑍋 𑌵𑍇𑌦𑌶𑍍𑌚𑌾𑌹𑌮𑍇𑌵 ॥ ॥௧௭॥

அசைகிறது—அசையாதது என்று இருவகையான இந்த உலகத்தில் 1 தகப்பன், தாய், இவர்களைத் தவிர ஒருவன் உண்டாவத

1. தகப்பன், தாய் முதலானவர்களுக்குள்ளே அந்தர்யாமி (உள்ளேயிருந்துவருகிறவன்) ஆய் இருந்துகொண்டுதான் [illegible]

ற்கு உதவியானவன், பாட்டன் எல்லாரும் நான்தான். ஜீவன்களுடைய தோஷத்தைப் போக்குவதாக வேதத்தாலே அறியப்படுகிறதும் நான்தான் வேதத்துக்கு ஆதாரமான பிரணவமும் நான்தான். ருக்-ஸாம-யஜுஸ்-என்கிற வேதத்தின் பிரிவுகளும் நான்தான்.

கதிர்ப்பர்த்தா ப்ரபு꞉ ஸாக்ஷீ நிவாஸஶ்ஶரணம் ஸுஹ்ருத் |
ப்ரபவப்ரளயஸ்தாநம் நிதாநம் பீஜமவ்யயம் || ||௧௮||

கம்யத இதி கதி꞉- தத்ர தத்ர ப்ராப்யஸ்தாநமித்யர்த்த꞉ பர்த்தா-போஷயிதா, ப்ரபு꞉-ஶாஸிதா, ஸாக்ஷீ-ஸாக்ஷாத் த்ரஷ்டா நிவாஸ꞉-வாஸஸ்தாநம்-வேஶ்மாதி, ஶரணம்- இஷ்டஸ்ய ப்ராபகதயா அநிஷ்டஸ்ய நிவாரணதயா ச ஸமாஶ்ரயணீயஶ்சேதநஶ்ஶரணம் ஸ சாஹமேவ | ஸுஹ்ருத்- ஹிதைஷீ| ப்ரபவப்ரளயஸ்தாநம்-யஸ்ய கஸ்யசித் யத்ர குத்ர சித் ப்ரபவப்ரளயயோ꞉ ஸ்தாநம் தத்ஸ்தாநம் ததஹமேவ| நிதாநம்-நிதீயத இதி நிதாநம் உத்பாத்யம் உபஸம்ஹார்யஞ்சாஹமேவேத்யர்த்த꞉| அவ்யயம் பீஜம்-தத்ர தத்ர வ்யயரஹிதம் யத்காரணம் ததஹமேவ || ||௧௮||

அவரவர்களுக்கு ஒவ்வொரு காலத்தில் அடையவேண்டிய இடமும் நான்தான். எல்லா வஸ்துக்களைத் தாங்குகிறவனும், எல்லாவற்றையும் அடக்கி ஆளுகிறவனும், எல்லாஸங்கதிகளையும் நேராகப் பார்க்கிறவனும், வீடு முதலான இருப்பிடமும, [illegible]டியவைகளை ஸம்பாதித்துக் கொடுப்பதற்காகவும், [illegible]வுகளைப் போக்குவதற்காகவும் ஜனங்களால் அடையப்படுகிற ஜீவனும் நான்தான். உலகத்துக்கு க்ஷேமத்தை நினைக்கிறவனும் நான்தான். உலகம் உண்டாகுமிடமும், அடங்குகிற இடமும் நான்தான். உண்டாகிற வஸ்துக்களும், அழியும் வஸ்துக்களும் நான்தான். எல்லா வஸ்துக்களையும் அழிவில்லாமலிருந்து உண்டுபண்ணுகிறதும் நான்தான். (18)

தபாம்யஹமஹம் வர்ஷம் நிக்ருஹ்ணாம்யுத்ஸ்ருஜாமி ச |
அம்ருதம் சைவ ம்ருத்யுஶ்ச ஸதஸச்சாஹமர்ஜுந || ||௧௯||

ளையும் செய்கிறான். அதாவது — தகப்பனுயிருந்து உண்டுபண்ணுகிறான், சோறாகவும், தண்ணீராகவுமிருந்து அவர்களை வளர்க்கிறான்.

அக்³ந்யாதி³த்யாதி³ரூபேணாஹமேவ தபாமி| க்³ரீஷ்மாதா³வ ஹமேவ வர்ஷம் நிக்³ருஹ்ணாமி| ததா² வர்ஷாகாலே ஸமுத்ஸ்ருஜாமி| அம்ருதம் சைவ ம்ருத்யுஶ்ச யேந ஜீவதி லோகோ யேந ச ம்ரியதே தது³ப⁴யமஹமேவ | கிம் ப³ஹுநா ஸத³ஸச்சாஹமேவ - ஸச்ச²ப்³த³நிர்தி³ஷ்டம் யத்³வர்தமாநம் வஸ்து, அஸச்ச²ப்³த³நிர்தி³ஷ்டம் யத³தீதமநாக³தம் ச ஸர்வாவஸ்தா²வஸ்தி²தசித³சித்³வஸ்துஶரீரதயா தத்ப்ரகாரோ஽ஹமேவேத்யர்த²: | ஏவம் ஸர்வப்ரகாரம் மாம் ஏகத்வேந ப்ருத²க்த்வேந ப³ஹுதா⁴வஸ்தி²தம் உபாஸதே || ||கசு||

அவ—கீழ் மூன்று சுலோகங்களாலே உலகத்தில் உயர்ந்ததாகச் சொல்லப்படுகிற யாகம் முதலான வஸ்துக்கள் பகவானுடைய அதீநம் என்று சொல்லப்பட்டது. இந்தசுலோகத்தில் அவைகளுடைய வேலைகளும் பகவானுடைய அதீந மென்று சொல்லப்படுகிறது—

நெருப்பு, ஸூரியன் முதலான வடிவாயிருந்து நானே எல்லா உலகங்களையும் தபிக்கும்படி செய்கிறேன். கோடை முதலான காலத்தில் அடியோடு மழையில்லாமல் செய்வதும் நான்தான். மழைகாலத்தில் மழைபெய்கிறதும் நான்தான். பிராணிகளுக்குப் பிழைப்பை யுண்டுபண்ணுவதும், சாவை யுண்டுபண்ணுவதும் இந்த இரண்டும் நான்தான். ஒவ்வொன்றாகச் சொல்லுவானேன். இப்போதிருக்கிற எல்லா வஸ்துக்களும் நான்தான். சென்றகாலத்தில் போனவைகளும், வருங்காலத்தில் வரப்போகிறவைகளும் நான்தான். அறிவுள்ளது அறிவில்லாதது என்று இருவகைப்பட்டவைகள் எல்லாம் எப்போதும் என் உடம்பாகையாலே, எல்லாம் எனக்குப் பிரகாரங்களாயிருக்கின்றன. இந்தமாதிரி நான்ஒருவனே பல வடிவாக இருப்பதால், எல்லாமாக இருப்பவன் நான் ஒருவன் என்று நினைத்துத் தியானம் செய்கிறார்கள். (19)

அவ—ஏவம் மஹாத்மநாம் ஜ்ஞாநிநாம் ப⁴க³வத³நுப⁴வைக போ⁴கா³நாம் வ்ருத்தமுக்த்வா, தேஷாமேவ விஶேஷம் ... அஜ்ஞாநாம் காமகாமாநாம் வ்ருத்தமாஹ —

த்ரைவித்யா மாம் ஸோமபா: பூதபாபா யஜ்ஞைரிஷ்ட்வா
ஸ்வர்கதிம் ப்ரார்த்தயந்தே | தே புண்யமாஸாத்ய ஸுரேந்த்ரலோக
மஶ்நந்தி திவ்யாந் திவி தேவபோகாந் || ||௨0||

தே தம் புக்த்வா ஸ்வர்கலோகம் விஶாலம் க்ஷீணே பு
ண்யே மர்த்யலோகம் விஶந்தி | ஏவம் த்ரயீதர்மமநுப்ர
பந்நா கதாகதம் காமகாமா லபந்தே || ||௨௧||

ருக்யஜுஸ்ஸாமரூபாஸ்திஸ்ரோ வித்யாஸ்த்ரிவித்யம் | கேவலம்
த்ரிவித்யநிஷ்டாஸ்த்ரைவித்யா:, ந து த்ரய்யந்தநிஷ்டா: | த்ரய்யந்த
நிஷ்டா ஹி மஹாத்மாந: பூர்வோக்தப்ரகாரேண நிகிலவேத
வேத்யம் மாமேவ ஜ்ஞாத்வாதிமாத்ரப்ரேமகாரிதகீர்த்தநாதிபி
ர்ஜ்ஞாநயஜ்ஞேந ச மதேகப்ராப்யா மாமேவாராதயந்தே |
த்ரைவித்யாஸ்து வேதோதிதாந் கேவலேந்த்ராதியாகஶிஷ்ட
ஸோமாந் பிபந்த: பூதபாபா: ஸ்வர்காதிப்ராப்திவிரோதி
பாபாத்பூதாஸ்ஸந்த: கேவலேந்த்ராதிதேவதாத்மநா அவ
ஸ்திதம் மாமஜாநந்தஸ்தைர்யஜ்ஞைரேவம் மாமிஷ்ட்வா, ததா
வஸ்திதம் மாமஜாநந்த: ஸ்வர்கதிம் ப்ரார்த்தயந்தே | தே பு
ண்யம் து:காஸம்பிந்நம் ஸுரேந்த்ரலோகம் ப்ராப்ய, தத்ர
திவ்யாந் தேவபோகாநஶ்நந்தி | தே தம் விஶாலம் ஸ்வர்கலோகம்
புக்த்வா தததநுபவஹேதுபூதே புண்யே க்ஷீணே பு
நரபி மர்த்யலோகம் விஶந்தி | ஏவம் த்ரய்யந்தவிஜ்ஞாந
விஹீநா: காம்யஸ்வர்காதிகாமா: கேவலம் த்ரயீதர்மமநுப்ர
பந்நா: கதாகதம் லபந்தே | அல்பாஸ்திரஸ்வர்காதீநநுபூ
ய புந:புநர்நிவர்தந்த இத்யர்த்த: || ||௨0-௨௧||

அவ—பகவானை அநுபவிப்பது ஒன்றிலேமாத்திரம் ஸா கத்க்ஷத அடைகிற—மிகவும் பெரியவர்களான—ஞானிகளுடைய நடவடிக்கையை இப்படிச் சொல்லி, அவர்கள் மிகவும் உயர்ந்தவர்கள் என்பதைத் தெரிவிப்பதற்காக, இளப்பமான பலன்களை ஆசைப்படுகிற மூடர்களுடைய நடவடிக்கையைச் சொல்லுகிறார்—

உலகத்தில் அநேகம் பேர்கள் வேதத்தில் முன்பாகத்தில் சொல்லப்படுகிற இந்திரன் முதலான தேவதைகளை மாத்திரம் குறித்துச் செய்கிற ஸோமயாகங்களில், அவர்களுக்கு ஸோமரஸத்தைக் கொடுத்து, அதின் மீதியைத் தாங்கள் சாப்பிட்டு, அதினால் ஸ்வர்க்கம் முதலானவைகளை அடைவதற்கு இடைஞ்சலான பாபங்களைப் போக்கி, ஸ்வர்க்கம் முதலான பலன்களைக் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். உண்மையில் அந்த தேவதைகளுக்கு ஆத்மாவாக இருக்கிற நான்தான் அந்த யாகங்களால் ஸந்தோஷமடைந்தேன். ஆனால் நான் ஆத்மா என்றும், நான்தான் ஸந்தோஷமடைந்தேன் என்றும், யாகம் செய்கிறவர்கள் அறிந்துகொள்ளவில்லை. அவர்கள் ஒருவித துக்கமும் கலப்பில்லாத ஸுகமுள்ள தேவலோகத்தை அடைந்து, தேவதைகள் அநுபவிக்கிற உயர்ந்த ஸுகங்களை முன்செய்த புண்ணியங்களுக்குப் பலனாக அநுபவிக்கிறார்கள். இப்படி ஸ்வர்க்கலோகத்தில் கிடைக்கும் பெரிதான ஸுகங்களை அநுபவித்து, அந்த அநுபவத்துக்குக் காரணமான புண்ணியம் செலவழிந்த பிறகு மறுபடியும் இந்த மனிதலோகத்திற்கே வருகிறார்கள். வேதத்தின் கடைசியான உபநிஷத்துக்களில் சொன்ன ஸங்கதிகளை அறியாமல், இப்படி மிகவும் இளப்பமான ஸ்வர்க்கம் முதலான பலன்களை ஆசைப்பட்டு, வேதத்தில் முன்பாகத்தில் சொன்ன தர்மங்களை மாத்திரம் செய்து, [1] அல்பமாயும் நிலையில்லாததுமான ஸ்வர்க்கம் முதலான ஸுகங்களை அநுபவித்து, திரும்பித் திரும்பி வருகிறார்கள். [20–21]

அவ— ஜ்ஞாநிநஸ்து நிரதிஶயப்ரியமச்சிந்தநைக
ப்ரயோஜநாநாம் ஸ்வாநந்யாதிஶயாநந்தம் ஸ்வயம் ததாதி
ஜ்ஞாநிநாம் தேஷாம் விஶேஷம் தர்ஶயதி—

---

1 தேவலோகத்தில் ஸுகத்தை அநுபவிக்கும்போது, அது அதைக்காட்டிலும் மேலான பிரும்மா முதலானவர்களுடைய ஸுகங்களை நினைக்கும்போது, கொஞ்சமாயிருப்பதாலே, துக்கமாகத் தோன்றும். அது நிலையில்லாதிருப்பதை நினைக்கும்போது, இன்னம் துக்கமாயிருக்கும். அது முடியும்போது மிகவும் துக்கமாயிருக்கும். பிறகு ஏற்றச்சால்போல் போவது வருவது, திரும்பிவந்து கர்ப்பத்தில் இருப்பது, வியாதியினால் கஷ்டப்படுவது, நரகத்தில் கஷ்டத்தை அநுபவிப்பது இவை முதலான கஷ்டங்களைச் சொல்லிமுடியாது.

𑌅𑌨𑌨𑍍𑌯𑌾𑌶𑍍𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌨𑍍𑌤𑍋 𑌮𑌾𑌂 𑌯𑍇 𑌜𑌨𑌾𑌃 𑌪𑌰𑍍𑌯𑍁𑌪𑌾𑌸𑌤𑍇 ।
𑌤𑍇𑌷𑌾𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌭𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌯𑍋𑌗𑌕𑍍𑌷𑍇𑌮𑌂 𑌵𑌹𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ॥

𑌅𑌨𑌨𑍍𑌯𑌾𑌃- 𑌅𑌨𑌨𑍍𑌯𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑌾𑌃- 𑌮𑌚𑍍𑌚𑌿𑌨𑍍𑌤𑌨𑍇𑌨 𑌵𑌿𑌨𑌾𑌤𑍍𑌮𑌧𑌾𑌰𑌣𑌾𑌲𑌾𑌭𑌾𑌤𑍍 𑌅𑌨𑌨𑍍𑌯𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑌾 𑌮𑌾𑌂 𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌨𑍍𑌤𑍋 𑌯𑍇 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑍋 𑌜𑌨𑌾𑌃 𑌪𑌰𑍍𑌯𑍁𑌪𑌾𑌸𑌤𑍇 - 𑌸𑌰𑍍𑌵𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌗𑍁𑌣𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌂 𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌮𑌾𑌂 𑌪𑌰𑌿𑌤 𑌉𑌪𑌾𑌸𑌤𑍇-𑌅𑌨𑍂𑌨𑌮𑍁𑌪𑌾𑌸𑌤𑍇 । 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌭𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂-𑌮𑌯𑌿 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌭𑌿𑌯𑍋𑌗𑌂 𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑌮𑌾𑌣𑌾𑌨𑌾𑌮𑍍, 𑌅𑌹𑌂 𑌮𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌯𑍋𑌗𑌮𑍍, 𑌅𑌪𑍁𑌨𑌰𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑍂𑌪𑌂 𑌕𑍍𑌷𑍇𑌮𑌂 𑌚 𑌵𑌹𑌾𑌮𑌿 ॥ ॥௨௨॥

அவ—கீழ்ச் சொன்ன பெரியோர்களாரென்றால், அளவில்லாத ஸுகமான என்னுடைய தியானத்தைச் செய்து, அளவில்லாத ஆநந்தமான என்னை அடைந்து, மறுபடியும் இந்த ஸம்ஸாரத்திற்குத் திரும்பி வருகிறதில்லை என்று அவர்களுடைய 1 பெருமையைக் காண்பிக்கிறார்—

பெரியோர்கள் ஒரு விநாடிகூட என்னை நினைக்காத போனால் தாங்காமல், என்னை நினைப்பதையே எல்லாவற்றைக் காட்டிலும் உயர்க்கப் பிரயோஜநமாக எண்ணி, எல்லா உயர்ந்த குணங்களோடும், எல்லா ஸொத்துக்களோடுங்கூடின என்னை ஒன்றையும் விடாமல் தியானம் செய்கிறார்கள். எப்போதும் என்னுடனே இருக்கவேணுமென்று ஆசைப்பட்டுக் கொண்டிருக்கிற அவர்களை நான் என்னிடம் 2 அழைத்துக் கொண்டு, அளவில்லாத ஸுகத்தைக் கொடுத்து, அந்த ஸுகத்திற்கு ஒரு குறைவும் வராதபடி பண்ணுகிறேன். [22]

1. அந்தப்பெருமைக்கு இரண்டு காரணம்—1 அவர்கள் செய்யும் உபாயமும் ஸுகமாயிருப்பது. 2 அவர்கள் அடையும் பலனும் அழிவில்லாததும், ஒருவிதக்குற்றமில்லாததும், அளவில்லாததுமான ஆநந்தமாயிருப்பது.

2. சுலோகத்தில் "யோகக்ஷேமம்" என்ற சொல் இருக்கிறது. யோகம் என்றால் புதிதாய் ஒன்றைக் கொடுப்பது. க்ஷேமம் என்றால், அதைக் குறைவில்லாமல் காப்பாற்றுகிறது. மோக்ஷத்தை ஆசைப்பட்ட

யே(அ)ப்யந்யதேவதாபக்தா யஜந்தே ஶ்ரத்தயாந்விதா: |
தே(அ)பி மாமேவ கௌந்தேய யஜந்த்யவிதிபூர்வகம் || ௨௩ ||

யே த்விந்த்ராதிதேவதாபக்தா: கேவலத்ரயீநிஷ்டா: ஶ்ரத்தயாந்விதா: இந்த்ராதீந் யஜந்தே, தே பூர்வோக்தேந ந்யாயேந ஸர்வஸ்ய மச்சரீரதயா மதாத்மகத்வேந இந்த்ராதிஶப்தாநாம் ச மத்வாசித்வாத் வஸ்துதோ மாமேவ யஜந்தே | அபி த்வவிதிபூர்வகம் யஜந்தே - இந்த்ராதீநாம் தேவதாநாம் க்ரதுஷ்வாராத்யதயா அந்வயம் யமாவேதயந்தி 'சதுர்ஹோதாரோ யத்ர ஸம்பதம் கச்சந்தி தேவை:' இத்யாதீநி விதிப்ரதி; ந தத்வேதநேந யஜந்தே | வேதாந்தவாக்யஜாதம் ஹி பரமபுருஷஶரீரதயா அவஸ்திதாநாமிந்த்ராதீநாமாராத்யத்வம் விதததாத்மதயா அவஸ்திதஸ்ய பரமபுருஷஸ்யைவ ஸாக்ஷாதாராத்யத்வம் விததாதி | சதுர்ஹோதாரோ அக்நிஹோத்ரதர்ஶபூர்ணமாஸாதய: கர்மாணி, யத்ர பரமாத்மநி ஆத்மதயா அவஸ்திதே ஸத்யேவ தச்சரீரபூதேந்த்ராதிதேவை: ஸம்பதம் கச்சந்தி - இந்த்ராதிதேவாநாமாராத்யதயா கர்மாணி ஸம்பந்நாநி பவந்தீத்யர்த்த: || ௨௩ ||

அவ—எல்லா தேவதைகளும் பகவானுக்கு உடம்புகள் தானே. ஆகையால் 20-வது ச்லோகத்தில் சொன்னபடி யாகம் செய்கிறவர்கள் பகவானைத்தானே ஸந்தோஷப் படுத்துகிறார்கள். இது பகவானுக்குத் தெரியுமே. அவர்களுக்கும் ஏன் பகவான் மோக்ஷத்தைக் கொடுத்து, அதைக் குறைவில்லாமல் காப்பாற்றக் கூடாது? என்றால், பதில் சொல்லுகிறார்—

இந்திரன் முதலான தேவதைகளிடத்தில் பக்தியுள்ளவர்களாய், வேதத்தில் முன் பாகத்தில் சொல்லிய கர்மங்களை மாத்தி

வர்களுக்கு வேறு ஸாதகங்களைக் கொடுத்து, அவைகளைக்காப்பாற்றுவது நியாயமில்லை. ஆகையால் இங்கே யோகம் என்கிற சொல்லுக்கு பகவானை அடையும்படி செய்வதும், க்ஷேமம் என்கிற சொல்லுக்கு அதற்குக் குறைவு வராமல் செய்வதும்--என்றுதான் பொருள் கொள்ளவேணும்.

நம் சிரத்தையோடு செய்து, அவர்களை மாத்திரம் அவர்கள் ஸந்தோஷப்படுத்துகிறார்களோ, அவர்களும் என்னைத்தான் ஸந்தோஷப்படுத்துகிறார்கள். ஏனென்றால், அந்த இந்திரன் முதலான தேவதைகள் என்னுடைய உடம்புகள், நான் அவர்களுக்கு ஆத்மா. அவர்களைச் சொல்லும் சொற்களுக்கும் நானே பொருள். ஆனால் அந்தக் கர்மங்கள் எனக்குப் பூஜையென்றும், அவைகளால் நானே தான் ஸந்தோஷப்படுகிறேன் என்றும் அவர்கள் அறியவில்லை. உபநிஷத்து இந்திரன் முதலான தேவதைகளுக்கு கர்மங்கள் பூஜையாகும் விதத்தை எப்படிச் சொல்லுகின்றனவோ, அதைத் தெரிந்து அவர்கள் பூஜை செய்யவில்லை. உபநிஷத்துக்கள்-அந்தக் கர்மங்கள் பகவானுக்கு உடம்பான இந்திரன் முதலானவர்களுக்குப் பூஜையாயிருக்கின்றன; ஆகையால் அவர்களுக்கு ஆத்மாவான பகவானுடைய 1 பூஜையாகத்தான் ஆகிறது—என்று சொல்லுகிறது. [23]

अव— [illegible] इन्द्रादिशरीरस्य परमपुरुषस्य आराधनान्येतानि कर्माणि आराध्यश्च स एवेति न जानन्ति, तेन परिमितफलभागिनश्च्यवनस्वभावाश्च भवन्ति । तथाह—

अहं हि सर्वयज्ञानां भोक्ता च प्रभुरेव च ।
न तु मामभिजानन्ति तत्त्वेनातश्च्यवन्ति ते ॥ [௨௪]

[illegible] ॥ [௨௪]

அவ—ஆகையால் கீழ்ச்சொல்லியபடி வேதத்தினுடைய முன் பாகத்தில் சொல்லிய கர்மங்களைச் செய்கிறவர்கள் ஜ்யோதிஷ்டோமம் முதலான கர்மங்கள் இந்திரன் முதலான தேவதைகளுக்கு ஆத்மாவாயிருக்கிற பகவானுடைய பிரீதியை யுண்டுபண்ணுகிறவைகள்; இந்தக் கர்மங்களால் பகவான் தான் பிரீதியை அடைகிறான் என்று அறியவில்லை. அதனால் அந்தக் கர்மங்களால்

1. கலெக்டர் சேவகன் நம்முடைய வீட்டிற்கு வந்தால், அவனுக்கு மரியாதை கலெக்டரிடத்தில் கௌரவத்தினால் பண்ணுகிறோம். அவனுக்குப் பண்ணுகிற மரியாதை கலெக்டருடையதுதான். அதுபோல.

கொஞ்சமாயும் நிலையில்லாதவைகளாயுமிருக்கிற பலன்களை அடைகிறார்கள் அடிக்கடி ஸம்ஸாரத்திற்குத் திரும்பியும் வருகிறார்கள் என்று சொல்லுகிறார்—

இந்திரன் முதலானவர்களை மாத்திரம் உத்தேசித்துப் பண்ணப்பட்ட யாகங்களுக்கும் 1 நான்தான் பலன் கொடுக்கிறேன். அவைகளால் ஸந்தோஷமடைகிறவனும் நான்தான். [24]

[illegible]

யாந்தி தேவவ்ரதா தேவாந் பித்ரூந் யாந்தி பித்ருவ்ரதா: ।
பூதாநி யாந்தி பூதேஜ்யா யாந்தி மத்யாஜிநோऽபி மாம் ॥

[illegible]

1. இந்திரன் முதலானவர்களை மாத்திரம் ஸந்தோஷப் படுத்துகிறேமென்று நினைத்துச் செய்யப்பட்ட கர்மங்களுக்கும், என்னுடைய ஆராதனம் என்று நினைத்துச் செய்யப்பட்ட கர்மங்களுக்கும் நான்தான் பலன் கொடுக்கிறேன். அவைகளுக்குப் பலன் கொடுக்கிறவன் வேறு; இவைகளுக்குப் பலன் கொடுக்கிறவன் வேறு என்று எண்ணக்கூடாது.

[illegible] ॥ ॥உரு॥

அவ—இதென்ன பெரிய ஆச்சரியம்! ஒரே வேலையை இரண்டு பேர்கள் செய்கிறார்கள். அவர்களுடைய நினைவின் தாரதம்மியத்தினால், ஒருவன் மிகவும் கொஞ்சமான நிலையில்லாத பலனை அடைந்து, மறுபடியும் பூமியில் பிறக்கிறான். மற்றொருவன் எல்லையில்லாமல் உயர்த்தியுள்ள—அழிவில்லாத—மஹாநந்தமான பரம புருஷனென்கிற பிரயோஜநத்தை அடைந்து, மறுபிறப்பில்லாமல் இருக்கிறானென்று சொல்லுகிறார்—

தர்சம், பூர்ணமாஸம் முதலான கர்மங்களாலே இந்திரன் முதலான தேவதைகளை ஸந்தோஷப் படுத்துகிறேன் என்று நினைத்து, எவர்கள் அந்தக் கர்மங்களைச் செய்கிறார்களோ, அவர்கள் இந்திரன் முதலான தேவதைகளிடம் போகிறார்கள். அதே மாதிரி பித்ருக்களையும், யக்ஷர்கள், ரக்ஷஸ்ஸுக்கள், பிசாசங்கள் முதலான பிராணிகளையும் உத்தேசித்து, அந்தந்தக் கர்மங்களைச் செய்கிறவர்கள் அவரவர்களிடம் போகிறார்கள். எவர்கள் அந்தக் கர்மங்களாலேயே இந்திரன் முதலான தேவதைகளுக்கும், பிதருக்களுக்கும், யக்ஷஸ்ஸு முதலான பூதங்களுக்கும் ஆத்மாவான பகவானான வாஸுதேவனை ஸந்தோஷப் படுத்துகிறோம் என்று நினைத்து, அந்தக்கர்மங்களைச் செய்கிறார்களோ, அவர்கள் என்னிடம் வருகிறார்கள். தேவர் முதலானவர்களை அடைந்தவர்கள் அவர்களுடனேகூட கொஞ்ச ஸுகத்தை அநுபவித்து, அவர்கள் சாகிறபோது அவர்களுடன்கூடச் சாகிறார்கள். என்னை ஸந்தோஷப்படுத்துகிறவர்கள் [1] பிறப்பும சாவுமில்லாத—எல்லாம்

1. மற்றவர்கள் ஏன் திரும்பிவருகிறார்கள் என்றால், அவர்கள்அடையும் தேவதைகளுக்கு அழிவுண்டு. அவர்களுக்குத் தங்கள் இடத்தில் நிலையாயிருப்பதற்கு இடஞ்சல் இன்னதென்று தெரியாது. தெரிந்தாலன்றோ போக்கலாம். போக்க சக்தியும் கிடையாது. பகவானுக்கோ அழிவில்லை. அவன் எல்லாம் அறிந்தவன். அவனுக்கு ஒரு கஷ்ட

தெரிந்த— நினைத்தபடி நடத்துகிற-ஸமுத்திரத்தில் ரத்னங்கள் போல அளவில்லாமல் உயர்ந்த-கணக்கில்லாத-நல்ல குணங்கள் கூட்டம் கூட்டமாய் இருக்கிற-அளவில்லாத ஆநந்தமான-என்னை அநுபவித்துத் திருப்புகிறதில்லை. [25]

𑌅𑌵𑌃— 𑌮𑌦𑍍𑌯𑌾𑌜𑌿𑌨𑌾𑌮𑌪𑌿 𑌵𑌿𑌶𑍇𑌷𑍋𑌽𑌸𑍍𑌤𑍀𑌤𑍍𑌯𑌾𑌹—

𑌪𑌤𑍍𑌰𑌂 𑌪𑍁𑌷𑍍𑌪𑌂 𑌫𑌲𑌂 𑌤𑍋𑌯𑌂 𑌯𑍋 𑌮𑍇 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌪𑍍𑌰𑌯𑌚𑍍𑌛𑌤𑌿 ।
𑌤𑌦𑌹𑌂 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑍁𑌪𑌹𑍃𑌤𑌮𑌶𑍍𑌨𑌾𑌮𑌿 𑌪𑍍𑌰𑌯𑌤𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ॥ ॥௨௬॥

𑌸𑌰𑍍𑌵𑌸𑍁𑌲𑌭𑌂 𑌪𑌤𑍍𑌰𑌂 𑌵𑌾 𑌪𑍁𑌷𑍍𑌪𑌂 𑌵𑌾 𑌫𑌲𑌂 𑌵𑌾 𑌤𑍋𑌯𑌂 𑌵𑌾 𑌯𑍋 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌮𑍇 𑌪𑍍𑌰𑌯𑌚𑍍𑌛𑌤𑌿-𑌅𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌮𑌤𑍍𑌪𑍍𑌰𑌿𑌯𑌤𑍍𑌵𑍇𑌨 𑌤𑌦𑍍𑌦𑌾𑌨𑍇𑌨 𑌵𑌿𑌨𑌾𑌤𑍍𑌮𑌧𑌾𑌰𑌣𑌾𑌸𑌂𑌭𑌾𑌵𑌨𑌤𑌯𑌾 𑌤𑌦𑍇𑌕𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑍋 𑌯𑍋 𑌮𑍇 𑌪𑌤𑍍𑌰𑌾𑌦𑌿𑌕𑌂 𑌦𑌦𑌾𑌤𑌿, 𑌤𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌯𑌤𑌾𑌤𑍍𑌮𑌨𑌸𑍍𑌤𑌦𑍍𑌦𑌾𑌨𑍈𑌕𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑌤𑍍𑌵𑌰𑍂𑌪𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑌨𑌸𑌃 𑌤𑌤𑍍—𑌤𑌥𑌾𑌵𑌿𑌧𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑍁𑌪𑌹𑍃𑌤𑌂, 𑌅𑌹𑌂 𑌸𑌰𑍍𑌵𑍇𑌶𑍍𑌵𑌰𑍋 𑌨𑌿𑌖𑌿𑌲𑌜𑌗𑌦𑍁𑌦𑌯𑌵𑌿𑌭𑌵𑌲𑌯𑌲𑍀𑌲𑌃 𑌅𑌵𑌾𑌪𑍍𑌤𑌸𑌮𑌸𑍍𑌤𑌕𑌾𑌮𑌃 𑌸𑌤𑍍𑌯𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑍋𑌽𑌨𑌵𑌧𑌿𑌕𑌾𑌤𑌿𑌶𑌯𑌾𑌸𑌙𑍍𑌖𑍍𑌯𑍇𑌯𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌗𑍁𑌣𑌗𑌣𑌃 𑌸𑍍𑌵𑌾𑌭𑌾𑌵𑌿𑌕𑌾𑌨𑌵𑌧𑌿𑌕𑌾𑌤𑌿𑌶𑌯𑌾𑌨𑌨𑍍𑌦𑌸𑍍𑌵𑌾𑌨𑍁𑌭𑌵𑍋𑌽𑌪𑌿 𑌮𑌨𑍋𑌰𑌥𑌪𑌥𑌦𑍂𑌰𑌂 𑌪𑍍𑌰𑌿𑌯𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍋 𑌭𑌵𑌾𑌮𑌿 । 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌂 𑌮𑍋𑌕𑍍𑌷𑌧𑌰𑍍𑌮𑍇 "𑌯𑌾𑌃 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌃 𑌸𑌂𑌪𑍍𑌰𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌃 𑌸𑍍𑌯𑍁𑌰𑍇𑌕𑌾𑌨𑍍𑌤𑌗𑌤𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌭𑌿𑌃 । 𑌤𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌃 𑌶𑌿𑌰𑌸𑌾 𑌦𑍇𑌵𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌗𑍃𑌹𑍍𑌣𑌾𑌤𑌿 𑌵𑍈 𑌸𑍍𑌵𑌯𑌮𑍍" 𑌇𑌤𑌿 ॥

அவ—என்னைப் பூஜிப்பவர்களுக்கு இன்னொரு விசேஷமும் இருக்கிறதென்று சொல்லுகிறார்—

எல்லாருக்கும் ஸுலபமாக அகப்படக் கூடியதான இலையையோ, அல்லது பூவையோ, அல்லது பழத்தையோ, அல்லது ஜலத்

த்தையும் போக்க சக்தியுள்ளவன். ஆகையால் அவனிடம் போனவர்கள் திரும்பி வருவதில்லை. அவனிடத்தில் போனவர்கள் அடையும் ஸுகத்திற்கு அளவில்லை. பகவான் ஒருவனுக்கும் உட்படாதவனாகையாலே, திருப்பி விடவேண்டுமென்கிற ஸந்தேஹமும் வேண்டியதில்லை. "பக்தர்களைத் திருப்பி அனுப்புகிறதில்லை" என்கிற எண்ணத்தையும் தவறாமல் நிறைவேற்றுகிறவன்.

தையோ, 1 எவன் 2 பக்தியுடன் கொடுக்கிறானோ, 3 நல்ல மனதுடன் மிகுந்த பிரீதியோடு கொடுக்கப்பட்ட அதை எனக்கு நெடுநாளாய் ஆசைப்பட்டுக்கிடைக்காமலிருந்து கிடைத்ததுபோலும், ஒருக்காலும் கிடைக்காதது கிடைத்ததுபோலும் ஸந்தோஷப்பட்டு, சாப்பிடுகிறேன். அதாவது—அதைத் தகுந்தபடி அநுபவிக்கிறேன். பக்தியோடு கொடுப்பதாவது—என்னிடத்தில் அளவில்லாத பிரீதியாலே அதை எனக்குக் கொடுக்காவிட்டால் ஆத்மா தாங்காமல், அதினால் ஒரு காரியம் ஆகவேணுமென்று நினைக்காமல், கொடுப்பதையே பிரயோஜநமாக எண்ணிக் கொடுப்பது. 4 நான் எல்லா உலகங்களுக்கும் மஹாராஜாவாயும், எல்லா உல

---

1. "எவன்" என்று பொதுவாய்ச் சொன்னதாலே, குற்றம்பண்ணினவனோ, குற்றம் பண்ணாதவனோ, கெட்டிக்காரனோ, மூட்டாளோ என்கிற பிரிவுகளைப் பகவான் பார்க்கிறதில்லையென்று காட்டப்படுகிறது.

2 இதனால் ஒரு பலனை அடைவதையும், ஒரு தோஷத்தைப் போக்குவதையும் நினைக்காமல் கொடுக்க வேண்டியதென்று காட்டப்பட்டது.

3 மனதுக்கு நன்மையாவது—அவைகளைக் கொடுப்பதையே பிரயோஜநமாக நினைக்கையாகிற தெளிவுள்ளதாயிருக்கை. சுலோகத்தில் "பிரயத" என்ற சொல் இருக்கிறது. அதற்கு சுத்தமான என்று பொருள். சுத்தியாவது—புண்ணியமான வேலைகளைச் செய்யும்போதும், அவைகளால் மோக்ஷம் தவிர வேறு பலனை அடைய வேணுமென்று எண்ணாமை.

4 மிகவும் இளப்பமான இலைமுதலான வஸ்துக்கள்பகவானுக்குத் தகுந்தவைகளன்று என்று காட்டுவதற்காக, சுலோகத்தில் "நான்" என்கிற சொல் அவன்பெருமையைச் சொல்லுகிறதென்று ஸ்ரீபாஷ்யகாரர் சொல்லுகிறார். (1) இந்திரன் முதலான தேவதைகள் தங்களுடைய சக்தி வளருவதற்காக யாகங்களில் கொடுக்கிற ஹவிஸ்ஸுக்களைப்பெற்றுக் கொள்ளுகிறார்கள்; மனிதன் சோறு தின்பதுபோல பகவான் அப்படியன்று. அவன் எல்லா லோகங்களையும் எப்போதும் அடக்கி ஆளுகிற சக்தியுள்ளவன். அதை வளர்க்க வேண்டியதில்லை. இயற்கையாகவே இருக்கிறது. (2) யாரும் அவனால் உண்டுபண்ணப்பட்டவைகளைத்தான் அவனுக்குக் கொடுக்கிறார்கள். கொடுப்பதற்கு முன்பும் அவனதுதான்

கங்களையும் நினைத்த மாத்திரத்தாலே விளையாட்டாக உண்டு பண்ணி, காப்பாற்றி, அழிக்கிறவனாயும், நினைத்தமாத்திரத்தில் எல்லா பதார்த்தங்களையும் அடையக் கூடியவனாயும், நினைத்தபடி நடத்துகிறவனாயும், அளவில்லாமல் உயர்ந்த கணக்கில்லாத நல்ல குணங்களைக்கூட்டம் கூட்டமாயுடையவனாயும், அளவில்லாமல் உயர்ந்த-இயற்கையாயிருக்கிற-ஆநந்த ரூபமான-என்னை அநுபவித்துக் கொண்டிருப்பவனாயு மிருந்தபோதிலும், அவன் கொடுத்ததைப் பெற்றுக் கொண்டு அளவில்லாத ஸந்தோஷத்தை யடைகிறேன். மஹாபாரதத்தில் மோக்ஷதர்மத்தில் அப்படியே சொல்லியிருக்கிறது—பகவானைத் தவிர வேறு தேவதையையும், பகவானிடத்திலும் அவனைத் தவிர வேறு பிரயோஜனத்தையும் நினைக்காதவர்கள் அவனை உத்தேசித்து எந்த வேலைகளைச்செய்தாலும்,

---

அவைகள். (3) யார் எதைக் கொடுத்தாலும், அது அவனுக்கு வேண்டியதில்லை. அவன் எல்லாம் நிறைந்தவன். (4) உலகத்தில் ஒருவனால் அடையமுடியாத வஸ்துவை அவனுக்கு மற்றொருவன் கொடுத்தால், அதை ஸந்தோஷமாக வாங்கிக் கொள்ளுவன். நினைத்தமாத்திரத்தில் எல்லா காரியத்தையும் முடிக்கக்கூடிய பகவானால் அடைய முடியாதது ஒன்றுமில்லை. (5) ஒருவனுக்கு ஸந்தோஷக் குறைவு இருந்தால், ஒன்றைக்கொடுத்து அந்த ஸந்தோஷக் குறையைத்தீர்க்கலாம். பகவானோ, அவனுடைய ஸ்வரூபத்தையும், குணங்களையும் பார்த்து, அளவில்லாத ஆநந்தத்தை அநுபவிக்கிறான். அவனுக்கு ஒருவர் கொடுக்கிற பதார்த்தங்களால் என்ன அதிக ஸந்தோஷமுண்டாகப் போகிறது (6) பகவானுக்கு இவ்விதமான ஆநந்தம் நேற்று இருந்தது, இன்றைக்கு இல்லையென்றால், அதை மறுபடியும் வருவிப்பதற்காக ஏதாவதொன்றைச் செய்ய வேண்டும் அவனுக்கு இருக்கும் ஆநந்தமோ ஒரு நாளும் போகக் கூடியதல்ல. இயற்கையாகவே யிருக்கிறது. இப்படி எந்த விதத்தாலும் ஒரு பதார்த்தத்தாலும் பகவானுக்கு ஆகவேண்டியதொன்றுமில்லை. இப்படி யிருந்த போதிலும், கையாலாகாத பசித்தவன் எங்கே கஞ்சி வருகிறதென்று எதிர்பார்த்து, வந்ததை ஆவலுடன் எப்படி வாங்கிக் கொள்ளுவனோ, அப்படி பக்தன் கொடுத்த எதையும் ஆவலுடன் பகவான் பெற்றுக் கொள்ளுகிறான். அவனுக்குப் பதார்த்தம் பெரிதன்று. பக்திதான் வேண்டியது—என்று "நான்" என்கிற சொல்லாலே காட்டப்பட்டது.

அந்த லீலைகளை அவன் 5 தானுகவே தலைபாலே வணங்கிப் பெற்றுக்கொள்ளுகிறான்—என்று. 6 [26]

---

5 பகவானுக்குக் கொடுக்கவேண்டிய வஸ்துக்கள் அகப்படாமல், ஒருவன் இலைமுதலானவைகளைச் சாப்பிடவேணுமென்று கொடுத்தால், அதைப் பகவான் அம்ருதத்துக்கு மேற்பட்டதாக நினைத்துச் சாப்பிடுவன். இப்படி பகவான் செய்வதற்கு பக்தன் "சாப்பிடத்தக்க வஸ்துக்கள் கொடுப்பதற்கு இல்லையே, இலையைச் சாப்பிடச் சொல்லவேண்டியிருக்கிறதே" என்று அளவில்லாமல் வருத்தப் படவேண்டியது. துர்வாஸ மஹருஷி இருபத்தைந்து நாழிகைக்குப் பலபேர்களுடன் வந்து, தர்மபுத்திரனை ஆஹாரம் போடவேணுமென்று கேட்டபோது, த்ரௌபதி பகவானைப் பிரார்த்திக்க, அக்ஷயபாத்திரத்தில் ஒட்டியிருந்த சிறு கீரையினால் பகவான் ஸந்தோஷமடைந்தானும். அப்படியே கஜேந்த்ராழ்வான் கொடுத்த புஷ்பத்தினாலும், சபரியென்ற வேடச்சி கொடுத்த பழத்தாலும், குசேலர் கொடுத்த அவலினாலும் அளவில்லாத ஸந்தோஷத்தை அடைந்தான்.

6 11-வது ச்லோகம் முதல் இந்த ச்லோகம் வரையில் ஞானிகளின் பெருமையைக் காட்டுவதற்காக, மற்றவர்களின் இளப்பம் சொல்லப் பட்டது. அவர்கள் மூன்று ஸங்கதிகளால் இளப்பமானவர்கள். (1) பகவானை உள்ளபடி அறியாமல், அவனுடைய மனித உருவத்தைப்பார்த்து அலக்ஷியம் பண்ணுகிறார்கள். இது 7-வது அத்தியாயம் 24-வது ச்லோகத்தில் சொல்லப்பட்டது. இங்கே அதிகமாய்ச் சொல்லுவது என்னவென்றால், அவர்கள் என்ன வேலைகளை ஆரம்பித்தாலும், முடிவிற்கு வரமாட்டாது. முடிவுக்கு வந்தாலும், பலன் கிடைக்காது—என்பது. இது 12-வது ச்லோகத்தில் சொல்லப்பட்டது (2) அவர்கள் ஸ்வர்க்கம் முதலான தாழ்ந்தபலன்களை அடையவேணுமென்று ஆசைப்பட்டு, பகவானுடைய உடம்புகளான தேவதைகளை மாத்திரம் ஸந்தோஷப்படுத்துகிறார்கள் என்றும், அவர்கள் அடையும் பலன்கள் கொஞ்சம் என்றும் 7-வது அத்தியாயத்தில் 20-வது ச்லோகம் முதல் நான்கு ச்லோகங்களால் சொல்லப்பட்டது. இங்கே அதுவே 20—21-வது ச்லோகங்களில் சொல்லப்பட்டது. இவர்கள் செய்யும் யாகங்களையே ஞானிகள் செய்து பகவானிடம்போய், ஸம்ஸாரத்திற்குத் திரும்பி வருகிறதில்லையென்றும், இப்படி பகவான் அவரவர்களின் நினைவுக்குத் தக்கபடி ஒரே மாதிரி கர்மங்களுக்கே வெவ்வேறு பலன்களைக் கொடுக்கிறான் என்றும் காட்டுவது அதிகமான ஸங்கதி. (23—24—25 ச்லோகம்) (3) ஞானிகளைத் தவிர மற்றவர்கள்-வேதத்தில் எந்த எந்த பதார்த்தங்களைக்கொண்டு தேவதைகளை ஸந்தோஷப்படுத்த வேணுமென்று சொல்லியிருக்கிறதோ, அவைகளையே தேடிக்கொடுக்க வேண்டியது. அவைகள்

[illegible]

𑌯𑌤𑍍𑌕𑌰𑍋𑌷𑌿 𑌯𑌦𑌶𑍍𑌨𑌾𑌸𑌿 𑌯𑌜𑍍𑌜𑍁𑌹𑍋𑌷𑌿 𑌦𑌦𑌾𑌸𑌿 𑌯𑌤𑍍 |
𑌯𑌤𑍍𑌤𑌪𑌸𑍍𑌯𑌸𑌿 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌤𑌤𑍍𑌕𑍁𑌰𑍁𑌷𑍍𑌵 𑌮𑌦𑌰𑍍𑌪𑌣𑌮𑍍 || ||27||

[illegible]

அகப்படாவிட்டால, எதைப் பதார்த்தங்களை அவைகளுக்குப் பதிலாக (பிரதிநிதி) வைத்துக் கொள்ளலாம் என்று சொல்லி யிருக்கிறதோ, அவைகளையே ஸம்பாதிக்க வேணும். ஞானிகளுக்கு அப்படி ஒருவிதக் கட்டுப்பாடில்லை. அவர்கள் எதைக் கொடுத்தாலும், பகவான் பெற்றுக் கொள்ளுகிறான். சுலோகத்தில் சொன்ன இலை முதலானவைகளையெல்லாம் சேர்த்துக் கொடுக்க வேண்டியது என்று பொருளல்ல. ஏதாவதொன்றைக் கொடுத்தால் போதும். இப்படியே—பூர்ண கும்பத்தை (ஜலம் நிறைந்த குடத்தை) க்காட்டுவதையும், திருவடியில் தீர்த்தத்தைச் சேர்ப்பதையும், "ஸௌக்கியமாய்வந்தீரா" என்று கேட்பதையும் தவிர, பகவான் வேறொன்றையும் விரும்புகிறதில்லை என்று சொல்லி யிருக்கிறது. பகவான் அவ்வளவு ஸுலபனாயிருக்கிறான். ஞானிகளுக்கும் மற்றவர்களுக்கும் அடைய வேண்டிய பலன்களில் வித்தியாஸமிருப்பது போல, செய்ய வேண்டிய உபாயத்திலும்வித்தியாஸம் இருக்கிறதென்று இந்த சுலோகம் சொல்லுகிறது. ஞானிகளுக்கு வரும் பலன் எல்லா விதத்தாலும் உயர்ந்தது. மற்றவர்களுக்கு வரும் பலன் எல்லா விதத்தாலும் தாழ்ந்தது. ஞானிகள் செய்யும் உபாயம் மிகவும் லகுவானது. மற்றவர்கள் செய்யும் உபாயம் மிகவும் கஷ்டமானது.

[illegible] இதி || ||௨௭||

அவ—ஞானிகள் என்கிற பெரியோர்களுடைய பெருமையை என்னால் கூட மனதால் நினைக்கவும், வாயால் சொல்லவும் முடியாது. ஆகையால் நீயும் ஞானியாக ஆகி, கீழே சொன்னபடி பக்தி தயங்காமல், நீயும் உன்னைச்சேர்ந்தவர்களும் என்னை வணங்கி, வாயால் என் பெயர்களைச்சொல்லி, உடம்பினால் என்னை நமஸ்காரம் பண்ணுவது முதலான வேலைகளைச் செய்துகொண்டு, சாப்பிடுவது முதலான உகைத்தைச்சேர்ந்த வேலையையோ, வேதத்தில் சொல்லிய ஸந்தியாவந்தநம் முதலான நித்தியம்-நைமித்திகம் என்று சொல்லப்படுகிற கர்மங்களையோ, எல்லாவற்றையும் நான் மேல்சொல்லப் போகிறபடி செய் என்று சொல்லுகிறார்—

1 சாப்பாட்டுக்காக பணம் ஸம்பாதிப்பது முதலான வேலைகளையும், உடம்பு இருப்பதற்காகச் சாப்பிடுவது முதலான வேலைகளையும், வேதத்தில் சொல்லிய ஹோமம், தானம், தபஸ்ஸு முதலான நித்திய நைமித்திகங்களையும், அதாவது எல்லாவற்றையும், நீ என்னிடத்தில் கொடு. யாகம்-தானம் முதலான கர்மங்களினாலே ஸந்தோஷத்தை அடைகிற தேவதைகளும், கர்மங்களைச் செய்து ஸுகத்தை அநுபவிக்கிற நீயும் என்னுடைய ஸொத்து. எல்லாஉலகங்களுடைய ஸ்வரூபமும், இருப்பும், வேலைகளும்என் அதீனமாய் இருக்கின்றன. ஆகையால் எல்லா உலகங்களுக்கும் உயர்ந்தசேஷி (பாத்யஸ்தன்) ஆயும், எல்லா வேலைகளையும் நடத்திவைக்கிறவனாயும் இருக்கிறேன். வேலை செய்து தேவதைகளை

1, ஞானிகளுடைய பெருமை சொல்லப்பட்டது. மேலே பக்தியோகத்தைச் சொல்லுவதற்காக அதற்கு உதவியான நினைவு விதிக்கப்படுகிறது. இது 3-வது அத்தியாயத்தில் 30-வது சுலோகத்தில் முன்பே சொல்லப்பட்டது. அந்த இடத்தில் கர்மயோகத்திற்கு உதவியாகச் சொல்லிற்று. இங்கே பக்தியோகத்துக்குஉதவியாகச்சொல்லப்படுகிறது.

ஸந்தோஷப்படுத்தி. ஸுகத்தை அநுபவிக்கிற உன்னையும், ஸந்தோஷப்படுத்தப்பட்ட எல்லா தேவதைகளையும், ஸந்தோஷத்தையுண்டுபண்ணுகிற எல்லாவேலைகளையும் என்னிடத்தில் கொடு. அதாவது- எல்லாம் என் அதீநம் என்றும், என்னுடைய உபயோகத்திற்காகவே இருக்கிறதென்றும் மிகுந்த பிரீதியுடன் நினை [27]

ஶுபா⁴ஶுப⁴ப²லைரேவம் மோக்ஷ்யஸே கர்மப³ந்த⁴நை: ।
ஸந்ந்யாஸயோக³யுக்தாத்மா விமுக்தோ மாமுபைஷ்யஸி ॥

ஏவம் ஸந்ந்யாஸாக்²யயோக³யுக்தமநா: ஸர்வாணி லௌகிகாநி வைதி³காநி ச கர்மாணி குர்வாண: ஶுபா⁴ஶுப⁴ப²லைரநாதி³காலப்ரவ்ருத்தாநந்தப³ந்த⁴ரூபை: ஸர்வை: கர்மபி⁴ர்மோக்ஷ்யஸே । தைர்விமுக்தோ மாமேவோபைஷ்யஸி ॥ ||உஅ||

கீழ்ச்சொன்னபடி எப்பொழுதும் உன்னை என் அதீநமாகவும், என்னுடைய உபயோகத்துக்காகவே இருக்கிறவனாகவும், நீ செய்கிற எல்லாவேலைகளும் என் பிரீதிக்காகத்தான் என்றும் [1] நினைத்து, உலகத்து வேலைகளையும், சாஸ்திரத்தில் சொல்லியவேலைகளையும் நீ செய்தால், துக்கத்தையும், மட்டமான ஸுகத்தையும் கொடுக்கக்கூடியவைகளாயும், நெடுநாளாய் வந்தவைகளாயும், கணக்கில்லாதவைகளாயும், என்னிடத்தில் வரவொட்டாமல்பண்ணுகிறவைகளுமான புண்ணியம்-பாபம் என்று சொல்லப்படுகிற

---

1. சுலோகத்தில் "ஸந்நியாஸயோக" என்கிற சொல் இருக்கிறது. இதில் "ஸந்நியாஸ" என்கிற சொல் ஞானயோகத்தையும், "யோக" என்கிற சொல் கர்மயோகத்தையும் சொல்லவில்லை "யோக" என்கிற சொல்லுக்கு இந்த இடத்தில் நினைவு என்று பொருள் எந்த நினைவு என்றால் கீழ் சுலோகத்தில் சொல்லப்பட்ட ஸமர்ப்பணமாகிற நினைவு-அதாவது-செய்யப்படும் வேலையையும், வேலை செய்வதையும் அதின் பலனையும் பகவானிடத்தில் கொடுப்பது இதுதான் "ஸந்நியாஸ" என்கிற சொல்லால் சொல்லப்படுகிறது.

எல்லா கர்மங்களும் உன்னைத் தன்னடையே விட்டுப்போய்விடும். அவைகள் போய்விட்டால், 1 என்னையே அடைவாய். [28]

ஸ்லோ — 29 ஸமோஹம் ஸர்வபூதேஷு ந மே த்வேஷ்யோஸ்தி ந ப்ரிய: | யே பஜந்தி து மாம் பக்த்யா மயி தே தேஷு சாப்யஹம் ||

தேவதிர்யங்மநுஷ்யஸ்தாவராத்மநாவஸ்திதேஷு ஜாதித ஆகாரத: ஸ்வபாவதோ ஜ்ஞாநதஶ்சாத்யந்தோத்க்ருஷ்டாபக்ருஷ்டரூபேண வர்தமாநேஷு ஸர்வேஷு பூதேஷு ஸமாஶ்ரயணீயத்வே ஸமோஹம் | அயம் ஜாத்யாகாரஸ்வபாவஜ்ஞாநாதிபிர் நிக்ருஷ்ட இதி ஸமாஶ்ரயணே ந மே த்வேஷ்யோஸ்தி உத்வேஜநீயதயா ந த்யாஜ்யோஸ்தி | ததா ஸமாஶ்ரிதத்வாதிரேகேண ஜாத்யாதிபிரத்யந்தோத்க்ருஷ்ட இதி ஸமாஶ்ரயணே ந கஶ்சித் ப்ரியோஸ்தி ஸங்க்ராஹ்யோஸ்தி | அபி த்வத்யர்த்தமத்ப்ரியத்வேந மத்பஜநேந விநா ஆத்மதாரணாலாபாந் மத்பஜநைகப்ரயோஜநா யே மாம் பஜந்தே, தே ஜாத்யாதிபிருத்க்ருஷ்டா அபக்ருஷ்டா வா மத்ஸமாநகுணவத் யதாஸுகம் மயி வர்தந்தே | அஹமபி தேஷு மதுத்க்ருஷ்டேஷ்விவ வர்தே ||

அவ—உலகத்தில் என்னைத் தவிர வேறு ஒருவரிடத்திலும் இல்லாமல், எனக்கு மாத்திரமுள்ள-மிகவுமுயர்ந்த-2 ஒரு ஸ்வபாவத்தைச் சொல்லுகிறேன் கேள்—

உலகத்தில்—தேவர்கள்—மனிதர்கள்—மாடு முதலானவைகள்—மரம் முதலானவைகள்—இப்படி நாலுவகைப்பட்ட பிராணிகளுக்

1. பகவான்-வேலைகளைச் செய்விப்பதுபோலும், பலனைக்கொடுப்பதுபோலும் பலனாகவுமிருக்கிறான் என்று இத்தால் காட்டப்படுகிறது. இதற்கு வேறு விதமாயும் அர்த்தம் பண்ணலாம். அதாவது—வேறு பலனை நடுவில் அநுபவித்து, தாமதமில்லாமல் நேராகவே அவனிடம் போவது—என்று.

2. 26-வது ச்லோகத்தில்—இலை முதலான வஸ்துக்களை இது கிடைக்கக் கூடியது, இது கிடைக்கக்கூடாதது. இதுவுயர்ந்தது-இது

குள்ளே சிலர் 1 பிறப்பினாலும், உருவத்தினாலும், ஸ்வபாவத்தினா லும், அறிவினாலும் மிகவும் உயர்ந்தவர்களாயும், சிலர் இளப்ப மானவர்களாயும் இருக்கிறார்கள். அவர்கள் 2 என்கிட்ட வரும் விஷயத்தில் அவர்களெல்லாரிடத்திலும் நான் ஒரேமாதிரியாயி ருக்கிறேன். அதாவது—இவன் பிறப்பு முதலானவைகளாலே மிகவும் இளப்பம். என்னிடம் வரக்கூடாது, என்று நினைத்து என்னிடம் வந்தவனை அருவருப்புப் பட்டு நான் விடமாட்டேன் அப்படியே என்னிடம் வந்தான் என்கிறது தவிர, இவன் பிறப்பு முதலானவைகளாலே மிகவுமுயர்ந்தவன் என்று அவனுடைய உயர்த்தியைப்பார்த்து,அவனை நான் சேர்த்துக்கொள்ளுகிறதில்லை

தாழ்ந்தது-என்று தாரதம்மியங்களைப் பார்க்காமல் பெற்றுக் கொள்ளு கிறான் பகவான்—என்று சொல்லப்பட்டது. இதனால் பகவான் ஸுலப னென்று சொன்னதாயிற்று. அதாவது அவனை ஸ்வாதீனப்படுத்து வது வருத்தமன்று என்று. அடுத்த சுலோகத்தில் ஒருவித வினைவைச் சொல்லி, அதனால் பகவான் அதிகமாய் ஸந்தோஷப்படுகிறான் என்று சொல்லப்பட்டது. அதனால் பகவான் ஸுலபனாயிருக்கிறான் என்றுகீழ்ச் சொன்னது உறுதிப்படுத்தப் பட்டது. 29-வது சுலோகத்தில்பக்தியன் னுகிறவர்களுடைய பிறப்பு முதலானவைகளாலே உண்டாகும் தாரதம் மியங்களைக் கவனிக்காமல், பக்தர்களுடன்கலந்திருக்கிறானென்று சொ ல்லப்படுகிறது. இதனால் ஸௌசீல்யம்என்ற குணம் சொல்லப்பட்டதாக ஆகிறது. ஸௌசீல்யம் என்பது-மிகவும் தாழ்ந்தவர்களுடன் இடைவி டாமல் அருவருப்பில்லாமல் கலந்திருப்பது.

1. பிறப்பினால் உயர்ந்தவன் தேவன். மட்டமானவன் மனிதன்; மனிதர்களுக்குள் பிராம்மணன் உயர்ந்தவன், சண்டாளன் தாழ்ந்தவன்; உருவத்தினால் உயர்ந்தவன் அழகுள்ளவன்; தாழ்ந்தவன் குரூபி; ஸ்வ பாவத்தினால் உயர்ந்தவன் ஸத்வகுணம் மேலிட்டவன்; ரஜோகுணமும் தமோகுணமும் மேலிட்டவன் தாழ்ந்தவன்.

2. தேவர்களும் பக்தியோகம் பண்ணலாம் என்று வேதாந்தத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. மாடு முதலானவைகளுக்குள், கஜே ந்திராழ்வான் (யானை), ஸுக்ரீவன் (குரங்கு) முதலான மிகுந்த புண் ணியமுள்ளவர்கள் பகவானை அறிந்து அடைந்தார்கள் என்று பிரஸித்த ம். சாபத்தால் மரமாகப் பிறந்தவைகளுக்கு அறிவு இருந்ததாகப் புராணங்கள் சொல்லுகின்றன. ஆகையால் பகவானை அடைவது எல்லா வகுப்பிலும் கூடும். அடைவது (ஸமாச்ரயணம்) என்பது மன தின் வேலை. அதாவது-நினைப்பது.

அந்த உயர்த்திக்காக அவனைக் கௌரவிக்கமாட்டேன். பின்னை என்னவென்றால், என்னிடத்தில் அளவில்லாத ப்ரீதியாலே என்னை நினைக்காமல் போனால் ஆத்மா தாங்காமல், என்னை நினைப்பதையே ப்ரயோஜநமாக நினைத்து, எவன் ப்ரீதியுடன் என்னை நினைக்கிறானோ, அவன் எல்லாவிதத்தாலும் உயர்ந்திருந்தாலும், இழிந்தவனாயிருந்தாலும், 1எனக்கு ஸமானனானவன் போல் கூசாமல் என்னிடத்திலேயே இருக்கிறான். நானும் அவன் விஷயத்தில் என்னைக் காட்டிலும் உயர்ந்தவனிடத்தில் போலே (தகப்பனிடத்தில் நல்ல பிள்ளை இருப்பது போல) இருப்பேன் [29

ஶ்லோ— 30 [illegible]

அபி சேத் ஸுது³ராசாரோ ப⁴ஜதே மாமநந்யபா⁴க் ।
ஸாது⁴ரேவ ஸ மந்தவ்ய: ஸம்யக்³வ்யவஸிதோ ஹி ஸ: ॥ 30 ॥

தத்தத் ஜாதிவிஶேஷ [illegible] வாஷபம் வரிஹரணீயஸ்ய [illegible] காரேண [illegible] ஹஜதே [illegible] வேத; ஸாது⁴ரேவ ஸ: [illegible] ஸ ஹிஜ வ்ய:-வஹு [illegible] [illegible] தவந்த? ஸம்யக்³வ்யவஸிதோ ஹி ஸ:-பதோ [illegible] வ்யவஸாய

1. இங்கே ஒரு கேள்வி—பகவானை எல்லா விதத்தாலும் உயர்ந்தவனாகவும், யஜமானனாகவும் நினைத்துத் திரிபவர்கள் [illegible] பகவானிடத்தில தோழன்போல் எப்படியிருக்கக்கூடும்-என்று. இதற்குப் பதில்—"நானும் இருப்பேன்" என்று. அர்ஜுனன்— [illegible] திரியால் அவனிடத்தில் அவர்கள தோழர்கள் [illegible]. தனனுடைய உயர்த்தியை நினைத்து அவர்கள் பயப்படாத [illegible] அவன் இருக்கிறான். பகவான் இருக்கிற இருப்பிலே [illegible] முண்டாகிறதில்லை. பகவான கோகுலத்தில் [illegible]. இடைச்சிகளால் கட்டுப்பட்டு அடிபட்டான. [illegible] யோட்டினன். ஆகையால் அவர்கள் பயப்படவில்லை. [illegible] ட்டினல் நடுங்குகின்றன. கொண்டாடும்போது [illegible] வர்களிடத்தில் பயமில்லாதிருக்கின்றன. கொண்டாட்டத்திலே பயம் போய்விடும்.

[illegible]

எல்லாவிதத்தாலும் உயர்ந்த பகவான் ராமன்கிருஷ்ணன் முதலான அவதாரங்களில் இந்தமாதிரி இருந்தான். அவன் அப்படியிருந்தது-நாம் பகவானுடைய இந்த குணத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டு, அவனிடத்தில் அளவில்லாத பக்தி பண்ணுவதற்காகவும், நாமும் தாழ்ந்தவர்களிடத்தில் இப்படி இருப்பதற்காகவும் தான். பகவான் அப்படியிருந்ததை சொல்லுகிறோமேயொழிய கவனிக்கவில்லை. கவனித்தால் ஆழ்வார்கள் போல் தபிக்க மாட்டோமா? நாம் இருக்க வேண்டியதையும் கவனிக்கவில்லை. எல்லா விதத்திலும் உயர்ந்த பகவான் இப்படி இருக்கும்போது, ஒருவித உயர்த்தியுமில்லாமலிருக்கிற நாம் கர்வப்படுவதற்கு என்ன நியாயம். நம்மை இளப்பமென்று நாம் தெரிந்து கொள்ளாதவரையில், நமக்கு இந்த லோகத்திலும் பரலோகத்திலும் ஸுகமில்லை. நம்மால் பிறருக்கும் ஸுகத்தை யுண்டுபண்ண முடியாது. வித்வான் என்ற சொல்லுக்கு தன்இளப்பத்தை அறிந்தவன் என்றுதான்பொருள். இந்த நினைவைப் பகவானும் ஆசாரியர்களும் தான் உண்டுபண்ண வேண்டும்.

என்னுடைய பக்தர்களை என்னைக் காட்டிலும் உயர்ந்தவர்களாக நினைக்கிறேன் என்று பகவான் சொல்லுகிறபடியால், அவர்களுக்குள்ளே ஜாதி முதலியவைகளாலே தாரதம்மியம் வைப்பதுபகவானுக்கு இஷ்டமாகுமா? என்றால், பதில்—இவ்விடம் பக்தியின் பெருமையையும், பக்தியினால் பகவானுக்கு எல்லாரிடத்திலும் ஒரே மாதிரி ஸந்தோஷமுண்டாகிற தென்பதையும் மாத்திரம் சொல்ல வந்ததே யொழிய, அவரவர்களுக்கு ஜாதி முதலியவைகளும், அததற்குத் தகுந்த நடவடிக்கைகளும் போய், எல்லாரும் ஒரேமாதிரியாக ஆகிறார்கள் என்று சொல்ல வந்ததன்று.

அவ—1 இன்னுமொரு ஸங்கதி.

ஒவ்வொரு ஜாதிக்காரர்கள் 2. இன்னின்னதைச் செய்யவேண்டும், இன்னின்னதைச் செய்யக்கூடாது என்று ஏற்பட்டிருக்கிறது. அந்தப்படி நடக்காமலிருக்கிற ஒருவன் 3. கீழ்ச்சொன்னபடி என்னிடத்தில் அளவில்லாத பிரீதியுடனே என்னைத் தியானம் பண்ணுவதொன்றையே பிரயோஜநமாக எண்ணித் தியானம் செய்தால், அவன் எனக்கு வேண்டியவர்களுக்குள் மிகவும் உயர்ந்தவன். அவனை யாரும் மரியாதை செய்யவேண்டும். அவன் முன்னால் சொல்லப்பட்ட ஞானிகளுக்கு ஸமானமானவன். தப்பாக நடக்கிறவனிடத்தில் உமக்கு எப்படி உயர்ந்த பிரீதி உண்டாயிற்று? நாங்கள் அவனைக் கொண்டாடுவது எப்படி? என்றால், பதில் சொல்லுகிறார். அவனுடைய எண்ணம் மிகவும் நல்லதாயிருக்கிறதன்றோ? அதாவது—பகவான் எல்லா உலகத்தையும், ஒருவனுகவே உண்டுபண்ணுகிறான். அளவில்லாமல் உயர்ந்தவன். அவன் நாராயணன்தான் என்று வேதம் சொல்லுகிறது. எல்லா லோகங்களும் அவன் ஸொத்து. அவன் எனக்கு 4 யஜமானன்.

---

1. பகவானிடம் யாரும் போகலாம். அவன் யாரையும் சேர்த்துக் கொள்ளுவன். அவன் பக்தியைத்தான் பார்ப்பன். பிறப்பு முதலான தாரதம்மியங்களைக் கவனிக்கிறதில்லை என்று சொல்லப்பட்டது. நடத்தைப் பிசகையும் அவன் கவனிக்கிறதில்லையென்று இந்த சுலோகம் சொல்லுகிறது.

2. பிராமணனுக்கு மாம்ஸத்தைச் சாப்பிடுவதும், கள்ளைக் குடிப்பதும் கூடாது. சூத்திரனுக்கு அவைகள் குற்றமன்று. சூத்திரனுக்கு காராம்பசுவின் பாலைச் சாப்பிடுவது கூடாது. பிராம்மணனுக்கு அது நல்லது.

3. கீழ்ச் சொன்னபடி—16-வது சுலோகத்தில் சொன்னபடி.

4. மிகுந்த பாபியான என்னைத் தள்ளாமல், தன் ஸொத்துக்களில் சேர்த்துக் கொண்டு, தன் ஸொத்தான என்னைத் தன்னிடம் கொண்டு போவதற்கு, அவன்தானே வேலை செய்ய ஆரம்பித்திருக்கிறான் என்று கருத்து.

அவன் எனக்கு 1 ஆசாரியன். அவன் எனக்கு ஸுஹ்ருத். அதுவரை நான் கணக்கில்லாத குற்றங்களைப் பண்ணினாலும், கோபங்கொண்டு மனது கலங்காமல், எல்லா ஸாதகங்களையும் எனக்குக் கொடுக்கிறான் என்று நினைத்துக்கொண்டிருக்கிறான். 2 அவன் தான் எனக்கு உயர்ந்த இன்பம். அவனைத்தவிர வேறு எந்தபதார்த்தமும் இன்பமன்று. இப்படி எண்ணுகிறான் அவன். இந்த எண்ணம் ஒருநாளும் 3 அடையமுடியாதது. அதனால் என்னை நினைப்பதையே பிரயோஜனமாக எண்ணி இடைவிடாமல் நினைக்கிறான். ஆகையாலே அவன் நல்லவன்தான். கௌரவம்பண்ணவேண்டியவன்தான். இவ்விதமான எண்ணமும் அதனாலுண்டான இடைவிடாத தியானமும் உண்டானபிறகு, நடத்தைப் பிசகு என்பது மிகவும் சிறிய குற்றம். அதைக்கொண்டு அவனை 4 அலக்ஷியம் பண்ணக்கூடாது. அவன் மரியாதைபண்ணத்தகுந்தவன்தான். [30]

---

1. மிகுந்த மூர்க்கனான எனக்கு நல்ல அறிவைக் கொடுத்து, பெரிய உபகாரத்தைச் செய்திருக்கிறானென்று கருத்து.

2. நான் முன்பு மிகவும் இளப்பமான-துக்கத்துடன் கலந்த-நிலையில்லாத-துனி ஸுகத்தில் பற்றுள்ளவனாயிருந்தேன். அப்படியிருந்த எனக்கு அளவில்லாமல் உயர்ந்த-ஒரு குற்றமுமில்லாத-நிலையான-ஸுக ஸமுத்திரமாகிய தன்னைக் காட்டித்தன்னை இன்பமாகப் பண்ணினான் என்று கருத்து. பகவான் ஆசாரியனென்றும், தன்னிடத்தில் நல்ல எண்ணமுள்ளவன் என்றும் சொன்னதாலே, அவன் என்னைத் தன்னிடம் அழைத்துக் கொண்டு போகிறவன் என்று சொல்லப்பட்டது. அவனே இன்பம் என்று சொன்னதாலே, அடையவேண்டிய பலனும் அவனே என்று காட்டப்பட்டது.

3 மிகவும் உயர்ந்த அநுஷ்டானம் பண்ணுகிறவர்களும் இவ்விதமான எண்ணமில்லாமலிருக்கிறார்கள். மிகவும் கெட்ட நடவடிக்கை உள்ளவர்களுக்கும் இந்த எண்ணமிருக்கிறது. எண்ணம் பெரிதேயல்லாமல் நடத்தை பெரிதல்ல. சீமைக்கமலம் விளைகிற இடமாயிருந்தாலும், அங்கு இருக்கும் கருங்கல் சல்லியை எடுப்போமா? குப்பையிலிருக்கும் ரத்னத்தை விடுவோமா? எண்ணம் ரத்னம்போல். நடத்தையில்லாதவன் குப்பைபோல். அநுஷ்டானம் பண்ணுகிறவன் சீமைக்கமலமிருக்குமிடம் போல். நல்ல எண்ணமில்லாமை கருங்கல் சல்லிபோல்.

4. அலக்ஷியம் பண்ணுவது பெரிய குற்றமாகும். பகவானுடைய மனது புண்ணாய்விடும்.

[illegible]

क्षिप्रं भवति धर्मात्मा शश्वच्छान्तिं निगच्छति ।
कौन्तेय प्रतिजानीहि न मे भक्तः प्रणश्यति ॥ ॥௩௧॥

[illegible] ॥௩௧॥

அவ—உபநிஷத்தில் "எவன் கெட்டசெய்கைகளை நிறுத்தவில்லையோ, எவன் ஆசையினுடையவும், கோபத்தினுடையவும் வேகத்தைத் தடுக்கவில்லையோ, எவன் மனது பலவிஷயங்களில் அலைந்துகொண்டிருக்கிறதோ, இவைகளாலே எவனுடையமனது தியானம்பண்ணவேண்டிய விஷயத்தில் நிலையாய் நிற்கவில்லையோ, அவனாலே தியானம்பண்ணி பகவானை அடையமுடியாது" என்று சொல்லியிருக்கிறது ஆகையாலே 1 நடவடிக்கைக் குறைவானது பகவானுடைய தியானத்தை வளரவொட்டாமல் செய்யுமே? அவனுக்குக் குறைவு வந்துவிடுமே? என்றால். பதில் சொல்லுகிறார்—

1. கீழ் சுலோகம் பகவானிடத்தில் பக்தியுள்ளவன் கெட்ட காரியங்களைச் செய்தாலும், அவனை மற்றவர்கள் கௌரவம் பண்ணவேணுமென்று சொல்லிற்று. அவன் காரியத்திற்கு (தியானத்திற்கு) குறைவில்லை என்று சொல்லுகிறது இந்த சுலோகம்.

என்னிடத்தில் மிகுந்த பிரீதியாலே என்னைத் தியானம் செய்ய ஆரம்பித்து, அந்தத்தியானத்தையே உயர்ந்த பிரயோஜநமாக அவன் எண்ணுகிறான். அவனுக்கு அந்தத்தியானத்தாலே எல்லா பாபங்களும் 1 போய், ரஜஸ்ஸு, தமஸ்ஸு என்கிற குணங்களும் அடியோடுபோய், வெகு சீக்கிரத்தில் 2 ஒருவித இடைஞ்சலில்லாமல், எல்லா அங்கங்களுடன் என்னைத்தியானம் பண்ணவேணுமென்கிற எண்ணம் வந்துவிடும். என்னை அடைவதற்கு இடைஞ்சலான நடவடிக்கையும் 3 போய்விடும். மறுபடியும் ஒருக்காலும் வாராது. இந்த விஷயத்தில் 4 நீயே பிரதிக்ஞைபண்ணு—பகவானைத்தியா

---

1. தியானத்தாலே தியானத்திற்கு இடைஞ்சல்கள் போகும்என்று சொன்னது எப்படிக்கூடும்? என்றால், பதில்—எல்லா அங்கங்களுடன் கூடிய தியானத்தை அடையவேண்டியது. ஆரம்பிக்கிற காலத்தில் இருந்த கொஞ்சமான பக்தியானது பூர்ணமான பக்தியையுண்டாக்குகிறது. கொஞ்சபக்தி காரணம், பூர்ணபக்தி காரியம்.

2. சுலோகத்தில் "தர்ம ஆத்மா" என்ற இரண்டுசொற்கள் இருக்கின்றன. தர்மம் என்ற சொல்லிற்கு "ஒருவித இடைஞ்சலில்லாமல் எல்லா அங்கங்களுடன் தியானம்" என்றுதான் பொருள். இதையே இந்த அத்தியாயம் 3-வது சுலோகத்தில் "தர்ம" என்ற சொல்லாலே சொல்லியிருக்கிறது. இந்த அத்தியாயமும் இவ்விதமான தியானத்தைத்தான் சொல்லுகிறது. ஆத்மா என்ற சொல்லும் தியானத்திற்கு உதவியான மனதைச் சொல்லுகிறது. 13-வது சுலோகத்தில் "(அநந்யமநஸ:) வேறொன்றிலும் மனதை வைக்காதவர்கள்" என்றும், கடைசி சுலோகத்தில் (மந்மநாபவ) "என்னிடத்திலேயே மனதைவை" என்றும் முன்பும் பின்பும்சொல்லியிருக்கிறது.

3. உம்மை தியானம்பண்ண ஆரம்பிப்பதின் பெருமையாலே அதற்கு இடைஞ்சலான பாபம் போகட்டும். கெட்ட நடவடிக்கைகள், தொடர்ந்து வந்துகொண்டிருக்கையாலும், "ஐயோ! இவைகளைச் செய்கிறேனே" என்கிற வருத்தமில்லாமையாலும், அவைகளைத் தெரிந்தே செய்கையாலும், அவைகள் ஏன் இடைஞ்சல்களாக ஆகமாட்டாது என்றால், பதில் சொல்லுகிறார்—அவைகளும் போய்விடும் என்று. பக்தி பாபத்தைப்போல், அதனாலுண்டாகிற கெட்ட காரியங்களையும் போக்கும்.

4. பகவான் நான் பிரதிக்ஞை பண்ணுகிறேன் என்று சொல்லாமல், "நீ பிரதிக்ஞைபண்ணு, என்று சொன்னதின் கருத்து—தான்

ஸம் பண்ண ஆரம்பித்தவன் அதற்கு இடைஞ்சலான கெட்ட காரியங்களைச் செய்தாலும், அவனுக்கு ஒரு குறைவுமில்லை. அவனுக்கிருக்கும் பக்தியானது எல்லா இடைஞ்சல்களையும் போக்கி மறுபடியும் வரவொட்டாமலும் செய்து,1 பக்தியைப்பூர்ணமாக்கி விடும்—என்று. அது அந்த பக்தியின் பெருமை. [31]

மாம் ஹி பார்த்த வ்யபாச்ரித்ய யேऽபி ஸ்யு: பாபயோனய: | ஸ்த்ரியோ வைச்யாஸ்ததா சூத்ராஸ்தேऽபி யாந்தி பராம் கதிம் ||32|| கிம் புனர்ப்ராஹ்மணா: புண்யா பக்தா ராஜர்ஷயஸ்ததா | அநித்யமஸுகம் லோகமிமம் ப்ராப்ய பஜஸ்வ மாம் || ||33||

பண்ணுவதைக் காட்டிலும் இதைக்கேட்கிற அர்ஜுனன் பிரதிக்ஞை செய்தால், ஜனங்களுக்கு மிகுந்த நம்பிக்கை வரும்—என்று. பகவான் சொல்லாமலே "உம்மைச் சேர்ந்தவர்களுக்கு ஒருகுறைவும் வராது" என்று அர்ஜுனன் தானாகவே தன்னுடைய அநுபவத்தைக் கொண்டு சொல்லியிருக்க வேண்டும். அவனுக்கு அப்படிச் சொல்லத் தெரியாமல் வாய்திறக்காமலிருந்தான். பகவான் அவனுக்குச் சொல்லிக்கொடுக்கிறான்.

1. மிகவும் பகவத்பக்தர்கள் கெட்ட காரியங்களைச்செய்து—அந்த பக்தியின் பெருமையால் மறுபடியும் ஸௌக்கியத்தை அடைந்தார்கள். உதாரணம் (1) உபரிசரவஸு என்ற ராஜா ஆகாசத்தில் விமானத்துடன் போகும்சக்தியுள்ளவனாயிருந்தான். தேவதைகளுக்கும் ருஷிகளுக்கும் உண்டாயிருந்த சண்டையில் தேவதை சக்ஷியில் சேர்ந்து பொய் சொன்னானென்று ருஷிகளால் சபிக்கப்பட்டு கீழே விழுந்து விட்டான். முன் பண்ணின தியானத்தின் பெருமையால் முன்போலானான் என்று பாரதத்தில் சொல்லியிருக்கிறது. (2) பிரஹ்லாதன் பகவானிடத்தில் உயர்ந்த பக்தியுள்ளவர்களுக்கு உதாரணமாகச் சொல்லப்படுகிறவன். அவன்ஒருக்கால் பகவானிடம் சண்டைக்குப்போனான். மறுபடியும் சீக்கிரம்நல்லஅறிவு வந்தது. (3) க்ஷத்ரபந்து என்பவன் மிகுந்த பாபங்களைச் செய்துகொண்டிருந்தான். பகவானுடைய திருநாமத்தை ஒரு பெரியவர் உபதேசித்தார். அதைச் சொல்லிக்கொண்டேயிருந்ததனால், மறுபிறப்பில் முன்பிறப்பையும் அப்போது பண்ணின பாபத்தையும் நினைத்து, வருத்தப்பட்டு, பகவானிடத்தில் பிரபத்திபண்ணி அவனிடம்போய்ச் சேர்ந்தான்,

ஸ்த்ரியோ வைஶ்யாஸ்ததா ஶூத்ராஸ் பாபயோநயோऽபி ஸந்தோ மாம் வ்யபாஶ்ரித்ய பராம் கதிம் யாந்தி | கிம் புந: புண்யயோநயோ ப்ராஹ்மணா ராஜர்ஷயஶ்ச மத்பக்திமாஸ்திதா: | அதஸ்த்வம் ராஜர்ஷிரஸி தாபத்ரயாபிஹததயா அஸுகம் அஸ்திரம் இமம் லோகம் ப்ராப்ய வர்த்தமாநோ மாம் பஜஸ்வ || ௩௨–௩௩ ||

அவ—கீழிரண்டு சுலோகங்களால் நடுவில வந்த பாபமும் பகவானை அடைவதறகு இடைஞசலன்று என்று சொல்லப்பட்டது. இப்போது பிறப்பாலேயே மிகுந்த பாபிகளானவர்களும், பகவானை நினைப்பதனால் அவனை அடையலாம் என்று முன் சொன்னதை விரிவாய்ச சொல்லி, பிறப்பு முதலியவைகளால் உயர்த்தியையும், நிறைநதபக்தியையும்உடையவர்களுக்குப்பகவானை அடைவதற்குக் கேட்பானேன் என்றும் சொல்லி, பிறப்பு முதலானவைகளால் உயர்நத நீ பலனை அடைவதில் ஸந்தேஹமில்லாமல், பக்தி யோகத்தைச செய என்று சொல்லுகிறார்—

ஸ்திரீகளும், 1 வைசியர்களும், சூத்திரர்களும், இளப்பமான பிறப்பை யுடையவர்கள். ஆனபோதிலும் என்னை அடைநது உயர்ந்த பதவியை அடைகிறார்கள. நல்ல பிறப்புகளையுடைய பிராம்மணர்களும், நல்ல தபஸ்ஸு பண்ணுகிற ராஜாக்களும் என்னை தியானம் செய்து நலல கதியை அடைகிறார்கள் என்பதற்குக் கேட்பானேன். நீ நல்ல தபஸ்ஸு உள்ள ராஜாவாக இருக்கிறாய். ஆகையால் 2 நிலையில்லாமலும், மூன்று விதமான தொந்தரவுகளுடன் கூடியும் இருபபதால், ஸுகமில்லாததாயும் தாழ்நததாயும் மிகவும் இளப்பமாயிருக்கிற இநத லோகத்தை அடைநதிருக்கிற நீ என்னைத தியானம பண்ணு [32–33]

---

1. பிராமணன் முதலான மூன்று ஜாதியில சேர்நத வைசியர்கள் பகவானை தியானம்பண்ணுவதறகுத தகுநதவர்களாயிருந்தாலும், ஸத்ரம் என்கிற யாகஙகளைச் செய்வதறகுத தகாதவர்களானதால் சூததிரர்களுடன் அவர்களைச சேர்தது சொல்லியிருக்கிறது

2. இஙகே மூன்று தோஷஙகள் காட்டப்படுகின்றன—நிலையிலலாமை, துக்கத்தோடு கூடியிருக்கை, கொஞ்ச ஸுகமுள்ளதாயிருக்கை. இவைகளை நினைத்தால், பகவானைத தியானம பண்ணுவதில ஆசையுண்டாகும் எனறு கருதது.

அத— ஸர்வோபஸம்ஹார—

மந்மநா பவ மத்பக்தோ மத்யாஜீ மாம் நமஸ்குரு |
மாமேவைஷ்யஸி யுக்த்வைவமாத்மாநம் மத்பராயண: ||34||

இதி ஸ்ரீபகவத்கீதாஸூபநிஷத்ஸு ப்ரஹ்மவித்யாயாம் யோகஶாஸ்த்ரே ஸ்ரீக்ருஷ்ணார்ஜுநஸம்வாதே ராஜவித்யாராஜகுஹ்யயோகோ நாம நவமோऽத்யாய: ||

மந்மநா பவ—மயி ஸர்வேஶ்வரேஶ்வரே நிகிலஹேயப்ரத்யநீககல்யாணைகதாநே ஸர்வஜ்ஞே ஸத்யஸங்கல்பே நிகிலஜகதேககாரணே பரஸ்மிந் ப்ரஹ்மணி புருஷோத்தமே புண்டரீகதலாமலாயதாக்ஷே ஸ்வச்சநீலஜீமூதஸங்காஶே யுகபதுதிததிநகரஸஹஸ்ரஸத்ருஶதேஜஸி லாவண்யாம்ருதமஹோததௌ உதாரபீவரசதுர்பாஹௌ அத்யுஜ்ஜ்வலபீதாம்பரே அமலகிரீடமகரகுண்டலஹாரகேயூரகடகபூஷிதே அபாரகாருண்யஸௌஶீல்யஸௌந்தர்யமாதுர்யகாம்பீர்யௌதார்யவாத்ஸல்யஜலதௌ அநாலோசிதவிஶேஷாஶேஷலோகஶரண்யே ஸர்வஸ்வாமிநி தைலதாராவதவிச்சேதேந நிவிஷ்டமநா பவ | ததேவ விஶிநஷ்டி—மத்பக்த:—அத்யர்த்தமத்ப்ரியத்வேந யுக்தோ மந்மநா பவேத்யர்த்த: | புநரபி விஶிநஷ்டி—மத்யாஜீ—அநவதிகாதிஶயப்ரியமதநுபவகாரிதமத்யஜநபரோ பவ | யஜநம் நாம பரிபூர்ணஶேஷவ்ருத்தி: | ஔபசாரிகஸாம்ஸ்பர்ஶிகாப்யவஹாரிகாதி ஸகலபோகப்ரதாநரூபோ ஹி யாக: | யதா மதநுபவஜநிதநிரவதிகாதிஶயப்ரீதிகாரிதமத்யஜநபரோ பவஸி, ததா மந்மநா பவேத்யுக்தம் பவதி | புநரபி ததேவ விஶிநஷ்டி—மாம் நமஸ்குரு—அநவதிகாதிஶயப்ரியமதநுபவகாரிதாத்யர்த்தப்ரியாஶேஷஶேஷவ்ருத்தாவபர்யவஸ்யந் மயி அதிமாத்ரப்ரஹ்வீபாவவ்யவஸாயம் குரு | மத்பராயண:— அஹமேவ பரமயநம் யஸ்யாஸௌ மத்பராயண: | மயா விநாऽऽத்மதாரணாஸம்

[illegible]

இதி ஸ்ரீமத்பகவத்ராமாநுஜவிரசிதே ஸ்ரீமத்கீதாபாஷ்யே
நவமோऽத்யாய꞉

அவ.—தியானம் (பக்தி) என்பது இன்னதென்று சொல்லுகிறார்—

என்னை இடைவிடாமல் நினை. அதாவது-எண்ணெயைக் கரண்டியினால் தூக்கிவிட்டால் ஒரே சம்பியாய் விழுவதுபோல், இன்னொரு வஸ்துவின் நினைவு கலக்காமல், என்னையே நினை நினைக்கும்போது என்னிடத்தில் அளவில்லாத பிரீதியோடு நினை. இந்த நினைவினால் அளவில்லாத பிரீதியுண்டாகி, அந்தப்பிரீதி உள்ளடங்காமல், என்னை ஸந்தோஷப்படுத்துவதற்காக 1 எப்படிப்பல வேலைகளைச் செய்வா

1. ச்லோகத்தில் “மத்யாஜீ” என்கிற சொல் இருக்கிறது. அதற்கு என்னுடைய யாகத்தைச் செய் என்று பொருள். யாகம் என்பது தேவதையை ஸந்தோஷப் படுத்துவதற்காக பதார்த்தங்களைக் கொடுப்பது. இங்கே பகவானுக்கு சந்தனம் புஷ்பம் முதலானவைகளையும், ஆறு ரஸங்களோடுகூடிய அன்னத்தையும், விசிறி, சாமரம் முதலானவைகளையும் கொடுத்து ஸந்தோஷப்படுத்துவது.

யோ, அப்படி என்னை நினை. இப்படிச்செய்தும் திருப்தி அடையாமல், உனக்குள் இருந்து உன்னையேவுகிற என்னுடைய அளவில்லாத உயர்த்தியையும், உன்னுடைய அளவில்லாத இளப்பத்தையும் மனதார நினை. என்னை விட்டு க்ஷணகாலம்கூட இருக்க உன்னால் தாங்கமுடியாதவனாக இரு. இப்படி மனது ஏற்பட்டால், என்னிடமே வந்து சேருவாய். இடைவிடாமல் என்னை நினைத்து; என்னிடத்தில் அளவில்லாத பிரீதியைப் பண்ணி, உயர்ந்தபதார்த்தங்களை எனக்குக் கொடுத்து ஸந்தோஷப்படுத்தி, என்னை வணங்கி, 1 என்னைவிட்டுத் தாங்கமுடியாமல் இருந்து என்னையே அடைவாய்.

2 ஆகையாலே 3 சாப்பாடு முதலான உலகத்து வேலைகளையும், ஸந்தியாவந்தனம் முதலிய நித்திய நைமித்திக கர்மங்களையும், என்பிரீதிக்காக, என்னுடைய வேலைகளைச் செய்வதற்கு கிடைத்ததே என்று ஸந்தோஷத்துடனும், நான்தான் அந்த வேலைகளைச் செய்கிறேன் என்றும் நினைத்து செய்து கொண்டு, எப்போதும் பிரீதியுடனே என்னை மனதால் நினைத்து, வாயால் என் பெயர்களைச் சொல்லி, உடம்பால் என் வேலைகளைச்செய்து கொண்டு, எல்லா உலகங்களும் என் 4 அதீநம் என்றும், என்னு

1. இப்படி இருப்பது பக்தியின் உயர்ந்தபடி. இதற்குமேல் பகவானை அடையவேண்டியதுதான்.

2. பக்தி இன்னதென்றும், அதற்கு உதவிகள் இன்னவையென்றும், உதவிகளுக்கு உதவி செய்கிறது இன்னதென்றும், அதின் பலன் இன்னதென்றும் இந்த அத்தியாயத்தில் சொல்லப்பட்ட முக்கியமான அர்த்தங்களை வருத்தமில்லாமல் தெரிந்து கொள்வதற்காகச் சுருக்கமாய்ச் சொல்லி, அத்தியாயத்தை முடிக்கிறார். ஆகையாலே—துக்கம் நிறைந்த ஸம்ஸாரமாகிற ஸமுத்திரத்தில் நீ விழுந்திருப்பதினாலும், நான் ஸௌலப்யம் முதலான குணங்களோடு கூடியவனாய்,உன்னை ஸம்ஸார ஸமுத்திரத்திலிருந்து தூக்குகிறவனாயிருப்பதாலும், நீ செய்ய வேண்டிய பக்தியாகிய உபாயம் மிகவும் ஸுகமாய் செய்யத்தகுந்ததாகையாலும்.

3. இது 27-வது சுலோகத்தின் பொருள்.

4. இது 4-வது சுலோகத்தின் கருத்து.

டைய உபயோகத்திற்காகவே ஏற்பட்டன என்றும், நினைத்து என்னிடத்திலிருக்கும் அளவில்லாமல் உயர்ந்த குணங்களின் கூட்டங்களை மிகவும் 1 இன்பமாக நினைத்து,2 நாள்தோறும் கீழே சொன்னபடி என்னைத்தியானம் செய்து வந்தாயேயானால், அழிவில்லாத அளவில்லாத ஸுகமான என்னிடம் வந்து சேருவாய்.

உபநிஷத்துக்களில் தியானம் பண்ண வேண்டியவைகளாகவும், அதற்கு உதவி செய்கிறவைகளாகவும் சொல்லப்பட்ட பகவானுடைய ஸ்வரூபம், திருமேனி, குணங்கள், இவைமுதலானவைகளும் சுலோகத்திலிருக்கிற "நான்" என்கிற சொல்லாலே காட்டப்பட்டன என்று ஸ்ரீ பாஷியகாரர் திருவுள்ளம் பற்றி, அவைகளை அருளிச் செய்கிறார். அவைகளாவன—3 பகவான் லோகங்களுக்கு யஜமானர்களாயிருக்கிற எல்லாருக்கும் யஜமானன். 4 ஒருவித குற்றங்களும் கிட்டவர முடியாதவன். எல்லா நல்ல குணங்களுக்கும் ஒரே இருப்பிடம். 5 எல்லாம் தெரிந்தவன். நினைத்தபடி நடத்துகிறவன். எல்லா உலகங்களையும் ஒருவனாகவே உண்டுபண்ணுகிறவன். அவனைத்தான் பரம்பிரும்மமென்றும், புருஷோத்தமன் என்றும் உபநிஷத்துக்கள் சொல்லுகின்றன. அவனுடைய கண்கள் பெரிய ஆழமுள்ள தண்ணீர் நிறைந்த

1. இது 26—29-வது சுலோகங்களின் பொருள்.

2. நாள்தோறும்—கடைசி உடம்பைவிட்டுப் போகிறவரையில்.

3. சக்தியில்லாதவனுக்கு வேலை செய்வதனால்ஒருபிரயோஜனமும் கிடைக்காது. இந்தப் பிரும்மாண்டத்திலிருக்கிற பிரும்மா முதலானவர்களுக்கு வேறு பிரும்மாண்டங்களில் அதிகாரம் கிடையாதே. அப்படிப்பட்ட பிரும்மா முதலானவர்கள் எல்லாருக்கும் எப்படி மோக்ஷம் கொடுக்கக் கூடும்.

4. குற்றமுள்ளவனும்குணமில்லாதவனுமான ஒருவனைநினைத்துப் பிரயோஜனமில்லை. ஒரு குற்றமில்லாதவனும், எல்லாகுணங்கள் உள்ளவனும், தொந்தரவுகளில்லாதவனும், அவைகளைப்போக்குமவனும், அளவில்லாத இன்பமா யிருப்பவனுமானவனைத்தான் தியானம் செய்ய வேண்டியது.

5. பகவானுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. அவனுக்கு ஒத்தாசை செய்ய ஒருவனும் வேண்டியதில்லை. இந்த இரண்டு குணங்களும் மோக்ஷத்தைக் கொடுக்க உபயோகமானவைகள்.

குளத்தில் அப்போது மலர்ந்த தாமரைப்பூவின் இதழ்போல் நீண்டும் சுத்தமாயும் இருக்கின்றன. திருமேனி நீருண்ட மேகம்போல் 1 தள தள என்று இருக்கிறது. ஒரே காலத்தில் 2 ஆயிரம் ஸூரியன்கள் கிளம்பினால் போல் அவனுடைய திருமேனியின் காந்தி இருக்கிறது. 3 அழகினால் நிறைந்த அம்ருத ஸமுத்திரம் போலிருக்கிறது அவன் திருமேனி. கேட்ட பலனைக் கொடுப்பதற்குத் துடித்துக் கொண்டிருக்கிற பருத்த நான்கு திருக்கைகளை உடையது. மிகுந்த காந்தியுடைய பீதாம்பரத்துடன் கூடினது. ஒருவித தோஷமில்லாத கிரீடம், மகரகுண்டலம், ஹாரம், தோள்வளை, வளை இவை முதலான பல நகைகளையுடையது. அளவில்லாமல் உயர்ந்த—தயை, தாழ்ந்தவர்களுடன் இடைவிடாமல் கலந்திருக்கும் தன்மை, அவயவங்களின் அழகு, மிகவும் இன்பமாயிருக்கை, ஆழமான மனதுள்ளவனாயிருக்கை, கேட்டதைக் கொடுக்கும் தன்மை, குற்றம் பார்க்காமல் பிரீதிபண்ணும் தன்மை-இவ்விதமான குணங்கள் அவனிடம் கணக்கில்லாமல் இருக்கின்றன. உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்று பாராமல் எல்லாரையும் காப்பாற்றுகிறவன். 4 அவன் எல்லாருக்கும் யஜமானன்—என்று. [34]

---

1. ரத்நம்-கண்ணாடி, ஜலம்-இவைகளில் கிட்டஇருக்கும் வஸ்துக்கள் பிரதிபலிப்பது (தோன்றுவதுபோல) பகவானுடைய திருமேனியில் கிட்டஇருக்கும் வஸ்துக்கள் பிரதிபலிக்கும்படியான ஒருவித தெளிவை "தள தள" என்று சொல்லியிருக்கிறது.

2. காந்தி நிறைந்திருக்கிறதென்றும், விரோதிகளால் பார்க்க முடியாதென்றும் கருத்து.

3. இப்படி விரோதிகளுக்குப் பார்க்கக் கூடாதிருக்கும் திருமேனியே வேண்டியவர்களுக்கு மிகவும் இன்பமாயிருக்குமென்றும், அவர்களின் கண்ணை இழுக்குமென்றும் கருத்து. அழகு (லாவண்யம்) என்பது கண்ணுக்கு ஸந்தோஷத்தைக் கொடுக்கக்கூடிய ஒருபளபளப்பு.

4. தன்னை அடைந்தவர்களை காப்பாற்றுவதைத் தன் லாபமாக எண்ணி பகவான் வேலை செய்கிறானென்று கருத்து.

ஸ்ரீமதே பகவதே பாஷ்யகாராய மஹாதேசிகாய நம:

ஒன்பதாவது அத்தியாயம் முற்றிற்று

த³ஶமோऽத்⁴யாய꞉



ஏவம் — ப⁴க்தியோக³꞉ ஸபரிகர உக்த꞉ । இதா³னீம் ப⁴க்த்யுத்பத்தயே தத்³விவ்ருத்³த⁴யே ச ப⁴க³வதோ நிரங்குஶைஶ்வர்யாதி³கல்யாணகு³ணானந்த்யம், க்ருத்ஸ்னஸ்ய ஜக³தஸ்தச்ச²ரீரதயா தத³த்மகத்வேன தத்ப்ரவர்த்யத்வம் ச ப்ரபஞ்ச்யதே —

ஸ்ரீப⁴க³வானுவாச —

பூ⁴ய ஏவ மஹாபா³ஹோ ஶ்ருணு மே பரமம் வச꞉ ।
யத்தேऽஹம் ப்ரீயமாணாய வக்ஷ்யாமி ஹிதகாம்யயா ॥ ॥௧॥

மம மாஹாத்ம்யம் ஶ்ருண்வத꞉ ப்ரீயமாணாய தே மத்³ப⁴க்த்யுத்பத்திவிவ்ருத்³தி⁴ஹிதகாம்யயா பூ⁴ய ஏவ மாஹாத்ம்யப்ரபஞ்சவிஷயமேவ பரமம் வசோ யத்³ வக்ஷ்யாமி, தத³வஹித꞉ ஶ்ருணு ॥ ॥௧॥

அவ—அங்கங்களோடு பக்தியோகம் சொல்லப்பட்டது. இப்போது பக்தி உண்டாவதற்கும், வளருவதற்கும், பகவான் தடங்கலில்லாமல் எல்லா உலகங்களையும் அடக்கி ஆளுவது முதலான—கணக்கில்லாத-நல்ல குணங்களுள்ளவன் என்றும், எல்லாலோகங்களும் அவனுக்கு உடம்புகளாகவும், அவன் அவைகளுக்கு ஆத்மாவாகவும் இருப்பதால், எல்லாம் அவனால் ஏவத்தகுந்தது என்றும் விரிவாய்ச் சொல்லுகிறார்.

பகவான் சொல்லுகிறார்—

என்னுடைய பெருமையைக் கேட்டு 1 ஸந்தோஷப்படுகிற உனக்கு என்னிடத்தில் பக்தி உண்டாகி, வளர்ந்து, நீ க்ஷேமத்தை

---

1. சுலோகத்தில் "மஹாபாஹோ" (வலிமையுள்ள கையையுடையவன்) என்ற சொல் இருக்கிறது. உலகத்தில் வலிமையுள்ளவர்கள் பிறருடைய பெருமையைக் கேட்டுப் பொறுக்க மாட்டார்கள். நீயோ சிசுபாலன் முதலானவர்களால் நிறைந்த இந்த உலகத்தில் பாக்கியத்தினால் என் பெருமையைக் கேட்டு ஸந்தோஷப்படுகிறாய் என்று கருத்து.

அடையவேண்டுமென்று நினைத்து, இன்னமும் என்னுடைய பெருமையை விரிவாகச் சொல்லுகிறேன். அந்த உயர்ந்த வார்த்தையை ஜாக்கிரதையாய்க் கேள்.

𑌨 𑌮𑍇 𑌵𑌿𑌦𑍁𑌃 𑌸𑍁𑌰𑌗𑌣𑌾𑌃 𑌪𑍍𑌰𑌭𑌵𑌂 𑌨 𑌮𑌹𑌰𑍍𑌷𑌯𑌃 ।
𑌅𑌹𑌮𑌾𑌦𑌿𑌰𑍍𑌹𑌿 𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 𑌮𑌹𑌰𑍍𑌷𑍀𑌣𑌾𑌂 𑌚 𑌸𑌰𑍍𑌵𑌶𑌃 ॥ ௨ ॥

𑌸𑍁𑌰𑌗𑌣𑌾 𑌮𑌹𑌰𑍍𑌷𑌯𑌶𑍍𑌚𑌾𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌰𑍍𑌥𑌦𑌰𑍍𑌶𑌿𑌨𑍋𑌽𑌧𑌿𑌕𑌤𑌰𑌜𑍍𑌞𑌾𑌨𑌾 𑌅𑌪𑌿 𑌮𑍇 𑌪𑍍𑌰𑌭𑌵𑌂-𑌪𑍍𑌰𑌭𑌾𑌵𑌂 𑌨 𑌵𑌿𑌦𑍁𑌃 𑌮𑌮 𑌨𑌾𑌮𑌕𑌰𑍍𑌮𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌾𑌦𑌿𑌕𑌂 𑌨 𑌜𑌾𑌨𑌨𑍍𑌤𑌿 । 𑌯𑌤𑌸𑍍𑌤𑍇𑌷𑌾𑌂 𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 𑌮𑌹𑌰𑍍𑌷𑍀𑌣𑌾𑌂 𑌚 𑌸𑌰𑍍𑌵𑌶𑍋𑌽𑌹𑌮𑌾𑌦𑌿𑌃 । 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌸𑍍𑌯 𑌜𑍍𑌞𑌾𑌨𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑌾𑌦𑍇𑌶𑍍𑌚𑌾𑌹𑌮𑌾𑌦𑌿𑌃 । 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌦𑍇𑌵𑌤𑍍𑌵𑌦𑍇𑌵𑌰𑍍𑌷𑌿𑌤𑍍𑌵𑌾𑌦𑌿𑌹𑍇𑌤𑍁𑌭𑍂𑌤𑌪𑍁𑌣𑍍𑌯𑌾𑌨𑍁𑌗𑍁𑌣𑌂 𑌮𑌯𑌾 𑌦𑌤𑍍𑌤𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌪𑌰𑌿𑌮𑌿𑌤𑌂, 𑌅𑌤𑌸𑍍𑌤𑍇 𑌪𑌰𑌿𑌮𑌿𑌤𑌜𑍍𑌞𑌾𑌨𑌾 𑌮𑌤𑍍𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌾𑌦𑌿𑌕𑌂 𑌯𑌥𑌾𑌵𑌨𑍍𑌨 𑌜𑌾𑌨𑌨𑍍𑌤𑌿 ॥ ॥௨॥

பிரும்மா முதலான தேவர்களும், பெரிய ருஷிகளும், ஒருவனும் அறியமுடியாத ஸங்கதிகள் எல்லாவற்றையும் அறியக்கூடிய ஞானமுள்ளவர்களாயிருந்தாலும், என்னுடைய பெயர்களையும், என் வேலைகளையும், நான் இன்னான் என்பதையும், என்ஸ்வபாவங்களையும் இன்னும்மற்ற என் பெருமைகளையும் அறியவில்லை. ஏனென்றால், அவர்களுடைய ஸ்வரூபம், அறிவு, சக்தி, முதலானவைகளை நான்தான் உண்டுபண்ணினேன். அதாவது—தேவர்களாகவும், தேவருஷிகளாகவும் ஆவதற்குக் காரணமான அவர்களுடைய புண்ணியத்துக்குத் தகுந்தபடி நான் அவர்களுக்குக் கொடுத்த அறிவு மிகவும் கொஞ்சமானது. ஆகையாலே அவர்களாலே என் ஸ்வரூபம் முதலானவைகளை உள்ளபடி அறியமுடியாது. [2]

𑌅𑌵— 𑌤𑌦𑍇𑌤𑌦𑍍𑌦𑍇𑌵𑌾𑌦𑍍𑌯𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌸𑍍𑌵𑌯𑌾𑌥𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌵𑌿𑌷𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑍁𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌵𑌿𑌰𑍋𑌧𑌿𑌪𑌾𑌪𑌵𑌿𑌮𑍋𑌚𑌨𑍋𑌪𑌾𑌯𑌮𑌾𑌹 —

𑌯𑍋 𑌮𑌾𑌮𑌜𑌮𑌨𑌾𑌦𑌿𑌂 𑌚 𑌵𑍇𑌤𑍍𑌤𑌿 𑌲𑍋𑌕𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌮𑍍 ।
𑌅𑌸𑌮𑍍𑌮𑍂𑌢𑌃 𑌸 𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑍇𑌷𑍁 𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌪𑍈𑌃 𑌪𑍍𑌰𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ॥

நஜாயத இத்யஜ:, அநேந விகாரித்ரவ்யாத் அசேதநாத் தத்ஸம்ஸ்ருஷ்டாத் ஸம்ஸாரிசேதநாச்ச விஸஜாதீயத்வமுக்தம். ஸம்ஸாரிசேதநஸ்ய ஹி கர்மக்ருதாசித்ஸம்ஸர்கோ ஜந்ம | அநாதிமித்யநேந பதேந அஜத்வேநோக்தாந் முக்தாத்மநோ விஸஜாதீயத்வமுக்தம் | முக்தாத்மநோ ஹ்யஜத்வமாதிமத், தஸ்ய ஹேயஸம்பந்தஸ்ய பூர்வவ்ருத்தத்வாத் ததர்ஹதாஸ்தி | அதோऽநாதித்வமநேந ததநர்ஹதயா தத்ப்ரத்யநீகதோச்யதே, "நிரவத்ய" மித்யாதிஶ்ருத்யா | ஏவம் ஹேயஸம்பந்தப்ரத்யநீகஸ்வரூபதயா அநாதிம் மாம் லோகமஹேஸ்வரம் - லோகேஸ்வராணாமபீஸ்வரம் மர்த்யேஷ்வஸம்மூடோ யோ வேத்தி | இதரஸஜாதீயதயைகீக்ருத்ய மோஹ: ஸம்மோஹ:, தத்ரஹிதோऽஸம்மூட:, ஸ மத்பக்த்யுத்பத்திவிரோதிபி: ஸர்வை: பாபை: ப்ரமுச்யதே | ஏததுக்தம் பவதி — லோகே மநுஷ்யாணாம் ராஜா மநுஷ்யஸஜாதீய: கேநசித்கர்மணா ததாதிபத்யம் ப்ராப்த: | ததா தேவாநாமதிபதிரபி, ததாऽண்டாதிபதிரபி ஸம்ஸாரிஸஜாதீய:, தஸ்யாபி பாவநாத்ரயாந்தர்கதத்வாத், "யோ ப்ரஹ்மாணம் விததாதி" இதி ஶ்ருதே: | அந்யேऽபி யே கேசந அணிமாத்யைஸ்வர்யம் ப்ராப்தா: | அயம் து லோகமஹேஸ்வர: கார்யகாரணாவஸ்தாதசேதநாச்சேதநாச்ச பத்தமுக்தோபயரூபாந்நிகிலஹேயப்ரத்யநீககாநவதிகாதிஶயாஸங்க்யேயகல்யாணகுணாகரதயா நியமநைகஸ்வபாவதயா ச விஸஜாதீய இதரஸஜாதீயதாமோஹரஹிதோ யோ மாம் வேத்தி, ஸ ஸர்வை: பாபை: ப்ரமுச்யத இதி || ||௩||

அவ—என்னுடைய பெருமையை பிரும்மா முதலான தேவர்களாலும் அறியமுடியாது என்று அறிந்தால், என்னிடத்தில் பக்தியுண்டாவதற்கு இடைஞ்சலான எல்லாபாபங்களும் போய்விடுமென்று சொல்லுகிறார்—

அறிவில்லாத வஸ்துக்களைப்போல எனக்கு மாறுதலில்லை. கர்மத்தினால் அடிக்கடி பிறந்து சாகிற ஜீவன்களைப்போல், எனக்கு

ப்பிறப்பு முதலியவை கிடையாது. எனக்கு இப்படிப்பிறப்பில்லாதிருப்பது ஸம்ஸாரத்தைவிட்டுக் கிளம்பினமுக்தர்களுக்குப்போல்புதிதாய் உண்டானதன்று. லோகங்களுக்கு ஈச்வரனாயிருக்கிற பிரும்மா முதலானவர்களுக்கும் நான் யஜமானன். மனிதர்களுக்குள் எவன் என்னை மற்றவர்கள் வகுப்பில் சேர்ந்தவன் என்று எண்ணாமல், கீழ்ச்சொன்னபடி அறிகிறானோ, அவனுக்கு என்னிடத்தில் பக்திஉண்டாவதற்கு இடைஞ்சலான எல்லாபாபங்களும் போய்விடும். அதாவது—உலகத்தில் ராஜாவாக இருப்பவனும் ஒருமனிதன்தான். அவன் ஏதோ ஒரு புண்ணியத்தாலே மனிதர்களுக்கு 1 ராஜாவாக ஆகிறான். அப்படியே தேவர்களுக்கு ராஜாவான இந்திரனும், பிரும்மாண்டத்துக்கு ராஜாவான பிரும்மாவும் ஸம்ஸாரி ஜீவன்கள்தான். இப்படியே எட்டு ஐச்வரியங்களை அடைந்தவர்களும். பகவானோ உலகத்துக்கு ஈச்வரனாயிருக்கிறவர்கள் எல்லாருக்கும் யஜமானன். அவனிடத்தில் ஒருக்காலத்திலும் ஒருவித கெடுதல்கள் கிடையாது. அவன் அளவில்லாமல் உயர்ந்த—கணக்கில்லாத—நல்லகுணங்களுக்கு இருப்பிடம். அவன் இயற்கையாகவே எல்லாரையும் அடக்கி ஆளுகிறவன். ஆகையாலே பிரகிருதியைக்காட்டிலும், அதிலிருந்து உண்டான அறிவில்லாத வஸ்துக்களைக் காட்டிலும், கர்மத்தால் கட்டுப்பட்ட ஜீவன்களைக்காட்டிலும், கட்டிலிருந்து விடுபட்ட முக்தர்களைக்காட்டிலும், எல்லாரைக்காட்டிலும் வேறுஜாதி. ஆகையாலே பகவானை மற்றவர்கள் வகையராவென்று எண்ணாமல் அவனை உள்ளபடி எவன் அறிகிறானோ, அவனுக்கு எல்லாபாபங்களும் போய்விடும் (3)

௪— புத்திர் ஜ்ஞாநமஸம்மோஹ: க்ஷமா ஸத்யம் தம: ஶம:
ஸுகம் து:கம் பவோऽபாவோ பயம் சாபயமேவ ச

---

1. உலகத்தில் மாம்பழ ஜாதியில் சில புளிப்பும், பெரியகொட்டையும், தோலும், காரலும் உள்ளவைகளாயிருக்கின்றன. ஒட்டு மாம்பழத்துக்கு இந்தக் குற்றங்களில்லை. அது மற்றவைகளைக் காட்டிலும் உயர்ந்ததாயிருந்தாலும், மாம்பழ ஜாதிதான். அதுபோல, மனிதர்களுக்குள் ராஜாவும், தேவர்களுக்குள்ளே இந்திரனும் பிரும்மாவும் ஜீவஜாதிதான். ஆனால் உயர்ந்தவர்கள். எப்படி மாம்பழத்தைக் காட்டிலும் வாழைப்பழம் வேறு ஜாதியோ, அப்படியே பகவான் பிரகிருதியைக் காட்டிலும், எல்லா ஜீவன்களைக் காட்டிலும் வேறு ஜாதி.

[illegible]

[illegible]

[illegible] ||௯||

[illegible]

குணங்களை ஒருவருக்கொருவர் 1 தெரியப்படுத்துகிறார்கள். என்னுடைய உயர்ந்த இன்பமான லீலைகளை ஒருவருக்கொருவர் சொல்லுகிறார்கள். சொல்லுகிறவர்கள் அப்படிச் சொல்லுவதையே 2 பிரயோஜநமாக எண்ணி ஸந்தோஷப்படுகிறார்கள். அதைக் கேட்கிறவர்களும் அளவில்லாதப் பிரீதியோடு கேட்டு ஸந்தோஷப்படுகிறார்கள். [9]

தேஷாம் ஸததயுக்தாநாம் பஜதாம் ப்ரீதிபூர்வகம் ।
ததாமி புத்தியோகம் தம் யேந மாமுபயாந்தி தே ॥௧௦॥

தேஷாம் ஸததயுக்தாநாம் - மயி ஸததயோகம் காங்க்ஷமாணாநாம் மாம் பஜமாநாநாம் தமேவ புத்தியோகம் விபாகதசாபந்நம் ப்ரீதிபூர்வகம் ததாமி, யேந தே மாமுபயாந்தி ॥

அவ—இதுவரையில் பகவானுடைய குணங்களையும், ஆற்றலையும் அறிந்தால் பக்தி உண்டாகுமென்றும், வளரும் என்றும் சொல்லப்பட்டது. இப்படி வளர்ந்த பக்தியினால் அவனை அடைவதற்கு முன்னாலே மிகவும் தெளிவான அவனுடைய பார்வையுண்டாகும். அது பகவான் கிருபையுடன் நடுவில் செய்யும் வேலையென்றும் சொல்லுகிறார்—

அவர்கள் என்னோடு எப்பொழுதும் இருக்கவேணுமென்று ஆசைப்பட்டு, பிரீதியுடன் என்னைத்தியானம் பண்ணுகிறார்கள். மிகுந்தஸந்தோஷத்துடன் அவர்களுக்கு அந்தபக்தி முற்றும்படி

1. தெரியப்படுத்துவது என்பது-முன்னால் அறியப்படாத ஸங்கதியைச் சொல்லுவது. பகவானை நினைக்கும்போது அவனுடைய அனுக்கிரகத்தினால் அவனுடைய சிலஸங்கதிகள் புதிதாய் தோன்றுகின்றன. அவைகளைச் சொல்லுதல். சொல்லுவது என்பது பகவானுடைய நடந்த கதைகளைச் சொல்லுவது.

2. உலகத்தில் ஜனங்கள் ஒருவனை ஸந்தோஷப்படுத்தி, சிலபிரயோஜநங்களை அடைவதற்காக அவனிடத்தில் சில கதைகளைச் சொல்லுவார்கள். இங்கே அப்படியல்ல. பகவானுடைய கதைகளைச் சொல்லுவதே பிரயோஜநமாயிருக்கிறது.

தல்.(17); தன்னுடையதான நல்லவஸ்துக்களை பிறருக்குக் கொடுக்க வேணுமென்று எண்ணுகை(18); எல்லாரும் மிகவும் நல்ல குணமுள்ளவனென்று கொண்டாடும்படியான செய்கைக்குத் தகுந்த எண்ணம்(19); மிகவும் கெட்டவனென்று எல்லாரும் வெறுக்கும்படியான செய்கைக்குத் தகுந்த எண்ணம் (20) இவைகளை யெல்லாம் நான்தான் ஜனங்களுக்கு உண்டு பண்ணுகிறேன். அவைகளால் அவர்கள் சில வேலைகளைச் செய்கிறார்கள். சில வேலைகளை நிறுத்துகிறார்கள்.1

(4–5)

௬— ஸர்வஸ்ய லோகஸ்ய ஸ்ருஷ்டிஸ்தித்யோ: ப்ரவர்த்தயிதாரஶ்ச மதாயத்தப்ரவ்ருத்தய இத்யாஹ —

மஹர்ஷய: ஸப்த பூர்வே சத்வாரோ மநவஸ்ததா ।
மத்பாவா மாநஸா ஜாதா யேஷாம் லோக இமா: ப்ரஜா: ॥௬॥

பூர்வே ஸப்த மஹர்ஷய: — அதீதமந்வந்தரே யே ஸ்வாயம்புவே மஹர்ஷயோ ஸ்ருஷ்டிப்ரவர்த்தநாய ப்ரஹ்மணா மநஸா ஸம்பவா:; ஸ்திதிப்ரவர்த்தநாய யே ச ஸாவர்ணிகா நாம சத்வாரோ மநவ: ஸ்ருஷ்டா:; யேஷாம் ஸந்தாநே லோகே ஜாதா இமா: ஸர்வா: ப்ரஜா: ப்ரதிக்ஷணமாப்ரலயாத் ப்ரஜோத்பாதகா: பாலகாஶ்ச ஸந்தி; தே ஸர்வே மதீயே மநஸ்யவஸ்திதா: மம யோ பாவ: ஸ ஏவ யேஷாம் பாவஸ்தே மத்பாவா: மத்ஸங்கல்பாநுவர்த்திந இத்யர்த்த:॥௬॥

1. இந்த சுலோகங்களில் சொன்ன இருபது ஸங்கதிகளையும் பகவான் ஜனங்களுடைய க்ஷேமத்திற்காகவே கொடுக்கிறான். முதல் ஏழும் நல்ல ஸங்கதிகள். 14-வது முதல் 19-வது வரையிலும் நல்ல ஸங்கதிகள். ஆகையால் நடுவிலிருக்கிற ஆறும், இருபதாவதும் நல்ல ஸங்கதிகளாகவே இருக்கவேண்டியது. ஆகையாலே சுலோகத்திலுள்ள துக்கம் என்பது கெட்ட ஸங்கதிகளில் துக்கம் பயம் என்பது கெட்டகாரியங்களில்பயம். அயசஸ்ஸு என்பது கெட்ட காரியங்களைச் செய்து பலபேர்களால் தூஷிக்கப்படுவது. இதை பகவான் கெட்ட காரியங்களில்பயமுண்டாவதற்காகத்தான் கொடுக்கிறான். அவனால்தான் அது போகவேண்டும் என்று எண்ணி அவனைக் கெஞ்ச வேண்டியது. இந்த இருபது ஸங்கதிகளும் பகவானால் உண்டாகிறது என்று ஒருவன் தன அநுபவத்தைப் பார்த்து நினைத்தால், பகவானிடத்தில் பக்தி அளவில்லாமல் வளரும்.

அவ— எல்லாப் பிராணிகளையும் உண்டு பண்ணுவதற்கும், காப்பாற்றுவதற்கும், சில பேர்களை நான் ஏற்படுத்தியிருக்கிறேன். அவர்கள் என் எண்ணப்படி அந்த வேலைகளைச் செய்கிறார்கள் என்று சொல்லுகிறார்—

முன் மந்வந்தரத்தில் பிருகு முதலிய ஏழுபெரியருஷிகளை நாலுமுகமுடைய பிரும்மா மனதினால் உண்டாக்கினார். அவர்கள் 1 நித்திய ஸிருஷ்டிகளை நடத்துகிறார்கள். ஸாவர்ணிகர்கள் என்கிற நாலு மனுக்கள் நித்திய ஸ்திதியை நடத்துகிறார்கள், இப்போது உலகத்திலிருக்கிற எல்லா ஜனங்களும் அவர்களுடைய வம்சத்திலதான் உண்டானவர்கள் அவர்கள் ஒவ்வொரு க்ஷணமும் பிரளயகாலம்வரையில் குழந்தைகளை உண்டுபண்ணிக் காப்பாற்றுகிறார்கள். அந்தபிருகு முதலான ஏழு பேர்களும், அந்த நாலு மனுக்களும் என்னெண்ணப்படி நடக்கிறார்கள். அதாவது என்னெண்ணமில்லாமலொரு வேலையும் செய்கிறதில்லை. என் உடம்பு மாதிரி. 2 [6]

ஏதாம் விபூதிம் யோகம் ச மம யோ வேத்தி தத்த்வத꞉ ।
ஸோऽவிகம்பேந யோகேந யுஜ்யதே நாத்ர ஸம்ஶய꞉ ॥

---

1. நித்தியஸிருஷ்டி என்றால், நாள்தோறும் எவ்வளவோ பிராணிகள் உண்டாகிறதே-அது. நித்தியஸ்திதி என்றால், அப்படியே நடக்கிற அவைகளுடைய காப்பாற்றல். நித்தியப் பிரளயம் என்றால் அதேமாதிரி நடக்கிற சாவு. இதேமாதிரி பிரும்மாவின் தினம் தோறும் பொழுது விடியும்போது, சில உலகங்கள் உண்டாகி, பகல் முழுதிலும் இருந்து, அஸ்தமனகாலத்தில் அழிந்து விடுகிறது. இதை நைமித்திக ஸிருஷ்டி, ஸ்திதி, பிரளயம் என்று சொல்லுகிறது. பெருமாள் எல்லா உலகங்களையும் உண்டாக்கி, கொஞ்சகாலம் வைத்திருந்து, பிறகு அவைகளை அடியோடு அழித்து விடுகிறார். இதைப் பிராகிருதஸிருஷ்டி, பிராகிருத ஸ்திதி, பிராகிருத பிரளயம் என்று சொல்லுகிறது.

2. உலகத்தில் இரண்டு தோழர்கள் ஒரே மாதிரி அபிப்பிராயமுள்ளவர்களாயிருப்பார்கள். அது போலன்று. நம்முடைய வேலைக்காரர்கள் நம்முடைய வீட்டு வேலைகளை நம்மிஷ்டப்படி செய்கிறார்கள். அவர்கள் சொந்த வேலைகளைத் தங்களிஷ்டப்படி செய்கிறார்கள். அப்படிப் போலவுமன்று. இவர்கள் செய்கிற வேலைகள் எல்லாம் என்னிஷ்டப்படியே நடக்கின்றன. இவர்களே இப்படி இருக்கும்போது, மற்றவர்களைப் பற்றி கேட்பானேன்?

விபூதிம்-ஸர்வஸ்ய, மதாயத்தோத்பத்திஸ்திதிப்ரவ்ருத்திரூபாம் விபூதிம், ஹேயப்ரத்யநீக கல்யாணரூபம் யோகம் ச யோ வேத்தி, ஸோ(அ)விகம்பேந அப்ரகம்ப்யேந பக்தியோகேந யுஜ்யதே, நாத்ர ஸம்ஶய: । விபூதிவிஷயம் கல்யாணகுணவிஷயம் ச ஜ்ஞாநம் பக்தியோகவ்ருத்திகரமிதி ஸ்வயமேவ த்ரக்ஷ்யஸீத்யபிப்ராய: ॥ ௭ ॥

இந்த என்னுடைய ஆளுகையையும், அதாவது—எல்லாம் என்னால் உண்டு பண்ணப்பட்டு, காப்பாற்றப்பட்டு, ஏவப்படுவதையும், ஒருவித கெடுதியும் ஒருக்காலத்திலுமில்லாமல், எல்லா நல்ல குணங்களும் என்னிடம் சேர்ந்திருப்பதையும், எவன் உள்ளபடி அறிகிறானோ, அவனுக்கு ஒருவிததத்தாலும், ஒருவராலும் கலக்கமுடியாத பக்தியானது என்னிடத்தில் உண்டாகி வளருகிறது. இதில் ஸந்தேஹமில்லை. நீ இந்த ஸங்கதிகளை அறிந்தால், அந்த மாதிரி பக்தி உனக்கு வளரும் என்பதை நீயே பார்க்கப் போகிறாய். [7]

அத— விபூதிஜ்ஞாநவிபாகரூபாம் பக்திவ்ருத்திம் தர்ஶயதி—

அஹம் ஸர்வஸ்ய ப்ரபவோ மத்த: ஸர்வம் ப்ரவர்த்ததே ।
இதி மத்வா பஜந்தே மாம் புதா பாவஸமந்விதா: ॥ ॥ ௮ ॥

அஹம் ஸர்வஸ்ய-சிதசிதாத்மகஸ்ய ப்ரபஞ்சஸ்ய ப்ரபவ:-உத்பத்திகாரணம், ஸர்வம் மத்த ஏவ ப்ரவர்த்ததே இதீதம் மம ஸ்வாபாவிகம் நிரங்குஶைஶ்வர்யம், ஸௌஶீல்யஸௌந்தர்யவாத்ஸல்யாதிகல்யாணகுணகணயோகம் ச மத்வா, புதா:-ஜ்ஞாநிந: பாவஸமந்விதா: மாம்-ஸர்வகல்யாணகுணாந்விதம் பஜந்தே| பாவ:-மநோவ்ருத்திவிஶேஷ: । மயி ஸ்ப்ருஹயாலவோ மாம் பஜந்த இத்யர்த்த: ॥ ॥ ௮ ॥

அவ—கீழ்ச்சொன்னபடி அறிந்து, பக்தி வளர்ந்திருப்பதைக் காண்பிக்கிறார்—

ஆச்சரியமாயும் பலவிதமாயும் ஆன இந்த உலகத்தை நான் தான் உண்டுபண்ணுகிறேன். இந்த எல்லா உலகமும் என்னால்தான் ஏவப்பட்டு, எல்லா வேலைகளையும் செய்கிறது—என்கிற-எனக்கு இயற்கையாக ஏற்பட்ட-ஒருதடங்கலுமில்லாத என்னுடைய ஆளுகையையும், மிகவும் இளப்பமானவர்களுடன் சந்தோஷமாகப் பழகுவது, அளவில்லாத அழகு, குற்றங்களைப் பார்க்காமல் ஜனங்களிடத்தில் ஆசை இவைமுதலான என்னுடைய கூட்டங் கூட்டமான நல்ல குணங்களையும் நினைத்து, ஞானிகள் என்னிடத்தில் வெகு ஆசையோடு எல்லா நல்ல குணங்களோடு சேர்ந்த என்னைத் தியானம் செய்கிறார்கள். [8]

௯.— கதம்?—

மச்சித்தா மத்கதப்ராணா போதயந்த: பரஸ்பரம் |
கதயந்தஶ்ச மாம் நித்யம் துஷ்யந்தி ச ரமந்தி ச || ||௯||

மச்சித்தா:-மயி நிவிஷ்டமநஸ:, மத்கதப்ராணா:-மத்கதஜீவிதா:, மயா விநா ''த்மதாரணமலபமாநா இத்யர்த: | ஸ்வஸ்வாநுபூதாந் மதீயாந் குணாந் பரஸ்பரம் போதயந்த: மதீயாநி திவ்யாநி ரமணீயாநி கர்மாணி ச கதயந்தஸ்துஷ்யந்தி ச ரமந்தி ச - வக்தாரஸ்தத்வசநேநாநந்யப்ரயோஜநேந துஷ்யந்தி, ஶ்ரோதாரஶ்ச தச்ச்ரவணேநாநவதிகாதிஶயப்ரியேண ரமந்தே || ||௯||

அவ—அவர்கள் பக்தி பண்ணுகிறவிதம் எப்படி என்றால் சொல்லுகிறார்—

என்னிடத்தில் மனதுமுழுவதும் 1 பதிந்து, என்னிடத்திலேயே உயிரைவைத்து, அதாவது என்னை ஒரு விநாடிகூடப் பிரிந்தாலும் தாங்காமல், அவரவர்கள் அநுபவிக்கிற என்னுடைய

---

1. பக்தி வளருகையில் வருகிற ஸங்கதிகள் இங்கே காட்டப்படுகின்றன. முதலில் மனது பகவானிடம் பதிகிறது. பிறகு அவனை விடமுடியவில்லை; விட்டால் தாங்கவில்லை. அதின்பிறகு பகவானைப்பற்றி பேசாமலும், கேட்காமலும் இருக்கமுடியாது.

குணங்களை ஒருவருக்கொருவர் [1] தெரியப்படுத்துகிறார்கள். என்னுடைய உயர்ந்த இன்பமான சேஷ்டைகளை ஒருவருக்கொருவர் சொல்லுகிறார்கள். சொல்லுகிறவர்கள் அப்படிச் சொல்லுவதையே [2] பிரயோஜனமாக எண்ணி ஸந்தோஷப்படுகிறார்கள். அதைக் கேட்கிறவர்களும் அளவில்லாதப் ப்ரீதியோடு கேட்டு ஸந்தோஷப்படுகிறார்கள். [9]

𑌤𑍇𑌷𑌾𑌂 𑌸𑌤𑌤𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌭𑌜𑌤𑌾𑌂 𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌮𑍍 ।
𑌦𑌦𑌾𑌮𑌿 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌯𑍋𑌗𑌂 𑌤𑌂 𑌯𑍇𑌨 𑌮𑌾𑌮𑍁𑌪𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌤𑍇 ॥௧௦॥

𑌤𑍇𑌷𑌾𑌂 𑌸𑌤𑌤𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 - 𑌮𑌯𑌿 𑌸𑌤𑌤𑌯𑍋𑌗𑌮𑌾𑌶𑌂𑌸𑌮𑌾𑌨𑌾𑌨𑌾𑌂 𑌮𑌾𑌂 𑌭𑌜𑌮𑌾𑌨𑌾𑌨𑌾𑌂 𑌤𑌮𑍇𑌵 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌯𑍋𑌗𑌂 𑌵𑌿𑌪𑌾𑌕𑌦𑌶𑌾𑌪𑌨𑍍𑌨𑌂 𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌂 𑌦𑌦𑌾𑌮𑌿, 𑌯𑍇𑌨 𑌤𑍇 𑌮𑌾𑌮𑍁𑌪𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 ॥

அவ—இதுவரையில் பகவானுடைய குணங்களையும், ஆளுகையையும் அறிந்தால் பக்தி உண்டாகுமென்றும், வளரும் என்றும் சொல்லப்பட்டது. இப்படி வளர்ந்த பக்தியினால் அவனை அடைவதற்கு முன்னாலே மிகவும் தெளிவான அவனுடைய பார்வையுண்டாகும். அது பகவான் கிருபையுடன் நடுவில் செய்யும் வேலையென்றும் சொல்லுகிறார்—

அவர்கள் என்னோடு எப்பொழுதும் இருக்கவேணுமென்று ஆசைப்பட்டு, ப்ரீதியுடன் என்னைத்தியானம் பண்ணுகிறார்கள். மிகுந்தஸந்தோஷத்துடன் அவர்களுக்கு அந்தபக்தி முற்றும்படி

---

1. தெரியப்படுத்துவது என்பது-முன்னால் அறியப்படாத ஸங்கதியைச் சொல்லுவது. பகவானை நினைக்கும்போது அவனுடைய அனுக்கிரகத்தினால் அவனுடைய சிலஸங்கதிகள் புதிதாய் தோன்றுகின்றன. அவைகளைச் சொல்லுதல். சொல்லுவது என்பது பகவானுடைய நடந்த கதைகளைச் சொல்லுவது.

2. உலகத்தில் ஜனங்கள் ஒருவனை ஸந்தோஷப்படுத்தி, சிலபிரயோஜனங்களை அடைவதற்காக அவனிடத்தில் சில கதைகளைச் சொல்லுவார்கள். இங்கே அப்படியல்ல. பகவானுடைய கதைகளைச் சொல்லுவதே பிரயோஜனமாயிருக்கிறது.

பாகச செய்கிறேன். அதாவது—எப்படியிருந்தால் உடனே என்னிடம் வந்துசேருவர்களோ, அப்படிச் செய்கிறேன் 1 (10)

ஸ— கிஞ்ச—

தேஷாமேவாநுகம்பார்த²மஹமஜ்ஞாநஜம் தம: ।
நாஶயாம்யாத்மபா⁴வஸ்தோ² ஜ்ஞாநதீ³பேந பா⁴ஸ்வதா ॥ ௧௧॥

தேஷாமேவாநுகம்பார்த²மஹமாத்மபா⁴வஸ்த²: தே-
ஷாம் மநோவ்ருத்தௌ விஷயதயாऽவஸ்தி²த: ஸ்வகல்யா-
ணகு³ணக³ணம் ப்ரகாஶயந் மத்³விஷயஜ்ஞாநாக்²யேந பா⁴ஸ்வ-
தா தீ³பேந ஜ்ஞாநவிரோதி⁴ப்ராசீநகர்மரூபாஜ்ஞாநஜம்
தத³ந்யவிஷயப்ரவணத்வரூபம் பூர்வாப்⁴யஸ்தம் தமோ
நாஶயாமி ॥ ॥௧௧॥

அவ—இன்னமும்—

அவர்களுக்கு எல்லா க்ஷேமங்களையும் கொடுப்பதற்காக எப்போதும் அவர்கள் நினைவில் இருந்து, அதாவது, எப்பொழுதும் அவர்களை என்னை நினைக்கும்படி செய்து, கூட்டங்கூட்டமான என்னுடைய எல்லா நல்ல குணங்களையும் புதிது புதிதாகவும்

1. ஒருவன் இன்னது என்று சொல்ல முடியாத உயர்ந்த புண்ணியத்தாலே மஹான்களைக்கொண்டு சாஸ்திரத்தாலே ஜீவன் தைவம் இவை முதலானவைகளைத் தெளிவாய் அறிகிறான். பிறகுசாஸ்திரத்தில்சொல்லியபடி பகவானைத் தியானம் பண்ணுகிறான். அந்த தியானம் வளரும்போது பகவானைப் பார்க்கவேணுமென்று ஆசைப்பட்டுக் கெஞ்சுகிறான். பகவான் இதுவரையில் இவனால் மனதால் மாத்திரம் நினைத்த ஸங்கதிகளையும், நினையாதவைகளையும், பார்க்கக் கூடிய கண்ணைக் கொடுத்து, உள்ளபடி அவைகளைப் பார்க்கும்படி செய்கிறான். பிறகு இவனுக்கு ஆசை தாங்காமல் இப்பொழுதே என்னை உம்மிடம் அழைத்துக்கொள்ள வேணுமென்று தபிக்கிறான். உடனே அழைத்துக் கொள்ளாவிட்டால் ஆணையிடுகிறான். பிறகு உடனே பகவான் இவனை அழைத்துக்கொள்ளுகிறான் என்று சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறது. கீழே சொன்ன தன் பார்வையைக் கொடுப்பது இந்த சுலோகத்தில் சொல்லப்படுகிறது. இந்தப்பார்வைக்கு பரஜ்ஞானம் என்று பெயர். பிற்பாடுவரும் தவிப்புக்கு பரமபக்தி யென்று பெயர்.

தெளிவைக்கூட அவர்களுக்குக் காண்பிக்கிறேன். என்னைப்பற்றின இந்த அறிவு என்கிற பிரகாசமுள்ள விளக்கினாலே என்னை நினைப்பதற்கு இடைஞ்சலான—நெடுநாளாய் வந்த கர்மங்களாலுண்டான—என்னைத்தவிர 1 மற்ற விஷயங்களில் இருக்கும்—மிகுந்த ஆசையான-நெடுநாள் பழக்கப்பட்ட-இருட்டைப்போக்குகிறேன். அதாவது—என்னை விட்டுப் பிரிந்திருக்கத் தாங்கமுடியாமல், அவர்கள் என்னிடம் சீக்கிரம் வரும்படியாகச் செய்கிறேன். [11]

ஏவ— ஶ்ருத்வா ஸகலேதரவிஸஜாதீயம் பகவதஸாதாரணம் ஶ்ருண்வதாம் நிரதிஶயாநந்தஜநகம் கல்யாணகுணகணயோகம் ததைஶ்வர்யவிஸ்தரம் ச ஶ்ருத்வா தத்விஸ்தரம் ஶ்ரோதுகாம: அர்ஜுந உவாச—

அர்ஜுந உவாச—

பரம் ப்ரஹ்ம பரம் தாம பவித்ரம் பரமம் பவாந் ।
புருஷம் ஶாஶ்வதம் திவ்யமாதிதேவமஜம் விபும் ॥ ॥௧௨॥
ஆஹுஸ்த்வாம்ருஷய: ஸர்வே தேவர்ஷிர்நாரதஸ்ததா ।
அஸிதோ தேவலோ வ்யாஸ: ஸ்வயம் சைவ ப்ரவீஷி மே ॥௧௩॥

“பரம் ப்ரஹ்ம பரம் தாம பரமம் பவித்ரம்” இதி யம் ஶ்ருதயோ வதந்தி, ஸ ஹி பவாந் । “யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே । யேந ஜாதாநி ஜீவந்தி । யத்ப்ரயந்த்யபி

1. ஒருவன் விஷயங்களைப்பற்றின ஆசை போன பிறகு தானே தியானம் செய்கிறான். அப்படியிருக்க, தியானத்தினால் போகக்கூடிய ஆசை எது, அதுதான் தியானத்துக்குமுந்தியே போய் விட்டதே என்றால்; பதில்—விஷயங்களைப் பற்றின ஆசை ஸ்தூலம் (பெரிது) ஸூக்ஷ்மம் (சின்னது) என்று இருவகை. ஸ்தூலத்தினால் ஸூக்ஷ்மம் உண்டாகிறது. ஸ்தூலம்போய் தியானம் செய்தான். அப்போது ஸூக்ஷ்மம் இருந்தது. செய்த தியானத்தினால் அது போகிறது. உதாரணம்:—ஒருவன் ஸம்ஸாரத்தை வெறுத்து ஸந்நியாஸி ஆனான். ராத்திரியில் ஸ்வப்னத்தில் குழந்தை கிட்டவருகிறது போலிருக்கிறது. அப்போதும் நடுங்கினான். கொஞ்சகாலம் ஆனபிறகு அதுவும் போய் விடுகிறது.

ஸம்விசந்தி । தத்விஜிஜ்ஞாஸஸ்வ । தத் ப்ரஹ்ம" இதி, "ப்ரஹ்மவிதா
ப்நோதி பரம்", "ஸ யோ ஹ வை தத் பரமம் ப்ரஹ்ம வேத ப்ர
ஹ்மைவ பவதீ"தி । ததா பரம் ஜ்யோதி: । ப்ரஸித்தேஷு ஜ்யோ
திஷ்ட்வபி பரம் ஜ்யோதி:, "அத யதத: பரோ திவோ ஜ்யோதி
ர்தீப்யதே", "பரம் ஜ்யோதிருபஸம்பத்ய ஸ்வேந ரூபே
ணாபிநிஷ்பத்யதே", "தம் தேவா ஜ்யோதிஷாம் ஜ்யோதி:" இதி ।
ததா ச பரமம் பவித்ரம் । பரமம் பாவநம் ஸ்வதத்ப்ரபந்நாசேஷக
ல்மஷாசேஷகாணாம் பவித்ராணாம் ச । "யதா புஷ்கரபலாச ஆ
போ ந ஶ்லிஷ்யந்த ஏவமேவம்விதி பாபம் கர்ம ந ஶ்லிஷ்யதே", "தத்
யதேஷீகதூலமக்நௌ ப்ரோதம் ப்ரதூயேதைவம் ஹாஸ்ய
ஸர்வே பாப்மாந: ப்ரதூயந்தே", "நாராயண பரம் ப்ரஹ்ம
தத்த்வம் நாராயண: பர: । நாராயண பரோ ஜ்யோதிராத்மா
நாராயண: பர:" இதி ஹி ச்ருதயோ வதந்தி । ஸ்ம்ருதயஶ்ச ஸ
ர்வே பராவரதத்த்வயாதாத்ம்யவிதஶ்ச ஶாஶ்வதம் திவ்யம்
புருஷமாதிதேவமஜம் விபுமாஹு: । தமேவ தே
வர்ஷிர்நாரத: அஸிதோ தேவலோ வ்யாஸஶ்ச । "ஏஷ நா
ராயண: ஶ்ரீமாந் க்ஷீரார்ணவநிகேதந: । நாகபர்யங்கமுத்ஸ்ரு
ஜ்ய ஹ்யாகதோ மதுராம் புரீம்", "புண்யா த்வாரவதீ
தத்ர யத்ராஸ்தே மதுஸூதந: । ஸாக்ஷாத்தேவ: புராணோ
ऽஸௌ ஸ ஹி தர்ம: ஸநாதந:", "யே ச வேதவிதோ விப்ரா யே
சாத்யாத்மவிதோ ஜநா: । தே வதந்தி மஹாத்மாநம் க்ருஷ்ணம் த
ர்மம் ஸநாதநம்" ॥ "பவித்ராணாம் ஹி கோவிந்த: பவித்ரம்
பரமுச்யதே । புண்யாநாமபி புண்யோऽஸௌ மங்கலா
நாம் ச மங்கலம்" ॥ "த்ரைலோக்யம் புண்டரீகாக்ஷோ தேவதே
வ: ஸநாதந: । ஆஸ்தே ஹரிரசிந்த்யாத்மா தத்ரைவ மது
ஸூதந:", ததா "யத்ர நாராயணோ தேவ: பரமாத்மா
ஸநாதந: । தத் க்ருத்ஸ்நம் ஜகத்பார்த்த தீர்த்தமாயதநாநி ச ।
தத்புண்யம் தத்பரம் ப்ரஹ்ம தத்தீர்த்தம் தத்தபோவநம் । தத்ர
தேவர்ஷயஸ்ஸித்தாஸ்ஸர்வே சைவ தபோதநா:" ॥ ஆதிதே

வோ ஊஹாபோஹீ யத்ராஸ்ய ஊர்த்வஜந: | ப்ரத்யாந
ஊஷி தத்வம் ஊஹந்தே ஸம்ஶயோஸ்த்வேவ || க்ருஷ்ண
ஏவ ஹி லோகாநாமுத்பத்திரபி சாவ்யய: | க்ருஷ்ணஸ்ய ஹி
க்ருதே பூதமிதம் விஶ்வம் சராசரம்' இதி || ஸ்வயமேவ
ச ப்ரவீஷி ஸர்வோத்க்ருஷ்டதாம் வாய: ஸம் ஊநாவ
ஷீர்ஷ ச| அஹங்காரஜநீயம் ஹிதாஸ்ய க்ருத்ஸ்ந ஏவ' த்வ
த்ர: அஹம் ஸர்வஸ்ய ப்ரபவோ மத்தஸ்ஸர்வம் ப்ரவர்த்ததே'
இத்யேதந || ||௧௩||

அவ—இப்படி பகவானைத்தவிர மற்ற ஒருவருக்கும் இல்லாத தாய் பகவானுக்கு மாத்திரம் இருப்பதும், இதைக்கேட்கிற காலத்தில் யாருக்கும் அளவில்லாத ஆநந்தத்தைக் கொக்கக் கூடியது மான பகவான் எல்லா உலகங்களையும் ஆளுவதின் விரிவையும், அவனுடைய உயர்ந்த குணங்களையும் கேட்டு, அதை இன்னும் விரிவாகக் கேட்க வேணுமென்று ஆசையினால் அர்ஜுநன் சொல்லுகிறான்—

வேதங்களில் பரம் பிரும்ம என்றும், பரம்தாம என்றும், பரமம் பவித்திரம் என்றும்சொல்லப்படுகிறவர் தேவரீர்தான். பரம் பிரும்ம என்றால், மிகவும் உயர்ந்த வஸ்து. பரம்தாம என்றால், மிகவும் உயர்ந்தபிரகாசமுடைய வஸ்து; பரமம் பவித்திரம்என்றால், எல்லாருடைய எல்லாதோஷங்களையும் தன்னை நினைத்தமாத்திரத்தால் போக்கக்கூடிய வஸ்து. இது உயர்ந்தது, இது இளப்பம் என்று வஸ்துக்களுடைய உண்மையை அறிந்த எல்லா ருஷிகளும் தேவரீரைத்தான் அழிவில்லாதவராகவும், பரமபதத்திலிருப்பவராகவும், எல்லா உலகங்களாகிற பெண்களை ஆளக் கூடிய ஆண்மையை யுடையவராகவும், எல்லா லோகங்களையும் விளையாட்டாக உண்டு பண்ணுகிறவராகவும், ஒருக்காலும் பிறப்பில்லாதவராகவும், எங்கும் நிறைந்தவராகவும் சொல்லுகிறார்கள். அப்படியே தேவருஷியான நாரதர், அஸிதர், தேவலர், வியாஸர், இவர்களும் சொல்லுகிறார்கள். தேவரீரும் அப்படியே சொல்லுகிறீர்.

[illegible] ||கச||

[illegible] ||கச||

ஆகையாலே, நீர் இதுவரையில் உம்மிடத்திலிருப்பதாகச் சொன்ன எல்லா ஸங்கதிகளும் உண்மையில் உம்மிடத்தில் இருக்கின்றன. நீர் தப்பாக உம்மை ஸ்தோத்திரம் பண்ணிக் கொள்ளவில்லை என்று எனக்கு மனதாரத் தோன்றுகிறது. ஆகையாலே அளவில்லாத-ஞானம்-சக்தி-பலம்-ஐசுவரியம்-வீர்யம்-தேஜஸ்ஸு இவைகளுக்கு இருப்பிடமானவரே! நீர் உம்முடைய ஸங்கதிகளை எப்படித் தெளிவாய் எடுத்துச் சொல்லுகிறீரோ, அப்படி மிகவும் கொஞ்சமான அறிவுள்ள தேவர்களாலும், அஸுரர்களாலும் சொல்லமுடியாது. அவர்களுக்கு உம்மைப்பற்றித் தெளிவான அறிவில்லை. ஆகையால் உம்முடைய ஸங்கதிகளை இன்னொருவரைக் கொண்டு அறியமுடியாது. [14]

[illegible] ||கரு||

[illegible] ||கரு||

ஏ உயர்ந்த புருஷனே ! நீர் உம்மை உம்முடைய ஞானத்தாலே தானாகவே அறிகிறீர். மற்றவர்கள் உம்முடைய அனுக்ரஹத்தால் அறிய வேணும். எல்லா உலகங்களையு முண்டுபண்ணுகிறவரே! எல்லா உலகங்களையும் அடக்கி ஆளுகிறவரே! தேவதைகளுக்கெல்லாம் உயர்ந்த தேவதையானவரே! அதாவது—மனிதர் மாடு, பறவை, முதலியவைகளுக்கும், தேவதைகளுக்கும் அழகு முதலிய குணங்களால் எவ்வளவு வாசியிருக்கிறதோ, அவ்வளவு தேவதைகளுக்கும், தேவரீருக்கும் இருக்கிறது. எல்லா உலகத்துக்கும் ராஜாவே ! [15]

வக்துமர்ஹஸ்யஶேஷேண திவ்யா ஹ்யாத்மவிபூதய꞉॥
யாபிர்விபூதிபிர்லோகாநிமாம்ஸ்த்வம் வ்யாப்ய திஷ்டஸி ॥

திவ்யா꞉-ஸ்வாஸாதாரணா விபூதயோ யா꞉, தாஸ்ஸர்வா அஶேஷேண வக்துமர்ஹஸி-த்வமேவ வக்துமர்ஹஸி| யாபிர்நியமநவிபூதிபி꞉ - நியமநவிஶேஷை꞉ யுக்த꞉, இமாந் லோகாந் த்வம் நியந்த்ருத்வேந வ்யாப்ய திஷ்டஸி॥

எந்த சக்தியினாலே இந்த எல்லா லோகங்களையும் ஏவிக்கொண்டு, எங்கும் நிறைந்திருக்கிறீரோ, மற்ற ஒருவனுக்குமில்லாத உமக்கு மாத்திரமுள்ள அந்த விபூதிகளை (அடக்கி ஆளுகிற சக்திகளை) எல்லாவற்றையும் மீதியில்லாமல் தேவரீராலே தான் சொல்ல முடியும். ஆகையால் அவைகளைச் சொல்லவேண்டும்.[16]

கதம் வித்யாமஹம் யோகிம்ஸ்த்வாம் ஸதா பரிசிந்தயந் ।
கேஷு கேஷு ச பாவேஷு சிந்த்யோऽஸி பகவந்மயா॥

அஹம் யோகீ-பக்தியோகநிஷ்டஸ்ஸந் ஸக்த்யா த்வாம் ஸதா பரிசிந்தயந்-சிந்தயிதும் ப்ரவ்ருத்தஶ்சேதீயம் த்வாம் பரிபூர்ணைஶ்வர்யாதிகல்யாணகுணகணம் கதம் வித்யாம் । பரி-வேதாத்வதிஷ்டாநாதி ஸர்வவஸ்துஷு கேஷு கேஷு ச பாவேஷு மயா நியமேந சிந்த்யோऽஸி॥

நான் பக்தியோகம் என்கிற உம்முடையத் தியானத்தைச் செய்ய ஆரம்பிக்கும்போது, எல்லா லோகங்களையும் ஆளுகூட

விடாமல் அடக்கி ஆளுகிறது முதலான உம்முடைய உயர்ந்த குணங்களைப்பற்றி பூர்ணமாக தெளிவுளப்படி உருமோ, அப்படியும், கீழ்ச்சொன்ன புத்தி முதலானவைகள் தவிர, இன்னும் என்னென்ன வஸ்துகள் தேவரீரால் ஏற்படுகின்றனவென்று நான் தெரிந்து கொள்ளவேணுமோ, அவைகளை அறியும்படியும் சொல்லவேண்டும். [17]

விஸ்தரேணாத்மநோ யோகம் விபூதிம் ச ஜநார்த்தந |
பூய: கதய த்ருப்திர்ஹி ஶ்ருண்வதோ நாஸ்தி மேம்ருதம் ||

“அஹம் ஸர்வஸ்ய ப்ரபவோ மத்த: ஸர்வம் ப்ரவர்த்ததே” இதி ஸங்க்ஷேபேணோக்தம் தவ ஸ்ரஷ்ட்ருத்வாதியோகம் விபூதிம் நியமநம் ச பூயோ விஸ்தரேண கதய | த்வத்வசநாம்ருதம் ஶ்ருண்வதோ மே த்ருப்திர்நாஸ்தி ஹி அத: த்ருப்திஸ்த்வயைவ விதித்ஸ்யப்ராய: || கஅ

எல்லா உலகங்களையும் உண்டுபண்ணுவதையும், எல்லா உலகங்களையும் அடக்கி ஆளுவதையும் சுருக்கமாகச் சொன்னீர். அவைகளை விரிவாகச் சொல்லும். தேவரீராலே சொல்லப்படுகிற தேவரீருடைய பெருமையாகிற அமிருதத்தைக் கேட்டு, எனக்கு திருப்தியாகவில்லையே. ஆசையடங்கவில்லையே. அது தேவரீருக்குத் தெரியுமே. [18]

ஸ்ரீபகவாநுவாச—

ஹந்த தே கதயிஷ்யாமி திவ்யா ஹ்யாத்மவிபூதய: |
ப்ராதாந்யத: குருஶ்ரேஷ்ட நாஸ்த்யந்தோ விஸ்தரஸ்ய மே ||

ஹந்த குருஶ்ரேஷ்ட! மதீயா: கல்யாணீர்திவ்யா விபூதீ: ப்ராதாந்யதஸ்தே கதயிஷ்யாமி | ப்ராதாந்யஶப்தேநோத்கர்ஷோ விவக்ஷித:, “ஜ்யோதிஷாம் ச ரவிரம்ஶுமாந்” இதி ஹி வக்ஷ்யதே | ஜகத்யுத்க்ருஷ்டா: காஶ்சந விபூதீர்வக்ஷ்யாமி | விஸ்தரேண வக்தும் ஶ்ரோதும் ச ந ஶக்யதே, தாவஸாநத்வாச்ச | விபூதிகம் நாஸ்தி நியாம்யகம் | ஸர்வேஷாம் ஸ்வாத்மாநம் வைலக்ஷண்யாதய: ப்ரயுக்தா ஸர்வா உத்க்ருஷ்ட ஸம்ஹத்யா

க்ஷய:, ப்ரவ்ருத்தம் விபூதிவிஸ்தாரம் ச. ஏத யோ வேத்தி தத்த்வத: இத்யுக்தம் ப்ரதிபாதநாய! அத்ர ததா யோகஶப்தநிர்திஷ்டம் ஸர்வஸ்யாதிகம் விபூதிஶப்தநிர்திஷ்டம் தத்ப்ரவர்த்யத்வம் ப்ரதிபாதிதம் ! ப்ராக்தந ப்ரகரணம் ஸர்வஸ்ய ப்ரபவோ ஹ்யஹம் ஸர்வம் ப்ரவர்த்தத இதி ஶ்லோகா ஸர்வநாம் பாஹ்யா ஸா-வஸ்தித்தா:” இத்யுக்தம் ‖ ‖௧௯‖

பகவான் சொல்லுகிறார்—

குருவம்சத்தாருக்குள் உயர்ந்தவனான அர்ஜுநனே! உலகத்தில் மிகவுமுயர்ந்தவையாயும்,நல்லவைகளுமான-என்னால் அடக்கி ஆளப்படுகிற சில வஸ்துக்களை உனக்குச்சொல்லுகிறேன். அவைகளை முழுவதையும் என்னால் சொல்லவும், உன்னால் கேட்கவும் முடியாது. ஏனென்றால்,அவைகளைக் கணக்குப் பண்ணமுடியாது.

அவ— தத்ர ஸர்வேஷாம் பூதாநாம் ப்ரவர்த்தநரூபம் நியந்த்ருத்வம் ஆத்மதயாவஸ்தாயேதி உபயம் யோகஶப்தநிர்திஷ்டம் ஸர்வஸ்ய ஸர்வாதிகம் காரணத்வம் லக்ஷணத்வம் சேதி ஸாமாஸதோ ஹ—

அஹமாத்மா குடாகேஶ ஸர்வபூதாஶயஸ்தித: |
அஹமாதிஶ்ச மத்யம் ச பூதாநாமந்த ஏவ ச ‖ ‖௨௦‖

ஸர்வேஷாம் பூதாநாம் ஶரீரபூதாநாம் ஆஶயே ஹ்ருதயே அஹமாத்மதயாவஸ்தித: ! ஆத்மா ஹி நாம ஶரீரஸ்ய ஸர்வாத்மநா ஆதார:, நியந்தா, ஶேஷீ ச ! ததா ச ஸர்வஸ்ய ஆதாரம் ஹ்யதி ஸம்நிவேஶே ஶ்ருதி: ஸ்ம்ருதி ஶ்ருதிஶதேஷு ச, ஶ்ரு-ஸ்ருவ ஸர்வபூதாநாம் ஹ்ருதயேஶோ ஜநார்த்தந இதி ! ஹ்ருதயஸ்ய ஸர்வபூதாநி யதா ஸாக்ஷீ இதி | ஶ்ரூயதே ச யஸ்ய ஸர்வேஷாம் பூதாநாம் ஆத்மா ஸர்வேஷாம் ஹ்ருதயேஷு தேஷாம் ஸர்வாணி பூதாநி ந விது: யஸ்ய ஸர்வாணி பூதாநி ஶரீரம் யஸ்ஸர்வாணி பூதாந்யந்தரோ யமயதி ஸ ஏஷ த ஆத்மா

யந்தர்யாம்யம்ருத:'' இதி, "ய ஆத்மநி திஷ்டந்நாத்மநோऽந்தரோ யமாத்மா ந வேத யஸ்யாத்மா ஶரீரம் ய ஆத்மாநமந்தரோ யமயதி ஸ த ஆத்மாந்தர்யாம்யம்ருத:'' இதி ச। ஏவம் ஸர்வபூதாநாமாத்மத்வாத்ஸர்வேஷாம் தேஷாமாதிர்மத்யம் சாந்தஶ்ச தேஷாமுத்பத்திஸ்திதிப்ரளயஹேதுரித்யர்த: ॥ ௨௦ ॥

அவ—பகவான் எல்லாவற்றிற்கும் ஆத்மாவாக இருந்து, எல்லாப் பிராணிகளையும் நியமிக்கிறான் (அந்தந்த வேலைகளைச் செய்விக்கிறான்) என்பதையும், யோகம் என்று சொல்லப்பட்ட-எல்லா லோகங்களையும் உண்டுபண்ணுகிறது, காப்பாற்றுகிறது, அழிக்கிறது—என்பதையும் தெளிவாகச் சொல்லுகிறார்—

என்னுடைய உடம்புகளான எல்லாப் பிராணிகளுடைய ஹிருதயத்தில் நான் ஆத்மாவாய் இருக்கிறேன். ஆத்மாவென்பது உடம்பையிருக்கிறவரையில் தவறாமல் எப்பொழுதும் தாங்குகிறது, எப்பொழுதும் ஏவுகிறது, எப்பொழுதும் உபயோகித்துக் கொள்ளுகிறது. இப்படி ஹிருதயத்தில் இருப்பதை மேலே சொல்லப் போகிறது. வேதங்களிலும் சொல்லி இருக்கிறது. இந்த நான் எல்லாப் பிராணிகளையும் உண்டு பண்ணுகிறவனும், காப்பாற்றுகிறவனும், அழிக்கிறவனும் இருக்கிறேன். [20]

அவ— ஏவம் ஸ்வத: ஸ்வவிபூதிபூதேஷு ஸர்வேஷ்வாத்மதயாவஸ்தாநம் தத்தச்சப்தஸாமாநாதிகரண்யநிபந்தநம் ப்ரதிபாத்ய, விபூதிவிஶேஷாந் ஸாமாநாதிகரண்யேந வ்யபதிஶதி। ஸர்வத்ராத்மதயாவஸ்திதோ ஹி ஸர்வே ஶப்தா மய்யேவ பர்யவஸ்யந்தி, யதா 'தேவோ மநுஷ்ய: பக்ஷீ வ்ருக்ஷ:'' இத்யாதய: ஶப்தா: ஶரீராணி ப்ரதிபாதயந்த: தத்தாத்மநி பர்யவஸ்யந்தி। ஸர்வத்ராத்மதயாவஸ்தாநமேவ தத்தச்சப்தஸாமாநாதிகரண்யநிபந்தநம் விபூதித்வம் ஸர்வஸ்ய வக்ஷ்யதி—"ந ததஸ்தி விநா யத்ஸ்யாந்

யாஸ்ருஷ்டம் சராசரம்'' இதி ஸர்வேஷாம் ஸ்ருஜநாதிநாஶாவவ ம்நாஸ் | கவிநாஶாவஸ்து நியாம்யதேதி 'ஏதத்வஶம் ஸர்வ தத்தே'' இத்யாவல்கோக்திஶ்ச —

ஆதித்யாநாமஹம் விஷ்ணுர்ஜ்யோதிஷாம் ரவிரம்ஶுமாந்|
மரீசிர்மருதாமஸ்மி நக்ஷத்ராணாமஹம் ஶஶீ || ||௨௧||

த்வாதஶஸம்க்யாஸம்க்யாதாநாமாதித்யாநாம் த்வாதஶோய உத்க்ருஷ்டோ விஷ்ணுர்நாமாதித்ய:, ஸோऽஹம் | ஜ்யோதிஷாம் ஜகதி ப்ரகாஶகாநாம் யோऽம்ஶுமாந் ரவி: ஆதித்யகண:, ஸோऽஹம் | மருதாமுத்க்ருஷ்டோ மரீசிர்ய:, ஸோऽஹமஸ்மி | நக்ஷத்ராணாமஹம் ஶஶீ| நசாயம் நிர்த்தாரணே ஷஷ்டீ, ''பூதாநாமஸ்மி சேதநா'' இதிவத் | நக்ஷத்ராணாம் பதிர்யஶ்சந்த்ர: ஸோऽஹமஸ்மி || ||௨௧||

அவ—உலகத்தில் உடம்பையும், ஆத்மாவையும் ஒன்ருகச் சொல்லுவது வழக்கம். ''அவன் பெருத்து இருக்கிருன்'' என்கிருர்கள். ''அவன்'' என்பது ஆத்மா. அது சின்னது. பெருத்து இருக்கிறது உடம்பு. ஆத்மாவில் பெருமன் இல்லை. பெருத்து இருக்கிருனென்ருல், பெருத்த உடப்பில் இருக்கிருன் என்று தான் பொருள். உலகமெல்லாம் பகவானுக்கு உடம்பாகையால், பகவானே உலகமென்று சொல்லலாம். உலகம் என்கிற சொல்லுக்கு உலகத்துக்கு ஆத்மாவென்றுதான் பொருள். பகவானையும், உலகத்தையும் ஒன்ருகச் சொல்லுவதற்குக் காரணமான-பகவான் உலகத்துக்கு ஆத்மா என்பதைச் சொல்லி, பகவானையும் உலகத்தில் உயர்ந்த வஸ்துக்களையும் ஒன்ருகச் சொல்லுகிருர். ஒன்ருகச் சொல்லுவதற்குக் காரணம் ஆத்மாவாயிருப்பதுதான் என்பதை இந்த அத்தியாயத்தின் முடிவிலே (சுலோகம்-39) சொல்லுகிருர்—'நான் இல்லாமல் உலகத்தில் ஒரு வஸ்துவுமில்லை' என்று. அதாவது—ஆத்மாவான என்னுலே ஏவப்படாதது ஒன்றுமில்லை என்று அதின் பொருள். இந்த ஸங்கதி ''என்னுலே தான் எல்லாம் நடக்கிறது'' என்று ஆரம்பத்தில் 8-வது சுலோகத்தில் சொன்னதால் ஏற்படுகிறது—

ஸூரியன்கள் பன்னிரெண்டு பேர்கள் இருக்கிறார்கள். நான் அவர்களுக்குள் உயர்ந்த பன்னிரெண்டாவதான விஷ்ணு என்கிற ஸூரியனாக இருக்கிறேன். உலகத்தில் இருட்டைப் போக்குகிற வஸ்துக்களுக்குள் ஸூரியன்கள் என்கிற கூட்டமாயிருக்கிறேன். காற்றுக்களுக்குள் மரீசி என்கிற காற்றாக இருக்கிறேன். நக்ஷத்திரங்களுக்குத் தலைவனான சந்திரனாக இருக்கிறேன் [21]

𑌵𑍇𑌦𑌾𑌨𑌾𑌂 𑌸𑌾𑌮𑌵𑍇𑌦𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌮𑌸𑍍𑌮𑌿 𑌵𑌾𑌸𑌵𑌃 ।
𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌾𑌂 𑌮𑌨𑌶𑍍𑌚𑌾𑌸𑍍𑌮𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌮𑌸𑍍𑌮𑌿 𑌚𑍇𑌤𑌨𑌾 ॥௨௨॥

𑌵𑍇𑌦𑌾𑌨𑌾𑌂-𑌋𑌗𑍍𑌯𑌜𑍁𑌸𑍍𑌸𑌾𑌮𑌾𑌥𑌰𑍍𑌵𑌣𑌾𑌂 𑌯 𑌉𑌤𑍍𑌕𑍃𑌷𑍍𑌟𑌸𑍍𑌸𑌾𑌮𑌵𑍇𑌦𑌃, 𑌸𑍋𑌽𑌹𑌮𑍍 । 𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌮𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑍋𑌽𑌹𑌮𑌸𑍍𑌮𑌿 । 𑌸𑌰𑍍𑌵𑌕𑌾𑌰𑌣𑌾𑌨𑌾𑌮𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌾𑌂, 𑌯𑌦𑍁𑌤𑍍𑌕𑍃𑌷𑍍𑌟𑌂 𑌮𑌨𑌃 𑌶𑍍𑌰𑍇𑌯𑌃, 𑌤𑌦𑌹𑌮𑌸𑍍𑌮𑌿 । 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌮𑌸𑍍𑌮𑌿 𑌚𑍇𑌤𑌨𑌾-𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌿𑌤𑌿 𑌯𑌾𑌵𑌤𑍍 । 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌚𑍇𑌤𑌨𑌾𑌵𑌤𑌾𑌂 𑌯𑌾 𑌚𑍇𑌤𑌨𑌾, 𑌸𑌾𑌹𑌮𑌸𑍍𑌮𑌿 ॥ ॥௨௨॥

வேதங்களுக்குள் மிகவும் உயர்ந்த ஸாமவேதமாயிருக்கிறேன் பாட்டு (கானம்) ரூபமாயிருப்பதாலும், ஆயிரம் கிளைகள் உள்ளதாய் இருப்பதாலும் அது உயர்ந்தது ஸ்வர்க்கத்தில் இருக்கும் தேவர்களுக்குள் இந்திரனாக இருக்கிறேன் பதினொன்று இந்திரியங்களுக்குள் உயர்ந்ததான மனதாக இருக்கிறேன். ஜீவன்களுக்கு உயர்த்தியைக் கொடுக்கிற அறிவாக இருக்கிறேன். [22]

𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌶𑌙𑍍𑌕𑌰𑌶𑍍𑌚𑌾𑌸𑍍𑌮𑌿 𑌵𑌿𑌤𑍍𑌤𑍇𑌶𑍋 𑌯𑌕𑍍𑌷𑌰𑌕𑍍𑌷𑌸𑌾𑌮𑍍 ।
𑌵𑌸𑍂𑌨𑌾𑌂 𑌪𑌾𑌵𑌕𑌶𑍍𑌚𑌾𑌸𑍍𑌮𑌿 𑌮𑍇𑌰𑍁𑌃 𑌶𑌿𑌖𑌰𑌿𑌣𑌾𑌮𑌹𑌮𑍍 ॥௨௩॥

𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌣𑌾𑌮𑍇𑌕𑌾𑌦𑌶𑌾𑌨𑌾𑌂 𑌶𑌙𑍍𑌕𑌰𑍋𑌽𑌹𑌮𑌸𑍍𑌮𑌿 । 𑌯𑌕𑍍𑌷𑌰𑌕𑍍𑌷𑌸𑌾𑌂 𑌵𑍈𑌶𑍍𑌰𑌵𑌣𑍋𑌽𑌹𑌮𑍍 । 𑌵𑌸𑍂𑌨𑌾𑌮𑌷𑍍𑌟𑌾𑌨𑌾𑌂 𑌪𑌾𑌵𑌕𑍋𑌽𑌹𑌮𑍍 । 𑌶𑌿𑌖𑌰𑌿𑌣𑌾𑌂-𑌶𑌿𑌖𑌰𑌶𑌾𑌲𑌿𑌨𑌾𑌂 𑌪𑌰𑍍𑌵𑌤𑌾𑌨𑌾𑌂 𑌮𑍇𑌰𑍁𑌰𑌹𑌮𑍍 ॥ ॥௨௩॥

பதினொன்று ருத்திரர்களுக்குள் சங்கரன் என்கிறவராக இருக்கிறேன் யக்ஷர்களுக்கும் ராக்ஷஸர்களுக்கும் தலைவனான குபேரனாக இருக்கிறேன் எட்டு வஸுக்களுக்குள் பாவகன் என

பவனாக இருக்கிறேன். அழகான சிகரமுள்ள (நுனியுள்ள) மலைகளுக்குள் மேரு என்கிற மலையாக இருக்கிறேன். மேருவின் நுனி தங்கமாயும், உயர்ந்த ரத்தினங்கள் இழைத்ததாயுமிருக்கிறதாம். [23]

𑌪𑍁𑌰𑍋𑌧𑌸𑌾𑌂 𑌚 𑌮𑍁𑌖𑍍𑌯𑌂 𑌮𑌾𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌬𑍃𑌹𑌸𑍍𑌪𑌤𑌿𑌮𑍍
𑌸𑍇𑌨𑌾𑌨𑍀𑌨𑌾𑌮𑌹𑌂 𑌸𑍍𑌕𑌨𑍍𑌦𑌃 𑌸𑌰𑌸𑌾𑌮𑌸𑍍𑌮𑌿 𑌸𑌾𑌗𑌰𑌃 ॥ ௨௪॥

𑌪𑍁𑌰𑍋𑌧𑌸𑌾𑌂 𑌮𑍁𑌖𑍍𑌯𑍋 𑌬𑍃𑌹𑌸𑍍𑌪𑌤𑌿𑌰𑌹𑌂, 𑌸𑍇𑌨𑌾𑌨𑍀𑌨𑌾𑌂-𑌸𑍇𑌨𑌾𑌪𑌤𑍀𑌨𑌾𑌂 𑌸𑍍𑌕𑌨𑍍𑌦𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 । 𑌸𑌰𑌸𑌾𑌂 𑌸𑌾𑌗𑌰𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 ॥ ॥௨௪॥

வாத்தியார்களுக்குள் இந்திரனுக்குக் குருவான பிருஹஸ்பதியாக இருக்கிறேன். அவர் பெரிய வித்துவானும். கர்மத்துக்குட்பட்ட ஸேனாபதிகளுக்குள் சுப்பிரமணியனாக இருக்கிறேன். ஓட்டமில்லாமல் தேங்கிஇருக்கும் ஜலங்களுக்குள் ஸமுத்திரமாக இருக்கிறேன். [24]

𑌮𑌹𑌰𑍍𑌷𑍀𑌣𑌾𑌂 𑌭𑍃𑌗𑍁𑌰𑌹𑌂 𑌗𑌿𑌰𑌾𑌮𑌸𑍍𑌮𑍍𑌯𑍇𑌕𑌮𑌕𑍍𑌷𑌰𑌮𑍍 ।
𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌂 𑌜𑌪𑌯𑌜𑍍𑌞𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌸𑍍𑌥𑌾𑌵𑌰𑌾𑌣𑌾𑌂 𑌹𑌿𑌮𑌾𑌲𑌯𑌃 ॥௨௫

𑌮𑌹𑌰𑍍𑌷𑍀𑌣𑌾𑌂-𑌮𑌰𑍀𑌚𑍍𑌯𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌭𑍃𑌗𑍁𑌰𑌹𑌮𑍍 । 𑌅𑌰𑍍𑌥𑌾𑌭𑌿𑌧𑌾𑌯𑌿𑌨𑍍𑌯𑍋 𑌗𑌿𑌰𑌃, 𑌤𑌾𑌸𑌾𑌮𑍇𑌕𑌮𑌕𑍍𑌷𑌰𑌂 𑌪𑍍𑌰𑌣𑌵𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 । 𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌂 𑌮𑍁𑌖𑍍𑌯𑍋 𑌜𑌪𑌯𑌜𑍍𑌞𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 । 𑌸𑍍𑌥𑌾𑌵𑌰𑌾𑌣𑌾𑌂 𑌹𑌿𑌮𑌵𑌾𑌨𑌹𑌮𑍍 ॥ ॥௨௫॥

மரீசிமுதலான பெரிய ருஷிகளுக்குள்ளே பிருகுஎன்பவராக இருக்கிறேன். சிலபேர்களை பெரிய ருஷிகள் என்று சொல்லி இருக்கிறது. பொருள்களுள்ள சொற்களுக்குள் ஒற்றை எழுத்தான பிரணவமாக இருக்கிறேன். யக்ஞங்களுக்குள் ஜபம்என்கிற யக்ஞமாக இருக்கிறேன். பிரும்மசாரிமுதலான எல்லா ஆசிரமக்காரர்களுக்கும்பொதுவாகஇருப்பதினாலும், ஆடுமுதலான உயிர்ப்பிராணிகளுக்கு ஹிம்ஸை இல்லாத்தினாலும், சீக்கிரத்தில் தியானத்தை உண்டுபண்ணுகிறதாகையாலும், அது உயர்ந்தது. மலைகளுக்குள் ஹிமவான் என்கிற மலையாக இருக்கிறேன். [25]

அஶ்வத்த: ஸர்வவ்ருக்ஷாணாம் தேவர்ஷீணாம் ச நாரத: ।
கந்தர்வாணாம் சித்ரரத: ஸித்தானாம் கபிலோ முனி: ॥ ௨௬ ॥

வ்ருக்ஷாணாம் மத்யே அஶ்வத்தோஸ்மி । தேவர்ஷீணாம் நாரதோஸ்மி ॥ ॥ ௨௬ ॥

மரங்களுக்குள் எல்லாரும் பூஜிக்கத்தகுந்த அரசமரமாக இருக்கிறேன். தேவ ருஷிகளென்று சொல்லப்படுமவர்களுக்குள் நாரதர் என்பவராக இருக்கிறேன். கந்தர்வர்களுக்கு ராஜாவான சித்திரரதன் என்பவனாக இருக்கிறேன், பிறந்தது முதல் எட்டு ஐசுவரியங்களை அடைந்தவர்களுக்குள் கபில ருஷியாக இருக்கிறேன்.

உச்சைஃஶ்ரவஸமஶ்வானாம் வித்தி மாமம்ருதோத்பவம் ।
ஐராவதம் கஜேந்த்ராணாம் நராணாம் ச நராதிபம் ॥

ஆயுதானாமஹம் வஜ்ரம் தேனூனாமஸ்மி காமதுக் ।
ப்ரஜனஶ்சாஸ்மி கந்தர்ப: ஸர்பாணாமஸ்மி வாஸுகி: ॥ ௨௮ ॥

காமதுக் - திவ்யா ஸுரபி: । ஜநநஹேது: கந்தர்போஸ்மி । ஸர்பா:- ஏகஶிரஸ: । நாகா:- பஹுஶிரஸ: ॥

குதிரைகளுக்குள் உச்சைசிரவஸு என்கிற - அமிருதத்தில் பிறந்த - இந்திரனுடைய வெள்ளைக் குதிரையாக இருக்கிறேன். திக்குக்களில் இருக்கிற யானைகளுக்குள் ஐராவதம் என்கிற இந்திரனுடைய - அமிருதத்தில் பிறந்த - வெள்ளை யானையாக இருக்கிறேன். மனிதர்களுக்குள் ராஜாவாக இருக்கிறேன். [27]

பகவானைத்தவிர மற்றவர்களின் ஆயுதங்களுக்குள் வஜ்ராயுதமாயிருக்கிறேன். பசுமாடுகளுக்குள் காமதேனுவாயிருக்கிறேன். ஜனங்களை உண்டு பண்ணுகிற மன்மதனாக இருக்கிறேன். ஒருதலைப் பாம்புகளுக்குள் வாஸுகி என்பவனாக இருக்கிறேன்.

அனந்தஶ்சாஸ்மி நாகானாம் வருணோ யாதஸாமஹம் ।
பித்ரூணாமர்யமா சாஸ்மி யம: ஸம்யமதாமஹம் ॥ ௨௯ ॥

யாதாம்ஸி-ஜலசராணி, தேஷாம் வருணோஸ்மி ।
தண்டயதாம் ஸம்யமதாம் ॥ ௨௯ ॥

அனேகம் தலைகள் உள்ள பாம்புகளுக்குள் ஆதிசேஷனாயி ருக்கிறேன். ஜலத்தில் இருக்கிற பிராணிகளுக்குள் வருணனாக இருக்கிறேன் பிதுரு தேவதைகளுக்கு ராஜாவான அரியமா என்பவனாக இருக்கிறேன். தண்டிக்கிறவர்களுக்குள் யமனாக இருக்கிறேன். [29]

ப்ரஹ்லாத³ஶ்சாஸ்மி தை³த்யாநாம் கால: கலயதாமஹம் |
ம்ருகா³ணாம் ச ம்ருகே³ந்த்³ரோ(அ)ஹம் வைநதேயஶ்ச பக்ஷிணாம் ||

கலயதாம் க³ணயதாம் மத்⁴யே கால: - ம்ருத்யுரஹம் । ||௩௦||

அஸுரர்களுக்குள் பிரஹ்லாதனாக இருக்கிறேன் கொலைக் குக்காலங் குறிக்கிறவர்களுக்குள்ளே காலன் என்றும், மிருத்தியு என்றும் சொல்லுகிற புருஷனாக இருக்கிறேன். நாலுகாலுள்ள பிராணிகளுக்குள் ஸிம்ஹமாக இருக்கிறேன். பக்ஷிகளுக்குள் அதிக வேகமுள்ள-வேதஸ்வரூபமென்று சொல்லப்படுகிற-கருடனாக இருக்கிறேன். [30]

பவந: பவதாமஸ்மி ராம: ஶஸ்த்ரப்⁴ருதாமஹம் |
஝ஷாணாம் மகரஶ்சாஸ்மி ஸ்ரோதஸாமஸ்மி ஜாஹ்நவீ ||௩௧||

பவதாம் - க³மநஸ்வபா⁴வாநாம் பவநோ(அ)ஹம்! ஶஸ்த்ரப்⁴ருதாம் ராமோ(அ)ஹம் | அத்ர ஶஸ்த்ரப்⁴ருத்த்வம் விபூ⁴தி:, [illegible] | [illegible] ஶஸ்த்ரப்⁴ருத்த்வஸாதீயா: ||

எப்போதும் போகிற வஸ்துக்களுக்குள் காற்றாக இருக்கிறேன். 1 திரேதாயுகத்தில் ராமனாக அவதரித்து, பரசுராமனை

1. இங்கு ராமன் என்பது முன்னையும் பின்னையும் சொன்னவை களைப் போல, பகவானைக் காட்டிலும் வேறான பகவானுடைய விபூதி (ஸொத்து) அன்று. "சஸ்த்ரப்ருத" (ஆயுதத்தைத் தரிக்கிறது) என்கிற சொல்லினால் சொல்லப்படுகிற-அறிவில்லாதவஸ்துவோ, அறிவுள்ளஜீவனோ பகவானைக்காட்டிலும் வேறானராமன் என்றஒருவஸ்துஉலகத்தில் வழங்குவதில்லை. ஆகையாலே ஆயுதத்தைத் தரிப்பது என்பது தான் பகவானுடைய விபூதி. இந்த இடத்தில் பகவானைக் காட்டிலும் வேறானவை களை ஒவ்வொன்றாக எடுத்து, நான் அது என்று சொல்லும்போது, அவ

ஜயித்த-ராவணனைக் கொன்ற-வில்லைப்போராக ஆயுதங்களையுடையவன் நான். மீன்களுக்கு ராஜாவான மகரம் என்கிற மீனாக இருக்கிறேன். ஆறுகளுக்குள் கங்கையாக இருக்கிறேன். [31]

ஸர்காணாமாதிரந்தஶ்ச மத்⁴யம் சைவாஹமர்ஜுந।
அத்⁴யாத்மவித்³யா வித்³யாநாம் வாத³: ப்ரவத³தாமஹம் ॥௩௨॥

ஸ்ருஜ்யந்த இதி ஸர்கா:, தேஷாமாதி³-காரணம்-அந்த: மத்⁴யம் ச அஹமேவ ... ஸ்ருஜ்யமாநாநாம் ஸர்வேஷாம் ... ஸர்வதா³ ஸ்ரஷ்டா ... ஹர்தா பாலயிதா சாஹமேவேத்யர்த²: | ததா² ஜ்ஞாநாநாம் ... ஸம்ஸாதநபோ⁴க³ப³ந்த⁴ ... | ததா² உத்³யம்-வாத³-ஜல்ப-விதண்டா³ ... வாத³ரூபாணாம் ... ப்ரவர்தமாநாநாம் ... | ஜ்ஞாநவிஷயாணாம் கத²யதாம் தத்த்வநிர்ணயாய ப்ரவ்ருத்தோ வாத³:, ஸோ(அ)ஹம் ॥ ௩௨ ॥

எப்போதுமுண்டாகிறப் பிராணிகளை உண்டு பண்ணுகிறவர்களும், எப்போதும் அழிக்கப்படுமவர்களை அழிக்கிறவர்களும், எப்போதும் காப்பாற்றப்படுகிறவர்களைக் காப்பாற்றுகிறவர்களும் நான்தான். அறிவுகளுக்குள் ஜீவன், தெய்வம் இவை முதலானவைகளைப் பற்றின உண்மையான அறிவாக இருக்கிறேன். ஒருவருக்கொருவருடைய பேச்சுக்களுக்குள் உண்மையைக் கண்டு பிடிக்கிறதற்காக ஏற்பட்ட 1 பேச்சாக இருக்கிறேன் [32]

னுடைய குணத்தையே எடுத்துச் சொல்லுகை சொல்லிக்கொண்டு வருகிற மாதிரிக்கு ஒத்ததா? என்றால், பதில்,—ஆதித்தியன முதலான ஜீவன்கள் எப்படிப் பகவானைக் காட்டிலும் வேறோ, அப்படியே சஸ்திர பிருத்தாயிருப்பது என்கிற குணமும், அதையுடைய பகவானைக் காட்டிலும் வேறுதானே. வேறான வஸ்து ஜீவனுக்கு இருந்தாலென்ன? தன்னிடத்திலேயேயிருப்பதொரு குணமாயிருந்தாலென்ன? ஆகையாலே ஒத்ததாகவே இருக்கிறது. சஸ்திரபிருத என்ற சொல்லுக்கு வீணாகப் போகாத ஆயுதமுள்ளவன் என்று பொருள்.

1. இன்னொருவனைத் தோற்கடித்துத் தனக்ஷியை ஸ்தாபிப்பது என்று ஒன்று. தன்கக்ஷியை ஸ்தாபிக்காமல், எதிரியின் கக்ஷியை மாத்திரம் கண்டிப்பது என்று ஒன்று. அவைகளைக்காட்டிலும் சுலோகத்தில் சொன்னது உயர்ந்தது. இதில் கோபம் கிடையாது.

அக்ஷராணாமகாரோ(அ)ஸ்மி த்வந்த்வ: ஸாமாஸிகஸ்ய ச |
அஹமேவாக்ஷய: காலோ தாதா(அ)ஹம் விஶ்வதோமுக: ||௩௩||

அக்ஷராணாம் வர்ணானாம் "அகாரோ வை ஸர்வா வாக்" இதி ஶ்ருதிஸித்தஸர்வவர்ணப்ரக்ருதிபூதோ(அ)காரோ(அ)ஹம் | ஸாமாஸிக: ஸமாஸஸமூஹ:, தஸ்ய த்வந்த்வ: ஸமாஸோ(அ)ஹம் | ஸ ஹ்யுபயபதார்த்தப்ரதாநதயா ஶ்ரேஷ்ட: | கலாமுஹூர்த்தாதிமயோ(அ)க்ஷய: காலோ(அ)ஹமேவ | ஸர்வஸ்ய ஸ்ரஷ்டா ஹிரண்யகர்ப்பஶ்சதுர்முகோ(அ)ஹம் || ||௩௩||

எழுத்துக்களுக்குள்ளே எல்லா எழுத்துக்களுக்கும் மூலம் என்று சொல்லப்படுகிற "அ" என்கிற எழுத்தாயிருக்கிறேன். ஒரு சொல்லோடு இன்னொரு சொல் சேருவதை ஸமாஸம் என்று சொல்லுகிறது. அவைகளுக்குள் 1 த்வந்த்வம் என்கிற சேர்க்கையாக இருக்கிறேன். விநாடி நாழிகை முதலான அழிவில்லாத காலமென்கிற வஸ்துவும் நான்தான். எல்லாவற்றையும் உண்டு பண்ணுகிற நாலு முகமுடைய பிரும்மாவும் நான்தான். [33]

ம்ருத்யு: ஸர்வஹரஶ்சாஹமுத்பவஶ்ச பவிஷ்யதாம் |
கீர்த்தி: ஶ்ரீர்வாக்ச நாரீணாம் ஸ்ம்ருதிர்மேதா த்ருதி: க்ஷமா ||

ஸர்வப்ராணஹரோ ம்ருத்யுரஹம் | உத்பத்ஸ்யமாநாநாமுத்பவாக்யம் கர்மாஹம் | நாரீணாம் ஶ்ரீரஹம் | கீர்த்திரஹம் | வாகஹம் | ஸ்ம்ருதிரஹம் | மேதாவாநஹம் | த்ருதிரஹம் | க்ஷமா சாஹம் || ||௩௪||

எல்லாருடைய உயிர்களையும் கொண்டுபோகிற மிருத்தியு என்பவனும் நான்தான். உண்டாகிற வஸ்துக்களுடைய உண்டாகிறது என்கிற ஸங்கதியும் நான்தான். ஸ்திரீகளுக்குள் மஹாலக்ஷ்மியாக

1. உதாரணம்—ராமலக்ஷ்மணௌ (ராமனும் லக்ஷ்மணனும்) இந்த இரண்டு சொற்களின் சேர்க்கையை த்வந்த்வஸமாஸமென்று சொல்லுகிறது. இந்த சேர்க்கையில் ஒவ்வொரு சொல்லின்பொருளும் முக்கியமானது. ஒன்று மற்றொன்றுக்கு உட்பட்டதன்று. ஆகையாலே இந்த சேர்க்கை உயர்ந்தது.

இருக்கிறேன். கீர்த்தியாக இருக்கிறேன். நல்ல வார்த்தை சொல்லுகிற வாக்காக இருக்கிறேன். நல்ல நினைவாக இருக்கிறேன். நல்ல ஸங்கதிகளை மறக்காமலிருக்கிற நல்ல புத்தியாக இருக்கிறேன். நல்ல காரியங்களில் உறுதியாக இருக்கிறேன். பொறுமையாக இருக்கிறேன். [34]

ப்ருஹத்ஸாம ததா ஸாம்நாம் காயத்ரீ சந்தஸாமஹம் ।
மாஸாநாம் மார்கஶீர்ஷோऽஹம் ருதூநாம் குஸுமாகர: ॥

ஸாம்நாம் ப்ருஹத்ஸாம அஹம் । சந்தஸாம் காயத்ரீ அஹம் । மாஸாநாம் மார்கஶீர்ஷ: அஹம் । ருதூநாம் குஸுமாகர: வஸந்த: ॥ (௩௫)

ஸாமங்களுக்குள்ளே பிருஹத் என்கிற ஸாமமாக இருக்கிறேன். சந்தஸ்ஸுக்களுக்குள் 1 காயத்திரீ என்கிற சந்தஸ்ஸாக இருக்கிறேன். பனிரெண்டு மாதங்களுக்குள் 2 மார்கழி மாதமாயிருக்கிறேன். ருதுக்களுக்குள் வஸந்தருதுவாக இருக்கிறேன். அது எல்லாப் பிராணிகளுக்கும் ஸுகமாயிருக்கும் (35)

---

1. காயத்திரியின் உயர்த்திக்குக் காரணம்-ஸுபர்ணி என்கிற தன் தாயாரின் ஏவுதலின்பேரில் காயத்திரீ என்கிற சந்தஸ்ஸு தேவலோகம் போய், ஸோமம் என்கிற கொடியைப் பூமிக்குக் கொண்டு வந்தது. முதலில் அதைக் கொண்டுவருவதற்குப்போன-ஒரு பாதத்தில் 14-எழுத்துள்ள-ஜகதீ என்கிற சந்தஸ்ஸு அதைக் கொண்டுவர முடியாமல், இரண்டு எழுத்துக்களை இழந்து விட்டுத் திரும்பி வந்தது. ஒரு பாதத்தில் 13-எழுத்துள்ள த்ரிஷ்டுப் சந்தஸ்ஸு போய், ஜகதியைப் போலவே வேலையை முடிக்காமல் இரண்டு எழுத்துக்களை இழந்து விட்டுத் திரும்பி வந்தது. காயத்திரீபோய் ஸோமக் கொடியையும், மற்ற இரண்டுமிழந்த எழுத்துக்களையும் கொண்டு வந்தது. முன்பு அதற்கு ஒருபாதத்தில் நாலுஎழுத்துக்கள் தானிருந்தன இப்போது எட்டெழுத்தாயிற்று. மற்ற இரண்டும், 12–11–எழுத்துள்ளவைகளாக ஆயிற்று, (யஜுர்வேதம்—6—வது காண்டம்—முதல் ப்ரச்நம்-6-வது-அநுவாகம்)

2. மார்கழி மாதத்தின் உயர்த்திக்குக் காரணம்—(1) மழை என்கிற குழந்தையைக் கர்ப்பத்தில் வைக்கிறகாலம். அதாவது—இந்த மாதத்தில் மேகங்கள் ஸஞ்சரிப்பதைப் பார்த்து, அடுத்த வர்ஷத்தில் மழை பொழிவதை ஜனங்கள் அறிகிறார்கள். (2) கேசவன் முதலான பனிரெண்டு அவதாரங்களுக்குள் முதலான கேசவனுடைய மாதமாக இருக்கிறது. அப்போது தேவதைகளுக்கு ராத்திரி முடியும் காலம். விரதங்களை ஆரம்பிக்கும் காலம்.

𑌦𑍍𑌯𑍂𑌤𑌂 𑌛𑌲𑌯𑌤𑌾𑌮𑌸𑍍𑌮𑌿 𑌤𑍇𑌜𑌸𑍍𑌤𑍇𑌜𑌸𑍍𑌵𑌿𑌨𑌾𑌮𑌹𑌮𑍍 ।
𑌜𑌯𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌵𑍍𑌯𑌵𑌸𑌾𑌯𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌵𑌤𑌾𑌮𑌹𑌮𑍍 ॥௩௬॥

𑌛𑌲𑌂 𑌕𑍁𑌰𑍍𑌵𑌤𑌾𑌂 𑌛𑌲𑌾𑌸𑍍𑌪𑌦𑍇𑌷𑍍𑌵𑌕𑍍𑌷𑌾𑌦𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌦𑍍𑌯𑍂𑌤𑌮𑌸𑍍𑌮𑌿 । 𑌜𑍇𑌤𑍄𑌣𑌾𑌂 𑌜𑌯𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 । 𑌵𑍍𑌯𑌵𑌸𑌾𑌯𑌿𑌨𑌾𑌂 𑌵𑍍𑌯𑌵𑌸𑌾𑌯𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 । 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌵𑌤𑌾𑌂 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌂-𑌮𑌹𑌾𑌮𑌨𑌸𑍍𑌤𑍍𑌵𑌮𑍍 ॥ ॥௩௬॥

மோசம்பண்ணுகிறவர்களுடைய வேலைகளுக்குள் சொக்கட்டான் ஆட்டமாக இருக்கிறேன் தேஜஸ்ஸையுடையவர்களுடைய தேஜஸ்ஸு என்கிற குணமாயிருக்கிறேன். தேஜஸ்ஸு என்பது சத்துருக்களை அவமானம் பண்ணும்படியான ஸாமர்த்தியம். ஜயிக்கிறவர்களுடைய ஜயம் என்கிற குணமாயிருக்கிறேன் நல்ல காரியத்தைச் செய்யவேணுமென்று தீர்மானிக்கிறவர்களுடைய தீர்மானமாக இருக்கிறேன். பெரிய மனதுள்ளவர்களுடைய பெரிய மனதாக இருக்கை என்கிற குணமாக இருக்கிறேன். (36)

𑌵𑍃𑌷𑍍𑌣𑍀𑌨𑌾𑌂 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌪𑌾𑌣𑍍𑌡𑌵𑌾𑌨𑌾𑌂 𑌧𑌨𑌂𑌜𑌯𑌃।
𑌮𑍁𑌨𑍀𑌨𑌾𑌮𑌪𑍍𑌯𑌹𑌂 𑌵𑍍𑌯𑌾𑌸𑌃 𑌕𑌵𑍀𑌨𑌾𑌮𑍁𑌶𑌨𑌾 𑌕𑌵𑌿𑌃 ॥ ॥௩௭॥

𑌵𑌸𑍁𑌦𑍇𑌵𑌸𑍂𑌨𑍁𑌤𑍍𑌵𑌮𑌤𑍍𑌰 𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌃, 𑌅𑌯𑌮𑌹𑌂 𑌤𑍍𑌵𑌤𑍍𑌸𑌖 𑌏𑌵 । 𑌪𑌾𑌣𑍍𑌡𑌵𑌾𑌨𑌾𑌂 𑌧𑌨𑌂𑌜𑌯𑌃-𑌤𑍍𑌵𑌮𑍇𑌵𑌾𑌹𑌮𑍍। 𑌮𑍁𑌨𑌯𑌃-𑌮𑌨𑌨𑍇𑌨𑌾𑌤𑍍𑌮𑌯𑌾𑌥𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌦𑌰𑍍𑌶𑌿𑌨𑌃, 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌵𑍍𑌯𑌾𑌸𑍋𑌽𑌹𑌮𑍍। 𑌕𑌵𑌯𑌃-𑌵𑌿𑌪𑌶𑍍𑌚𑌿𑌤𑌃 ॥ ॥௩௭॥

[1] வ்ருஷ்ணிகளுக்குள் வஸுதேவர் பிள்ளையாக இருக்கிறேன் அதாவது—வஸுதேவர் வீட்டில் நாலு கைகளுடன் அவதாரம் செய்தது முதல் மனிதர்களுக்குள் காணக்கூடாத குணங்களையும்,

---

1. 31-வது சுலோகத்தில் "சஸ்த்ரப்ருதாம" என்கிற சொல்லைப்பற்றி எழுதியிருக்கும் குறிப்பைப் பார்க்க. வஸுதேவர் பிள்ளையாயிருப்பது இங்கே விபூதி. இது அர்ஜுனனுக்குத் தெரியும். ஆகையால் அதைச் சொன்னது உதாரணமாக. எப்படி வஸுதேவர் வீட்டில பிறந்து பகவான் செய்ததெல்லாம உண்மையோ, அப்படியே இங்கே சொல்லுவதெல்லாம் உண்மையென்று அர்ஜுனன் எண்ணவேணுமென்பதற்காகச் சொன்னது.

திருமேனியையும், சக்தியையும் உடையவனாய் எல்லாருக்கும் தெரியும்படி இருக்கை என்பது என்னுடைய விபூதி. பாண்டுமஹாராஜாவின் பிள்ளைகளுக்குள் (உங்களுக்குள்) அர்ஜுனனாக (நீயாக) இருக்கிறேன். யோசித்துப்பார்த்து உண்மையைக் கண்டு பிடிக்கிறவர்களுக்குள் வியாஸராக இருக்கிறேன். நீதி சாஸ்திரம் தெரிந்தவர்களுக்குள் சுக்கிராசாரியாக இருக்கிறேன். (37)

தண்டோ தமயதாமஸ்மி நீதிரஸ்மி ஜிகீஷதாம் | மௌநம்
சைவாஸ்மி குஹ்யாநாம் ஜ்ஞாநம் ஜ்ஞாநவதாமஹம் ||

நியமாதிக்ரமணே தண்டம் குர்வதாம் தண்டோऽஹம் | விஜிகீஷூணாம் ஜயோபாயபூதா நீதிரஸ்மி | குஹ்யாநாம் ஸம்பந்திஷு கோபநஹேதுஷு மௌநமஸ்மி | ஜ்ஞாநவதாம் ஜ்ஞாநம் சாஹம் || ||௩௮||

தப்புப்பண்ணுகிறவர்களைத் தண்டிக்கிறவர்களுடைய தண்டிக்கிறது என்கிற குணமாக இருக்கிறேன். சத்துருக்களை ஜயிக்கிறதற்கு உதவியான உபாயமாக இருக்கிறேன். மறைக்கவேண்டிய ஸங்கதிகளை மறைக்கிற வேலைகளுக்குள் பேசாமலிருப்பதாக இருக்கிறேன். அறிவுள்ளவர்களுடைய உயர்ந்த ஸுகத்தைக் கொடுக்கக் கூடிய அறிவாக இருக்கிறேன். [38]

யச்சாபி ஸர்வபூதாநாம் பீஜம் ததஹமர்ஜுந |
ந ததஸ்தி விநா யத்ஸ்யாந்மயா பூதம் சராசரம் ||௩௯||

ஸர்வபூதாநாம் ஸர்வாவஸ்தாவஸ்திதாநாம் தத்ததவஸ்தாபீஜபூதம் [illegible] யத்ததஹமேவ | [illegible] மயா விநா யத்ஸ்யாத், ந ததஸ்தி | "அஹமாத்மா குடாகேஶ ஸர்வபூதாஶயஸ்தித:" இத்யுக்தத்வாச்ச | ந ததஸ்தி விநா யத்ஸ்யாந்மயா பூதம் சராசரம் [illegible] விவக்ஷிதம் | ஸர்வம் [illegible] ||௩௯||

உலகத்தில் நாள்தோறும் உண்டாகிற எல்லாவஸ்துக்களுக்கும் ஜனங்களாலே அறியப்பட்டதும், அறியப்படாததுமான காரணமாயிருக்கிறேன். ஆத்மாவாயிருந்து என்றால் ஏற்படாத வஸ்து உலகத்தில் கிடையாது. ஆரம்பமான 20-வது சுலோகத்தில் எல்லாப் பிராணிகளுடைய ஹிருதயத்தில் இருக்கிறேனென்று சொன்னபடியால், இந்த சுலோகத்துக்கு இப்படித்தான் பொருள் கொள்ளவேணும். உலகத்தில் என்னைத்தவிர வேறுபொருளில்லை; நான் ஒன்றுதான் பொருள் என்று அர்த்தம் சொல்லக்கூடாது அது இந்த இடத்துக்கு ஒட்டாது. "நான்தான் உலகத்திலுள்ள எல்லா வஸ்துக்களாக இருக்கிறேன்" என்று இதுவரையில் சொன்னது நான் அவைகளுக்கு ஆத்மாவாக இருப்பதைப் பற்றி-என்று இந்த சுலோகத்தினால் நன்றாகக் காண்பிக்கிறார். [39]

𑌨𑌾𑌨𑍍𑌤𑍋𑌽𑌸𑍍𑌤𑌿 𑌮𑌮 𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌵𑌿𑌭𑍂𑌤𑍀𑌨𑌾𑌂 𑌪𑌰𑌨𑍍𑌤𑌪 ।
𑌏𑌷 𑌤𑍂𑌦𑍍𑌦𑍇𑌶𑌤𑌃 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑍋 𑌵𑌿𑌭𑍂𑌤𑍇𑌰𑍍𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑍋 𑌮𑌯𑌾 ॥

𑌮𑌮 𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌨𑌾𑌂-𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑍀𑌨𑌾𑌂 𑌵𑌿𑌭𑍂𑌤𑍀𑌨𑌾𑌮𑌨𑍍𑌤𑍋 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 ।
𑌏𑌷 𑌤𑍁 𑌵𑌿𑌭𑍂𑌤𑍇𑌰𑍍𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑍋 𑌮𑌯𑌾 𑌕𑍈𑌶𑍍𑌚𑌿𑌦𑍁𑌪𑌾𑌧𑌿𑌭𑌿𑌃
𑌸𑌂𑌕𑍍𑌷𑍇𑌪𑌤𑌃 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌃 ॥ ॥௪௦॥

அவ—பகவானுடைய விபூதிகளை முழுவதும் சொல்லிமுடியாது என்று 19--வது சுலோகத்தில் சொன்னதையே நினைப்பூட்டுகிறார்—

என்னுடைய நல்லதான ஸொத்துக்களுக்கு கணக்குக் கிடையாது. அனேகவஸ்துக்களைச்சொன்னபடியால், விரிவாகவும் சொன்னேன். வகையாவுக்கு ஒன்றைச் சொன்னபடியால், சுருக்கமாகவும் சொன்னேன். [40]

𑌯𑌦𑍍𑌯𑌦𑍍𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌮𑌤𑍍𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍂𑌰𑍍𑌜𑌿𑌤𑌮𑍇𑌵 𑌵𑌾 ।
𑌤𑌤𑍍𑌤𑌦𑍇𑌵𑌾𑌵𑌗𑌚𑍍𑌛 𑌤𑍍𑌵𑌂 𑌮𑌮 𑌤𑍇𑌜𑍋𑌽𑌂𑌶𑌸𑌂𑌭𑌵𑌮𑍍 ॥ ॥௪௧॥

𑌯𑌦𑍍𑌯𑌦𑍍𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌮𑌤𑍍-𑌈𑌶𑌿𑌤𑌵𑍍𑌯𑌸𑌂𑌪𑌨𑍍𑌨𑌂 𑌭𑍂𑌤𑌜𑌾𑌤𑌮𑍍,
𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍍-𑌕𑌾𑌨𑍍𑌤𑌿𑌮𑌤𑍍, 𑌧𑌨𑌧𑌾𑌨𑍍𑌯𑌸𑌮𑍃𑌦𑍍𑌧𑌂 𑌵𑌾, 𑌊𑌰𑍍𑌜𑌿𑌤𑌂-𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌾
𑌰𑌮𑍍𑌭𑍇𑌷𑍂𑌦𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑍍 । 𑌤𑌤𑍍𑌤𑌨𑍍𑌮𑌮 𑌤𑍇𑌜𑍋𑌽𑌂𑌶𑌸𑌂𑌭𑌵𑌮𑌿𑌤𑍍𑌯𑌵𑌗

स्व । तेजः — पराभिभवनसामर्थ्यम् । अचिन्त्यशक्तेर्मम नियमनशक्त्येकदेशसम्भवमित्यर्थः ॥ ४१ ॥

அவ—முக்கியமான விபூதிகளைச் சொல்லுகிறேனென்று ஆரம்பித்து, அநேக விபூதிகளைச் சென்னார். இன்னும் சொல்லப்படாத முக்கியமான விபூதிகள் எவ்வளவோ இருக்கின்றன. அவைகளையும் சேர்த்துக்கொள்ள வேணுமென்று கருத்துடன் விபூதியின் உபதேசத்தை முடிக்கிறார்—

உலகத்தில் எந்தெந்த பிராணிகள் அநேக வஸ்துக்களை ஆளுகின்றனவோ; அழகுள்ளவையாயிருக்கின்றனவோ; பணம், நெல் முதலான எல்லாப் பண்டங்களாலே நிறைந்திருக்கின்றனவோ; சேஷ்டகாரியங்களை ஆரம்பிப்பதற்கு உத்ஸாஹமுள்ளனவோ; அவைகளெல்லாம் லோகத்தை அடக்கி ஆளுகிற—ஒருவராலும் 1 நினைக்கமுடியாத சக்தியுள்ள என்னுடைய கொஞ்ச சக்தியினால் உண்டானவைகளாக அறி. (41)

अथवा बहुनैतेन किं ज्ञातेन तवार्जुन ।
विष्टभ्याहमिदं कृत्स्नमेकांशेन स्थितो जगत् ॥ ४२ ॥

इति श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु ब्रह्मविद्यायां
योगशास्त्रे श्रीकृष्णार्जुनसंवादे
विभूतिविस्तरयोगो नाम दशमोऽध्यायः ॥

बहुनैतेनोपदेशेन ज्ञातेन किं प्रयोजनम्? इदं — चिदचिदात्मकं कृत्स्नं जगत् कार्यावस्थं कारणावस्थं स्थूलं सूक्ष्मं स्वरूपसद्भावे, स्थितौ,

---

1. எந்த வேலையையும் செய்யப் பகவானுக்குச் சக்தி இருக்கிறது. அவனுடைய சக்திக்கு ஒரு இடத்திலும் தடங்கலில்லை. அதுவொருவராலும் செய்ய முடியாத வேலைகளைச் செய்யக்கூடியது. அதில் எத்தனையோ கோடியில் ஒரு பங்கினால் உலோகத்தில் சொன்ன ஸங்கதிகள் உண்டாகின்றன. மலையைப் புரட்டும்படியான கடுங்காற்றுக்கு ஒரு செத்தையை நகர்த்துவது ஒரு வேலையா, அப்படியே பகவானுக்கும்.

ப்ரவ்ருத்திபேதேந ச யதா மதீயம் ஸங்கல்பம் நாதிவர்ததே, ததா மம அயுதாயுதாம்சாம்சேந விஷ்டப்யாஹமவஸ்தித: । யதோக்தம் பகவதா பராசரேண “யஸ்யாயுதாயுதாம்சாம்சே விச்வசக்திரியம் ஸ்திதா” இதி ॥ ॥௪௨॥

இதி ஸ்ரீபகவத்ராமாநுஜவிரசிதே ஸ்ரீமத்கீதாபாஷ்யே தசமோத்யாய: ॥

1 எதற்கு அதிகமாகச் சொல்லவேணும். இந்த உலகம் அறிவுள்ளதென்றும், அறிவில்லாததென்றும், உண்டானதென்றும், உண்டாக்குகிற தென்றும், பெரியது (ஸ்தூலம்) என்றும், சின்னது (ஸூக்ஷ்மம்) என்றும் இரண்டு வகையாயிருக்கிறது. என்னுடைய சக்தியைப் பதினாயிரம் பங்குகளாகப்பண்ணி, அவைகளில் ஒரு பங்கைப் பதினாயிரம் பங்குகளாகப்பண்ணி, அவைகளில் ஒரு பங்காலே, எல்லா உலகத்திற்கு 2 ஸ்வரூபம் கிடைப்பதும், அதின் இருப்பும், அவைகளின் வேலைகளும் என்னுடைய எண்ணத்தை மீறாதபடி அவைகளை என் வசப்படுத்திக்கொண்டு இருக்கிறேன். 3 [42]

---

1. முக்கியமான விபூதிகளைச் சொல்லி முடித்தாய் விட்டது இந்த சுலோகத்தாலே முக்கியமானதோ, முக்கியமில்லாததோ, எல்லா விபூதியும் சுருக்கமாகச் சொல்லப்படுகிறது.

2. அழிவுள்ள வஸ்துக்களுக்கு ஸ்வரூபம் கிடைப்பதாவது-உண்டாவது. அழிவில்லாத வஸ்துக்களுக்கு அழிவில்லாமை. அதுவும் பகவானுடைய எண்ணத்தாலே தான் ஏற்படுகிறது. அந்த எண்ணத்துக்கு ஒருநாளும் மாறுதல் கிடையாது.

3. இப்படிப்பட்ட பகவான் தன்னை நினைப்பதற்கு வேண்டிய பலவித ஒத்தாசைகளைச்செய்து கொடுத்து, என்னை எப்போது நினைக்கப்போகிறானென்று, பெரிய பணக்காரன் வீட்டில் மிகவும் ஏழையானவன் காத்துக்கொண்டிருப்பவன்போல், மிகவும்இளப்பமான நம்முடைய உடம்புக்குள் வந்திருப்பது முதலான வேலைகளைச் செய்து, காத்துக் கொண்டிருக்கிறான். இந்த ஸங்கதியை படித்தவர்களோ, படிக்காதவர்களோ பெரும்பாலும் துளிக்கூட அறியவில்லை என்றே சொல்லலாம்.

ஸ்ரீமதே பகவதே பாஷ்யகாராய மஹாதேசிகாய நம:

பத்தாவது அத்தியாயம் முற்றிற்று.

ஸப்தமோऽத்⁴யாய:

அவ— [illegible]

ஶ்ரீப⁴க³வாநுவாச—

[illegible] ।
[illegible] ॥ க ॥

[illegible] ॥ க ॥

அவ—இப்படிப் பகவானிடத்தில் பக்தி உண்டாவதற்கும், அது வளருகிறதற்கும்—மற்ற ஒருவருக்குமில்லாத உயர்ந்த நல்ல குணங்கள் கூட்டங் கூட்டங்களாய் பகவானுக்கு ஸ்வபாவமாயிருக்கின்றன என்றும்; அவன் அறிவுள்ளது, அறிவில்லாதது என்று இரண்டு வகையான எல்லாவற்றிற்கும் ஆத்மா; எல்லா உலகமும் அவனுக்கு உடம்பு; ஆதலால் அவைகளின் ஸ்வரூபமும்,

இருப்பும், வேலைகளும் அவனதீனமென்றும்—சொல்லப்பட்டது. இந்த ஸங்கதிகளை அர்ஜுநன் பகவானிடத்திலிருந்து கேட்டு, இது உண்மைதான், ஸந்தேஹமில்லையென்று நம்பி, பகவானை கீழ்ச்சொன்ன ஸங்கதிகளுடன் கண்ணால் பார்க்க வேணுமென்று ஆசை உண்டாகி, சொல்லுகிறான் —

உடம்பே ஆத்மா என்று தப்பாக நினைத்து மயங்கினஎன்னை அனுக்கிரஹிக்கிறது என்கிற ஒரே பிரயோஜனத்திற்காகத் தான், 1 மிகுந்த தயையினாலே, மிகவும் ரஹஸ்யமான, (ஒருவனாலும் அறியமுடியாத) ஆத்மாவைப் பற்றின வார்த்தைகளை 2-வது அத்தியாயம் 11-வது சுலோகம் முதல் 6-வது அத்தியாயம் 46-வது சுலோகம் வரையில் சொன்னீர். அதனால் எனக்கு இருந்த ஆத்மாவைப் பற்றின மயக்கங்கள் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் போய் விட்டன. [1]

அவ—ததா²ஹ—

ப⁴வாப்யயௌ ஹி பூ⁴தாநாம் ஶ்ருதௌ விஸ்தரஶோ
மயா। த்வத்த: கமலபத்ராக்ஷ மாஹாத்ம்யமபி சாவ்யயம் ॥ ௨ ॥

மயா ஸப்தமப்ரப்⁴ருதி த³ஶமபர்யந்தே ஸ்வவ்யதிரிக்தாநாம் ஸர்வேஷாம் பூ⁴தாநாம் த்வத்த: பரமாத்மநோ ப⁴வாப்யயௌ—உத்பத்திப்ரலயௌ விஸ்தரஶோ மயா ஶ்ருதௌ ஹி। கமலபத்ராக்ஷ! தவாவ்யயம்—நித்யம் ஸர்வசேதநாசேதநவஸ்துஶேஷித்வம் ஜ்ஞாநப³லாதி³கல்யாணகு³ணக³ணைஸ்தவைவ பரத்வம் ஸர்வாதா⁴ரத்வம் நிமிஷிதாதி³ஸர்வப்ரவ்ருத்திஷு தவைவ ப்ரவர்த்தயித்ருத்வமித்யாத்³யபரிமிதம் மாஹாத்ம்யம் ச ஶ்ருதம்। ஹிஶப்³தோ³ வக்ஷ்யமாணதி³த்³ருக்ஷாத்³யோதநார்த²: ॥ ௨ ॥

அவ—அப்படி மயக்கம் தெளிந்தபோது—

உம்மிடத்தில் ஆத்ம விஷயங்களைக் கேட்டது போல, 7-வது அத்தியாயம் முதல் 10-வது அத்தியாயம் வரையில்—உம்மைத் தவிரஎல்லா உலகங்களும் பரமாத்மாவான உம்மால் உண்டாகி,

விஸ்தாரமாகக் கேட்டேன். 1 தாமரை யிதழ்போன்ற கண்களை உடையவரே! எல்லா உலகமும் எப்பொழுதும் உம்முடைய உபயோகத்துக்காகவே இருக்கிறது. ஞானம், பலம் முதலான நல்ல குணங்களின் கூட்டங்களாலே நீர் தான் மிகவும் உயர்ந்தவர். எல்லா உலகத்தையும் தாங்குகிறீர். உம்மால் தான் எல்லா உலகமும் ஒரு ஸங்கதியை நினைப்பது, இமைக் கொட்டுவது முதலான எல்லா வேலைகளையும் செய்கிறது. இது முதலான 2 எப்பொழுது மிருக்கிற அளவில்லாத உம்முடைய பெருமைகளையும் கேட்டேன். இவைகளைக் கேட்டேனே. [2]

𑌏𑌵𑌮𑍇𑌤𑌦𑍍𑌯𑌥𑌾𑌽𑌽𑌤𑍍𑌥 𑌤𑍍𑌵𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰 ।
𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌮𑌿𑌚𑍍𑌛𑌾𑌮𑌿 𑌤𑍇 𑌰𑍂𑌪𑌮𑍈𑌶𑍍𑌵𑌰𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌮 ॥

𑌹𑍇 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰! 𑌏𑌵𑌮𑍇𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌯𑍋𑌕𑍍𑌤𑌂, 𑌯𑌥𑌾𑌽𑌽𑌤𑍍𑌥 𑌤𑍍𑌵𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌪𑍍𑌰𑌵𑍀𑌷𑌿 । 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌮! 𑌆𑌶𑍍𑌰𑌿𑌤𑌵𑌾𑌤𑍍𑌸𑌲𑍍𑌯𑌜𑌲𑌧𑍇! 𑌤𑌵𑍈𑌶𑍍𑌵𑌰𑌂-𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌶𑌾𑌸𑌿𑌤𑍃𑌤𑍍𑌵𑍇 𑌪𑌾𑌲𑌯𑌿𑌤𑍃𑌤𑍍𑌵𑍇 𑌸𑍍𑌰𑌷𑍍𑌟𑍃𑌤𑍍𑌵𑍇 𑌸𑌂𑌹𑌰𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑍇 𑌭𑌰𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑍇 𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌗𑍁𑌣𑌾𑌕𑌰𑌤𑍍𑌵𑍇 𑌪𑌰𑌤𑌰𑌤𑍍𑌵𑍇 𑌸𑌕𑌲𑍇𑌤𑌰𑌵𑌿𑌸𑌜𑌾𑌤𑍀𑌯𑌤𑍍𑌵𑍇𑌨𑌾𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 𑌰𑍂𑌪𑌂 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌂 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍𑌕𑌰𑍍𑌤𑍍𑌤𑍁𑌮𑌿𑌚𑍍𑌛𑌾𑌮𑌿 ॥ [௩]

(முன் பக்கத்தின் குறிப்பு.) 1. அர்ஜுனனுக்குச் சண்டையில் உத்ஸாஹத்தை உண்டுபண்ணுவதற்காக மாத்திரம் சொன்னதல்ல என்று கருத்து.

1. இதனால் தாமரைக்கண்ணோடு கூடிய அப்பிராக்ருதமான திருமேனி கிருஷ்ணாவதாரத்திலும் இருந்ததென்று தெளிவாய் காணப்பட்டதாக ஏற்படுகிறது.

2. சுலோகத்தில் பெருமையை 'அவ்யயம்' என்றுசொல்லியிருக்கிறது. அதற்கு "குறைவில்லாத" என்று பொருள். காலத்தினாலும், விஷயத்தினாலும், கணக்காலும், உயர்த்தியாலும் அந்தப்பெருமைக்கு அளவில்லை. அதாவது—பகவானுடைய பெருமை எப்போதுமிருக்கிறது. அறிவு, அழகு, ஸொத்து முதலிய எல்லா விஷயங்களிலும் பெருமையுள்ளவன். இத்தனை விஷயங்களில்தான் பெருமையிருக்கிறதென்று விஷயங்களுக்குக் கணக்கில்லை. பெருமைக்கு அளவுமில்லை—என்று கருத்து.

எல்லா லோகத்துக்கும் பெரிய ராஜாவே ! உம்மைப்பற்றி எப்படிச் சொன்னீரோ, அது ஸரிதான் என்று எனக்கு உறுதியாய்த் தோன்றுகிறது. தன்னை அடைந்தவர்களிடத்தில் குற்றத்தை லக்ஷியம் பண்ணாமல், அளவில்லாமல் ப்ரீதி பண்ணுகிறவரே ! கீழ்ச் சொன்ன உமக்கு மாத்திரமுள்ள எல்லா ஸங்கதிகளுடன் கூடிய உம்முடைய உடம்பைப் பார்க்கவேணுமென்று ஆசைப்படுகிறேன். அதாவது—கீழ்ச்சொன்ன எல்லா ஸங்கதிகளையும் 1 உடம்பால் நீர்நடத்தி2காட்டவேணும்—என்று ஆசைப்

1. உதாரணம்-பந்தயக்குதிரையில் ஏறி ஆச்சரியமாய் ஸவாரிபண்ணுவேன் என்று ராமன் என்பவனோடு கிருஷ்ணன் என்பவன் சொன்னால், ராமன்—அப்படி நீங்கள் ஸவாரி பண்ணுவதைப் பார்க்க ஆசையாயிருக்கிறது; அப்படிப் பண்ணிக் காண்பிக்கவேணும் என்று—கிருஷ்ணனிடம் சொல்லுவதுபோல இருக்கிறது இங்கே அர்ஜுனன் கேட்பது.

2. இவைகளை உடம்பால் காட்டுவதாவது--உடம்பைப்பார்க்கும்போது தோன்றுகிற குணங்கள்,உடம்பினுடைய இருப்பு,செய்யும் வேலைகள் இவைகளால் கீழ்ச்சொன்ன ஸங்கதிகள் பகவானுக்கு இருக்கின்றன என்று தோன்றப் பண்ணுகை. (1) உடம்பைக் காட்டினமாத்திரத்திலேயே கெட்ட எண்ணத்தைப் போக்கி நல்லவேலையை செய்யும் படி செய்கை. (2) பகவான் தன் திருமேனியைக் காண்பித்த மாத்திரத்தால், ஸத்வகுணத்தை வளர்த்து, அதற்குத் தகுந்தவேலைகளைச் செய்விப்பது.(3) தன்தொப்புளிலிருந்து பிரும்மாவையும்,முகம்முதலான அவயவங்களிலிருந்து பிராமணன் முதலான ஜாதிகளையும் உண்டுபண்ணுவதைக்காட்டுவது. (4)அழிப்பதை—சண்டைக்கு வந்திருக்கும் சிலராஜாக்களைவாயில் போட்டுக் கடிப்பதாகக் காண்பிப்பது. (5)தாங்குகிறதை—தன் திருமேனியில்ஒருமூலையில்எல்லாஉலகமுமிருப்பதாகக்காண்பிப்பது.(6) உயர்ந்த நல்ல குணங்களுக்கு இருப்பிடமாயிருப்பதை ராமன் முதலான அவதாரங்களில் லீலையைக் காணாதபோது அழுதது முதலான வேலைகளால் குணங்களை மறைத்தது போலில்லாமல் குணங்களை உள்ளபடி காட்டுகை. (7) பிரும்மாமுதலான எல்லா லோகங்களும் தன் திருமேனியில் ஒரு மூலையில் அடங்கி இருப்பதாகக் காட்டுவதாலே,தான் எல்லாரைக் காட்டிலும் எல்லா விதத்தாலும் மிகவும் உயர்ந்தவனென்று தோன்றப்பண்ணுவது.(8) இது கீழ்ச்சொன்ன எல்லாவற்றையும்(எழையும்) சேர்த்துச்சொன்னது. அல்லது அவைகளால் ஏற்பட்டது. அல்லது சுலோகத்திலுள்ள "பரமேசுவர, புருஷோத்தம" என்கிற சொற்களின் கருத்தாகவுமாம்.

படுகிறேன். ஸங்கதிகளாவன:—(1) எல்லா லோகத்தையும் அடக்கி ஆளுவது; (2) காப்பாற்றுவது; (3) உண்டுபண்ணுவது; (4) அழிப்பது; (5) தாக்குவது; (6) உயர்ந்த குணங்களுடன் கூடியிருப்பது; (7) எல்லாரைக் காட்டிலும் எல்லாவிதத்தாலும் மிகவும் உயர்ந்தவராக இருப்பது; (8) இந்த எல்லா ஸங்கதிகளாலும் பிரும்மா முதலான எல்லா வஸ்துக்களைக் காட்டிலும் வேறு ஜாதியாக இருப்பது 1. [3]

𑌮𑌨𑍍𑌯𑌸𑍇 𑌯𑌦𑌿 𑌤𑌚𑍍𑌛𑌕𑍍𑌯𑌂 𑌮𑌯𑌾 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌮𑌿𑌤𑌿 𑌪𑍍𑌰𑌭𑍋 ।
𑌯𑍋𑌗𑍇𑌶𑍍𑌵𑌰 𑌤𑌤𑍋 𑌮𑍇 𑌤𑍍𑌵𑌂 𑌦𑌰𑍍𑌶𑌯𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌵𑍍𑌯𑌯𑌮𑍍 ॥ ௪ ॥

𑌪𑍍𑌰𑌭𑍋 — 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌸𑍍𑌰𑌷𑍍𑌟𑌃, 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌶𑌾𑌸𑌿𑌤𑌃, 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯𑌾𑌧𑌾𑌰𑌭𑍂𑌤𑌂 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌂 𑌮𑌯𑌾 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌂 𑌶𑌕𑍍𑌯𑌮𑌿𑌤𑌿 𑌯𑌦𑌿 𑌮𑌨𑍍𑌯𑌸𑍇 । 𑌤𑌤𑍋 𑌯𑍋𑌗𑍇𑌶𑍍𑌵𑌰 ! 𑌯𑍋𑌗𑌃 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌦𑌿𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌗𑍁𑌣𑌯𑍋𑌗𑌃, "𑌪𑌶𑍍𑌯 𑌮𑍇 𑌯𑍋𑌗𑌮𑍈𑌶𑍍𑌵𑌰𑌮𑍍" 𑌇𑌤𑌿 𑌹𑌿 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇 । 𑌸𑍍𑌵𑍇𑌤𑌰𑌸𑌮𑌸𑍍𑌤𑌵𑌸𑍍𑌤𑍁𑌵𑌿𑌸𑌜𑌾𑌤𑍀𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌬𑌲𑍈𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌵𑍀𑌰𑍍𑌯𑌶𑌕𑍍𑌤𑌿𑌤𑍇𑌜𑌸𑌾𑌂 𑌨𑌿𑌧𑍇 ! 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂—𑌸𑌰𑍍𑌵𑌂 𑌮𑍇 𑌦𑌰𑍍𑌶𑌯 । 𑌅𑌵𑍍𑌯𑌯𑌮𑌿𑌤𑌿 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌵𑌿𑌶𑍇𑌷𑌣𑌮𑍍, 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌸𑌕𑌲𑌂 𑌮𑍇 𑌦𑌰𑍍𑌶𑌯𑍇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥ ௪ ॥

2 ஹே பிரபோ! உம்மைத் தவிர மற்றொருவருக்கு ஸாலாமோ என்று நினைக்கவும் முடியாத—ஞானம், பலம் முதலான மிகவுமுயர்ந்த—நல்ல குணங்களுக்கு இருப்பிடமானவரே! மேற்சொன்ன எல்லா ஸங்கதிகளுடன் கூடிய தேவரீருடைய திருமேனியை என்னால் பார்க்கமுடியுமென்று தேவரீர் திருவுள்ளத்தில் பட்டால், அதைத் தேவரீருடைய ஸங்கதிகளில் துளிக்கூட விடாமல் காண்பிக்கவேணும். [4]

---

1. இந்த மூன்று சுலோகங்களாலே மூன்று ஸங்கதிகள் காட்டப்படுகின்றன—(1) பகவான் செய்த உபகாரத்தை அறிந்தது. (2) அவன் சொன்ன வார்த்தையை நம்பினது. (3) அவனிடத்தில் பக்தியுள்ளவனாக இருந்தது—என்று.

2. இந்தச் சொல்லாலே பகவான் ஒன்றை எண்ணினால், அதை அவன் கட்டாயம் செய்து முடிப்பனென்று காட்டப்படுகிறது.

அவ— 𑌏𑌵𑌂 𑌕𑍌𑌤𑍂𑌹𑌲𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑍇𑌨 𑌹𑌰𑍍𑌷𑌗𑌦𑍍𑌗𑌦𑌕𑌣𑍍𑌠𑍇𑌨 𑌪𑌾𑌰𑍍𑌥𑍇𑌨 𑌪𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌿𑌤𑍋 𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚—

𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚—

𑌪𑌶𑍍𑌯 𑌮𑍇 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌰𑍂𑌪𑌾𑌣𑌿 𑌶𑌤𑌶𑍋𑌽𑌥 𑌸𑌹𑌸𑍍𑌰𑌶𑌃 ।
𑌨𑌾𑌨𑌾𑌵𑌿𑌧𑌾𑌨𑌿 𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌨𑌿 𑌨𑌾𑌨𑌾𑌵𑌰𑍍𑌣𑌾𑌕𑍃𑌤𑍀𑌨𑌿 𑌚 ॥ ॥௫॥

𑌪𑌶𑍍𑌯 𑌮𑍇 𑌸𑌰𑍍𑌵𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌣𑌿 𑌰𑍂𑌪𑌾𑌣𑌿 । 𑌅𑌥 𑌶𑌤𑌶𑌃 𑌸𑌹𑌸𑍍𑌰𑌶𑌃 𑌨𑌾𑌨𑌾𑌵𑌿𑌧𑌾𑌨𑌿-𑌨𑌾𑌨𑌾𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌾𑌣𑌿, 𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌨𑌿-𑌅𑌪𑍍𑌰𑌾𑌕𑍃𑌤𑌾𑌨𑌿, 𑌨𑌾𑌨𑌾𑌵𑌰𑍍𑌣𑌾𑌕𑍃𑌤𑍀𑌨𑌿-𑌶𑍁𑌕𑍍𑌲𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌦𑌿𑌨𑌾𑌨𑌾𑌵𑌰𑍍𑌣𑌾𑌨𑌿 𑌨𑌾𑌨𑌾𑌕𑌾𑌰𑌾𑌣𑌿 𑌚 𑌪𑌶𑍍𑌯 ॥ ॥௫॥

அவ—இந்தமாதிரி மிகுந்த ஆசையுடன், ஸந்தோஷத்தினால் தொண்டை தழுதழுத்து, அர்ஜுனன் வணங்கிக்கேட்டுக்கொள்ள பகவான் சொல்லுகிறார்—

எல்லா உலகங்களுக்குமிருப்பிடமான என்னுடைய உருவங்களைப்பார். பிரகிருதியினால் செய்யப்படாத—அநேக விதங்களான—வெளுப்பு கருப்பு முதலான பல வர்ணங்களோடு கூடிய—அநேக காலங்களில் தேவதையாகவும், மனிதனாகவும், மிருகங்களாகவும் நான் செய்த—அவதார ரூபங்களை நூற்றுக்கணக்காகவும், ஆயிரக் கணக்காகவும் காண்பிக்கிறேன். பார். [5]

𑌪𑌶𑍍𑌯𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌾𑌨𑍍𑌵𑌸𑍂𑌨𑍍𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌨𑌶𑍍𑌵𑌿𑌨𑍌 𑌮𑌰𑍁𑌤𑌸𑍍𑌤𑌥𑌾 ।
𑌬𑌹𑍂𑌨𑍍𑌯𑌦𑍃𑌷𑍍𑌟𑌪𑍂𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌪𑌶𑍍𑌯𑌾𑌶𑍍𑌚𑌰𑍍𑌯𑌾𑌣𑌿 𑌭𑌾𑌰𑌤 ॥

𑌮𑌮𑍈𑌕𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌰𑍂𑌪𑍇 𑌪𑌶𑍍𑌯 𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌾𑌨𑍍 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶, 𑌵𑌸𑍂𑌨𑍍 𑌅𑌷𑍍𑌟𑍌, 𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌨𑍍 𑌏𑌕𑌾𑌦𑌶, 𑌅𑌶𑍍𑌵𑌿𑌨𑍌 𑌦𑍍𑌵𑍌, 𑌮𑌰𑍁𑌤𑌶𑍍𑌚 𑌏𑌕𑍋𑌨𑌪𑌞𑍍𑌚𑌾𑌶𑌤𑌮𑍍 । 𑌪𑍍𑌰𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌰𑍍𑌥𑌮𑌿𑌦𑌮𑍍 । 𑌇𑌹 𑌜𑌗𑌤𑌿 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌨𑌿 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌨𑌿 𑌚 𑌯𑌾𑌨𑌿 𑌵𑌸𑍍𑌤𑍂𑌨𑌿 𑌤𑌾𑌨𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑍍𑌯𑌨𑍍𑌯𑌾𑌨𑍍𑌯𑌪𑌿 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁 𑌲𑍋𑌕𑍇𑌷𑍁 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁 𑌚 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇𑌷𑍁 𑌅𑌦𑍃𑌷𑍍𑌟𑌪𑍂𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌬𑌹𑍂𑌨𑍍𑌯𑌾𑌶𑍍𑌚𑌰𑍍𑌯𑌾𑌣𑌿 𑌪𑌶𑍍𑌯 ॥ ॥௬॥

அவைகளில் என்னுடைய ஒரு உடம்பில் பன்னிரண்டு ஆதித்தியர்களையும், எட்டு வஸுக்களையும், பதினொரு ருத்திரர்களையும், இரண்டு அச்வினீ தேவதைகளையும், நாற்பத்தொன்பது மருத்துக்களையும் பார், பிரதானமான சிலர்களை மட்டும் சொன்னேன். இன்னும் இந்த உலகத்தில் கண்ணால் எவைகளைப் பார்க்கிறாயோ, சாஸ்திரத்தினால் எவைகளைக் கேட்கிறாயோ, அவைகள் எல்லாவற்றையும், எந்த லோகங்களிலும் முன்பு காணப்படாதவைகளும், எந்த சாஸ்திரங்களிலும் முன்பு கேட்கப்படாதவைகளுமான அநேக ஆச்சரியங்களையும் பார். 1 [6]

[illegible] ||எ||

[illegible] ||எ||

இந்த என்னுடைய உடம்பில், அதிலும் ஒரு மூலையில், ஜங்கமம் (அசைகிறது), ஸ்தாவரம் (அசையாதது) என்று இருவகையான எல்லா உலகங்களையும் பார். இன்னும் உனக்கு எவைகளைப் பார்க்க வேணுமென்று ஆசையிருக்கிறதோ, அவைகளையும் நாளைக்கு உனக்கு வரப்போகிற ஜயம் முதலானவைகளையும் பார்.

[illegible] ||அ||

[illegible] ||அ||

1. அநேக விதமான உடம்புகளைக் காட்டுவதாகச் சொன்ன போதிலும், அவைகள் எல்லாவற்றையும் ஒரே உடம்பில் காட்டுகிறார்.

நான் என்னுடைய இந்த உடம்பின் ஒரு மூலையில் எல்லா உலகங்களையும் காண்பிக்கப் போகிறேன். அவைகளை இப்போ திருக்கிற உன் கண்ணால் பார்க்கமுடியாது. இந்தக் கண்ணுக்கு அவ்வளவு சக்தி கிடையாது. அதற்கு இன்ன ஜாதியைத்தான் பார்க்கலாம் என்று கட்டுப்பாடும், பார்க்கக்கூடியவைகளிலும் இவ்வளவைத்தான் பார்க்கலாம் என்று கணக்கும் உண்டு. இப்போது நான் காண்பிக்கப்போகிற உடம்போ கணக்கில்லாத எல்லா உலகங்களோடும் கூடியிருக்கிறது. உலகத்திலிருக்கிற எல்லா வஸ்துக்களைக் காட்டிலும் வேறுமாதிரியாயிருக்கிறது. அதற்காக, என்னைப் பார்க்கத் தகுந்ததாயும், சுத்த ஸத்வம் என்கிற திரவியத்தினால் செய்யப்பட்டதுமான கண்ணைக் கொடுக்கிறேன். அதனால் எனக்கு மாத்திரமுள்ள எல்லா குணங்களையும், எல்லாவுலகங்களையும் நான் ஆளுவதையும் பார். [8]

𑌸𑌂𑌜𑌯 𑌉𑌵𑌾𑌚—

𑌏𑌵𑌮𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌤𑌤𑍋 𑌰𑌾𑌜𑌨𑍍 𑌮𑌹𑌾𑌯𑍋𑌗𑍇𑌶𑍍𑌵𑌰𑍋 𑌹𑌰𑌿𑌃 ।
𑌦𑌰𑍍𑌶𑌯𑌾𑌮𑌾𑌸 𑌪𑌾𑌰𑍍𑌥𑌾𑌯 𑌪𑌰𑌮𑌂 𑌰𑍂𑌪𑌮𑍈𑌶𑍍𑌵𑌰𑌮𑍍 ॥௯॥

𑌏𑌵𑌮𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌸𑌾𑌰𑌥𑍍𑌯𑍇𑌽𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 𑌪𑌾𑌰𑍍𑌥𑌮𑌾𑌤𑍁𑌲𑌜𑌃 𑌮𑌹𑌾𑌯𑍋𑌗𑍇𑌶𑍍𑌵𑌰𑍋 𑌹𑌰𑌿𑌃—𑌮𑌹𑌾𑌶𑍍𑌚𑌰𑍍𑌯𑌯𑍋𑌗𑌾𑌨𑌾𑌮𑍀𑌶𑍍𑌵𑌰𑌃 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑍇 𑌸𑌂𑌹𑍃𑌤𑍇𑌤𑌰 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌃, 𑌪𑌰𑌮𑍈𑌶𑍍𑌵𑌰𑌂—𑌸𑍍𑌵𑌾𑌸𑌾𑌧𑌾𑌰𑌣𑌂 𑌰𑍂𑌪𑌂 𑌪𑌾𑌰𑍍𑌥𑌾𑌯—𑌪𑌿𑌤𑍃𑌷𑍍𑌵𑌸𑍁𑌃 𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌯 𑌦𑌰𑍍𑌶𑌯𑌾𑌮𑌾𑌸, 𑌤𑌦𑌿𑌦𑌂 𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌰𑌨𑌿𑌖𑌿𑌲𑌜𑌗𑌦𑌾𑌶𑍍𑌰𑌯𑌂 𑌵𑌿𑌶𑍍𑌵𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌶𑌾𑌸𑌿𑌤𑍃 𑌚 𑌰𑍂𑌪𑌮𑍍 ॥ ॥௯॥

ஸஞ்ஜயன் சொல்லுகிறார்—

இந்தமாதிரி சொல்லி, வண்டியோட்டிக்கொண்டிருந்த—அர்ஜுனனுக்கு அம்மான் பிள்ளையான—கிருஷ்ணன் உருவமான—எல்லா ஆச்சரியங்களையும் நடத்தக்கூடியவனான—பாபிரும்மமான நாராயணன் மிகவும் உயர்ந்த ஈசுவரன் என்று காட்டக் கூடியதும், தனக்கு மாத்திரம் ஏற்பட்டதுமான ஒரு உடம்பைத் தன் அத்தை பிள்ளையான அர்ஜுனனுக்குக் காண்பித்தான், அந்த

உடம்பில் அநேகவிதமான ஆச்சரியமான எல்லா உலகங்கள் இருக்கின்றன. அது எல்லா உலகங்களையும் அடக்கி ஆளுகிறது. [9]

𑌅𑌵— 𑌤𑌦𑍇𑌵𑌰𑍂𑌪𑌮𑌾𑌹—

𑌅𑌨𑍇𑌕𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌨𑌯𑌨𑌮𑌨𑍇𑌕𑌾𑌦𑍍𑌭𑍁𑌤𑌦𑌰𑍍𑌶𑌨𑌮𑍍 ।
𑌅𑌨𑍇𑌕𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌭𑌰𑌣𑌂 𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌨𑍇𑌕𑍋𑌦𑍍𑌯𑌤𑌾𑌯𑍁𑌧𑌮𑍍 ॥ ॥௧௦॥
𑌦𑌿𑌵𑍍𑌯𑌮𑌾𑌲𑍍𑌯𑌾𑌮𑍍𑌬𑌰𑌧𑌰𑌂 𑌦𑌿𑌵𑍍𑌯𑌗𑌨𑍍𑌧𑌾𑌨𑍁𑌲𑍇𑌪𑌨𑌮𑍍 ।
𑌸𑌰𑍍𑌵𑌾𑌶𑍍𑌚𑌰𑍍𑌯𑌮𑌯𑌂 𑌦𑍇𑌵𑌮𑌨𑌨𑍍𑌤𑌂 𑌵𑌿𑌶𑍍𑌵𑌤𑍋𑌮𑍁𑌖𑌮𑍍 ॥ ॥௧௧॥

𑌦𑍇𑌵𑌂-𑌦𑍍𑌯𑍋𑌤𑌮𑌾𑌨𑌮𑍍। 𑌅𑌨𑌨𑍍𑌤𑌂-𑌕𑌾𑌲𑌤𑍍𑌰𑌯𑌵𑌰𑍍𑌤𑌿𑌨𑌿𑌖𑌿𑌲𑌜𑌗𑌦𑌾𑌶𑍍𑌰𑌯𑌤𑌯𑌾 𑌦𑍇𑌶𑌕𑌾𑌲𑌪𑌰𑌿𑌚𑍍𑌛𑍇𑌦𑌾𑌨𑌰𑍍𑌹𑌮𑍍। 𑌵𑌿𑌶𑍍𑌵𑌤𑍋𑌮𑍁𑌖𑌂-𑌵𑌿𑌶𑍍𑌵𑌦𑌿𑌗𑍍𑌵𑌰𑍍𑌤𑌿𑌮𑍁𑌖𑌮𑍍 । 𑌸𑍍𑌵𑍋𑌚𑌿𑌤𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌮𑍍𑌬𑌰𑌗𑌨𑍍𑌧𑌮𑌾𑌲𑍍𑌯𑌾𑌭𑌰𑌣𑌾𑌯𑍁𑌧𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌮𑍍 ॥ ॥௧௧॥

அவ—அந்த உருவம் சொல்லப்போகிற மாதிரி இருக்கிறது—அதின் பளபளப்பைச் சொல்லி முடியாது. மிகவும் அளவில்லாத ஆச்சரியமானதாயிருக்கிறது. மூன்று காலத்திலுமிருக்கிற எல்லா உலகங்களுக்கும் இருப்பிடமாகையால், அது இடத்தாலும், காலத்தாலும், அளவிடத் தகுந்ததன்று. அந்த உடம்புக்கு எல்லா திக்குக்களிலும் முகங்கள் இருக்கின்றன. முகங்கள்தோறும் கண்கள், அதற்குத்தகுந்த உயர்ந்த வஸ்திரங்கள், சந்தனம் முதலிய வாஸனைத் திரவியங்கள், மாலைகள், நகைகள், ஆயுதங்கள் இவைகளோடுகூடியிருக்கிறது அந்த உடம்பு. [10,11]

𑌅𑌵— 𑌤𑌦𑍇𑌵 𑌦𑍇𑌵𑌸𑍍𑌯𑌦𑌿𑌵𑍍𑌯𑌰𑍂𑌪𑌂 𑌤𑍇𑌜𑌸𑌾 𑌵𑌿𑌶𑌿𑌨𑌷𑍍𑌟𑌿—

𑌦𑌿𑌵𑌿 𑌸𑍂𑌰𑍍𑌯𑌸𑌹𑌸𑍍𑌰𑌸𑍍𑌯 𑌭𑌵𑍇𑌦𑍍𑌯𑍁𑌗𑌪𑌦𑍁𑌤𑍍𑌥𑌿𑌤𑌾 ।
𑌯𑌦𑌿 𑌭𑌾𑌃 𑌸𑌦𑍃𑌶𑍀 𑌸𑌾 𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌭𑌾𑌸𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ॥ ॥௧௨॥

𑌤𑍇𑌜𑌸𑍋𑌽𑌪𑌰𑌿𑌮𑌿𑌤𑌤𑍍𑌵𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌯𑍇𑌦𑌮𑍍 । 𑌅𑌕𑍍𑌷𑌯𑌤𑍇𑌜𑌃𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌮𑌿𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥ ॥௧௨॥

அவ—பளபளப்பு என்பதை விரிவாய்ச் சொல்லுகிறார்—

ஆயிரம் சூரியன்கள் ஒரேகாலத்தில் ஆகாசத்தில் கிளம்பினால், அவைகளின் புளபளப்பு எப்படி இருக்குமோ, அப்படி

இருக்கிறது. இதுவும் ஒரு வார்த்தைக்குச் சொன்னதே யொழிய, அதின் பளபளப்புக்கு அளவில்லை. [12]

𑌤𑌤𑍍𑌰𑍈𑌕𑌸𑍍𑌥𑌂 𑌜𑌗𑌤𑍍𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌂 𑌪𑍍𑌰𑌵𑌿𑌭𑌕𑍍𑌤𑌮𑌨𑍇𑌕𑌧𑌾 |
𑌅𑌪𑌶𑍍𑌯𑌦𑍍𑌦𑍇𑌵𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 𑌶𑌰𑍀𑌰𑍇 𑌪𑌾𑌣𑍍𑌡𑌵𑌸𑍍𑌤𑌦𑌾 || ||௧௩||

𑌤𑌤𑍍𑌰 — 𑌅𑌨𑌨𑍍𑌤𑌾𑌯𑌾𑌮𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑍇 𑌅𑌨𑌨𑍍𑌤𑌬𑌾𑌹𑍂𑌦𑌰𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌨𑍇𑌤𑍍𑌰𑍇 𑌅𑌪𑌰𑌿𑌮𑌿𑌤𑌤𑍇𑌜𑌸𑍍𑌕𑍇 𑌅𑌪𑌰𑌿𑌮𑌿𑌤𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌯𑍁𑌧𑍋𑌪𑍇𑌤𑍇 𑌸𑍍𑌵𑍋𑌚𑌿𑌤𑌾𑌪𑌰𑌿𑌮𑌿𑌤𑌦𑌿𑌵𑍍𑌯𑌭𑍂𑌷𑌣𑍇 𑌦𑌿𑌵𑍍𑌯𑌮𑌾𑌲𑍍𑌯𑌾𑌮𑍍𑌬𑌰𑌧𑌰𑍇 𑌦𑌿𑌵𑍍𑌯𑌗𑌨𑍍𑌧𑌾𑌨𑍁𑌲𑍇𑌪𑌨𑍇 𑌅𑌨𑌨𑍍𑌤𑌾𑌶𑍍𑌚𑌰𑍍𑌯𑌮𑌯𑍇 𑌦𑍇𑌵𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 𑌦𑌿𑌵𑍍𑌯𑌶𑌰𑍀𑌰𑍇, 𑌅𑌨𑍇𑌕𑌧𑌾 𑌪𑍍𑌰𑌵𑌿𑌭𑌕𑍍𑌤𑌮𑍍 — 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌦𑌿𑌵𑌿𑌵𑌿𑌧𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌰𑌦𑍇𑌵𑌤𑌿𑌰𑍍𑌯𑌙𑍍𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌸𑍍𑌥𑌾𑌵𑌰𑌾𑌦𑌿𑌭𑍋𑌕𑍍𑌤𑍃𑌵𑌰𑍍𑌗𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑌿𑌕𑍍𑌷𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌪𑌾𑌤𑌾𑌲𑌾𑌤𑌲𑌵𑌿𑌤𑌲𑌸𑍁𑌤𑌲𑌾𑌦𑌿𑌭𑍋𑌗𑌸𑍍𑌥𑌾𑌨𑌭𑍋𑌗𑍍𑌯𑌭𑍋𑌗𑍋𑌪𑌕𑌰𑌣𑌭𑍇𑌦𑌭𑌿𑌨𑍍𑌨𑌂 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌤𑍍𑌮𑌕𑌂 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌂 𑌜𑌗𑌤𑍍 — “𑌅𑌹𑌂 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌭𑌵𑍋 𑌮𑌤𑍍𑌤𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌤𑍇, 𑌹𑌨𑍍𑌤 𑌤𑍇 𑌕𑌥𑌯𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌵𑌿𑌭𑍂𑌤𑍀𑌰𑌾𑌤𑍍𑌮𑌨𑌶𑍍𑌶𑍁𑌭𑌾𑌃, 𑌅𑌹𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌗𑍁𑌡𑌾𑌕𑍇𑌶 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌶𑌯𑌸𑍍𑌥𑌿𑌤𑌃, 𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌾𑌨𑌾𑌮𑌹𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁”𑌰𑌿𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌨𑌾 “𑌨 𑌤𑌦𑌸𑍍𑌤𑌿 𑌵𑌿𑌨𑌾 𑌯𑌤𑍍𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌮𑌯𑌾 𑌭𑍂𑌤𑌂 𑌚𑌰𑌾𑌚𑌰𑌮𑍍 | 𑌵𑌿𑌷𑍍𑌟𑌭𑍍𑌯𑌾𑌹𑌮𑌿𑌦𑌂 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌮𑍇𑌕𑌾𑌂𑌶𑍇𑌨 𑌸𑍍𑌥𑌿𑌤𑍋 𑌜𑌗𑌦𑌿”𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑍇𑌨 𑌉𑌦𑌿𑌤𑌮𑍍 | 𑌏𑌕𑌸𑍍𑌥𑌮𑍍 — 𑌏𑌕𑌦𑍇𑌶𑌸𑍍𑌥𑌮𑍍. 𑌪𑌾𑌣𑍍𑌡𑌵𑍋 𑌭𑌗𑌵𑌤𑍍𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌲𑌬𑍍𑌧𑌤𑌦𑌨𑍁𑌰𑍂𑌪𑌦𑌿𑌵𑍍𑌯𑌚𑌕𑍍𑌷𑍁𑌰𑌪𑌶𑍍𑌯𑌤𑍍 || |௧௩|

எல்லையில்லாத நீளமும் அகலமுமுடையதும், கணக்கில்லாத திருக்கைகள், முகங்கள், கண்கள், வயிறுகள் இவைகளை உடையதும், அளவில்லாத பளபளப்புள்ளதும், கணக்கில்லாத உயர்ந்த ஆயுதங்களோடு கூடியதும், தனக்குத்தகுந்த கணக்கில்லாத உயர்ந்த நகைகள், மாலைகள், வஸ்திரங்கள், சந்தனம் முதலான வாஸனைத்திரவியங்கள் இவைகளுள்ளதும், அளவில்லாத ஆச்சரியமாயு மிருக்கிற பகவானுடைய மிகவு முயர்ந்த அந்தத் திருமேனியிலே பிரும்மா முதலான—அநேகவிதமாயும் ஆச்சரியமுமான—தேவன், மனிதன், மாடுமுதலானது, மரம்முதலானது—என்று

பிரிவுள்ள அநுபவிக்கிற ஜீவன்கள், பிருதிவீ, அந்தரிக்ஷம், ஸ்வர்க்கம், பாதாளம், அதலம், விதலம், ஸுதலம் முதலான அநுபவத்துக்கு ஏற்பட்ட இடங்கள், அநுபவிக்கத்தகுந்த வஸ்துக்கள், அநுபவத்துக்கு உதவிகள்—இந்தமாதிரி பிரிவுள்ள பிரகிருதி, ஜீவன்கள் இரண்டும் கலந்த எல்லா லோகங்களையும் 10—வது அத்தியாயத்தில் சொன்னபடி ஒரு மூலையிலே யிருப்பதாக பகவானுடைய அநுக்கிரஹத்தாலே அவரைப் பார்க்கும்படியான உயர்ந்த கண்ணை அடைந்த அர்ஜுநன் பார்த்தான் [13]

ததஸ் ஸ விஸ்மயாவிஷ்டோ ஹ்ருஷ்டரோமா தநஞ்ஜய: |
ப்ரணம்ய ஶிரஸா தேவம் க்ருதாஞ்ஜலிரபாஷத || ||௧௪||

ததோ தநஞ்ஜயோ மஹாஶ்சர்யஸ்ய க்ருத்ஸ்நஸ்ய ஜகத: ஸ்வதேஹைகதேஶேநாஶ்ரயபூதம் க்ருத்ஸ்நஸ்ய ப்ரவர்த்தயிதாரம் சாஶ்சர்யதமாநந்தகல்யாணகுணகணம் தேவம் த்ருஷ்ட்வா விஸ்மயாவிஷ்டோ ஹ்ருஷ்டரோமா: ஶிரஸா ப்ரணம்ய க்ருதாஞ்ஜலிரபாஷத || ||௧௪||

பிறகு அர்ஜுநன் மிகவும் ஆச்சரியமான எல்லா உலகங்களையும் தன்னுடைய திருமேனியின் ஒருமூலையிலே வைத்துக்கொண்டும், எல்லா உலகங்களையும் நடத்திக் கொண்டும், மிகவும் ஆச்சரியமான—கணக்கில்லாத—ஞானம் முதலான நல்ல குணங்களை கூட்டங் கூட்டமாய் தன்னிடத்தில் வைத்துக் கொண்டும் இருக்கிற பகவானைப்பார்த்து, திகைத்து, மயிர்க்கூச்சல் அடைந்து, கீழே விழுந்து, ஸேவித்து, கைகளைக் கூப்பிக்கொண்டு சொல்லுகிறான்.

அர்ஜுந உவாச—

பஶ்யாமி தேவாம்ஸ்தவ தேவ தேஹே ஸர்வாம்ஸ்ததா
பூதவிஶேஷஸங்காந் | ப்ரஹ்மாணமீஶம் கமலாஸநஸ்த
ம்ருஷீம்ஶ்ச ஸர்வாநுரகாம்ஶ்ச திவ்யாந் || ||௧௫||

தேவ தவ தேஹே ஸர்வாந் தேவாந் பஶ்யாமி | ததா ஸர்வாந் ப்ராணிவிஶேஷாணாம் ஸங்காந்| ததா ப்ரஹ்மாணம் சதுர்முகமண்டாதிபதிம் | ததேஶம் கமலாஸநஸ்தம். கமலா

ஸநேந ப்ரஹ்மாணம் ஈஶம்-தந்மதேஸ்திதம் | ததா தேவருஷிப்ரப்ருதீந் ஸர்வாந் ருஷீந் உரகாம்ஶ்ச வாஸுகிதக்ஷகப்ரப்ருதீந் தீப்தாந் || ||௧௫||

ஏ பிரபுவே! உம்முடைய திருமேனியில் எல்லா தேவர்களையும், கூட்டம் கூட்டமாய் எல்லாப் பிராணிகளையும், பதினாலு லோகங்கள் அடங்கியபிரும்மாண்டத்துக்குத்தலைவனான நான்முகனையும், அந்தப்பிரும்மாவின் இஷ்டப்படிநடக்கிற சிவனையும், தேவருஷி முதலான எல்லா ருஷிகளையும், வாஸுகி தக்ஷகன் முதலான ஜ்வலித்துக் கொண்டிருக்கிற பாம்புகளையும் பார்க்கிறேன்.

அநேகபாஹூதரவக்த்ரநேத்ரம் பஶ்யாமி த்வாம் ஸர்வ
தோऽநந்தரூபம் | நாந்தம் ந மத்யம் ந புநஸ்தவா
திம் பஶ்யாமி விஶ்வேஶ்வர விஶ்வரூப || ||௧௬||

அநேகபாஹூதரவக்த்ரநேத்ரம் அநந்தரூபம் த்வாம் ஸர்வதஃ பஶ்யாமி | விஶ்வேஶ்வர-விஶ்வஸ்ய நியந்தஃ | விஶ்வரூப-விஶ்வஶரீர! யதஸ்த்வமநந்தஃ, அதஸ்தவ நாந்தம் நமத்யம் ந புநஸ்தவாதிம் ச பஶ்யாமி || ||௧௬||

கைகளும், வயிறுகளும், முகங்களும், கண்களும், எத்தனையோ உள்ளவரும், எல்லையில்லாத திருமேனி உள்ளவருமான உம்மை எங்கும் பார்க்கிறேன். எல்லா லோகத்தையும் அடக்கி ஆளுகிறவரே! எல்லா உலகத்தையும் உடம்பாக உடையவரே! உமக்கு அளவில்லாதபடியாலே, உமக்குஇதுமுதல் என்றும், இது நடுவு என்றும், இது முடிவு என்றும் தெரியவில்லை. இவைகள் இருந்தால், நீர் கொடுத்த கண்ணால் பார்க்கமுடியும். [16]

கிரீடிநம் கதிநம் சக்ரிணம் ச தேஜோராஶிம் ஸர்வ
தோ தீப்திமந்தம் | பஶ்யாமி த்வாம் துர்நிரீக்ஷ்யம் ஸமந்தா
த்தீப்தாநலார்கத்யுதிமப்ரமேயம் || ||௧௭||

தேஜோராஶிம் ஸர்வதோ தீப்திமந்தம் ஸமந்தாத் துர்நிரீக்ஷம் தீப்தாநலார்கத்யுதிமப்ரமேயம் த்வாம் கிரீடிநம் கதிநம் சக்ரிணம் ச பஶ்யாமி || ||௧௭||

ஒரே தேஜஸ்ஸாகவும், எங்கும் பரவியிருக்கும் காந்தியுள்ளவராகவும், பதினைந்து நாழிகையில் இருக்கும் ஸூர்யனைப்போல பார்க்கமுடியாத திருமேனியை உடையவராயும், ஜ்வலித்துக் கொண்டிருக்கிற அக்கினிபோன்றவராயும், இன்ன விதமென்றும் இவ்வளவு என்றும் அளவிட முடியாதவராயுமிருக்கிற உம்மைக் கிரீடங்களையும், கதைகளையும், சக்கிரங்களையும் உடையவராயும் பார்க்கிறேன். உம்மிடத்தில் முன்னே பார்த்த சக்கிரம் முதலான ஆயுதங்களைப் பார்த்தபடியால், நீ கிருஷ்ணன்தான் என்று தோன்றுகிறது. உம்முடைய கிரீடத்தைப் பார்க்கிறபோது எல்லா உலகங்களுக்கும் ராஜாவென்றும் தெரிகிறது [17]

த்வமக்ஷரம் பரமம் வேதிதவ்யம் த்வமஸ்ய விஶ்வஸ்ய பரம் நிதாநம் |
த்வமவ்யய꞉ ஶாஶ்வததர்மகோப்தா ஸநாதநஸ்த்வம்
புருஷோ மதோ மே || ||௧௮||

உபநிஷத்ஸு "த்வே வித்யே வேதிதவ்யே" இத்யாதிஷு வேதிதவ்யதயா நிர்திஷ்டம் பரமக்ஷரம் த்வமேவ | த்வமஸ்ய விஶ்வஸ்ய பரம் நிதாநம் — விஶ்வஸ்யாஸ்ய பராதாரபூதஸ்த்வமேவ | த்வமவ்யய꞉ — வ்யயரஹித꞉ — யேந ஸ்வரூபேண ஸ்வபாவேந ச த்வமவஸ்தித꞉, தேநைவ ரூபேண ஸர்வதாவதிஷ்டஸே | ஶாஶ்வததர்மகோப்தா — ஶாஶ்வதஸ்ய நித்யஸ்ய வைதிகஸ்ய தர்மஸ்ய கோப்தா | ஸநாதநஸ்த்வம் புருஷோ மதோ மே — "வேதாஹமேதம் புருஷம் மஹாந்தம்", "பராத்பரம் புருஷ"மித்யாதிஷூதித꞉ ஸநாதநபுருஷஸ்த்வமேவேதி மதோ மே — ஜ்ஞாத꞉ | யதுகுலதிலக꞉ த்வமேவம்பூத இதாநீம் ஸாக்ஷாத்க்ருதோ மயேத்யர்த꞉ ||௧௮||

உபநிஷத்துக்களில் அறியவேண்டியதாகச் சொல்லப்பட்ட உயர்ந்த அக்ஷரம் என்பவர் நீர்தான். இந்த எல்லா உலகங்களையும் நீர்தான் முக்கியமாகத் தாங்குகிறீர். (அதாவது உடம்பை ஜீவன் தாங்குகிறான். அவனையும் நீர் தாங்குகிறீர்) உமக்கு ஒருவிதமான மாறுதலும் கிடையாது. அதாவது—உம்முடைய

1 ஸ்வரூபத்துக்கும், உம்முடையகுணங்களுக்கும், உம்முடைய 2 ஸொத்துக்களுக்கும் ஒருக்காலும் அழிவில்லை. அநாதியான வேதத்தில் சொன்ன தர்மங்களை இதுபோன்ற அவதாரங்களாலே நீர்தான் காப்பாற்றுகிறீர். உபநிஷத்துக்களில் நித்தியனாகவும், பெரியவனாகவும் சொல்லப்பட்டவர் நீர்தான் என்று எனக்குத்தோன்றுகிறது. முன்னே கிருஷ்ணனாக இருந்தவர்தான் இப்போது இந்த மாதிரி இருக்கிறீர் என்று இந்தக்கண்ணாலே பார்க்கிறேன். [18]

𑌅𑌨𑌾𑌦𑌿𑌮𑌧𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌮𑌨𑌨𑍍𑌤𑌵𑍀𑌰𑍍𑌯𑌮𑌨𑌨𑍍𑌤𑌬𑌾𑌹𑍁𑌂 𑌶𑌶𑌿𑌸𑍂𑌰𑍍𑌯𑌨𑍇𑌤𑍍𑌰𑌮𑍍।
𑌪𑌶𑍍𑌯𑌾𑌮𑌿 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌦𑍀𑌪𑍍𑌤𑌹𑍁𑌤𑌾𑌶𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌂 𑌸𑍍𑌵𑌤𑍇-
𑌜𑌸𑌾 𑌵𑌿𑌶𑍍𑌵𑌮𑌿𑌦𑌂 𑌤𑌪𑌨𑍍𑌤𑌮𑍍॥ ॥௧௯॥

𑌅𑌨𑌾𑌦𑌿𑌮𑌧𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌮𑍍-𑌆𑌦𑌿𑌮𑌧𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌰𑌹𑌿𑌤𑌮𑍍, 𑌅𑌨𑌨𑍍𑌤𑌵𑍀𑌰𑍍𑌯𑌮𑍍-𑌅𑌨𑌵𑌧𑌿𑌕𑌾𑌤𑌿𑌶𑌯𑌵𑍀𑌰𑍍𑌯𑌮𑍍। 𑌵𑍀𑌰𑍍𑌯𑌶𑌬𑍍𑌦𑌃 𑌪𑍍𑌰𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌰𑍍𑌥𑌃। 𑌅𑌨𑌵𑌧𑌿𑌕𑌾𑌤𑌿𑌶𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌬𑌲𑌐𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌵𑍀𑌰𑍍𑌯𑌶𑌕𑍍𑌤𑌿𑌤𑍇𑌜𑌸𑌾𑌂 𑌨𑌿𑌧𑌿𑌰𑌿𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃। 𑌅𑌨𑌨𑍍𑌤𑌬𑌾𑌹𑍁𑌮𑍍-𑌅𑌸𑌂𑌖𑍍𑌯𑍇𑌯𑌬𑌾𑌹𑍁𑌮𑍍। 𑌏𑌤𑌦𑌪𑌿 𑌪𑍍𑌰𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌰𑍍𑌥𑌮𑍍। 𑌅𑌨𑌨𑍍𑌤𑌬𑌾𑌹𑍂𑌦𑌰𑌪𑌾𑌦𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌾𑌦𑌿𑌕𑌮𑍍। 𑌶𑌶𑌿𑌸𑍂𑌰𑍍𑌯𑌨𑍇𑌤𑍍𑌰𑌮𑍍-𑌶𑌶𑌿𑌵𑌤𑍍𑌸𑍂𑌰𑍍𑌯𑌵𑌚𑍍𑌚 𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌪𑍍𑌰𑌤𑌾𑌪𑌯𑍁𑌕𑍍𑌤𑌨𑍇𑌤𑍍𑌰𑌮𑍍। 𑌦𑍇𑌵𑌾𑌦𑍀𑌨𑍍 𑌅𑌨𑍁𑌕𑍂𑌲𑌾𑌨𑍍 𑌨𑌮𑌸𑍍𑌕𑌾𑌰𑌾𑌦𑌿 𑌕𑍁𑌰𑍍𑌵𑌾𑌣𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌤𑌿 𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌃; 𑌤𑌦𑍍𑌵𑌿𑌪𑌰𑍀𑌤𑌾𑌨𑌸𑍁𑌰𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌾𑌦𑍀𑌨𑍍 𑌪𑍍𑌰𑌤𑌿 𑌪𑍍𑌰𑌤𑌾𑌪𑌃। "𑌰𑌕𑍍𑌷𑌾𑌂𑌸𑌿 𑌭𑍀𑌤𑌾𑌨𑌿 𑌦𑌿𑌶𑍋 𑌦𑍍𑌰𑌵𑌨𑍍𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌨𑌮𑌸𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌚 𑌸𑌿𑌦𑍍𑌧𑌸𑌙𑍍𑌘𑌾𑌃" 𑌇𑌤𑌿 𑌹𑌿 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇। 𑌦𑍀𑌪𑍍𑌤𑌹𑍁𑌤𑌾𑌶𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌮𑍍-𑌪𑍍𑌰𑌲𑌯𑌕𑌾𑌲𑌾𑌨𑌲𑌵𑌤𑍍𑌸𑌂𑌹𑌾𑌰𑌾𑌨𑍁𑌗𑍁𑌣𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌮𑍍। 𑌸𑍍𑌵𑌤𑍇𑌜𑌸𑌾 𑌵𑌿𑌶𑍍𑌵𑌮𑌿

1. ஒருமாம்பழத்தை நாலுநாள் கூட வைத்திருந்தால், அது அழுகிப்போகிறது. ஒரு ஜீவன் ஒருக்கால் உயர்ந்த அறிவும், உயர்ந்த ஸொத்துக்களும் உள்ளவனாக இருக்கிறான். அவனுக்கே இன்னொரு ஸமயத்தில் அறிவு, பலம், ஸொத்துக்கள் எல்லாம் போய்விடுகின்றன. உமக்கு அப்படியில்லை.

2. பாஷ்யத்தில் 'விபவ' (ஸொத்து) என்கிற சொல் இருக்கிறது. ஸொத்துக்கு அழிவில்லையென்று சொல்லுவதால், அது நித்திய விபூதியாயிருக்கவேண்டும். இரண்டு விபூதியையும் சொல்லுவதானால், அழிவில்லையென்பதற்குத் திரவியத்தின் ஸ்வரூபத்திற்கு அழிவில்லையென்று பொருள்.

[illegible] ||௧௯||

நீர் முதலும், நடுவும், முடிவுமில்லாதவர். அளவில்லாமல் உயர்ந்தஅறிவு, பலம் முதலான குணங்களுக்கு இருப்பிடம். உம்முடைய கைகள் முதலான அவயவங்களுக்குக் கணக்கில்லை. உம்முடைய கண்கள் சந்திரன்போல வணங்குகிறவர்களுக்கு குளிர்ந்தும், வணங்காதவர்களுக்கு ஸூரியன்போல கடுமையாகவுமிருக்கின்றன. உம்முடைய முகங்கள் ஜ்வலித்துக்கொண்டிருக்கிற பிரளயகாலாக்கினிபோல் உலகத்தை அழிக்கும்போலிருக்கின்றன. எல்லாஉலகத்தையும் அவமானப்படுத்தும்படியான ஸாமர்த்தியத்தாலே, உலகத்தைக் கொளுத்துகிறீர்போலிருக்கிறது. இப்படி உம்மைப் பார்க்கிறேன். கீழே எந்தஸங்கதிகளைப்பார்க்கவேணுமென்று ஆசைப்பட்டேனோ, அந்தஸங்கதிகளை எல்லாம் நீர் சொன்னபடியே கண்ணால் பார்க்கிறேன். அதாவது- எல்லா உலகங்களையும் உண்டு பண்ணுபவரும், தாக்குகிறவரும், அடக்கியாளுகிறவரும், அழிக்கிறவரும், அறிவு முதலான கணக்கில்லாத- அளவில்லாத குணங்களுக்கு ஸமுத்திரம் போன்றவருமான உம்மைப்பார்க்கிறேன். ஒரு உடம்பிலே அநேக வயிறு முதலானவைகள் என்னமாக இருக்கும் என்றால்—எல்லையில்லாமல்பெரிதான ஒரே இடுப்புவிருந்து அநேக வயிறுகள் மேலே கிளைத்து இருக்கின்றன, கீழேயும் அநேக கால்கள் இருக்கின்றன. ஒவ்வொரு முகத்துக்கும் இரண்டு கண்கள் இருக்கின்றன.

அவ— ஏவம்பூ⁴தம் ரூபம் த்³ருஷ்ட்வா தே³வாத³யோ(அ)ஹம் ச ப்ரவ்யதி²தா ஜாதா இத்யாஹ—

த்³யாவாப்ருதி²வ்யோரித³மந்தரம் ஹி வ்யாப்தம் த்வயைகேந
தி³ஶஶ்ச ஸர்வா: । த்³ருஷ்ட்வா(அ)த்³பு⁴தம் ரூபமுக்³ரம் தவே
த³ம் லோகத்ரயம் ப்ரவ்யதி²தம் மஹாத்மந் ॥ ॥௨0॥

த்³யுஶப்³த³: ப்ருதி²வீஶப்³த³ஶ்சோர்த்⁴வாத⁴ஸ்தநாநாம் லோகாநாம் ப்ரத³ர்ஶநார்தௌ² । த்³யாவாப்ருதி²வ்யோரந்தரமவகாஶ: । யஸ்மிந்நவகாஶே ஸர்வே லோகாஸ்திஷ்ட²ந்தி, ஸர்வோ(அ)யமவகாஶோ தி³ஶஶ்ச ஸர்வாஸ்த்வயைகேந வ்யாப்தா: । த்³ருஷ்ட்வா(அ)த்³பு⁴தம் ரூபமுக்³ரம் தவேத³ம் அநந்தாயாமவிஸ்தாரமத்யத்³பு⁴தமத்யுக்³ரம் ச ரூபம் த்³ருஷ்ட்வா லோகத்ரயம் ப்ரவ்யதி²தம் - யுத்³தி⁴த்ஸயா ஆக³தேஷு ப்³ரஹ்மாதி³தே³வாஸுரபித்ருக³ணஸித்³த⁴க³ந்த⁴ர்வயக்ஷராக்ஷஸேஷு ப்ரதிகூலாநுகூலமத்⁴யஸ்த²ரூபம் லோகத்ரயம் ஸர்வம் ப்ரவ்யதி²தம் அத்யந்தபீ⁴தம் । மஹாத்மந் அபரிச்சே²த்³யமநோவ்ருத்தே । ஏதேஷாமப்யர்ஜுநஸ்யேவ விஶ்வாஶ்ரயரூபஸாக்ஷாத்காரஸாத⁴நம் தி³வ்யம் சக்ஷுர்ப⁴க³வதா த³த்தம் । கிமர்த²மிதி சேத் - அர்ஜுநாய ஸ்வைஶ்வர்யம் ஸர்வம் ப்ரத³ர்ஶயிதும் । அத இத³முச்யதே "த்³ருஷ்ட்வா(அ)த்³பு⁴தம் ரூபமுக்³ரம் தவேத³ம் லோகத்ரயம் ப்ரவ்யதி²தம் மஹாத்மந்" இதி ॥ ॥௨0॥

அவ—இந்த மாதிரியான உம்மைப்பார்க்கும் போது, இந்திரன் முதலான தேவர்களும் நானும் நடுங்குகிறோம். நடுங்குகிறதில் அவர்களுக்கும் எனக்கும் வாசியில்லை என்று அர்ஜுனன் சொல்லுகிறான்—

பூமிக்குக் கீழ்ப்பட்ட எல்லா லோகங்களிலும், பூமியிலும், பூமிக்கு மேற்பட்ட எல்லா உலகங்களிலும், எல்லா திக்குகளிலும் நீர் ஒருவரே நிறைந்து இருக்கிறீர். எல்லையில்லாத நீளமும் அகலமுமுள்ள, மிகுந்த ஆச்சரியத்தையும், மிகுந்த பயத்தையும் கொடுக்கிற இந்த உடம்பைப் பார்த்து மூன்றுவிதமான லோகமும்

நடுங்குகின்றன. அதாவது—இந்தச் சண்டையைப் பார்க்கிறதற்காக பிரும்மாமுதலான தேவர்களும், அஸுரர்களும், பிதுருக்களும், ஸித்தர்களும், கந்தர்வர்களும், யக்ஷர்களும், ராக்ஷஸர்களும் எல்லாரும்வந்திருக்கிறார்கள். இவர்களில்சிலர் உம்மிடத்தில் பிரீதியுள்ளவர்கள். சிலர் த்வேஷமுள்ளவர்கள். சிலர் இரண்டுமில்லாதவர்கள். இப்படி மூன்றுவிதமான இந்தஎல்லாரும்நடுங்குகிறார்கள். உம்முடைய எண்ணத்தை அளவிடமுடியாது. பகவான் அர்ஜுனனுக்குத்தன்னுடைய பெருமையைக் காட்டுவதற்காக கீழ்ச்சொன்ன பிரும்மாமுதலான எல்லாருக்கும் உயர்ந்த கண்ணை அவனுக்குக்கொடுத்ததுபோல் கொடுத்துஇருக்கிறார். மனிதர்களுக்குக் கொடுக்கவில்லை-என்று அவர்கள் பார்த்ததாகச்சொல்லாததினாலே ஏற்படுகிறது. ஸஞ்ஜயனுக்குமட்டும் வியாஸருடைய அனுக்கிரஹத்தினாலே இந்தரூபம் முதலானது தோன்றிற்று. பிரும்மா முதலானவர்களுக்கு இந்த உயர்ந்த கண்ணைக்கொடுத்தார். ஏனென்றால் அவர்களும் நடுங்குவது முதலானதை அர்ஜுனன் பார்ப்பதற்காக. [20]

𑌅𑌮𑍀 𑌹𑌿 𑌤𑍍𑌵𑌾 𑌸𑍁𑌰𑌸𑌙𑍍𑌘𑌾 𑌵𑌿𑌶𑌨𑍍𑌤𑌿 𑌕𑍇𑌚𑌿𑌦𑍍𑌭𑍀𑌤𑌾𑌃 𑌪𑍍𑌰𑌾𑌞𑍍𑌜𑌲-
𑌯𑍋 𑌗𑍃𑌣𑌨𑍍𑌤𑌿। 𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑍀𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌮𑌹𑌰𑍍𑌷𑌿𑌸𑌿𑌦𑍍𑌧𑌸𑌙𑍍𑌘𑌾𑌃 𑌸𑍍𑌤𑍁𑌵-
𑌨𑍍𑌤𑌿 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌸𑍍𑌤𑍁𑌤𑌿𑌭𑌿𑌃 𑌪𑍁𑌷𑍍𑌕𑌲𑌾𑌭𑌿𑌃 ॥ ॥௨௧॥

𑌅𑌮𑍀𑌸𑍁𑌰𑌸𑌙𑍍𑌘𑌾𑌃 𑌉𑌤𑍍𑌕𑍃𑌷𑍍𑌟𑌾𑌸𑍍𑌤𑍍𑌵𑌾𑌂 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌶𑍍𑌰𑌯𑌮𑌵𑌲𑍋𑌕𑍍𑌯
𑌹𑍃𑌷𑍍𑌟𑌮𑌨𑌸𑌸𑍍𑌤𑍍𑌵𑌤𑍍𑌸𑌮𑍀𑌪𑌂 𑌵𑌿𑌶𑌨𑍍𑌤𑌿 । 𑌤𑍇𑌷𑍍𑌵𑍇𑌵 𑌕𑍇𑌚𑌨𑌾𑌤𑍍𑌯𑍁-
𑌗𑍍𑌰𑌮𑌤𑍍𑌯𑌦𑍍𑌭𑍁𑌤𑌂 𑌚 𑌤𑍍𑌵𑌾𑌕𑌾𑌰𑌮𑌵𑌲𑍋𑌕𑍍𑌯 𑌭𑍀𑌤𑌾𑌃 𑌪𑍍𑌰𑌾𑌞𑍍𑌜𑌲𑌯𑌃 𑌸𑍍𑌵-
𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌨𑍁𑌗𑍁𑌣𑌂 𑌸𑍍𑌤𑍁𑌤𑌿𑌰𑍂𑌪𑌾𑌣𑌿 𑌵𑌾𑌕𑍍𑌯𑌾𑌨𑌿 𑌗𑍃𑌣𑌨𑍍𑌤𑌿-𑌉-
𑌚𑍍𑌚𑌾𑌰𑌯𑌨𑍍𑌤𑌿 । 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌮𑌹𑌰𑍍𑌷𑌿𑌸𑌙𑍍𑌘𑌾𑌃 𑌸𑌿𑌦𑍍𑌧𑌸𑌙𑍍𑌘𑌾𑌶𑍍𑌚 𑌪𑌰𑌾𑌵𑌰𑌤-
𑌤𑍍𑌤𑍍𑌵𑌯𑌾𑌥𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌵𑌿𑌦𑌃 𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑍀𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌪𑍁𑌷𑍍𑌕𑌲𑌾𑌭𑌿𑌰𑍍𑌭𑌗𑌵𑌦𑌨𑍁𑌰𑍂-
𑌪𑌾𑌭𑌿𑌃 𑌸𑍍𑌤𑍁𑌤𑌿𑌭𑌿𑌃 𑌸𑍍𑌤𑍁𑌵𑌨𑍍𑌤𑌿 ॥ ॥௨௧॥

உயர்ந்தவர்களான இந்த தேவக்கூட்டங்கள் எல்லாஉலகங்களையும் தாங்குகிற இந்தத் திருமேனியை ஸேவித்து, மிகுந்த ஸந்தோஷத்துடன் உமதுகிட்ட வருகிறார்கள். அவர்களுக்குள் சிலர் பயந்து கைகளைக் கூப்பிக்கொண்டு, அவர்களுக்குத் தெரிந்த

வரையில் ஸ்தோத்திரம் பண்ணுகிறார்கள். உலகத்தில் உயர்ந்த வஸ்துக்களையும், இளப்பமான வஸ்துக்களையும் உள்ளபடி கண்டு பிடித்த பிருகுமுதலான சில பெரியருஷிகளின் கூட்டங்களும், ஸநகர்முதலான ஸித்தர்கள் கூட்டங்களும் 1 க்ஷேமமுண்டாக வேணுமென்று சொல்லி, பிறகு பகவானுக்குத் தகுந்தபடி அதிகமாக ஸ்தோத்திரம் பண்ணுகிறார்கள். [21]

ருத்ராதித்யா வஸவோ யே ச ஸாத்யா விஶ்வேऽஶ்விநௌ மருதஶ்சோஷ்மபாஶ்ச | கந்தர்வயக்ஷாஸுரஸித்தஸங்கா வீக்ஷந்தே த்வாம் விஸ்மிதாஶ்சைவ ஸர்வே ||22||

ஊஷ்மபா: பிதர:, "ஊஷ்மபாகா ஹி பிதர:" இதி ஶ்ருதே: | ஸர்வே தே விஸ்மயமாபந்நாஸ்த்வாம் வீக்ஷந்தே ||

வஸுக்கள் முதலான 2 எல்லோரும் உம்மைப்பார்த்து, திகைத்து, உம்மையே பார்க்கிறார்கள். [22]

ரூபம் மஹத்தே பஹுவக்த்ரநேத்ரம் மஹாபாஹோ பஹுபாஹூருபாதம் | பஹூதரம் பஹுதம்ஷ்ட்ராகராலம் த்ருஷ்ட்வா லோகா: ப்ரவ்யதிதாஸ்ததாஹம் ||

பஹ்வீபிர்தம்ஷ்ட்ராபிரதிபீஷணாகாரம் லோகா: யுத்ததித்ருக்ஷயாऽऽகதா: ப்ரதிகூலாநுகூலோதாஸீநரூபாஸ்த்ரிவிதா: ஸர்வே, அஹம் ச தவைதாத்ருஶம் ரூபம் த்ருஷ்ட்வா, அதீவ வ்யதிதா பவாம: ||

||23||

சண்டையைப் பார்ப்பதற்கு வந்திருக்கிற—கீழே சொல்லப்பட்ட மூன்று விதமான எல்லாரும், நானும், உம்முடைய முகத்தி

---

1. வேலைக்காரன் யஜமானனைக் கண்டவுடன் சொல்ல வேண்டிய சொல்.

2. எல்லோரும்—ருத்திரர்கள், ஆதித்தியர்கள், வஸுக்கள், ஸாத்தியர்கள், விசுவேதேவர்கள், அசுவினீ தேவதைகள், மருத்துக்கள், பிதுருக்கள், கந்தர்வர்கள், யக்ஷர்கள், ஸித்தர்கள்—என்று.

விருக்கிற அனேகமான 1. தெத்துப்பல்லுகளாலேமிகவும் பயத்தை உண்டு பண்ணுகிற இவ்விதமான உருவத்தைப் பார்க்கிறபோது நடுங்குகிறோம். [23]

நப⁴:ஸ்ப்ருஶம் தீ³ப்தமநேகவர்ணம் வ்யாத்தாநநம் தீ³ப்தவிஶால
நேத்ரம் | த்³ருஷ்ட்வா ஹி த்வாம் ப்ரவ்யதி²தாந்தராத்மா த்⁴ரு
திம் ந விந்தா³மி ஶமம் ச விஷ்ணோ || ||௨௪||

நப⁴ஸ்ஸ்ப்ருஶ: "தத³க்ஷரே பரமே வ்யோமந், ஆதி³த்யவர்ணம் தமஸ: பரஸ்தாத், க்ஷயந்தமஸ்ய ரஜஸ: பராகே யோ அஸ்யாத்⁴யக்ஷ: பரமே வ்யோமந்" இத்யாதி³ஶ்ருதிஸித்³த⁴ம் கு³ணத்ரயாதீதபரமவ்யோமவாஸீ; ஸவிகாரஸ்ய ப்ரக்ருதிதத்த்வஸ்ய பரமஷஸ்ய ச ஸகலாதா⁴ரஸ்ய, க்ருத்ஸ்நஸ்ய ப்ரயதயா நப⁴ஸ்ஸ்ப்ருஶ இதிவசநாத்; "த்³யாவாப்ருதி²வ்யோரித³மந்தரம் ஹி வ்யாப்தம்" இதி ச வக்ஷ்யமாணத்வாத்| தீ³ப்தமநேகவர்ணம் வ்யாத்தாநநம் தீ³ப்தவிஶாலநேத்ரம் த்வாம் த்³ருஷ்ட்வா, ப்ரவ்யதி²தாந்தராத்மா-ஸஞ்ஜாதஸாத்⁴வஸமநா:, த்⁴ருதிம் ந விந்தா³மி-தே³ஹஸ்ய தா⁴ரணம் ந லபே⁴ | இந்த்³ரியாணாம் ச ஶமம் ந லபே⁴ | விஷ்ணோ-வ்யாபிந்! ஸர்வவ்யாபிநமதிமாத்ரமத்யத்³பு⁴தமதிகோ⁴ரம் ச த்வாம் த்³ருஷ்ட்வா, ப்ரஶிதி²லஸர்வாவயவோ வ்யாகுலேந்த்³ரியஶ்ச ஜாதோऽஸ்மி ||

எங்கும் நிறைந்தவனே! பரமபதத்தளவும் போயிருப்பதும், ஜ்வலித்துக் கொண்டிருப்பதும், வெளுப்பு, சிகப்பு, கருப்பு முதலான அனேக வர்ணங்களுள்ளதும், வாயைத்திறந்து கொண்டிருப்பதும், அகன்ற கண்கள் ஜ்வலித்துக்கொண்டிருப்பதுமான உம்முடைய உடம்பைப் பார்த்து, நான் மிகவும்2 நடுநடுங்குகிறேன். எனக்குத் தைரியம் போய்விட்டது. உடம்பு பதறுகிறது. மன

1. தெத்துப்பல் என்றால், புலி, கரடி, சிங்கம், குரங்கு, பாம்பு முதலானவைகளுக்கெல்லாம் கடைவாயில் நீளமாய் இரண்டு பக்கத்திலும் பல்லுகள் இருக்கும். அவைகள்

2. பயந்தவன் ஒருவனாய் இருட்டில் போனால், திரும்பிப் பார்த்தாலும் பயப்படுவான். பார்க்காத போதும் பயப்படுவான், அதுபோல

தும், இந்திரியங்களும் வியாகுலங்களா (கலங்கி) யிருக்கின்றன. கண்ணால் பார்த்தாலும் பயமாயிருக்கிறது. பார்க்காதபோனாலும் பயமாயிருக்கிறது. [24]

த³ம்ஷ்ட்ராகராலானி ச தே முகா²னி த்³ருஷ்ட்வைவ காலானல
ஸந்நிபா⁴னி। தி³ஸோ² ந ஜானே ந லபே⁴ ச ஸ²ர்ம ப்ர
ஸீத³ தே³வேஸ² ஜக³ந்நிவாஸ॥ ॥25॥

யுகா³ந்தகாலானலவத் ஸர்வஸம்ஹாரே ப்ரவ்ருத்தானி அதிகோ⁴ராணி தவ முகா²னி த்³ருஷ்ட்வா தி³ஸோ² ந ஜானே। ஸு²க²ம் ச ந லபே⁴। ஜக³தாம் நிவாஸ, தே³வேஸ²-ப்³ரஹ்மாதீ³நாமீஸ்²வராணாமபி பரமேஸ்²வர। மாம் ப்ரதி ப்ரஸன்னோ ப⁴வ-யதா²ஹம் ப்ரக்ருதிம் க³தோ ப⁴வாமி, ததா² குர்வித்யர்த²:॥25॥

பிரளயகாலத்தில் பிரும்மலோகம்முதல் எல்லா உலகங்களையும் துலைப்பதற்காக ஒரு நெருப்பு கிளம்புகிறது என்று சொல்லியிருக்கிறது. அதுபோல எல்லாஉலகங்களையும் துலைப்பதற்காகக்கிளம்பியவைகள்போல் இருக்கின்றன உம்முடைய முகங்கள். இவைகளைப்பார்த்த யாரும் நடு நடுங்குகிறார்கள். அப்படிப்பட்ட முகங்களைப்பார்த்து, எனக்குக்கிழக்கு மேற்குத் தெரியவில்லை. ஸந்தோஷமில்லை. எல்லாஉலகங்களுக்கும் இருப்பிடமானவரே! எல்லா உலகங்களுக்கும் ராஜாக்களான பிருமாமுதலானவர்களுக்கும் உயர்ந்த ராஜாவே! என் விஷயத்தில் தயவுபண்ணவேணும். என்னை முன்போல் ஆகும்படி பண்ணவேணும். அதாவது— ஸந்தோஷமாகத் தைரியத்துடன் உம்மிடத்தில் வார்த்தை சொல்லிக்கொண்டிருந்தேன். இப்போது அவை எல்லாம் போய்விட்டது. இதேமாதிரி அரை நாழிகை இருந்தால் செத்துப்போய் விடுவேன். இதைப்போக்கி, முன்போல் பண்ணவேணும். [25]

அத²—ஏவம் ஸர்வஸ்ய ஜக³த: ஸ்வாயத்தஸ்தி²திப்ரவ்ருத்திகத்வம் த³ர்ஸ²யந், பார்த²ஸாரதீ² ராஜவேஷச்ச²ந்நாவநிபா⁴ராயமாணானாம் தா⁴ர்தராஷ்ட்ராணாம் யௌதி⁴ஷ்டி²ரேஷ்வநுப்ரவிஷ்டாநாம் சாஸுராம்ஸா²நாம் ஸம்ஹாரேண பூ⁴பா⁴ராவதரணம் ஸ்வசிகீர்ஷிதம் ஸ்வேனைவ கரிஷ்யமாணம் பார்தா²ய த³ர்ஸ²யாமாஸ।

[illegible]

[illegible] ||௨௭||

[illegible] ||௨௬-௨௭||

அவ—கீழ்ச்சொன்னபடி எல்லா உலகங்களின் இருப்பும், அதனின் வேலைகளும், தன் அதீநமென்று பகவான் அர்ஜுநனுக்குக் காண்பித்தான். துரியோதநன் முதலானவர்களும், தரும புத்திரர் கக்ஷியில் சேர்ந்த சிலபேர்களும் ராஜஉருவமே யொழிய, அஸுரர்கள். அவர்களைக் கொன்று பூமியின் சுமையைப் போக்குவதற்காகப் பகவான் கிருஷ்ணனாய் அவதரித்தான். தன்னுடைய அந்த இஷ்டத்தைத்தானே செய்யப் போகிறதாகவும் அர்ஜுநனுக்குக் காண்பித்தான். அந்த அர்ஜுநனும் பகவான் எல்லா உலகங்களையும் உண்டு பண்ணுகிறது முதலான எல்லா ஆளுகையைக் கண்ணாலே பார்த்து, விளக்கு வெட்டிப் பூச்சிகள் விளக்கில் வந்து விழுந்து சாவதுபோல், அந்த பகவானுடைய வாயில் துரியோதநன் முதலானவர்கள் ஓட்டமாய் ஓடி வந்து விழுந்து

சாவதை, வரப்போகிறதாக இருந்தாலும், பகவான் அநுக்ரஹத்தாலே கிடைத்த திவ்யக் கண்ணாலே பார்த்துச் சொல்லுகிறான்.

இந்தத் துரியோதநன் முதலான திருதராஷ்டிரனுடைய எல்லாப்பிள்ளைகளும், பீஷ்மரும், துரோணரும், கர்ணனும், இன்னும் அவன்கக்ஷியில் சேர்ந்த எலலா ராஜாக்களுடைய கூட்டங்களோடேயும், நம்முடைய கக்ஷியில் இருக்கும் சிலபேர்களோடேயும் மிகுந்த வேகமாய், தெத்துப்பல்லுகளைப் பார்க்கச்செய்தே நடுக்கத்தை உண்டுபண்ணுகிறவைகளான உம்முடைய வாய்களில் சாவதற்காக நுழைகிறார்கள். அவர்களில் சிலபேர்களின் மண்டைகள்பல்லாலேகடிபட்டுபற்களின் இடுக்குகளில் ஈஷிக்கொண்டிருப்பதாகக் காணப்படுகின்றன. (26-27)

யதா நதீநாம் பஹவோऽம்புவேகா: ஸமுத்ரமேவாபிமுகா த்ரவந்தி ।
ததா தவாமீ நரலோகவீரா விஶந்தி வக்த்ராண்யபிவிஜ்வலந்தி ॥ ॥௨௮॥

யதா ப்ரதீப்தம் ஜ்வலநம் பதங்கா விஶந்தி நாஶாய ஸம்ருத்தவேகா: ।
ததைவ நாஶாய விஶந்தி லோகாஸ்தவாபி வக்த்ராணி ஸம்ருத்தவேகா: ॥ ॥௨௯॥

ஸர்வே ராஜலோகா: பஹவோ நதீநாமம்புப்ரவாஹா: ஸமுத்ரமிவ, ப்ரதீப்தம் ஜ்வலநமிவ ச ஶலபா:, வக்த்ராண்யபிவிஜ்வலந்தி ஸ்வயமேவ த்வரமாணா ஆத்மநாஶாய விஶந்தி ॥௨௮-௨௯॥

இந்த வெகு ராஜக்கூட்டங்கள் ஸமுத்திரத்தில் அநேகம் ஆறுகள் போலவும், ஜ்வலித்துக்கொண்டிக்கிற நெருப்பில் விளக்குவெட்டுப்பூச்சிகள் போலவும், உம்முடைய ஜ்வலித்துக்கொண்டிருக்கிற திறந்த வாய்களில் தாங்களாகவே வெகுவேகமாய் தாங்கள் அழிவதற்காகப்போய் நுழைகிறார்கள். 1 [28-29]

---

1. ஆறு உதாரணத்தாலே ஒருவன் தனக்கு வரும் கெடுதலிலிருந்து தானாக விலகமுடியாதென்றும், விளக்கு வெட்டுப்பூச்சி உதாரணத்தாலே, அந்தக் கெடுதலையும் தானாக ஆசைப்பட்டு ஒருவேலையைச்செய்து வருவித்துக்கொள்ளுகிறான் என்றும் காட்டப்படுகிறது. மேலும். முதல் உதாரணத்தாலேஎத்தனைபேர்கள்வந்து நுழைந்தாலும்,பகவான்

𑌲𑍇𑌲𑌿𑌹𑍍𑌯𑌸𑍇 𑌗𑍍𑌰𑌸𑌮𑌾𑌨𑌃 𑌸𑌮𑌨𑍍𑌤𑌾𑌲𑍍𑌲𑍋𑌕𑌾𑌨𑍍 𑌸𑌮𑌗𑍍𑌰𑌾𑌨𑍍
𑌵𑌦𑌨𑍈𑌰𑍍𑌜𑍍𑌵𑌲𑌦𑍍𑌭𑌿𑌃 । 𑌤𑍇𑌜𑍋𑌭𑌿𑌰𑌾𑌪𑍂𑌰𑍍𑌯 𑌜𑌗𑌤𑍍𑌸𑌮𑌗𑍍𑌰𑌂
𑌭𑌾𑌸𑌸𑍍𑌤𑌵𑍋𑌗𑍍𑌰𑌾𑌃 𑌪𑍍𑌰𑌤𑌪𑌨𑍍𑌤𑌿 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋 ॥ ॥௩௦॥

𑌰𑌾𑌜𑌲𑍋𑌕𑌾𑌨𑍍 𑌸𑌮𑌗𑍍𑌰𑌾𑌨𑍍 𑌜𑍍𑌵𑌲𑌦𑍍𑌭𑌿𑌰𑍍𑌵𑌦𑌨𑍈𑌰𑍍𑌗𑍍𑌰𑌸𑌮𑌾𑌨𑌃 𑌕𑍍𑌰𑍋𑌧𑌵𑌶𑌾𑌤𑍍 𑌤𑌦𑍍𑌰𑍁𑌧𑌿𑌰𑌾𑌵𑌸𑌿𑌕𑍍𑌤𑌮𑍋𑌷𑍍𑌠𑌪𑍁𑌟𑌾𑌦𑌿𑌕𑌂 𑌲𑍇𑌲𑌿𑌹𑍍𑌯𑌸𑍇 - 𑌪𑍁𑌨𑌃 𑌪𑍁𑌨𑌰𑌾𑌸𑍍𑌵𑌾𑌦𑌨𑌂 𑌕𑌰𑍋𑌷𑌿 । 𑌤𑌵𑌾𑌤𑌿𑌘𑍋𑌰𑌾 𑌭𑌾𑌸𑌃 𑌰𑌶𑍍𑌮𑌯𑌃, 𑌤𑍇𑌜𑍋𑌭𑌿𑌃 𑌸𑍍𑌵𑌕𑍀𑌯𑍈𑌃 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑍈𑌃 𑌜𑌗𑌤𑍍𑌸𑌮𑌗𑍍𑌰𑌮𑌾𑌪𑍂𑌰𑍍𑌯 𑌪𑍍𑌰𑌤𑌪𑌨𑍍𑌤𑌿 ॥ ॥௩௦॥

அவ— உலகத்தில் வஸ்துக்கள் தாமாக அழிகிறதா? அவைகளை ஈசுவரன் அழிக்கிறானா? தாமாக அழிகிறதானால், அழிக்கிற வேலை ஈசுவரனுடையது என்று சொல்லுவதொட்டாதே. இவர்கள் தாங்களாக நுழைகிறார்கள் என்று சொல்வது எப்படி?— என்றால் சொல்லுகிறார்.

1. ஜ்வலிததுகொண்டிருக்கிற வாய்களாலே சண்டைக்கு வந்திருக்கிற எல்லா ராஜக்கூட்டங்களையும் சாப்பிட்டுக்காண்டு, கோபம் தாங்காமல், உதட்டில் வருகிற அவர்களின் ரத்தத்தை நாக்கால் அடிக்கடி நக்குகிறீர். உம்முடைய மிகவும் கடுமையான காந்திகளால், பங்குனி மாதத்தில் பதினைந்துநாழி வெய்யிலால் போல், எல்லா உலகங்களும் நிறைந்து சாப்பிடுவதற்குச் சமைக்கப்படுவதுபோலிருக்கின்றன. அதாவது— பிரும்மா முதலானவர்களாலும் அந்தக் காந்தியைத் தாங்கமுடியவில்லையென்று கருத்து. [30]

நிறைகிறதில்லை என்றும், இரண்டாவது உதாரணத்தாலே நாசம் உடனே உண்டாகிறதென்றும் காட்டப்படுகிறது. ஒன்று தண்ணீரினால் சாகிறதென்றும், ஒன்று நெருப்பினால் சாகிறதென்றும் காட்டப்படுகிறது.

1. உலகத்தைப் பகவான் அழிப்பதற்குக் காரணம் அந்தந்த ஜீவன்களின் கொடுமையான கர்மங்கள் (வேலைகள்). அவைகளாலே கோபித்துக்கொண்டு பகவான் அழிக்கிறான். இவர்களைப் பகவான்தான் தன்வாயில் தானே வந்துவிழும்படி செய்கிறான்.

आख्याहि मे को भवानुग्ररूपो नमोऽस्तु ते देववर प्रसीद । विज्ञातुमिच्छामि भवन्तमाद्यं न हि प्रजानामि तव प्रवृत्तिम् ॥ ॥௩௧॥

"दर्शयात्मानमव्यय"मिति तवैश्वर्यं निरङ्कुशं साक्षात्कर्तुं प्रार्थितेन भगवता निरङ्कुशैश्वर्यं दर्शयताऽतिघोररूपमाविष्कृतम् । अतिघोररूपः को भवान् किं कर्तुं प्रवृत्त इति भवन्तं ज्ञातुमिच्छामि । तवाभिप्रेतां प्रवृत्तिं न जानामि । तदाख्याहि मे । नमोऽस्तु ते देववर प्रसीद — नमस्तुभ्यं सर्वेश्वर । सर्वं कर्तुमुद्यतेनापि प्रयत्नेनेदं संहर्तृरूपमाविष्कृतमिति त्यक्त्वा प्रसन्नरूपो भव ॥ ॥௩௧॥

நீர் தடங்கலில்லாமல் எல்லா உலகங்களையும் ஆளுவது முதலானவைகளைப் பார்க்க ஆசைப்பட்டு, அதைக்காட்டவேணுமென்று வேண்டினேன். தேவரீர் அதைக்காட்டினீர். நானும் அதைப் பார்த்தேன். ஆனால் யாரும் மிகவும் நடுங்கக்கூடிய இந்த உடம்பைக்காண்பித்தீர். இவ்வளவு கடுமையான உடம்போடுகூடிய நீர் யார்? நீர் என்னவேலை செய்கிறதற்கு ஆரம்பித்திருக்கிறீரோ. 1 அது எனக்குத் தெரியவில்லை அதை எனக்குச் சொல்லவேணும். எல்லா உலகங்களுக்கும் மஹாராஜாவே! உம்மை நான் ஸேவிக்கிறேன். இந்த எண்ணத்தினாலே 'எல்லா உலகங்களையும்

1. *நான் உம்மிடத்தில் பக்தியுள்ளவனாதலால், நடுக்கத்தை உண்டு பண்ணும் உருவத்தை எனக்குக்காட்டமாட்டீர். காட்டினதற்குக் கருத்து என்ன?' என்று அதின் கருத்தை அறியாமையால் அர்ஜுனன் கேட்கிறான். அவனுக்கு உபதேசம் பண்ணினதாலேயும், தான் கேட்டுக்கொண்டபடி பகவான் தன்னைக் காட்டினதாலும், அவர் பகவான் என்று அவனுக்குத் தெரியும். ஆகையால் உம்முடைய ஸ்வரூபம் என்ன, உம்முடைய பெயர் என்ன? என்று அவன் கேட்கவில்லை. ஆகையால் வியாக்கியானத்தில் முன் சொன்னபடியே பொருள்கொள்ளவேணும். "உம்முடைய பிரவிருத்தியை நான் அறியவில்லை" என்று சுலோகத்தில் சொல்லியிருப்பதாலும் இது ஏற்படுகிறது.*

அழிக்கத்தகுந்த இந்த ரூபத்தைக் காட்டினேன்" என்று சொல்லி, முன்போல் எல்லா உலகங்களுக்கும் ஸந்தோஷத்தைக் கொடுக்கக்கூடிய திருமேனியோடு ஸேவை ஸாதிக்கவும்வேணும். [31]

[illegible]

[illegible]

[illegible] ||௩௨||

[illegible] ||௩௨||

அவ— என்னிடத்திலிருக்கும் கணக்கில்லாத குற்றங்களைப் பாராட்டாமல், அளவில்லாதப் பிரீதிபண்ணி, எல்லா லோகங்களையும் ஆளுவதை எனக்குக் காட்டுகிற தேவரீர் எல்லாரும் பயப்படக்கூடிய ரூபத்தைக் காண்பிப்பதற்குக் கருத்து என்ன என்று அர்ஜுனனால் கேட்கப்பட்ட பகவான் தன் எண்ணத்தைச் சொல்லுகிறார். உன்னுடைய பிரயத்தினமில்லாமலேயே துரியோதனன் முதலான எல்லா துஷ்டராஜாக்களையும் நானே கொல்ல ஆரம்பி

த்திருக்கிறேனென்று உனக்குத் தெரியப்படுத்துவதற்காக இந்த உருவத்தைக் காட்டினேன். அப்படித் தெரியப்படுத்துவதும் உன்னைச் சண்டைக்குக் கிளப்புவதற்காக என்று சொல்லுகிறார் —

பகவான் சொல்லுகிறார்—

துரியோதனன் முதலான எல்லா துஷ்டராஜாக்களின் ஆயுஸ்ஸு இப்போது முடிகிறது என்று எண்ணி, அவர்களைக் கொல்லுவதற்காக இந்த பயங்கரமான உருவத்துடன் வளர்ந்து, ஆசையுடன் இவர்களைக் கொல்ல ஆரம்பித்திருக்கிறேன். ஆகையால் என் எண்ணத்தினாலேயே, உன் பிரயத்தினம் இல்லாவிட்டாலும், உன்னுடைய சத்துருக்களான துரியோதனன் முதலானவர்கள் எல்லாரும் மடியப்போகிறார்கள். [32]

தஸ்மாத் த்வமுத்திஷ்ட யஶோ லபஸ்வ ஜித்வா ஶத்ரூந் புங்க்ஷ்வ ராஜ்யம் ஸம்ருத்தம் | மயைவைதே நிஹதா: பூர்வமேவ நிமித்தமாத்ரம் பவ ஸவ்யஸாசிந் || ||௩௩||

தஸ்மாத் த்வம் தாந் ப்ரதி யுத்தாயோத்திஷ்ட | தாந் ஶத்ரூந் ஜித்வா யஶோ லபஸ்வ | தர்ம்யம் ராஜ்யம் ச ஸம்ருத்தம் புங்க்ஷ்வ | மயைவைதே க்ருதாபராதா: பூர்வமேவ நிஹதா: ஹநநே விநியுக்தா: | த்வம் து தேஷாம் ஹநநே நிமித்தமாத்ரம் பவ, மயா ஹந்யமாநாநாம் ஶஸ்த்ராதிஸ்தாநீயோ பவ | ஸவ்யஸாசிந்! “ஸவ்யஸாசீ” | ஸவ்யேந ஶரஸந்தாந ஸமர்த்தஸ்ஸவ்யஸாசீ — ஸவ்யேநாபி கரேண ஶரஸந்தாநகர: — கர யேந யோத்தும் ஸமர்த்த இத்யர்த்த: || ||௩௩||

அவ— என்பிரயத்தினமில்லாமலே துரியோதனன் முதலானவர்கள் மடிவார்களானால், என்னை ஏன் கிளப்புகிறீர் என்றால், சொல்லுகிறார்—

ஆகையாலே நீ அவர்களுடன் சண்டைக்கு 1 கிளப்பு. அவர்களை ஜயித்து கீர்த்தியை அடை. நியாயமாய் கிடைக்கிற எல்லா

1. உன்னைக் கிளப்புவது என்னிடத்தில் பக்தியுள்ள உனக்கு ஜயத்தையும், கீர்த்தியையும் கொடுப்பதற்காக.

ஸுகங்களாலும் நிறைந்த ராஜ்ஜியத்தையும் அநுபவி. கொடுமையான குற்றங்களைப் பண்ணியிருக்கிற இவர்களை நான் முன்னமேயே கொல்லுவதாகத் தீர்மானித்துவிட்டேன். நீ பேருக்குத்தான் இருக்கவேணும். வெட்டுகிறவனுக்குக் கத்தியிருப்பதுபோல்; கையாலே முறிக்கத் தகுந்தவனுக்குக் கோடாலி போல். 1 இடது கையால்கூட பாணத்தைவிடத் தகுந்தவனே! நாழிகையாயிற்று. இரண்டு கைகளாலும் சண்டை போடு. [33]

த்ரோணம் ச பீஷ்மம் ச ஜயத்ரதம் ச கர்ணம் ததாந்யாநபி யோதவீராந் ।
மயா ஹதாம்ஸ்த்வம் ஜஹி மா வ்யதிஷ்டா யுத்யஸ்வ ஜேதாஸி ரணே ஸபத்நாந் ॥ ॥௩௪॥

த்ரோணபீஷ்மகர்ணாதீந் க்ருதாபராததயா மயைவ ஹநநே விநியுக்தாந் த்வம் ஜஹி—த்வம் ஹந்யா: । வதாத் குரூந் பந்தூம்ஶ்சாந்யாநபி போகஸக்தாந் கதம் ஹநிஷ்யாமீதி மா வ்யதிஷ்டா: । தாநுத்திஶ்ய தர்மாதர்மபயேந பந்துஸ்நேஹேந காருண்யேந ச மா வ்யதாம் க்ருதா: । யதஸ்தே க்ருதாபராதா மயைவ ஹநநே விநியுக்தா: । அதோ நிர்விஶங்கோ யுத்யஸ்வ । ரணே ஸபத்நாந் ஜேதாஸி—ஜேஷ்யஸி । நைதேஷாம் வதே ந்ருஶம்ஸதாதோஷ: । அபி து ஜயமாத்ரம் ப்ரத்யுத ஜந்யத: ॥ ॥௩௪॥

பெரியதான குற்றங்களைப் பண்ணினபடியால், கொலை பண்ணவே என்னால் தீர்மானிக்கப்பட்ட துரோணர், பீஷ்மர், கர்ணன் முதலானவர்களையும் நீ கொல்லு. உயர்ந்த ஸுகங்களை அநுபவிக்கவேணுமென்று எண்ணிக்கொண்டிருக்கிற ஆசாரியர்களையும், பந்துக்களையும், இன்னும் மற்றப் பேர்களையும் பாபம் வருமோ என்று 2 பயத்தினாலும், பந்துக்கள் என்கிற ஸ்நேஹத்தினாலும்,

1. பூமியின் சுமையைப் போக்குவதற்காகத்தான் உன்னை இரண்டு கையாலும் பாணம் போடும்படி பண்ணியிருக்கிறேன் என்று கருத்து.

2. ஒருவேளையில் பயப்படுவது தைவத்துக்கு வருத்தம் வருமோ என்பதற்காகத்தானே. நீ அவர்களைக் கொல்லுவது எனக்கு ஸந்தோஷம். நீ அவர்களைக் கொல்லாத போனால் தான் வருத்தம்.

தையினும்—என்னமாய்ச் கொல்லுவது—என்று வருத்தப் படாதே. குற்றம் பண்ணினதால் அவர்களைக் கொலை பண்ண வேணு மென்று நான் தீர்மானித்து விட்டேன். ஆகையால் கொஞ்சங்கூட யோசிக்காமல் சண்டைபோடு நீ கட்டாயம் சத்துருக்களை ஜயிப்பாய் இவர்களைச் கொல்லுவதினால் உனக்குத் துளிக் கூட ஒருகுற்ற முமுண்டாகாது. (34)

𑌸𑌂𑌜𑌯 𑌉𑌵𑌾𑌚 —

𑌏𑌤𑌚𑍍𑌛𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌵𑌚𑌨𑌂 𑌕𑍇𑌶𑌵𑌸𑍍𑌯 𑌕𑍃𑌤𑌾𑌞𑍍𑌜𑌲𑌿𑌰𑍍𑌵𑍇𑌪𑌮𑌾-
𑌨𑌃 𑌕𑌿𑌰𑍀𑌟𑍀 । 𑌨𑌮𑌸𑍍𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌭𑍂𑌯 𑌏𑌵𑌾𑌹 𑌕𑍃𑌷𑍍𑌣𑌂 𑌸𑌗-
𑌦𑍍𑌗𑌦𑌂 𑌭𑍀𑌤𑌭𑍀𑌤𑌃 𑌪𑍍𑌰𑌣𑌮𑍍𑌯 ॥ ॥௩௫॥

𑌏𑌤𑌦𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌵𑌾𑌤𑍍𑌸𑌲𑍍𑌯𑌜𑌲𑌧𑍇𑌃 𑌕𑍇𑌶𑌵𑌸𑍍𑌯 𑌵𑌚𑌨𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾, 𑌅𑌰𑍍𑌜𑍁𑌨𑌸𑍍𑌸𑌸𑌾𑌧𑍍𑌵𑌸𑌨𑌮𑌸𑍍𑌕𑍃𑌤𑍍𑌯, 𑌭𑍀𑌤𑌭𑍀𑌤𑍋 𑌭𑍂𑌯𑌶𑍍𑌚 𑌪𑍍𑌰𑌣𑌮𑍍𑌯, 𑌕𑍃𑌤𑌾𑌞𑍍𑌜𑌲𑌿𑌰𑍍𑌵𑍇𑌪𑌮𑌾𑌨𑌃 𑌕𑌿𑌰𑍀𑌟𑍀 𑌸𑌗𑌦𑍍𑌗𑌦𑌮𑌾𑌹 ॥

ஸஞ்ஜயன் சொல்லுகிறார்—

தன்னை 1 அடைந்தவர்களிடத்தில் குற்றம் பாராமல், ப்ரீதிபண்ணுகிற பகவானுடைய இந்த வார்த்தையை அர்ஜுநன் கேட்டவுடன், அவரை 2 ஸேவித்து, மிகவும் பயந்து மறுபடியும் ஸேவித்து, கைகளைக் கூப்பிக்கொண்டு, உடம்பெல்லாம் நடுங்கி, 3 கிரீடமுள்ளவன் தொண்டை தழுதழுத்துச் சொல்லுகிறான். (35)

1. அர்ஜுநன் கேட்டவுடன் பகவான் தன் திருமேனியைக் காட்டினான். அப்படியே தேவரீர் கருத்து என்ன வென்று கேட்டவுடன் அதையும் சொன்னான். இது அவனிடமிருந்த வாத்ஸல்யம் என்கிற குணத்தாலே செய்யப் பட்டது.

2. முதல் ஸேவை பகவானுடைய வார்த்தையைக் கேட்டவுடன் பரவசமாய்ச்செய்யப் பட்டது. மறுபடி ஸேவையும் கைகூப்புதலும் அவனிடத்தில் சொல்லுவதற்காக. இதனால் பெரியவர்களிடத்தில் ஒருவிஷயத்தைத் தெரியப் படுத்தவேணுமானால், முதலில் ஸேவித்து கையைக் கூப்பிக் கொண்டு தெரியப் படுத்தவேணும் என்று காட்டப் படுகிறது.

3. பகவானை இப்படி வணங்கினபடியால், அர்ஜுநனுக்குத் தான் கிரீடம் தகும் என்றும், கிருஷ்ணனை வணங்காத உன்பிள்ளையான துரியோதநனுக்கு அது தகாதென்று, அர்ஜுநனை கிரீடி (கிரீடமுள்ளவன்) என்று சொன்ன ஸஞ்ஜயனுக்குக் கருத்து.

[illegible]
[illegible]
[illegible] ||௩௬||

[illegible] ||௩௬||

இந்தச் சண்டையைப் பார்ப்பதற்காக வந்திருக்கிற இந்திரன் முதலானவர்களெல்லாரும் தேவரீருடைய அநுக்கிரஹத்தால், தேவரீர் எல்லா உலகங்களுக்கும் மஹாராஜா என்பதைப் பார்த்து, உம்முடைய அளவில்லாத கீர்த்தியைக் கண்டு மிகவும் ஸந்தோஷப்படுகிறார்கள். அதாவது—இன்பமான மாப்பிள்ளையைப் பார்த்தது போல், அவர்கள் கண்களும் மனதும் களிக்கின்றன. மிகவும் அன்புள்ள தாய் தகப்பனைப் பார்த்த குழந்தைகள் போல், உம்மிடத்தில் மிகுந்த ஆசையாயுமிருக்கிறார்கள். ராக்ஷஸர்கள் உம்மைக் கண்டு நடுங்கி, ஓடுகிற இடம் தெரியாமல், எல்லா திக்குகளிலும் ஓடுகிறார்கள். ஸித்தர்கள் முதலான எல்லாரும் கூட்டங்கூட்டமாய் ஸேவிக்கிறார்கள். இவர்கள் இந்த மாதிரி செய்கிறது அதிசயமென்ன? ந்யாயம் தானே. [36]

[illegible]—

[illegible]
[illegible] ||௩௭½||

[illegible] ||௩௭½||

அநந்த தேவேஶ ஜகந்நிவாஸ த்வமக்ஷரம் ஸதஸத்தத்பரம்
யத் । த்வமாதிதேவ: புருஷ: புராணஸ்த்வமஸ்ய விஶ்
வஸ்ய பரம் நிதாநம் ॥ ॥௩௭॥

அநந்த, தேவேஶ, ஜகந்நிவாஸ! த்வமக்ஷரம் - அக்ஷரம் ஜீவாத்மதத்த்வம், "ந ஜாயதே ம்ரியதே வா விபஶ்சித்" இத்யாதிஶ்ருதிஸித்தோ ஜீவாத்மா ஹி ந க்ஷரதி| ஸதஸச்ச த்வமேவ - ஸதஸச்சப்தநிர்திஷ்டம் கார்யகாரணபாவேநாவஸ்திதம் ப்ரக்ருதிதத்த்வம் நாமரூபவிபாகவத்தயா கார்யாவஸ்தம் ஸச்சப்தநிர்திஷ்டம், தத்ரஹிததயா காரணாவஸ்தமஸச்சப்தநிர்திஷ்டம் ச த்வமேவ | தத்பரம் யச்ச - தஸ்மாத்ப்ரக்ருதே: ப்ரக்ருதிஸம்பந்திநோ ஜீவாத்மந: பரம் முக்தாத்மதத்த்வம் யச்ச, தத்ரபி த்வமேவ| த்வமாதிதேவ: புருஷ: புராணஸ்த்வமஸ்ய விஶ்வஸ்ய பரம் நிதாநம் - நிதீயதே த்வயி விஶ்வமிதி த்வமஸ்ய விஶ்வஸ்ய பரம் நிதாநம், ஶரீரபூதஸ்யாத்மதயா பரமாதாரபூதஸ்த்வமேவேத்யர்த: ॥ ॥௩௭॥

வேத்தாஸி வேத்யம் ச பரம் ச தாம த்வயா ததம் விஶ்
வமநந்தரூப ॥ ॥௩௮॥

ஜகதி ஸர்வத்ர வேதிதா வேத்யம் ச ஸர்வம் த்வமேவ | ஸர்வம் ஸர்வாத்மதயா ஆஶ்ரயஸ்த்வமேவ பரம் ச தாம ஸ்தாநம், ப்ராப்யஸ்தாநமித்யர்த: | த்வயா ததம் விஶ்வமநந்தரூப - த்வயா ஆத்மநா விஶ்வம் சிதசிந்மிஶ்ரம் ஜகத் ததம் வ்யாப்தம் ॥

அவ—ஙியாயம்தான் என்பதற்கு காரணங்கள்சொல்லுகிறான்-

எல்லா விதத்தாலும் எல்லாரைக் காட்டிலும் உயர்ந்தவரே! மஹா புருஷனே! நான்முகனையும் உண்டுபண்ணினவரான உம்மை நான்முகன் முதலானவர்கள் ஏன் வணங்கமாட்டார்கள். ஒரு விதத்தாலும் அளவில்லாதவரே! எல்லா தேவர்களுக்கும் ராஜாவே! எல்லா உலகங்களுக்கும் இருப்பிடமானவரே! ஸ்வரூபத்தில் மாறுபாடில்லாத ஜீவன்களும் நீர்தான். உலகத்தை உண்டுபண்ணுகிற காலத்தில் பூமி முதலான பெயர்களையும், அந்தந்த உரு

வங்களையும் அடைந்த "ஸத்" என்று சொல்லப்பட்ட பிரகிருதியும் நீர்தான். பிரளயகாலத்தில் பூமி, ஜலம், நெருப்பு முதலான பெயர்களும், அதற்கான உருவங்களும் இல்லாமல், இவை எல்லாவற்றையும் உண்டு பண்ணக்கூடிய விரிவை அடையாத நிலைமையுள்ள "அஸத்" என்று சொல்லப்பட்ட பிரகிருதி யென்பதும் நீர்தான். அந்தப் பிரகிருதியைக் காட்டிலும், அத்துடன் சேர்ந்திருக்கிற ஜீவன்களைக்காட்டிலும் உயர்ந்த மோக்ஷத்தை அடைந்த — ஜீவன்களும் நீர்தான். அதாவது—இவையெல்லாம் உம்முடைய உடம்புகள். ஆகையாலே நீர் எல்லா உலகத்தையும் உண்டு பண்ணி ஸந்தோஷப்படுகிறவர். இதுமுதல் என்றில்லாமல் இருக்கிற புருஷன். எல்லா உலகங்களும் உம்முடைய உடம்புகள். ஆத்மாவாயிருந்து அவைகளைத் தாங்குவதால், அவைகளைத் தாங்குகிற வஸ்துக்களுக்குள் நீர்தான் உயர்ந்தவர். உலகத்திலிருக்கும் அறிவுள்ள ஜீவன்களும், அவர்களால் அறியப்படும் வஸ்துக்களும் நீர்தான். எல்லா உலகங்களுக்கும் ஆத்மாவாயிருக்கிற நீர்தான் எல்லாராலும் அடைய வேண்டிய உயர்ந்த இடமாயுமிருக்கிறீர். எல்லா உலகத்துக்கும் ஆத்மாவாக இருந்து கொண்டு எங்கும் நிறைந்திருக்கிறீர். [37–38]

அவ—அத ஸ்ஸர்வ ஶப்த வாச்யத்வமாஹ—
வாயுர்யமோऽக்நிர்வருணஶ் ஶஶாங்க: ப்ரஜாபதிஸ்த்வம் ப்ர
பிதாமஹஶ்ச ॥ ॥௩௯ அ॥

ஸர்வேஷாம் ப்ரபிதாமஹஶ்ச-பிதாமஹ சதுர்முகஸ்ய। ஸர்வாஸாம் ப்ரஜாநாம் பிதர: ப்ரஜாபதய:; ப்ரஜாபதீநாம் பிதா ஹிரண்யகர்ப்ப: ப்ரஜாநாம் பிதாமஹ: । ஹிரண்யகர்ப்பஸ்யாபி பிதா த்வம் ப்ரஜாநாம் ப்ரபிதாமஹ: । பிதாமஹாதீநாமாத்மதயா தத்தச்சப்தவாச்யஸ்த்வமேவேத்யர்த்த: ॥ ॥௩௯ அ॥

அவ—உலகத்தில் வழங்குகிற எல்லாச் சொற்களுக்கும் நீர்தான் பொருள் என்று சொல்லுகிறான்—

1. வாயுவும், யமனும், அக்கினியும், வருணனும், சந்திரனும், எல்லா உலகங்களுக்கும் தகப்பன்களான தக்ஷன் முதலான பிர

1. எல்லாச் சொற்களுக்கும் நீர்தான் பொருள். வாயு என்கிற

ஜாபதிகளுக்கும், தகப்பனான நான்முகனும் நீர்தான். அவருக்குத் தகப்பனான நீர் எல்லாருக்கும் கொள்ளுத்தாதா. [39½]

நமோ நமஸ்தேऽஸ்து ஸஹஸ்ரக்ருத்வ: புநஶ்ச பூயோऽபி நமோ நமஸ்தே । நம: புரஸ்தாதத ப்ருஷ்டதஸ்தே நமோऽஸ்து தே ஸர்வத ஏவ ஸர்வ ॥ ௩௯½ ॥

அத்யத்புதாகாரம் பவந்தம் த்ருஷ்ட்வா, ஹர்ஷோத்புல்லநயநோऽத்யந்தஸாத்வஸாவநத: ஸர்வதோ நமஸ்கரோதி ॥

மிகவும் ஆச்சரியமான திருமேனியுள்ள உம்மைப் பார்த்து, ஸந்தோஷத்தாலே, கண்கள் மலர்ந்து, அளவில்லாத பயத்தினாலே வணங்கி, நாலு பக்கங்களிலும் நமஸ்காரம் பண்ணுகிறேன். [39½]

அநந்தவீர்யாமிதவிக்ரமஸ்த்வம் ஸர்வம் ஸமாப்நோஷி ததோऽஸி ஸர்வ: । ॥ ௪௦ ॥

அநந்தவீர்ய ! அபரிமிதவிக்ரமஸ்த்வம் ஸர்வமாத்மதயா ஸமாப்நோஷி । ததஸ்த்வமேவாஸி - யதஸ்த்வம் ஸர்வம் சிதசித்வஸ்துஜாதமாத்மதயா ஸமாப்நோஷி. அதஸ்ஸர்வஸ்ய சிதசித்வஸ்துஜாதஸ்ய த்வச்சரீரதயா த்வத்ப்ரகாரத்வாத் ஸர்வப்ரகாரஸ்ஸர்வஶப்தாபிதேயஸ்த்வமேவாஸீத்யர்த்த: । [illegible] ஸர்வம் ஸமாப்நோஷி ததோऽஸி ஸர்வ:” இதி ச ॥ ॥ ௪௦ ॥

அளவில்லாத வீரியமென்கிற குணமுள்ளவரே ! அதாவது-எவ்வளவு பெரிய வேலைகளைச் செய்தாலும், துளிக்கூட களைப்பில்லாதவரே! நீர் அளவில்லாத பராக்கிரமமுள்ளவர். எல்லா உலகங்களுக்கும் ஆத்மாவான நீர் எல்லா உலகங்களையும் உடம்புகளாக அடைந்திருக்கிறீர். அதினால் எல்லா உலகங்களாயுமிருக்கிறீர்.

சொல் உடம்புக்குப் பெயர். அது உடம்புக்கு ஆத்மாவான ஜீவனைச் சொல்லி, ஆத்மாவாகையால் ஜீவனைச் சொல்லுவது போல, அவனுக்கும் ஆத்மாவான பகவானைச் சொல்லுகிறது.

எல்லா உலகங்களும் உமக்கு உடம்பாயிருந்து பிரகாரமாயிருப்பதால், எல்லாப் பெயர்களும் எல்லா உலகங்களாகிற பிரகாரங்களுடன், பிரகாரியாகிய உம்மைச் சொல்லுகின்றன.1 [40]

𑌸𑌖𑍇𑌤𑌿 𑌮𑌤𑍍𑌵𑌾 𑌪𑍍𑌰𑌸𑌭𑌂 𑌯𑌦𑍁𑌕𑍍𑌤𑌂 𑌹𑍇 𑌕𑍃𑌷𑍍𑌣 𑌹𑍇 𑌯𑌾-
𑌦𑌵 𑌹𑍇 𑌸𑌖𑍇𑌤𑌿 । 𑌅𑌜𑌾𑌨𑌤𑌾 𑌮𑌹𑌿𑌮𑌾𑌨𑌂 𑌤𑌵𑍇𑌦𑌂 𑌮𑌯𑌾
𑌪𑍍𑌰𑌮𑌾𑌦𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌣𑌯𑍇𑌨 𑌵𑌾𑌪𑌿 ॥ ॥௪௧॥

𑌯𑌚𑍍𑌚𑌾𑌵𑌹𑌾𑌸𑌾𑌰𑍍𑌥𑌮𑌸𑌤𑍍𑌕𑍃𑌤𑍋𑌽𑌸𑌿 𑌵𑌿𑌹𑌾𑌰𑌶𑌯𑍍𑌯𑌾𑌸𑌨-
𑌭𑍋𑌜𑌨𑍇𑌷𑍁 । 𑌏𑌕𑍋𑌽𑌥𑌵𑌾𑌪𑍍𑌯𑌚𑍍𑌯𑍁𑌤 𑌤𑌤𑍍𑌸𑌮𑌕𑍍𑌷𑌂 𑌤-
𑌤𑍍𑌕𑍍𑌷𑌾𑌮𑌯𑍇 𑌤𑍍𑌵𑌾𑌮𑌹𑌮𑌪𑍍𑌰𑌮𑍇𑌯𑌮𑍍 ॥ ॥௪௨॥

𑌤𑌵 𑌅𑌨𑌨𑍍𑌤𑌵𑍀𑌰𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌮𑌿𑌤𑌵𑌿𑌕𑍍𑌰𑌮𑌸𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 𑌸𑍍𑌰𑌷𑍍𑌟𑍃𑌤𑍍𑌵𑌾𑌦𑌿𑌕𑍋 𑌯𑍋 𑌮𑌹𑌿𑌮𑌾 𑌤𑌮𑌿𑌮𑌮𑌜𑌾𑌨𑌤𑌾 𑌮𑌯𑌾 𑌪𑍍𑌰𑌮𑌾𑌦𑌾𑌤𑍍-𑌮𑍋𑌹𑌾𑌤𑍍, 𑌪𑍍𑌰𑌣𑌯𑍇𑌨-𑌚𑌿𑌰𑌪𑌰𑌿𑌚𑌯𑍇𑌨 𑌵𑌾 𑌸𑌖𑍇𑌤𑌿 𑌮𑌮 𑌵𑌯𑌸𑍍𑌯 𑌇𑌤𑌿 𑌮𑌤𑍍𑌵𑌾, 𑌹𑍇 𑌕𑍃𑌷𑍍𑌣! 𑌹𑍇 𑌯𑌾𑌦𑌵! 𑌹𑍇 𑌸𑌖𑍇! 𑌇𑌤𑌿 𑌤𑍍𑌵𑌯𑌿 𑌪𑍍𑌰𑌸𑌭𑌂-𑌵𑌿𑌨𑌯𑌾𑌪𑍇𑌤𑌂 𑌯𑌦𑍁𑌕𑍍𑌤𑌮𑍍, 𑌯𑌚𑍍𑌚 𑌪𑌰𑌿𑌹𑌾𑌸𑌾𑌰𑍍𑌥𑌂 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍍𑌵𑍇𑌵 𑌸𑌤𑍍𑌕𑌾𑌰𑌾𑌰𑍍𑌹𑍇𑌷𑍍𑌵𑌸𑌤𑍍𑌕𑍃𑌤𑍋𑌽𑌸𑌿, 𑌵𑌿𑌹𑌾𑌰𑌶𑌯𑍍𑌯𑌾𑌸𑌨𑌭𑍋𑌜𑌨𑍇𑌷𑍁 𑌚 𑌸𑌹𑌕𑍃𑌤𑍇𑌷𑍍𑌵𑍇𑌕𑌾𑌕𑍇 𑌵𑌾 𑌸𑌮𑌕𑍍𑌷𑌂 𑌵𑌾 𑌯𑌦𑌸𑌤𑍍𑌕𑍃𑌤𑍋𑌽𑌸𑌿, 𑌤𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌂 𑌤𑍍𑌵𑌾𑌮𑌪𑍍𑌰𑌮𑍇𑌯𑌮𑌹𑌂 𑌕𑍍𑌷𑌾𑌮𑌯𑍇 ॥

அளவில்லாத வீரியம், அளவில்லாத பராக்கிரமம், (எல்லா சத்துருக்களையும் ஜயிப்பது) எல்லா உலகங்களுக்கும் ஆத்மாவாயிருப்பது, எல்லா உலகங்களையும் உண்டு பண்ணுவது-இவை முதலான இப்போது பார்த்த-உம்முடைய பெருமையை நான் அறியாமல், 2 தப்பு எண்ணத்தாலேயோ, வெகுநாளாய் பழகினத்தாலேயோ, எனக்குத் தோழன் என்று நினைத்து, ஏ கிருஷ்ணா!

1. கீழே பல இடங்களில் பகவானே ஜீவன், அவனே பிரகிருதி, அவனே வாயு என்று சொல்லியிருக்கிறது. அவனே இப்படிச் சொன்னது அவைகளுக்கு ஆத்மாவாயிருப்பதால் என்பதை ஸ்ரீ கிருஷ்ணனே கீதையிலேயே ஸந்தேஹம் வராதபடியும், இன்னொருவர் அர்த்தம் சொல்ல வேண்டாதபடியும், வேறுவிதமான அர்த்தம் சொல்லக் கூடாதபடியும் தெளிவாகச் சொன்னார்.

2. தப்பு எண்ணமாவது—பகவானை கிருஷ்ணனை மனித ஜாதி என்று நினைப்பது முதலானவை.

ஏ யாதவ! ஏ தோழனே! இதுபாதிரி எண்ணமில்லாமல் என்ன என்ன சொன்னேனே; எப்பவும் மரியாதை பண்ணத் தகுந்த உம்மை மரியாதைக்குறைவாய் பரிஹாஸத்துக்காக என்னென்ன சொன்னேனே; அதாவது—மாடு மேய்த்தாயிற்று? வெண்ணை திருடியாயிற்று? இவை முதலானவைகளைச் சொன்னேனே; உம்மோடு விளையாடின போதும், நீரும் நானும் படுத்துக்கொண்டும், உட்கார்ந்துகொண்டும் இருந்தபோதும், சாப்பிடுகிறபோதும் நீரும் நானும் தனியாய் இருந்த போதும், அன்னியர்கள் பத்துப் பேர் பார்த்திருக்கும் போதும், என்னென்ன மரியாதைக் குறைவு பண்ணினேனே. அவைகளெல்லாவற்றையும் ஒருவராலும் அறிய முடியாத உம்மைப் பொறுத்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். செய்த தப்புகளை நினைக்கும்போது நடுக்குகிறது. பிரும்மா முதலானவர்கள் படும் பாட்டைப் பார்த்தால் நான் எவ்வளவு? [41–42]

பிதாऽஸி லோகஸ்ய சராசரஸ்ய த்வமஸ்ய பூஜ்யஶ்ச
குருர்கரீயாந் । ந த்வத்ஸமோऽஸ்த்யப்யதிக: குதோऽ
ந்யோ லோகத்ரயேऽப்யப்ரதிமப்ரபாவ ॥ ॥ ௪௩ ॥

அப்ரதிமப்ரபாவ ! கஸ்ய—அஸ்ய சராசரஸ்ய லோகஸ்ய பிதாஸி । அஸ்ய லோகஸ்ய குருஶ்சாஸி । அத ஏவ சராசரஸ்ய லோகஸ்ய கரீயாந்-பூஜ்யதம: । ந த்வத்ஸமோऽஸ்த்யப்யதிக: குதோऽந்ய: லோகத்ரயேऽபி-காருண்யாதிநா கேநாபி குணேந ந த்வத்ஸமோऽஸ்தி, குதோऽப்யதிக: ॥ ॥ ௪௩ ॥

தேவரீர் மாதிரி பெருமையுள்ளவர்கள் உலகத்தில் ஒருவருமில்லை. அசைகிறது—அசையாதது—என்று இருவகையுள்ள எல்லா உலகங்களுக்கும் நீர்தான் தகப்பனார். இந்த உலகத்துக்கு நீர் தான் ஆசாரியன் ஆகையால் நீர்தான் எல்லாவிதத்தாலும் இந்த உலகங்களுக்கு மிகுந்த மரியாதை செய்யத் தகுந்த பெரியவர் இந்த உலகம் உம்மைத்தான் மரியாதை செய்யவேண்டியது உமக்கு அப்புறம் தான் மற்றவர்கள். தயைமுதலான ஒருகுணத்

தினாலாவது உம்மைப்போல் உலகத்தில் ஒருவருமில்லை. எல்லா குணங்களாலும் உம்மைப்போல் யார் இருக்கப்போகிறார்கள். அப்படியிருக்க, உமக்குமேற்பட்டவர்கள் எங்கு இருக்கப்போகிறார்கள். [43]

𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌣𑌮𑍍𑌯 𑌪𑍍𑌰𑌣𑌿𑌧𑌾𑌯 𑌕𑌾𑌯𑌂 𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌯𑍇 𑌤𑍍𑌵𑌾𑌮𑌹
𑌮𑍀𑌶𑌮𑍀𑌡𑍍𑌯𑌮𑍍 । 𑌪𑌿𑌤𑍇𑌵 𑌪𑍁𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌸𑌖𑍇𑌵 𑌸𑌖𑍍𑌯𑍁𑌃
𑌪𑍍𑌰𑌿𑌯𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌯𑌾𑌰𑍍𑌹𑌸𑌿 𑌦𑍇𑌵 𑌸𑍋𑌢𑍁𑌮𑍍 ॥ ||௪௪||

𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌪𑌿𑌤𑌾, 𑌪𑍂𑌜𑍍𑌯𑌤𑌮𑍋 𑌗𑍁𑌰𑍁𑌤𑌮𑌶𑍍𑌚, 𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯𑌾𑌦𑌿𑌗𑍁𑌣𑍈𑌶𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑌾𑌧𑌿𑌕𑍋𑌽𑌸𑌿 । 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍀𑌶𑌂 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯𑍇𑌡𑍍𑌯𑌂 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌪𑍍𑌰𑌣𑌮𑍍𑌯 𑌪𑍍𑌰𑌣𑌿𑌧𑌾𑌯 𑌚 𑌕𑌾𑌯𑌂 𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌯𑍇 । 𑌯𑌥𑌾 𑌕𑍃𑌤𑌾𑌪𑌰𑌾𑌧𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌪𑍁𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌯𑌥𑌾 𑌵𑌾 𑌸𑌖𑍍𑌯𑍁𑌃 𑌪𑍍𑌰𑌣𑌾𑌮𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌿𑌤𑌃 𑌪𑌿𑌤𑌾 𑌸𑌖𑌾 𑌵𑌾 𑌪𑍍𑌰𑌸𑍀𑌦𑌤𑌿, 𑌤𑌥𑌾 𑌤𑍍𑌵𑌂 𑌪𑌰𑌮𑌕𑌾𑌰𑍁𑌣𑌿𑌕𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌯 𑌮𑍇 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌸𑍋𑌢𑍁𑌮𑌰𑍍𑌹𑌸𑌿 ॥ ||௪௪||

நீர் எல்லா உலகங்களுக்கும் தகப்பனார். மரியாதை பண்ண வேண்டியவர்களுக்குள் மிகவும் உயர்ந்தவர். ஆசாரியன். தயை முதலான குணங்களால் எல்லாரைக் காட்டிலும் மிகவும் உயர்ந்தவர். ஆகையால் எல்லா உலகங்களுக்கும் ராஜாவாயும், எல்லாராலும் எல்லா விதத்தாலும் ஸ்தோத்திரம் பண்ணக்கூடியவராயுமிருக்கிற உம்மை மனதாரச்சரணாகதி பண்ணி, உம்மைத் தவிர வேறு கதியில்லையென்பதைக் காட்டுவதற்காக கீழே படுத்து, உம்மை ஸந்தோஷப்படுத்துகிறேன். உலகத்தில் தகப்பனிடத்தில் பிள்ளை குற்றம் பண்ணினாலும், தோழனிடத்தில் ஒரு தோழன் குற்றம் பண்ணினாலும், அவர்கள் பிறகு மனதார வருத்தப்பட்டு வணங்கி, உண்மையாக மன்னிக்கவேணுமென்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டால், எப்படித் தகப்பனும், தோழனும் அவர்கள் விஷயத்தில் ஸந்தோஷப்பட்டு தயவுபண்ணுவார்களோ; அப்படியே அளவில்லாத தயையுள்ளவரும், எனக்கு மிகவும் வேண்டியவருமான நீர் உமக்குமிகவும் வேண்டியவனும், கெஞ்சுகிறவனுமான என்னுடைய எல்லாக்குற்றங்களையும்பொறுத்துக்கொள்ளவேணும். [44]

𑌅𑌦𑍃𑌷𑍍𑌟𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌹𑍃𑌷𑌿𑌤𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌭𑌯𑍇𑌨 𑌚
𑌪𑍍𑌰𑌵𑍍𑌯𑌥𑌿𑌤𑌂 𑌮𑌨𑍋 𑌮𑍇 । 𑌤𑌦𑍇𑌵 𑌮𑍇 𑌦𑌰𑍍𑌶𑌯 𑌦𑍇𑌵
𑌰𑍂𑌪𑌂 𑌪𑍍𑌰𑌸𑍀𑌦 𑌦𑍇𑌵𑍇𑌶 𑌜𑌗𑌨𑍍𑌨𑌿𑌵𑌾𑌸 ॥ ॥௪௫॥

𑌅𑌦𑍃𑌷𑍍𑌟𑌪𑍂𑌰𑍍𑌵𑌮𑍍-𑌅𑌦𑍃𑌷𑍍𑌟𑌚𑌰𑌾𑌶𑍍𑌚𑌰𑍍𑌯𑌂 𑌤𑌵 𑌰𑍂𑌪𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾, 𑌹𑍃𑌷𑌿𑌤𑍋𑌽𑌸𑍍𑌮𑌿-𑌹𑍃𑌷𑍍𑌟𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 । 𑌭𑌯𑍇𑌨 𑌪𑍍𑌰𑌵𑍍𑌯𑌥𑌿𑌤𑌂 𑌚 𑌮𑍇 𑌮𑌨𑌃 । 𑌅𑌤𑌸𑍍𑌤𑌦𑍇𑌵 𑌤𑌵 𑌸𑍁𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑌂 𑌰𑍂𑌪𑌂 𑌮𑍇 𑌦𑌰𑍍𑌶𑌯 । 𑌪𑍍𑌰𑌸𑍀𑌦 𑌦𑍇𑌵𑍇𑌶 𑌜𑌗𑌨𑍍𑌨𑌿𑌵𑌾𑌸- 𑌮𑌯𑌿 𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌂 𑌕𑍁𑌰𑍁 । 𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌦𑍀𑌨𑌾𑌮𑍀𑌶, 𑌨𑌿𑌖𑌿𑌲𑌜𑌗𑌦𑌾𑌶𑍍𑌰𑌯𑌭𑍂𑌤 ॥ ॥௪௫॥

இதுவரையில் ஒருவராலும் பார்க்கப்படாததும், அளவில்லாத ஆச்சரியப் படக்கூடியதும், பிரும்மா முதலானவர்களையும் நடுங்கப்பண்ணுவதுமான உம்முடைய திருமேனியை ஸேவித்து, ஒரு பக்கத்தில் அளவில்லாத ஸந்தோஷமிருக்கிறது. ஒருபக்கத்தில் அளவில்லாத பயத்தினால் மனது நடுங்கிறது. ஆகையால் எல்லாருக்கும் அளவில்லாத ஸந்தோஷத்தைக் கொடுக்கக்கூடிய முன்னிருந்த திருமேனியைக் காண்பிக்க வேணும். பிரும்மா முதலானவர்களைக்கூட அடக்கி ஆளுபவனே! எல்லா உலகங்களையும் தாங்குகிறவனே! என்விஷயத்தில், தயைபண்ணவேணும்.[45]

𑌕𑌿𑌰𑍀𑌟𑌿𑌨𑌂 𑌗𑌦𑌿𑌨𑌂 𑌚𑌕𑍍𑌰𑌹𑌸𑍍𑌤𑌮𑌿𑌚𑍍𑌛𑌾𑌮𑌿 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌮𑌹𑌂
𑌤𑌥𑍈𑌵 । 𑌤𑍇𑌨𑍈𑌵 𑌰𑍂𑌪𑍇𑌣 𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑍁𑌜𑍇𑌨
𑌸𑌹𑌸𑍍𑌰𑌬𑌾𑌹𑍋 𑌭𑌵 𑌵𑌿𑌶𑍍𑌵𑌮𑍂𑌰𑍍𑌤𑍇 ॥ ॥௪௬॥

𑌤𑌥𑍈𑌵 𑌪𑍂𑌰𑍍𑌵𑌵𑌤𑍍𑌕𑌿𑌰𑍀𑌟𑌿𑌨𑌂 𑌗𑌦𑌿𑌨𑌂 𑌚𑌕𑍍𑌰𑌹𑌸𑍍𑌤𑌂 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌮𑌿𑌚𑍍𑌛𑌾𑌮𑌿 । 𑌅𑌤𑌸𑍍𑌤𑍇𑌨𑍈𑌵-𑌪𑍂𑌰𑍍𑌵𑌸𑌿𑌦𑍍𑌧𑍇𑌨 𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑍁𑌜𑍇𑌨 𑌰𑍂𑌪𑍇𑌣 𑌯𑍁𑌕𑍍𑌤𑍋 𑌭𑌵 । 𑌸𑌹𑌸𑍍𑌰𑌬𑌾𑌹𑍋 𑌵𑌿𑌶𑍍𑌵𑌮𑍂𑌰𑍍𑌤𑍇-𑌇𑌦𑌾𑌨𑍀𑌂 𑌸𑌹𑌸𑍍𑌰𑌬𑌾𑌹𑍁𑌤𑍍𑌵𑍇𑌨 𑌵𑌿𑌶𑍍𑌵𑌶𑌰𑍀𑌰𑍇𑌣 𑌦𑍃𑌶𑍍𑌯𑌮𑌾𑌨𑌰𑍂𑌪𑌸𑍍𑌤𑍍𑌵𑌂 𑌤𑍇𑌨𑍈𑌵 𑌰𑍂𑌪𑍇𑌣 𑌯𑍁𑌕𑍍𑌤𑍋 𑌭𑌵𑍇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । ॥௪௬॥

இப்போது கணக்கில்லாத கைமுதலான அவயவங்களோடு கூடினவராயும், எல்லா உலகங்களையும் உடம்பாக வைத்துக்கொ

ண்டிருக்கிறவராயும் உம்மைப்பார்க்கிறேன். தேவரீர் இந்த உரு வத்தைமாற்றி, முன்போல் கிரீடம், கதை, சக்கரம், நாலுகை கள்—இவைகளோடு ஸேவைஸாதிக்கவேணும். [46]

ஶ்ரீபகவாநுவாச—

மயா ப்ரஸந்நேந தவார்ஜுநேதம் ரூபம் பரம் தர்ஶிதமாத்மயோகாத் | தேஜோமயம் விஶ்வமநந்தமாத்யம் யந்மே த்வதந்யேந ந த்ருஷ்டபூர்வம் || ||47||

யந்மே தேஜோமயம்—தேஜஸாம் ராஶிம், விஶ்வம்—ஸர்வாத்மபூதம், அநந்தம்—அந்தரஹிதம், ஆத்யம்—ஆதிமத்யாந்தரஹிதம் | ஆத்யம் ஜகத்ஸ்ருஷ்ட்யாதிஹேதுபூதம், த்வதந்யேந கேநாபி நத்ருஷ்டபூர்வம் ரூபம் ததிதம் ப்ரஸந்நேந மயா மத்பக்தாய தே தர்ஶிதம் | ஆத்மயோகாத்—ஆத்மநஸ்ஸத்யஸங்கல்பத்வயோகாத் || ||47||

பகவான் சொல்லுகிறார்—

ஆயிரம் ஸூரியன்கள் உதித்ததுபோல்காந்தியுள்ளதும், எல்லா உலகங்களையும் தாக்குவதும், முதல் நடு, முடிவு (அடிநடு நுனி) என்கிற மூன்றுமில்லாததும், என்னைத்தவிர மற்றஎல்லா உலகங்களுக்கும் முன்னே இருப்பதும், உன்னைத்தவிர வேறொருவராலும் இதுவரையில் பார்க்கப்படாததுமான இந்த என்னுடைய உருவத்தை, உன்னுடைய பக்தியினால் நான்மிகவும்ஸந்தோஷத்தை அடைந்து, 1 நான் நினைத்தபடி நடத்துகிறவனாகையாலே, உனக்குக் காட்டினேன். [47]

[illegible]

---

1. இந்த உடம்பை உன்னுடைய இந்தக்கண்ணால் பார்க்கமுடியாது. பார்க்கக்கூடிய கண்ணை என்னைத்தவிர வேறொருவரால் கொடுக்கமுடியாது. அதையும் இந்த உடம்பில் வைக்கமுடியாது. நான் நினைத்தபடி செய்கிறவனாகையால், இதைச்செய்தேன் என்றுகருத்து.

ந வேதயஜ்ஞாத்யயனைர்ந தானைர்ந ச க்ரியாபிர்ந
தபோபிருக்ரை: | ஏவம்ரூப: ஶக்ய அஹம் ந்ரு
லோகே த்ரஷ்டும் த்வதன்யேந குருப்ரவீர || ||௪௮||

ஏவம்ரூப:- யதாவஸ்திதோऽஹம் மயி பக்திமத
ஸ்த்வதோऽந்யேந ஏகாந்திகாத்யந்திகபக்திரஹிதேந கேநாபி
வர்ஷஶதைர்வேதயஜ்ஞாதிபி: கேவலைர்த்ரஷ்டும் ந ஶக்ய:||

அவ—என்னைத்தவிர வேறு தேவதையையும், வேறுபிரயோஜனத்தையும் நினைக்காதவர்களால்தான் என்னை இதுமாதிரி உள்ளபடி பார்க்கமுடியும். அப்படி இல்லாதவர்கள் எவ்விதக்காரியங்களைச்செய்தாலும், பார்க்கமுடியாதென்று சொல்லுகிறார்—

என்னுடைய எல்லாவங்கதிகளையும் உள்ளபடி காட்டக்கூடிய இந்த உருவத்தை உனக்கு என்னிடம் பக்தி இருப்பதுபோல் பக்தியில்லாத இனனொருவனுலே எல்லா வேதங்களைச் சொல்லுவது, யாகங்களைப்பண்ணுவது, தானங்களைச் செய்வது, கடுமையான தபஸ்ஸைசெய்வது, இன்னம் மற்ற நல்லவேலைகளைச் செய்வது—இவைமுதலானவைகளால் மாத்திரம் பார்க்கமுடியாது. அதாவது—முன் சொன்னபக்தியுடன் சேராத இவைகளால் மாத்திரம் பார்க்கமுடியாது. [48]

மா தே வ்யதா மா ச விமூடபாவோ த்ருஷ்ட்வா ரூபம்
கோரமீத்ருங்மமேதம் | வ்யபேதபீ: ப்ரீதமநா: புந
ஸ்த்வம் ததேவ மே ரூபமிதம் ப்ரபஶ்ய || ||௪௯||

ஸர்வஸ்ய பயாவஹமிதம் ரூபம் த்ருஷ்ட்வா தே யா வ்யதா, யஶ்ச
விமூடபாவோ வர்த்ததே, ததுபயம் மா பூத். அப்யஸ்த
பூர்வமேவ ஸௌம்யம் ரூபம் தர்ஶயாமி | ததேவேதம்
மம ரூபம் ப்ரபஶ்ய || ||௪௯||

எல்லோருக்கும் பயத்தை உண்டுபண்ணுகிற இந்த உருவத்தைப்பார்ப்பதினுல் உண்டான உன் வருததமும், அதினுலுண்டான மயக்கமும் உனக்குவேண்டாம். இதைமறைத்து, வெகு நாளாய் பழகின—ஸந்தோஷத்தை உண்டுபண்ணக் கூடிய-உருவத்தையே காண்பிக்கிறேன். அதைப்பார். [49]

ஸஞ்ஜய உவாச —

இத்யர்ஜுநம் வாஸுதேவஸ்ததோக்த்வா ஸ்வகம் ரூபம் தர்ஶயாமாஸ பூய: । ஆஶ்வாஸயாமாஸ ச பீதமேநம் பூத்வா புந: ஸௌம்யவபுர்மஹாத்மா ॥ ॥௫௦॥

ஏவம் பார்த்தம் ஸம்ஸ்து வஸுதேவஸூநுருக்த்வா, பூய: ஸ்வகீயமேவ சதுர்புஜம் ரூபம் தர்ஶயாமாஸ । அபரிமிதரூபதர்ஶநேந பீதமேநம் புநரபி பரிமிதஸௌம்யவபுர்பூத்வா ஆஶ்வாஸயாமாஸ । மஹாத்மா - ஸத்யஸங்கல்ப: । அஸ்ய ஸர்வேஶ்வரஸ்ய பரமபுருஷஸ்ய பரஸ்ய ப்ரஹ்மணோ ஜகதுபக்ருதிமர்த்யஸ்ய வஸுதேவஸூநோஸ்ஸ்வகீயமேவ ரூபம் சதுர்புஜம் । ஸாதிதவஸுதேவக்ருஹாவதீர்ணேந ஆகம்ஸவதாஜ்ஜநபயாத் உபஸம்ஹ்ருதம், வஸ்த்ராநிக்ஷிப்தம் ச । "ஜாதோऽஸி தேவ தேவேஶ ஶங்கசக்ரகதாதர । திவ்யம் ரூபமிதம் தேவ ப்ரஸாதேநோபஸம்ஹர, உபஸம்ஹர விஶ்வாத்மந் ரூபமேதச்சதுர்புஜம்" இதி ஹி ப்ரார்த்திதம் । ஶிஶுபாலஸ்யாபி த்வேஷாநுபந்தஸ்மரணவிஷயஶ்சதுர்புஜமேவ வஸுதேவஸூநோ ரூபம் "உதாரபீவரசதுர்பாஹும் ஶங்கசக்ரகதாதரம்" இதி । அத: பார்தோऽபி "தேநைவ ரூபேண சதுர்புஜேந" இத்யாஹ ॥ ॥௫௦॥

ஸஞ்ஜயன் சொல்லுகிறார்—

நினைத்தபடி நடத்துகிறவனை பகவான் அர்ஜுநனைப்பார்த்து இந்தமாதிரிசொல்லி, முன் இருந்த நாலுகைகளோடு கூடிய உருவத்தையே காண்பித்தான். அப்பா! புதிதாய் காண்பித்த என் திருமேனியைப் பார்த்து பயந்தாயே என்றுசொல்லி ஸமாதானமும் பண்ணினான். கம்ஸனைக் கொல்லுகிறவரையில், வஸுதேவர் கேட்டுக்கொண்டபடியால், இரண்டுகைகளைமறைத்து, இரண்டு கைகளோடு எல்லாருக்கும் கிருஷ்ணன் ஸேவை ஸாதித்தான். பிறகு கைகளை மறைக்கவில்லை. சிசுபாலனும் நான்கு கைகளுள்

ள திருமேனியைத்தான் நினைத்துக் கொண்டிருந்தான். அதினல் நான்கு கைகளுள்ள உருவம்தான் பகவானுக்கு எப்பவும் இருப்பதாக சுலோகத்தில் சொல்லப்பட்டது.

𑌅𑌰𑍍𑌜𑍁𑌨 𑌉𑌵𑌾𑌚—

𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑍇𑌦𑌂 𑌮𑌾𑌨𑍁𑌷𑌂 𑌰𑍂𑌪𑌂 𑌤𑌵 𑌸𑍌𑌮𑍍𑌯𑌂 𑌜𑌨𑌾𑌰𑍍𑌦𑌨 ।
𑌇𑌦𑌾𑌨𑍀𑌮𑌸𑍍𑌮𑌿 𑌸𑌂𑌵𑍃𑌤𑍍𑌤𑌃 𑌸𑌚𑍇𑌤𑌾𑌃 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌂 𑌗𑌤𑌃 ॥ ॥௫௧॥

𑌅𑌨𑌵𑌧𑌿𑌕𑌾𑌤𑌿𑌶𑌯𑌸𑍌𑌨𑍍𑌦𑌰𑍍𑌯𑌸𑍌𑌕𑍁𑌮𑌾𑌰𑍍𑌯𑌲𑌾𑌵𑌣𑍍𑌯𑌾𑌦𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌤𑌵𑍈𑌵𑌾𑌸𑌾𑌧𑌾𑌰𑌣𑌂 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌤𑍍𑌵𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌨𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑌤𑌿𑌸𑍌𑌮𑍍𑌯𑌮𑌿𑌦𑌂 𑌤𑌵 𑌰𑍂𑌪𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌇𑌦𑌾𑌨𑍀𑌂 𑌸𑌚𑍇𑌤𑌾𑌸𑍍𑌸𑌂𑌵𑍃𑌤𑍍𑌤𑍋𑌽𑌸𑍍𑌮𑌿, 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌂 𑌗𑌤𑌶𑍍𑌚 ॥ ॥௫௧॥

அர்ஜுனன் சொல்லுகிறான்—

அளவில்லாத அழகு, மெதுவாயிருப்பது, இன்பமான பளபளப்பு முதலான குணங்களோடு கூடியதும், உம்மைத்தவிர வேறொருவனுக்கு மில்லாததும், மனிதஉருவம் போன்றதும், எல்லாருக்கும் ஸந்தோஷத்தைக் கொடுக்கக் கூடியதுமான இந்தத் திருமேனியை ஸேவித்த பிறகுதான் என் மனது என்னிடம் வந்தது. இப்போதுதான் பாட்டிலே போட்டது. இப்போதுதான் என் நிலைமை எனக்கு வந்தது. [51]

𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚—

𑌸𑍁𑌦𑍁𑌰𑍍𑌦𑌰𑍍𑌶𑌮𑌿𑌦𑌂 𑌰𑍂𑌪𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑌵𑌾𑌨𑌸𑌿 𑌯𑌨𑍍𑌮𑌮 ।
𑌦𑍇𑌵𑌾 𑌅𑌪𑍍𑌯𑌸𑍍𑌯 𑌰𑍂𑌪𑌸𑍍𑌯 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌦𑌰𑍍𑌶𑌨𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑌿𑌣𑌃 ॥

𑌮𑌮𑍇𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌶𑌾𑌸𑌨𑍇𑌽𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 𑌸𑌰𑍍𑌵𑌾𑌶𑍍𑌰𑌯𑌂 𑌸𑌰𑍍𑌵𑌕𑌾𑌰𑌣𑌭𑍂𑌤𑌂 𑌰𑍂𑌪𑌂 𑌯𑌦𑍍𑌦𑍃𑌷𑍍𑌟𑌵𑌾𑌨𑌸𑌿, 𑌤𑌤𑍍𑌸𑍁𑌦𑍁𑌰𑍍𑌦𑌰𑍍𑌶𑌂 𑌨 𑌕𑍇𑌨𑌾𑌪𑌿 𑌦𑍃𑌷𑍍𑌟𑍁𑌂 𑌶𑌕𑍍𑌯𑌮𑍍 । 𑌅𑌸𑍍𑌯 𑌰𑍂𑌪𑌸𑍍𑌯 𑌦𑍇𑌵𑌾 𑌅𑌪𑌿 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌦𑌰𑍍𑌶𑌨𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑌿𑌣𑌃, 𑌨 𑌤𑍁 𑌦𑍃𑌷𑍍𑌟𑌵𑌨𑍍𑌤𑌃 ॥

பகவான் சொல்லுகிறார்—

சற்று முன்பு பார்த்தாயே, அந்தத் திருமேனியானது ஒருவராலும் பார்க்க முடியாது. தேவதைகளெல்லாரும்கூட எப்பொ

றூதும் இதைப் பார்க்கவேணுமென்று ஆசைப்பட்டார்களேயொழிய, இதுவரையில் ஒருவரும் பார்த்ததில்லை. [52]

अव— [illegible]

नाहं वेदैर्न तपसा न दानेन न चेज्यया ।
शक्य एवंविधो द्रष्टुं दृष्टवानसि मां यथा ॥
भक्त्या त्वनन्यया शक्य अहमेवंविधोऽर्जुन ।
ज्ञातुं द्रष्टुं च तत्त्वेन प्रवेष्टुं च परंतप ॥

वेदैरध्यापनप्रवचनाध्ययनश्रवणजपविषयैः यज्ञदानहोमतपोभिश्च मद्भक्तिविरहितैः केवलैर्यथावदवस्थितोऽहं द्रष्टुं न शक्यः । अनन्यया तु भक्त्या तत्त्वतश्शास्त्रैर्ज्ञातुं, तत्त्वतस्साक्षात्कर्तुं तत्त्वतः प्रवेष्टुं च शक्यः । तथाह श्रुतिः "नायमात्मा प्रवचनेन लभ्यो न मेधया न बहुना श्रुतेन । यमेवैष वृणुते तेन लभ्यस्तस्यैष आत्मा विवृणुते तनूं स्वाम्" इति ॥ ॥५४॥

அவ—ஏனென்றால்—

என்னிடத்தில் முன்சொன்ன பக்தியில்லாமல், எல்லா வேதங்களையும் தான் கற்று, அயலாருக்குச் சொல்லிக்கொடுப்பதினாலும், அவைகளைக் கேட்பதினாலும், அவைகளை ஜபம் செய்வதாலும், அவைகளின் அர்த்தங்களைச் சொல்லுவதாலும், யாகம், தானம், ஹோமம், தபஸ்ஸு இவைகளைப் பண்ணுவதாலும், உள்ளபடி என்னைப் பார்க்க முடியாது. முன்சொன்னபடி பக்தி இருந்தால், (அதாவது உலகத்தில் எல்லாரைக் காட்டிலும் நான் உயர்ந்தவன் என்று எண்ணி, என்னைத்தவிர வேறு ஒருவரைப் பூஜியாமலும், என்னைத்தவிர வேறு பிரயோஜனங்களை விரும்பாமலும், அவைகளில் அலுப்புமிருந்து என்னிடத்தில் பக்தி பண்ணுதல்) சாஸ்திரங்களுக்கு அர்த்தம் தப்பாக தோன்றாமல் ஸரியாகத் தோன்றி, அந்த சாஸ்திரங்களைக் கொண்டு என்னை உள்ளபடி அறியலாம். பிறகு அப்படியே தியானம் செய்து, அந்தத் தியானம் முற்றும்

போது என்னை உள்ளபடி பார்க்கலாம். பிறகு அளவில்லாமல் என்னிடத்தில் ஆசையுண்டாகி, என்னிடம் வந்துநிலையாக இருக்கலாம். 1 இந்தஸங்கதியை உபநிஷத்து சொல்லுகிறது [53–54]

மத்கர்மக்ருந் மத்பரமோ மத்பக்த: ஸங்கவர்ஜித: ।
நிர்வைர: ஸர்வபூதேஷு ய: ஸ மாமேதி பாண்டவ ॥௫௫॥

ஓம் தத்ஸதிதி ஸ்ரீமத்பகவத்கீதாஸூபநிஷத்ஸு ப்ரஹ்மவித்யாயாம் யோகஶாஸ்த்ரே ஸ்ரீக்ருஷ்ணார்ஜுநஸம்வாதே விஶ்வரூபதர்ஶநயோகோ நாம ஏகாதஶோऽத்யாய: ॥

வேதாத்யயநாதீநி ஸர்வாணி கர்மாணி மதாராதநரூபாணீதி ய: கரோதி, ஸ மத்கர்மக்ருத் । மத்பர: ஸர்வேஷாம் ஆரம்பாணாம் ஸித்தௌ ச பரம உத்தேஶ்யோ யஸ்ய, ஸ மத்பரம: । மத்பக்த: அத்யர்த்தமத்ப்ரியத்வேந மத்கீர்த்தநஸ்துதித்யாநார்ச்சநப்ரணாமாதிபிர்விநா ஆத்மதாரணமலபமாநோ மதேகப்ரயோஜநதயா ய: ஸததம் தாநி கரோதி, ஸ மத்பக்த: । ஸங்கவர்ஜித: மதேகப்ரியத்வேந இதரஸங்கமஸஹமாந: । நிர்வைர: ஸர்வ

---

1. பக்தியில் மூன்று படிகள் இருக்கின்றன.—(1) பக்தி, (2) பரபக்தி, (3) பரமபக்தி—என்று (1) பக்தியாவது—பகவானிடத்திலிருக்கும் பிரீதி. அதனால் சாஸ்திரத்தைக்கொண்டு பகவானை உள்ளபடி அறிய வேணுமென்று ஆசை உண்டாகின்றது. (2) ஆசை உண்டாய் பகவானை உள்ளபடி அறிந்து, மிகுந்த பிரீதியுடன் அவனை இடைவிடாமல் நினைப்பது பரபக்தி. இதனால் பகவானை உள்ளபடி பார்க்கவேண்டுமென்று ஆசை உண்டாகிறது. (3) மிகுந்த ஆசையுண்டாய் பகவானை உம்மை எனக்குக்காட்டவேணுமென்று கேட்கிறான். அப்போது பகவான் தயவுபண்ணி தன்னுடைய ஸங்கதிகளில் துளிக்கூட விடாமல் கொஞ்ச காலம் தன்னை உள்ளபடி காட்டுகிறான். அதற்குப் பரஞானம் என்றுபெயர். அவனை அப்படி பார்த்தவுடன், இவனுக்கு இப்படிப்பார்த்துக்கொண்டு அவனிடத்திலேயே இருக்கவேணுமென்று அளவில்லாத தாங்கமுடியாத ஆசையுண்டாகிறது. அது பரமபக்தி. அதனால் அவன் என்னை இப்பொழுதே உம்மிடம் அழைத்துக் கொள்ள வேணுமென்று அளவில்லாமல் கிர்பந்தப்படுத்துகிறான். உடனே பகவான் அவனைத் தன்னிடம் அழைத்துக் கொள்ளுகிறான்.

ஸர்வபூதேஷு மத்ஸம்ஶ்லேஷவியோகைகஸுகது:கஸ்வபா
வத்வாத் ஆத்மது:கஸ்ய ஸ்வாபராதநிமித்தத்வாநுஸந்தாநாத் ஸர்வ
பூதாநாம் பரமபுருஷபரதந்த்ரத்வாநுஸந்தாநாச்ச
ஸர்வபூதேஷு வைரநிமித்தாபாவாத் தேஷு நிர்வைர:।
ய ஏவம்பூத: ஸ மாம் யதாவத் அவஸ்திதம் ப்ராப்நோதி,
நிரஸ்தாவித்யாத்யஶேஷதோஷகந்தோ மதேகாநுபவோ பவ
தீத்யர்த்த:। ||55||

இதி ஶ்ரீபகவத்ராமாநுஜவிரசிதே ஶ்ரீமத்கீதாபாஷ்யே
ஏகாதஶோऽத்யாய: ॥

அ.வ—பகவானை அடைவதற்கு உதவியான உயர்ந்த படியைச் சொல்லுகிறார்—

வேதத்தைச் சொல்லுவது முதலான சாஸ்திரத்தில் சொல்லிய எல்லா வேலைகளும் என்னுடைய ஸந்தோஷத்திற்காகத்தான் என்று நினைத்து, எவன் அவைகளைச் 1 செய்கிறானே; எல்லா வேலைகளுக்கும் நான்தான் 2 பிரயோஜநம் என்று எவன் நினைக்கிறானே; என்னிடத்தில் அளவில்லாத பிரீதியினால் 3 என் பெயர்களைச் சொல்லுவது, என்னை ஸ்தோத்திரம் பண்ணுவது, என்னை நினைப்பது, என்னைப் பூஜிப்பது, என்னை ஸேவிப்பது முதலான வேலைகளை அரை விநாடி செய்யாவிட்டால், தாங்காமல் தவித்து, 4 என்னையே பிரயோஜநமாக எண்ணி, இவைகளை எப்போதும்

---

1. இதைத்தான் "மத்கர்மக்ருத்" (என்னுடைய வேலைகளைச் செய்கிறவன்) என்று சுலோகத்தில் சொல்லியிருக்கிறது.

2. வேலைகளைச் செய்கிறவன் என்று சொன்னபோது, அவைகளின் பலன் நினைவுக்கு வந்தது. அதைச் சொல்லுகிறார்.

3. உலகத்தாருக்குச் சாப்பாடு முதலானவைகள் போல பக்தனுக்கு இவைகள்.

4. தாஹமெடுத்தவன் நல்ல அமிருதம் போன்ற ஜலத்தை ஒரே தாரையாய் குடிக்கும் போது, தொண்டையில் ஏதாவது மாட்டிக் கொண்டு, அதற்குத் தடங்கல் நேர்ந்தால், எப்படித்துடிப்பனே, அப்படி

செய்கிறானோ; பகவானைப் பரமபதத்தில் பூர்ணமாக அநுபவிப்ப தில் ஆசையாலே, இந்த உலகத்தில் பகவான் எதிரில் வந்தாலும், அலுப்புள்ளவனாயிருக்கிறானோ, 1 பல காரணங்களால் ஒருவரிடத் திலேயும் கொஞ்சங்கூட த்வேஷமில்லாமலிருக்கிறானோ; அப்படிப் பட்டவன் இது முதலென்று இல்லாத அறிவில்லாமையும், கர்மங் களும், வாஸனைகளும் எல்லாம் அடியோடு போய், உள்ளபடி என்னை அடைகிறான். அதாவது—என்னை உள்ளபடி எப்பவும் எல்லா ஸங்கதிகளுடன் துளிக்கூட விடாமல், மிகவும் இன்பமாக அநுபவிக்கிறான். இது உண்டானால், பிறகு ஒருநாளும் போவ தில்லை.

---

1. இவ்விதமான ப்ரியுள்ளவன் ஒருவரிடத்திலும் த்வேஷம் பண் ணாமலிருப்பது சாஸ்திரத்துக்குக் கட்டுப்பட்டு இருப்பதனால் மாத்திரம் அல்ல. அதற்குக் காரணமேயில்லை. அதாவது (1) எப்பொழுதும் பகவானையே நினைத்து ஸுகப் படுவதினால், இவனுக்கு ஸம்ஸாரஸங்கதி கள் ஒன்றினாலும் துளிக் கூட ஸுகமும் துக்கமும் கிடையாது. துக்க முண்டானாலன்றோ அதைச் செய்தவர்களிடத்தில் த்வேஷம் உண்டா கும். (2) தனக்கு பகவானை நினைத்து வரும் ஸுகத்தைக் கெடுப் பவர்களிடத்திலும் "இது தன் குற்றத்தினால் வருகிறது" என்று நினை த்தும், எல்லா உலகமும், எல்லா வேலையையும் பகவானால் ஏவப்பட்டுச்செ ய்கிறதென்று நினைத்தும் அவர்களிடத்தில்த்வேஷம்பண்ணுகிறதில்லை. உதாரணம்-ஒருவன் சாட்டையால் அடித்தால், அடிபட்டவன் பயித்தி யமில்லாமலிருந்தால், சாட்டையின் பேரில் கோபித்துக் கொள்ளுவனோ; அதுபோல. (3) உலகமெல்லாம் பகவானுடைய உடம்பு என்கிற நினைவி னால், ஒருவரை த்வேஷித்தால்பகவானை த்வேஷித்ததாக அன்றோ ஆகி றது என்று நினைத்து, ஒருவரிடத்திலும் த்வேஷிப்பதில்லை.

ஸ்ரீமதே பகவதே பாஷ்யகாராய மஹாதேசிகாய நம:

பதினோராவது அத்தியாயம் முற்றிற்று.

𑌅𑌥 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

𑌅𑌥— 𑌭𑌕𑍍𑌤𑌿𑌯𑍋𑌗𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌭𑍂𑌤𑌸𑍍𑌯 𑌪𑌰𑌸𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌭𑌗𑌵𑌤𑍋 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌸𑍍𑌯 𑌨𑌿𑌰𑌙𑍍𑌕𑍁𑌶𑍈𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌂 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍𑌕𑌰𑍍𑌤𑍁𑌕𑌾𑌮𑌾𑌯𑌾𑌰𑍍𑌜𑍁𑌨𑌾𑌯 𑌅𑌨𑌵𑌧𑌿𑌕𑌾𑌤𑌿𑌶𑌯𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯𑍌𑌦𑌾𑌰𑍍𑌯𑌸𑍌𑌶𑍀𑌲𑍍𑌯𑌾𑌦𑌿𑌗𑍁𑌣𑌸𑌾𑌗𑌰𑍇𑌣 𑌸𑌤𑍍𑌯𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑍇𑌨 𑌭𑌗𑌵𑌤𑌾 𑌐𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌂 𑌯𑌥𑌾𑌵𑌦𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 𑌦𑌰𑍍𑌶𑌿𑌤𑌮𑍍 । 𑌉𑌕𑍍𑌤𑌂 𑌚 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌤𑍋 𑌭𑌗𑌵𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌦𑌰𑍍𑌶𑌨𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍀𑌨𑌾𑌮𑍈𑌕𑌾𑌨𑍍𑌤𑌿𑌕𑌾𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌿𑌕𑌭𑌗𑌵𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑍇𑌕𑌲𑌭𑍍𑌯𑌤𑍍𑌵𑌮𑍍 । 𑌅𑌨𑌨𑍍𑌤𑌰𑌂 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌸𑌾𑌧𑌨𑌭𑍂𑌤𑌾𑌯𑌾 𑌆𑌤𑍍𑌮𑍋𑌪𑌾𑌸𑌨𑌾𑌤𑍍 𑌸𑍁𑌖𑌾𑌰𑌮𑍍𑌭𑌸𑍍𑌯 𑌭𑌗𑌵𑌦𑍁𑌪𑌾𑌸𑌨𑌸𑍍𑌯 𑌸𑍍𑌵𑌸𑌾𑌧𑍍𑌯𑌨𑌿𑌷𑍍𑌪𑌾𑌦𑌨𑍇 𑌶𑍈𑌘𑍍𑌰𑍍𑌯𑌾𑌤𑍍 𑌸𑍁𑌸𑍁𑌖𑍋𑌪𑌾𑌦𑌾𑌨𑌤𑍍𑌵𑌾𑌚𑍍𑌚 𑌶𑍍𑌰𑍈𑌷𑍍𑌠𑍍𑌯𑌮𑍍, 𑌭𑌗𑌵𑌦𑍁𑌪𑌾𑌸𑌨𑍋𑌪𑌾𑌯𑌶𑍍𑌚, 𑌤𑌦𑌶𑌕𑍍𑌤𑌸𑍍𑌯𑌾𑌕𑍍𑌷𑌰𑌨𑌿𑌷𑍍𑌠𑌤𑌾, 𑌤𑌦𑌪𑍇𑌕𑍍𑌷𑌿𑌤𑌾𑌶𑍍𑌚𑍋𑌚𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 । 𑌭𑌗𑌵𑌦𑍁𑌪𑌾𑌸𑌨𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌪𑍍𑌰𑌾𑌪𑌕𑌭𑌾𑌵𑌸𑍍𑌯 𑌶𑍍𑌰𑍈𑌷𑍍𑌠𑍍𑌯𑌾𑌤𑍍 𑌶𑍍𑌰𑍈𑌷𑍍𑌠𑍍𑌯𑌂 𑌚 “𑌯𑍋𑌗𑌿𑌨𑌾𑌮𑌪𑌿 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌮𑌦𑍍𑌗𑌤𑍇𑌨𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 । 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾𑌵𑌾𑌨𑍍 𑌭𑌜𑌤𑍇 𑌯𑍋 𑌮𑌾𑌂 𑌸 𑌮𑍇 𑌯𑍁𑌕𑍍𑌤𑌤𑌮𑍋 𑌮𑌤𑌃” 𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑍍 ॥

𑌅𑌰𑍍𑌜𑍁𑌨 𑌉𑌵𑌾𑌚—

𑌏𑌵𑌂 𑌸𑌤𑌤𑌯𑍁𑌕𑍍𑌤𑌾 𑌯𑍇 𑌭𑌕𑍍𑌤𑌾𑌸𑍍𑌤𑍍𑌵𑌾𑌂 𑌪𑌰𑍍𑌯𑍁𑌪𑌾𑌸𑌤𑍇 ।
𑌯𑍇 𑌚𑌾𑌪𑍍𑌯𑌕𑍍𑌷𑌰𑌮𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌂 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌕𑍇 𑌯𑍋𑌗𑌵𑌿𑌤𑍍𑌤𑌮𑌾𑌃 ॥௧॥

𑌏𑌵𑌂 “𑌮𑌤𑍍𑌕𑌰𑍍𑌮𑌕𑍃𑌤𑍍” 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌨𑍋𑌕𑍍𑌤𑍇𑌨 𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑍇𑌣 𑌸𑌤𑌤𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌃— 𑌭𑌗𑌵𑌨𑍍𑌤𑌂 𑌤𑍍𑌵𑌾𑌮𑍇𑌵 𑌪𑌰𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌂 𑌮𑌨𑍍𑌵𑌾𑌨𑌾 𑌯𑍇 𑌭𑌕𑍍𑌤𑌾𑌸𑍍𑌤𑍍𑌵𑌾𑌂 𑌸𑌕𑌲𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑌨𑌵𑌧𑌿𑌕𑌾𑌤𑌿𑌶𑌯𑌸𑍌𑌨𑍍𑌦𑌰𑍍𑌯𑌸𑍌𑌶𑍀𑌲𑍍𑌯𑌸𑌾𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑍍𑌯𑌸𑌤𑍍𑌯𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑌤𑍍𑌵𑌾𑌦𑍍𑌯𑌨𑌨𑍍𑌤𑌗𑍁𑌣𑌸𑌾𑌗𑌰𑌂 𑌪𑌰𑌿𑌪𑍂𑌰𑍍𑌣𑌮𑍁𑌪𑌾𑌸𑌤𑍇 । 𑌯𑍇 𑌚𑌾𑌪𑍍𑌯𑌕𑍍𑌷𑌰𑌂 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌗𑌾𑌤𑍍𑌮𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌂 𑌤𑌦𑍇𑌵 𑌚𑌾𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌂 𑌚𑌕𑍍𑌷𑍁𑌰𑌾𑌦𑌿𑌕𑌰𑌣𑌾𑌨𑌭𑌿𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌮𑍁𑌪𑌾𑌸𑌤𑍇 । 𑌤𑍇𑌷𑌾𑌮𑍁𑌭𑌯𑍇𑌷𑌾𑌂 𑌕𑍇 𑌯𑍋𑌗𑌵𑌿𑌤𑍍𑌤𑌮𑌾𑌃— 𑌕𑍇 𑌸𑍍𑌵𑌸𑌾𑌧𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿 𑌶𑍀𑌘𑍍𑌰𑌗𑌾𑌮𑌿𑌨 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । “𑌭𑌵𑌾𑌮𑌿 𑌨𑌚𑌿𑌰𑌾𑌤𑍍” 𑌇𑌤𑍍𑌯𑍁𑌤𑍍𑌤𑌰𑌤𑍍𑌰 𑌯𑍋𑌗𑌵𑌿𑌤𑍍𑌤𑌮𑌤𑍍𑌵𑌂 𑌶𑍈𑌘𑍍𑌰𑍍𑌯𑌵𑌿𑌷𑌯𑌮𑌿𑌤𑌿 𑌹𑌿 𑌵𑍍𑌯𑌜𑍍𑌯𑌤𑍇 ॥ ॥௧॥

அவ—பக்தியோகம் பண்ணி அடைய வேண்டிய பரப் பிரும்மமாயும், பகவானுமான நாராயணனுடைய ஒரு நட்டவகனு மில்லாத ஐசுவரியத்தைக் கண்ணாலே பார்க்க வேணு மென்று ஆசைப்பட்ட அர்ஜுனனுக்கு அளவில்லாத-கண்ணை, வேண்டியதைக் கொடுப்பது, இப்படியானவர்களுடன் பழகுவது—இவை முத லான குணங்களுக்கு ஸமுத்திரமாயும், நினைத்தபடி நடத்துகிற வனுமான பகவான் தன்னுடைய ஐசுவரியத்தை உள்ளபடி காண் பித்தார். பகவானை உள்ளபடி அறிவதும், உள்ளபடி பார்ப் பதும், உள்ளபடி அடைவதும் (மோக்ஷமும்) [illegible] தேவைகளை யும், வேறு பிரயோஜனத்தையும் நினைக்காமல், அவனிடத்தில் ஒருக்காலும் முடிவில்லாத பக்தி பண்ணினாலொழிய முடியாதென் றும் சொன்னார். பிறகு ஜீவாத்மாவைப் பார்ப்பதற்காக ஜீவாத் மாவைத் தியானம் செய்வதைக்காட்டிலும், பகவானை அடைவதற் காக பகவானைத் தியானம் செய்வதுஉயர்ந்தது. (அதாவது— பகவானுடைய தியானம் அவனைச் சுருக்கக் கொடுக்கும்; அதைச் செய்வதில் வருத்தமில்லை; அது உயர்ந்த ஸாதனமாயிருக்கும்) என் றும்; ஜீவாத்மாவைத் தியானம் செய்கிறது வருத்தம்; அதனால் பலன் கிடைக்க வெகுநாளாகும் என்றும்; பகவானைத் தியானம் செய்வதற்கு இன்னது வழியென்றும்; அதைச் செய்ய முடியா மல் போனால், ஜீவாத்மாவைப் பார்ப்பதற்கு அதைத் தியானம் பண்ணவேணுமென்றும்; அதற்கு இன்னது வேண்டியதென் றும் சொல்லுகிறார். பகவானுடைய தியானத்திற்கு ஒருவித மான உயர்த்தி 6-வது அத்தியாயம் கடைசி சுலோகத்தில் சொல் லப் பட்டது. அதாவது—அடையவேண்டிய பலகுண ஜீவனைக் காட்டிலும் எல்லாவிதத்தாலும் பகவான் உயர்ந்தவன் என்று. இங்கே சொல்லப்படும் உயர்த்தி அதல்ல; அது வேறு.

அர்ஜுனன் சொல்லுகிறான்—

கீழ் அத்தியாயம் கடைசி சுலோகத்தில் சொல்லியபடி உம் மையே மிகவும் உயர்ந்த பிரயோஜனமாக எண்ணி, அளவில்லாத ஸொத்துக்களுடனும் அளவில்லாத உயர்த்தியையுடைய குணங் களுடனும் எவர்கள் பக்தியோடு உம்மை முறைப்படி தியானம் பண்ணுகிறார்களோ; கண் முதலான இந்திரியங்களினால் உள்ள

படி பார்க்க முடியாத ஜீவாத்ம ஸ்வரூபத்தை எவர்கள் தியானம் செய்கிறார்களோ; இந்த இருவகையாருக்குள் யார் உயர்ந்தவர்? அதாவது—எவர்கள் சீக்கிரம் பலனை அடைகிறார்கள். [1]

ஶ்ரீபகவாநுவாச—

மய்யாவேஶ்ய மநோ யே மாம் நித்யயுக்தா உபாஸதே |
ஶ்ரத்தயா பரயோபேதாஸ்தே மே யுக்ததமா மதா: ||௨||

அத்யர்த்தமத்ப்ரியத்வேந மநோ மய்யாவேஶ்ய ஶ்ரத்தயா பரயோபேதா: நித்யயுக்தா: நித்யயோகம் காங்க்ஷமாணா: யே மாமுபாஸதே—ப்ராப்யவிஷயம் மநோ மய்யாவேஶ்ய யே மாமுபாஸத இத்யர்த்த: | தே யுக்ததமா மே மதா: மாம் ஸுகேநாசிராத் ப்ராப்நுவந்தீத்யர்த்த: || ||௨||

பகவான் சொல்லுகிறார்—

என்னிடத்தில் அளவில்லாத பிரீதியினால், என்னையே அடையவேண்டிய பிரயோஜனமாக நினைத்து, மிகுந்த சிரத்தையோடு, எப்பொழுதும் என்னுடனேயே இருக்கவேண்டுமென்று ஆசைப்பட்டு, என்னைத் தியானம் செய்கிறவர்கள் பிரயாஸமில்லாமலும், சீக்கிரமாயும் என்னை அடைகிறார்கள் ஆகையால் என்னைப்பற்றின தியானமே உயர்ந்தது [2]

யே த்வக்ஷரமநிர்தேஶ்யமவ்யக்தம் பர்யுபாஸதே |
ஸர்வத்ரகமசிந்த்யம் ச கூடஸ்தமசலம் த்ருவம் || ௩ ||
ஸம்நியம்யேந்த்ரியக்ராமம் ஸர்வத்ர ஸமபுத்தய: |
தே ப்ராப்நுவந்தி மாமேவ ஸர்வபூதஹிதே ரதா: ||௪||
க்லேஶோऽதிகதரஸ்தேஷாமவ்யக்தாஸக்தசேதஸாம் |
அவ்யக்தா ஹி கதிர்து:கம் தேஹவத்பிரவாப்யதே ||௫||

யே த்வக்ஷரம் ப்ரத்யகாத்மஸ்வரூபம் அநிர்தேஶ்யம்—தேஹாந்யதயா தேவாதிஶப்தாநிர்தேஶ்யம் அத ஏவ சக்ஷுராதிகரணாநபிவ்யக்தம் ஸர்வத்ரகமசிந்த்யஞ்ச—ஸர்வத்ர தேவாதி தேஹேஷு வர்த்தமாநமபி தத்விஸஜாதீயதயா தேந தேந

[illegible] ||௩-௪-௫||

ஜீவஸ்வரூபம் 1 உடம்பைக்காட்டிலும் வேறானதால், அது உடம்பைச் சொல்லுகிற தேவன், மனிதன்முதலான சொற்களுக்குப் பொருளல்ல என்றும்; அந்தக்காரணத்தாலேயே கண் முதலான இந்திரியங்களால் அறியமுடியாதது என்றும்; தேவன் முதலான எல்லாஉடம்புகளிலும் இருந்தாலும், அவைகளைக்காட்

1. ஜீவன் எல்லா உடம்பைக்காட்டிலும் வேறாகையால், அது ஒரு உடம்புக்கு மாத்திரம் ஏற்பட்டதில்லை. ஆகையால் அதைப் பொதுவென்று சொல்லியிருக்கிறது.

டிலும் வேறுஜாதியென்றும்; ஆகையால் அந்தந்த உடம்பாகவே இருக்கலாமோவென்று நினைக்கத்தகாதது என்றும்; அதினாலேயே அது எடுத்துக்கொள்ளும் எல்லாஉடம்புகளுக்கும் பொது என்றும்; அழிவில்லாத வஸ்துக்கள்போல் அதின் ஸ்வரூபத்துக்கு மாறுதலில்லை என்றும்; அதினால்தான் அது அழிவில்லாதது என்றும்; கண்முதலான இந்திரியங்களை அவைகளின் வேலைகளில் விடாதபடி நன்றாக அடக்கி, எல்லாஉடம்புகளிலிருக்கும் எல்லா ஆத்மாக்களும் ஞானஸ்வரூபமாயிருப்பதால், ஒரேமாதிரி என்று நினைத்து, ஒரு பிராணிக்கும் ஒருவிதமான தொந்தரவையும் செய்யாமல், யார் த்யானம் செய்கிறார்களோ; 1 அவர்களும் என்னை அடைகிறார்கள் தான். அதாவது—2 என்னைப்போன்ற ஸம்ஸாரமில்லாத ஜீவனைப்பார்க்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு வருத்தம் அதிகம். ஆத்மஸ்வரூபத்தைக் கண்முதலானவைகளால் அறிய முடியாமையால், உடம்பையே ஆத்மாவாக நினைத்திருக்கிறவர்களுக்கு அதைக்காட்டிலும் வேறான ஆத்மாவென்று ஒருவஸ்து இருக்கிறதென்று நினைவு வருகிறதே வருத்தம். ஆகையால் ஜீவனைத் தியானம்பண்ணி, அவனைப்பார்ப்பது தாமதிக்கும். [3-4-5]

ஐவ—ஸமுவஜ8ஈவ ரவஸீநாநாம் யாக்ஷக8ஸம் ஸாவ்ய கூ8ா ஸ—

யெ தூ ஸவ்வாணி கூ8்மாணி 8யி ஸம்ந்ந்யஸ்ய 8த்பராஃ |
அநநெ்யநைவ யொமெந 8ாம் ய்யாயந்த உவாஸதெ||

1. "அவர்களும்" என்கிற இடத்தில்"உம்" என்பதற்கு பகவானைக்காட்டிலும் வேறொன்றை அடையவேண்டியதாகத் தீர்மானித்தவர்களும் என்று பொருள்.

2. சுலோகத்தில் " என்னையேஅடைகிறார்கள்" என்று சொல்லியிருந்தாலும், "என்னை" என்பதற்கு என்னைப்போன்ற ஜீவனை என்றுதான் பொருள். 14-வது அத்தியாயத்தில் 2-வது சுலோகததில் ஜீவனைப் பகவானைப்போன்றவன் என்றே சொல்லப்போகிறார். அப்படியே வேதமும் சொல்லுகிறது. அடையப்போகிற ஜீவாத்மஸ்வரூபத்தை இங்கே "அக்ஷரம்" என்று சொல்லுகிறது. 15—வது அத்தியாயத்தில் 16—வது சுலோகங்களில் "அக்ஷரம்" என்று சொல்லப்பட்டவனைக்காட்டிலும் பகவான் வேறு என்று சொல்லப்போகிறார். ஆகையால் இதுதான் பொருள்.

தேஷாமஹம் ஸமுத்தர்தா ம்ருத்யுஸம்ஸாரஸாகராத்।
பவாமி ந சிராத் பார்த்த மய்யாவேஶிதசேதஸாம் ॥௭॥

யே து லௌகிகாநி தேஹயாத்ராஶேஷபூதாநி [illegible] வைதிகாநி ச யாகதாநஹோமதப:ப்ரப்ருதீநி ஸர்வாணி கர்மாணி [illegible] மயி ஸம்ந்யஸ்ய [illegible] ஸர்வாணி [illegible] தேஷாம் [illegible] ம்ருத்யுஸம்ஸாரஸாகராத் [illegible] ஸமுத்தர்தா பவாமி ॥௬-௭॥

அவ—பகவானைத் தியானம் பண்ணுகிறவர்கள் மிகவும் உயர்ந்தவர்கள் என்பதைத் தெளிவாய்ச் சொல்லுகிறார்—

எவர்கள் உலகத்தின் வேலைகளையும், (சாப்பிடுவதும், அதற்குவேண்டிய வேலைகளும்,) வேதத்தில் சொல்லிய யாகம்—தானம்—ஹோமம்—தபஸ்ஸு முதலான எல்லாவேலைகளையும், அவைகளுக்கு உதவிகளான ஸந்தியாவந்தனம் முதலானவைகளுடனும், அவைகளுக்கு ஏற்பட்ட பலன்களுடனும் சாஸ்திரத்தைக்கொண்டு என்னை உள்ளபடி நினைப்பதினால் என்னிடத்தில் வைத்து[1], என்னை ஒருவனையே பிரயோஜனமாக நினைத்து, என்னை நினைப்பது, பூஜிப்பது, வணங்குவது, ஸ்தோத்திரம் பண்ணுவது, என பெயர்களைச் சொல்லுவது முதலான வேலைகளை அளவில்லாத ப்ரீதியுடன் என்னை அடைவதாகவே நினைத்துச் செய்துகொண்டு, என்னைத் தியானம் செய்கிறார்களோ; அவர்களை என்னை அடைவதற்கு இடைஞ்சலான ஸம்ஸாரமென்கிற ஸமுத்திரத்திலிருந்து சீக்கிரம் தூக்கிவிடுவேன். அவர்களை விட்டிருப்பது என்னால் தாங்கமுடியாது. [6–7]

1. 9—வது அத்தியாயத்தில் 27—வது ச்லோகத்தில் சொன்னபடி.

𑌮𑌯𑍍𑌯𑍇𑌵 𑌮𑌨 𑌆𑌧𑌤𑍍𑌸𑍍𑌵 𑌮𑌯𑌿 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌂 𑌨𑌿𑌵𑍇𑌶𑌯 ।
𑌨𑌿𑌵𑌸𑌿𑌷𑍍𑌯𑌸𑌿 𑌮𑌯𑍍𑌯𑍇𑌵 𑌅𑌤 𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌂 𑌨 𑌸𑌂𑌶𑌯𑌃 ॥௮॥

[illegible] 𑌮𑌯𑍍𑌯𑍇𑌵 𑌮𑌨 𑌆𑌧𑌤𑍍𑌸𑍍𑌵-𑌮𑌯𑌿 𑌮𑌨𑌸𑍍𑌸𑌮𑌾𑌧𑌾𑌨𑌂 𑌕𑍁𑌰𑍁। 𑌮𑌯𑌿 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌂 𑌨𑌿𑌵𑍇𑌶𑌯-𑌅𑌹𑌮𑍇𑌵 𑌪𑌰𑌮𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌇𑌤𑍍𑌯𑌧𑍍𑌯𑌵𑌸𑌾𑌯𑌂 𑌕𑍁𑌰𑍁 । 𑌅𑌤 𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌂 𑌮𑌯𑍍𑌯𑍇𑌵 𑌨𑌿𑌵𑌸𑌿𑌷𑍍𑌯𑌸𑌿-𑌅𑌹𑌮𑍇𑌵 𑌪𑌰𑌮𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌇𑌤𑍍𑌯𑌧𑍍𑌯𑌵𑌸𑌾𑌯𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌮𑌨𑍋𑌨𑌿𑌵𑍇𑌶𑌨𑌾𑌨𑌨𑍍𑌤𑌰𑌮𑍇𑌵 𑌮𑌯𑌿 𑌨𑌿𑌵𑌸𑌿𑌷𑍍𑌯𑌸𑍀𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥ ॥௮॥

ஆகையால் நான் உயர்ந்த பிரயோஜநமா யிருப்பதாலும், பிரயாஸமில்லாமலும், சீக்கிரமாயும் கிடைக்கக்கூடியவனுகையாலும், நான்தான் அடையவேண்டிய பிரயோஜநங்களுக்குள் உயர்ந்தவன் என்று தீர்மானித்து, என்னிடத்திலேயே மனதை வை. அதாவது—என்னையே தியானம் செய்ய ஆரம்பி. என்னிடத்திலேயே 1 இருக்கப்போகிறாய். இதில் ஸந்தேஹமில்லை. [8]

𑌅𑌥 𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌸𑌮𑌾𑌧𑌾𑌤𑍁𑌂 𑌨 𑌶𑌕𑍍𑌨𑍋𑌷𑌿 𑌮𑌯𑌿 𑌸𑍍𑌥𑌿𑌰𑌮𑍍 ।
𑌅𑌭𑍍𑌯𑌾𑌸𑌯𑍋𑌗𑍇𑌨 𑌤𑌤𑍋 𑌮𑌾𑌮𑌿𑌚𑍍𑌛𑌾𑌪𑍍𑌤𑍁𑌂 𑌧𑌨𑌞𑍍𑌜𑌯 ॥௯॥

𑌅𑌥 𑌸𑌕𑍃𑌦𑍇𑌵 𑌮𑌯𑌿 𑌸𑍍𑌥𑌿𑌰𑌂 𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌸𑌮𑌾𑌧𑌾𑌤𑍁𑌂 𑌨 𑌶𑌕𑍍𑌨𑍋𑌷𑌿 । 𑌤𑌤𑍋𑌽𑌭𑍍𑌯𑌾𑌸𑌯𑍋𑌗𑍇𑌨 𑌮𑌾𑌮𑌾𑌪𑍍𑌤𑍁𑌮𑌿𑌚𑍍𑌛-𑌸𑍍𑌵𑌾𑌭𑌾𑌵𑌿𑌕𑌾𑌨𑌵𑌧𑌿𑌕𑌾𑌤𑌿𑌶𑌯𑌸𑍌𑌨𑍍𑌦𑌰𑍍𑌯𑌸𑍌𑌶𑍀𑌲𑍍𑌯𑌸𑍌𑌹𑌾𑌰𑍍𑌦𑌵𑌾𑌤𑍍𑌸𑌲𑍍𑌯𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯𑌮𑌾𑌧𑍁𑌰𑍍𑌯𑌗𑌾𑌮𑍍𑌭𑍀𑌰𑍍𑌯𑍌𑌦𑌾𑌰𑍍𑌯𑌶𑍌𑌰𑍍𑌯𑌵𑍀𑌰𑍍𑌯𑌪𑌰𑌾𑌕𑍍𑌰𑌮𑌸𑌾𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑍍𑌯𑌸𑌤𑍍𑌯𑌕𑌾𑌮𑌤𑍍𑌵𑌸𑌤𑍍𑌯𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑌤𑍍𑌵𑌸𑌰𑍍𑌵𑍇𑌶𑍍𑌵𑌰𑌤𑍍𑌵𑌸𑌕𑌲𑌕𑌾𑌰𑌣𑌤𑍍𑌵𑌾𑌦𑍍𑌯𑌸𑌙𑍍𑌖𑍍𑌯𑍇𑌯𑌗𑍁𑌣𑌸𑌾𑌗𑌰𑍇 𑌨𑌿𑌖𑌿𑌲𑌹𑍇𑌯𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌨𑍀𑌕𑍇 𑌮𑌯𑌿 𑌨𑌿𑌰𑌤𑌿𑌶𑌯𑌪𑍍𑌰𑍇𑌮𑌗𑌰𑍍𑌭𑌸𑍍𑌮𑍃𑌤𑍍𑌯𑌭𑍍𑌯𑌾𑌸𑌯𑍋𑌗𑍇𑌨 𑌸𑍍𑌥𑌿𑌰𑌂 𑌚𑌿𑌤𑍍𑌤𑌸𑌮𑌾𑌧𑌾𑌨𑌂 𑌲𑌬𑍍𑌧𑍍𑌵𑌾 𑌮𑌾𑌮𑌾𑌪𑍍𑌤𑍁𑌮𑌿𑌚𑍍𑌛 ॥

அவ—என்னையே நினைஎன்று பகவான் சொன்னதைக்கேட்டவுடன், அர்ஜுநன் மலைத்தான்—நமக்கோஎவ்வளவோ சபலங்

1. ஆரம்பித்தவுடனேயே முக்தன்போலவே ஆய்விடுவாய். அல்லது—நல்ல ஆசாரியனிடமிருக்கும் சிஷியன்போலவும், நல்ல தகப்பனிடம் இருக்கும்பிள்ளைபோலவும் பயமில்லாமல் இருப்பாய்.

கள் இருக்கின்றனவே; கண் முதலானவைகளாலே அநுபவிக்கக்கூடிய கெட்டவஸ்துக்களையே நெடுநாளாய் வந்தபழக்கத்தினால் மனது நினைக்கிறதே; உம்மை இப்போதுதான் பார்த்தேனே ஒழிய, நெடுநாளாய் பார்க்கவில்லையே; மனது உம்மிடத்தில் எப்படி நிலையாய் இருக்கும்—என்று. அதைப்பார்த்து தியானத்திற்கு உபாயம் பகவான் சொல்லுகிறார்—

தியானமென்பது இன்னொருவஸ்துவின் நினைவுகலக்காமல் ஒரேவஸ்துவை நினைப்பது. இப்படி என்னைத்தியானம் செய்ய முடியாமல்போனால், ஓடிப்போகும் மனதைத் திருப்பிக்கொண்டு வந்து, என்னிடத்தில் ஒருக்காலத்திலும் ஒருவிதக்குற்றமும் இல்லாமையையும், அளவில்லாமல் உயர்ந்த—எனக்கு இயற்கையாகவுள்ள—எல்லா நல்லகுணங்களையும் நினைத்து, அளவில்லாத பிரீதியுடன் என்னை நினைத்துப் பழக்கு. அந்தப் பழக்கத்தினால் பிறகு மனது என்னிடத்திலேயே நிலையாய் நிற்கும். அதனால் என்னை அடையலாம். நினைக்க வேண்டிய குணங்களாவன—திருமேனியின் அளவில்லாத அழகு; தாழ்ந்தவர்களுடன் இடைவிடாமல் பிரீதியுடன் பழகுவது; எல்லாரும் நன்றாயிருக்கவேணுமென்று எண்ணுவது; குற்றங்களைப் பார்க்காமல் எல்லாரிடத்திலும் ஆசை; எல்லாரிடத்திலுமிரக்கம்; மிகவும்இன்பமாயிருப்பது; ஒன்றாலும் கலங்காத மனது உள்ளவனாயிருப்பது; அளவில்லாமல் கொடுப்பது; பயமில்லாமல் எந்த சத்துருக்களுடனும் சண்டைக்குப்போவது; எந்த வேலையாலும் களைப்பை அடையாமை; சண்டையில் விரோதிகளைத் தவறாமல் ஜயிப்பது; எல்லாவற்றையும் நன்றாய் அறிவது; அநுபவிக்கக் கூடிய வஸ்துக்களுக்கு அழிவில்லாமை; நினைத்ததை முடிப்பது; எல்லாரையும் அடக்கி ஆளுவது; எல்லாவற்றையும் உண்டு பண்ணுவது—இவை முதலானவைகள். இவ்விதமான கணக்கில்லாத குணங்களுக்கு பகவான் இருப்பிடம். ஆறுகளுக்கு ஸமுத்திரம்போல். [9]

𑌅𑌭𑍍𑌯𑌾𑌸𑍇𑌽𑌪𑍍𑌯𑌸𑌮𑌰𑍍𑌥𑍋𑌽𑌸𑌿 𑌮𑌤𑍍𑌕𑌰𑍍𑌮𑌪𑌰𑌮𑍋 𑌭𑌵 ।
𑌮𑌦𑌰𑍍𑌥𑌮𑌪𑌿 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌮𑌵𑌾𑌪𑍍𑌸𑍍𑌯𑌸𑌿 ॥௧௦॥

[illegible] ॥௧௦॥

அவ—நெடுநாளாய் பழகினதும், கண்ணாலே பார்க்கக் கூடியதும், சீக்கிரம் அடையக் கூடியதுமான-இப்போது இன்பமாகத் தோன்றுகிற-வஸ்துக்களில் மனது படிந்திருக்கிறதே; அவைகளை விட்டு இழுக்க முடியுமா? நீர் குற்றமில்லாதவராயும், குணமுள்ளவராயும் இருந்த போதிலும், நீர் சொன்னபடி நினைத்துப் பழக்கம் பண்ணமுடியாது. மனதுக்கு வேலைகளைச் செய்வதில்தான் வாஸனை உண்டாயிருக்கிறது. ஆகையால் வேலைகளில்தான் மனது செல்லும். இப்படி அர்ஜுநனுக்கு எண்ணமிருப்பதை அறிந்து, பழக்கம் பண்ணுவதற்கு வழி சொல்லுகிறார்—

இப்படி அளவில்லாத பிரீதியுடன் நினைத்துப் பழக்குவதற்கு முடியாமல் போனால், கோவில் கட்டுவது, புஷ்பத் தோட்டம் போடுவது, கோவிலுக்கு விளக்குப் போடுவது, கோவில்களைப் பெருக்கி, தெளித்து, மொழுகுவது, புஷ்பங்கள் கொண்டுவருவது, என்னுடைய பூஜையை ஸரியாக நடத்துவது, என் பெயர்களைச் சொல்லுவது, பிரதக்ஷிணம்—ஸ்தோத்திரம்—நமஸ்காரம் முதலானவைகளைச் செய்வது—இவை முதலான என் வேலைகளை அளவில்லாத பிரீதியுடன் செய். இப்படிச் செய்தால், சீக்கிரத்தில் கீழ்ச் சொன்ன 1 பழக்கம் பண்ணமுடியும். பிறகு படிப்படியாய் என்னை அடையலாம். [10]

1. இப்படிச் செய்யும் வேலைகளில் ஒவ்வொன்றும் பாபத்தைப் போக்கக்கூடியதாகையாலும், ஒவ்வொரு வேலையிலும் பகவானை நினைப்பதாலும், பகவானுடைய தியானத்தின் (நினைவின்) பழக்கம் சீக்கிரம் வந்து விடுமென்று கருத்து.

𑌅𑌥𑍈𑌤𑌦𑌪𑍍𑌯𑌶𑌕𑍍𑌤𑍋𑌽𑌸𑌿 𑌕𑌰𑍍𑌤𑍁𑌂 𑌮𑌦𑍍𑌯𑍋𑌗𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌃 ।
𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑌤𑍍𑌯𑌾𑌗𑌂 𑌤𑌤𑌃 𑌕𑍁𑌰𑍁 𑌯𑌤𑌾𑌤𑍍𑌮𑌵𑌾𑌨𑍍 ॥௧௧॥

[illegible] ॥௧௧॥

அ—ஸம்ஸாரிகளுக்கு தன் பிரயோஜநத்துக்காகவே காரியங்களைச் செய்யத் தோன்றுகிறது; அவன் உமக்காக எப்படி வேலை செய்யக் கூடும். அதுவும் அளவில்லாத ப்ரீதியுடன் எப்படிச் செய்ய முடியும் என்றால், அதற்கு ஸாதநவரிசைகளில் ஆரம்பத்திலிருக்கும் எல்லா உபாயத்திற்கும் அடிப்படியான கர்மயோகத்தை நினைப்பு மூட்டுகிறார்—

என்னுடைய உயர்ந்த குணங்களை நினைத்து, என்னிடத்தில் மாத்திரம் ப்ரீதி பண்ணுவதான பக்தியோகத்தைச் செய்ய ஆரம்பித்து, அந்த தியானமென்கிற மாத்துக்கு 1 மூளைபோன்ற இந்த

1. பக்தி யோகத்திற்கு உதவிகள் அனேகம் படிகள் இருக்கின்றன. அவைகளில் இதற்குக் கீழ்படி கிடையாதென்று கருத்து.

என் வேலைகளையும் மிகுந்த பிரீதியுடன் செய்ய முடியாமல் போனால், என்னுடைய தியானத்துக்கு உதவியாக உன் ஆத்ம ஸ்வரூபத்தை முதல் ஆறு அத்தியாயங்களில் சொன்னபடி உள்ளபடி பார்க்க வேணுமென்று நினைத்து, அதற்கு உபாயமாகக் கர்மயோகத்தைச் செய். அதாவது—பலன்களை விரும்பாமல், மனதை அடக்கி, என் பிரீதிக்காகவே கர்மங்களைச் செய். அப்படிச் செய்தால்தான் எல்லாப்பாபங்களும் போகும். அப்போதுதான் என்னிடத்தில் அளவில்லாத பிரீதிவந்து, என்னையே அடையவேண்டுமென்று நினைவு உண்டாகும். இல்லாதுபோனால் உண்டாகாது. அந்த நினைவு வருவது லேசா? அந்தக் கர்மங்களால் ஆத்மத்தியானம் வரும். தியானத்தால் அறியாமை முதலான எல்லா மறைவுகளும் நீங்கி, எனக்கு வேலை செய்வதற்காகவே ஏற்பட்டிருக்கிற உன் (ஜீவ) ஸ்வரூபத்தை உள்ளபடி பார்க்கலாம். பார்த்ததும் என்னுடைய தியானம் தன்னடையாகவே வரும். இந்த ஸங்கதியை 18-வது அத்தியாயம் 54-வது சுலோகத்தில் சொல்லப் போகிறார். [11]

ஶ்ரேயோ ஹி ஜ்ஞாநமப்யாஸாஜ் ஜ்ஞாநாத்த்யாநம் விஶிஷ்ய
தே । த்யாநாத்கர்மபலத்யாகஸ்த்யாகாச்சாந்திரநந்தரம் ॥

அத்யர்த்தப்ரீதிவிரஹிதாத் க்ருதாதப்யாஸாத் ஸ்வாத்ம
ஸாக்ஷாத்காராய ஆத்மாநுஸந்தாநரூபம் தத³பரோக்ஷ்ய
ஜ்ஞாநமேவாத்மஹிதத்வே விஶிஷ்யதே । ஆத்மாபரோக்ஷ்யஜ்ஞா
நாதபி நிஷ்பந்நப்ரபோதாத் த்யாநமேவாத்ம
ஹிதத்வே விஶிஷ்யதே । தஜ்ஜ்ஞாநாதபி நிஷ்பந்நப்ரபோதாத் த்
யாநம் ஸாக்ஷாத்காரேணாநுஷ்டிதம் கர்மைவ விஶிஷ்ய
தே । அநபிஸம்ஹிதபலாநுஷ்டிதாச் ச கர்மணோ அநந்தர
மேவ நிரஸ்தபாபதயா மநஸஃ ஶாந்திர்பவிஷ்யதி । ஶாந்தே
மநஸி ஆத்மத்யாநம் ஸம்பத்ஸ்யதே । த்யாநாச் ச ததபரோ
க்ஷ்யம் । ததபரோக்ஷ்யாத் பரா பக்திரிதி பக்தியோகாப்யாஸா
ஶக்தஸ்யாத்மநிஷ்டைவ ஶ்ரேயஸீ । ஆத்மநிஷ்டஸ்யாப்யஶாந்த
மநஸோ நிஷ்டாப்ராப்தயே அநபிஸம்ஹிதபலாநுஷ்டிதஜ்ஞாநாநபிஸம்ஹிதபல
கர்மநிஷ்டைவ ஶ்ரேயஸீத்யர்த்தஃ ॥ [௧௨]

அவ—பக்தியைப்பண்ண முடியவில்லையே என்கிற வருத்தத்தைப் போக்குவதற்காகவும், அப்புலிமானைப் பிடிப்பதற்காகக் கையைத் தூக்கும் குழந்தைகள் போல், முடியாத வேலையை ஆரம்பிப்பதைத் தடுப்பதற்காகவும், பக்திக்கு உதவியான ஸாதனங்களில் அவனவனுக்குத் தகுந்ததைக் கஷ்டமில்லாமல் செய்யலாம் என்று ஸ்தோத்திரம் பண்ணி, கீழ்ச் சொன்னதை உறுதிப்படுத்துகிறார்—

அளவில்லாத ப்ரீதி இல்லாமல் வருத்தப்பட்டு, என்னுடைய நினைவைப் பழக்குவதைக்காட்டிலும், [1]ஜீவாத்மஸ்வரூபத்தை உள்ளபடி நினைத்து அதை உள்ளபடி பார்ப்பதே ஒருவனுக்கு மிகவும் நல்லது. இந்தப் பார்வை வாராமல் போனால், அதற்கு ஸாதநமான ஜீவாத்மத்தியானம் செய்வதே நல்லது. அந்தத் தியானமும் வாராமல்போனால், பலன்களை விரும்பாமல் என்னுடைய ப்ரீதிதான் வேண்டுமென்று நினைத்து கர்மங்களைச் செய்தால், எல்லா பாபங்களும் போய், மனது அடங்கும். மனது அடங்கினால், ஜீவாத்மாவைத் தியானம் பண்ணலாம். தியானத்தால் அதைப் பார்க்கலாம். பார்த்தால் என்னைத் தியானம் செய்யலாம். ஆகையால் என்னுடைய தியானத்தைப் பழக்க முடியாதவனுக்கு ஜீவாத்மாவைத் தியானம் செய்வதே மிகவும் நல்லது. மனது அடங்காததினால், அதுவும் முடியாதவனுக்கு ஆத்மத்தியானத்துக்காக ஆத்மாவின் நினைவுடன் பலன்களை விரும்பாமல் கர்மம் செய்வதே நல்லது.

[12]

அவ— அநபிஸம்ஹிதபலகர்மநிஷ்டஸ்யோபாதேயாந் குணாநாஹ—

அத்வேஷ்டா ஸர்வபூதாநாம் மைத்ர: கருண ஏவ ச |
நிர்மமோ நிரஹங்கார: ஸமது:கஸுக: க்ஷமீ || ௧௩ ||

---

1. முதல் ஆறு அத்தியாயங்களில் ஜீவாத்ம ஸ்வரூபத்தைப் பார்ப்பதும், ஏழாவது அத்தியாயம் முதல் பத்தாவது அத்தியாயம் வரையில் பகவானைத் தியானம் செய்வதும் சொல்லப்பட்டன. ஒன்று மற்றொன்றுக்கு உதவி என்று மூலத்தில் சொல்லப்படவில்லை. அது இங்கே சொல்லப்படுகிறது.

[illegible] ‖௧௪‖

[illegible] ‖௧௩-௧௪‖

அவ—பலன்களை விரும்பாமல் கர்மம் செய்கிறவனுக்கு வேண்டிய குணங்களைச் சொல்லுகிறார்—

(1) *மனதால் த்வேஷம் செய்கிறவர்கள், வாயாலும், உடம்பாலும் தொந்தரவு பண்ணுகிறவர்கள் எல்லாரிடத்திலும், நம்முடைய பாபங்களுக்காகப் பகவான் அவர்களைக்கொண்டு நமக்கு இப்படிச் செய்கிறானென்று நினைத்து, த்வேஷம் பண்ணாமலிருப்பது.* (2) *இதுவும் தவிர அவர்கள் க்ஷேமத்தை நினைப்பது.* (3) *அவர்களுக்கு ஏதாவது தொந்தரவு வந்தால், ஐயோ! என்று*

இரங்கி நம்மால் ஆனவரையில் உதவி செய்வது. (4) உடம்பையும், இந்திரியங்களையும், அவைகளைச்சேர்ந்த பிள்ளை பெண்டாட்டி முதலானவைகளையும் தன்னுடையவைகள் என்று நினைக்காமை. அதாவது—ஒருவனுக்கு இவைகளைப் பகவான் [1]இரவலாகக் கொடுத்திருக்கிறானென்று நினைப்பது (5) உடம்பை ஆத்மாவாக எண்ணாமை, உடம்பு வேறு, அதிலிருக்கும் நான் என்கிற ஆத்மா வேறு என்கிற நினைவு வேணும். சொல்லுவது போதாது. (6) நினைவினால் உண்டாகும் ஸுகத்திலும், துக்கத்திலும், ஸந்தோஷமும், வருத்தமும் இல்லாமை. அதாவது—இந்த ஸுகமும் துக்கமும் நினைவால் ஏற்படுகிறவைகள். அதாவது—ஒரு ரூபாய் கெட்டுப்போனால், மனது புண்ணாக ஆகிறது. ஒரு ரூபாய் வந்தால், ஸந்தோஷமாயிருக்கிறது. இந்த இரண்டும் உடம்பில் சிரங்கு வெடித்தது போலும், சந்தனம் பூசினது போலுமில்லை. ஆகையால் இந்த இரண்டும் நினைவினால் உண்டாகிறது. இந்த ஆறுவது குணம் கீழ்ச் சொன்ன 4-5-வது குணங்கள் வந்தால் வரும் (7) உடம்பில் காயம் படுவது முதலானவைகளால் உண்டாகும் துக்கத்தினால் ஓச்சலும், சந்தனம் பூசுவது முதலானவைகளால் உண்டாகும் மனதுக்கு இருமாப்பும் (கொழுப்பும்) இல்லாமை. (8) தற்செயலாய் கிடைத்தவைகளைக் கொண்டு உடம்பை வளர்த்து, அது கொஞ்சமென்றும், அதிகம் என்றும், ரஸமுள்ளதென்றும், ரஸமில்லாததென்றும் பாராமல் ஸந்தோஷப்படுவது. (9) எப்பொழுதும் உடம்பைக் காட்டிலும் வேறான ஆத்மாவை நினைத்துக் கொண்டிருப்பது. இதினால் வாஸனை பலப்பட்டு யோகத்துக்கு உதவியுண்டாகும். (10) எப்பொழுதும் ஆத்மாவைத்தவிர வேறு விஷயத்தில் போகாதபடி மனதை அடக்குவது. இதுவும் யோகத்துக்கு உதவி. (11) உபநிஷத்துக்களில் சொல்லுகிற ஸங்கதிகளில் நல்ல நம்புதல். (12) பலன்களை விரும்பாமல் கர்மங்களைச் செய்தால், அவைகளால் பகவான் ஸந்தோஷத்தை அடைந்து,

---

1. இப்படி நினைத்தால், தனக்குப் பண்டங்கள் கெட்டுப்போனால் துக்கம் வராது. ஒருவன் நம்முடைய வீட்டில் ஒரு பெட்டியை வைத்து, மறுபடியும் எடுத்துக்கொண்டு போனால், நமக்குத் துக்கம் வருமோ. அது போல,

நமக்கு ஆத்மாவின் உள்ளபடி பார்வையைக் கட்டாயம் கொடுப்பன் என்ற எண்ணமும், நம்புதலும்—இவை முதலான குணங்கள் உள்ளவனாய் எவன் கர்மயோகம் செய்து என்னிடத்தில் பக்தி பண்ணுகிறானோ; அவனிடத்தில் எனக்குப் ப்ரீதி. [13-14]

யஸ்மாந்நோத்விஜதே லோகோ லோகாந்நோத்விஜதே ச ய:।
ஹர்ஷாமர்ஷபயோத்வேகைர்முக்தோ ய: ஸ ச மே ப்ரிய:॥

யஸ்மாத் காரணபூதாத் லோகோ நோத்விஜதே; யோ லோகோத்வேககரம் கர்ம கிஞ்சிதபி ந கரோதீத்யர்த:। லோகாச்ச நிமித்தபூதாத் யோ நோத்விஜதே; யம் ப்ரதி ஸர்வோ லோகோ நோத்வேககரம் கர்ம கரோதி, ஸர்வாவிரோதித்வநிஶ்சயாத்। அத ஏவ கஞ்சந ப்ரதி ந ஹர்ஷ: கஞ்சந ப்ரதி நாமர்ஷ: கஞ்சந ப்ரதி ந பயம் கஞ்சந ப்ரதி நோத்வேகஶ்ச। ஏவம்பூதோ ய:, ஸோ'பி மம ப்ரிய:॥ ॥௧௫॥

(13) 1 உலகத்திற்கு மனவருத்தத்தைக் கொடுக்கக்கூடிய ஒருவேலையையும் செய்யாமை. இவன் இப்படி இருந்தால், இவனால் ஒருவனுக்கும் ஒருவித இடைஞ்சலுமில்லை என்று எண்ணி, உலகத்தார் இவனுக்கு மனவருத்தத்தைக் கொடுக்கக் கூடிய ஒரு வேலையை எப்படிச் செய்யாமலிருப்பார்களோ, அப்படி இருக்கை. ஒருவனிடத்தில் ஸந்தோஷமும், ஒருவனிடத்தில் பொறுமையும், ஒருவனிடத்தில் பயமும், ஒருவனிடத்தில் அருவருப்புமில்லாமை2. இப்பேர்ப்பட்டவனிடத்திலும் எனக்குப் ப்ரீதி. (15)

அநபேக்ஷ: ஶுசிர்தக்ஷ உதாஸீநோ கதவ்யத:।
ஸர்வாரம்பபரித்யாகீ யோ மத்பக்த: ஸ மே ப்ரிய:॥ ॥௧௬॥

அநபேக்ஷ:—ஆத்மவ்யதிரிக்தே க்ருத்ஸ்நே வஸ்துந்யநபேக்ஷ:। ஶுசி:—ஶாஸ்த்ரவிஹிதத்ரவ்யவர்த்திதகாய:। தக்ஷ:—ஶாஸ்த்ரீய

1. 4-வது குணம் முதலானவைகளின் பலன் 13-வது குணம்.

2. 13-வது குணத்தினுடைய பலன் இது.

க்ரியோபாதா³நஸமர்த²: | உதா³ஸீந: | க³தவ்யத²: - ஶாஸ்த்ரீயக்ரியாநிர்வ்ருத்தாவவர்ஜநீயஶீதோஷ்ணவர்ஷஸஹநாதி³து³:கே²ஷு வ்யதா²ரஹித: | ஸர்வாரம்ப⁴பரித்யாகீ³ - ஶாஸ்த்ரீயவ்யதிரிக்தஸர்வகர்மாரம்ப⁴பரித்யாகீ³ | ய ஏவம்பூ⁴தோ மத்³ப⁴க்த: ஸ மே ப்ரிய: || [௧௬]

அவ:—தன் ஸ்வரூபத்தை உள்ளபடி பார்ப்பதில் மாத்திரம் ஆசையிருப்பதால், சாஸ்திரத்தில் சொல்லிய வேலைகளை மாத்திரம் நன்றாய் கவனிக்கிறானென்றும், மற்ற வேலைகளில் கொஞ்சமேனும் ஆசையில்லை என்றும் சொல்லுகிறார்—

(14) ஆத்மாவைத் தவிர வேறு ஒரு வஸ்துவிலும் ஆசையில்லாமை. (15) சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட வஸ்துக்களைச் சாப்பிட்டு உடம்பை வளர்க்கை. (16) சாஸ்திரத்தில் சொல்லுகிற வேலைகளைச் செய்வதில் கெட்டிக்காரத்தனம். (17) சாஸ்திரத்தில் செய்யவேண்டுமென்றும், செய்யக்கூடாதென்றும் சொன்ன வேலைகளைத்தவிர மற்ற வேலைகளைக் கவனிக்காமலிருப்பது. (18) சாஸ்திரத்தில் சொல்லியவேலைகளைச் செய்யும்பொழுது, நடுவில் கட்டாயம் வரக்கூடிய குளிர்—சூடு—உடம்புக்குக் காயம் முதலானவைகளைப்பற்றி வருத்தப்படாமை. (19) சாஸ்திரத்தில் சொல்லிய வேலைகளைத் தவிரமற்ற ஒரு வேலையையும் கவனித்தாலும், செய்ய ஆரம்பிக்காமை. இந்த குணங்களுள்ளவனாய் எவன் என்னிடம் பக்தி பண்ணுகிறானோ; அவனும் எனக்கு வேண்டியவன். [16]

யோ ந ஹ்ருஷ்யதி ந த்³வேஷ்டி ந ஶோசதி ந காங்க்ஷதி |
ஶுபா⁴ஶுப⁴பரித்யாகீ³ ப⁴க்திமாந் ய: ஸ மே ப்ரிய: || [௧௭]

யோ ந ஹ்ருஷ்யதி - யத்³பூ⁴தாநாம் ஹர்ஷநிமித்தம் ப்ரியஜாதம் தத்ப்ராப்ய ய: கதா³பி ந ஹ்ருஷ்யதி | யத³ப்ரியம், தத்ப்ராப்ய ந த்³வேஷ்டி | யத்³பூ⁴தாநாம் ஶோகநிமித்தம் பா⁴ர்யாபுத்ரவித்தக்ஷயாதி³கம் தத்ப்ராப்ய ந ஶோசதி | ததா²வித⁴மப்ராப்தம் ச ந காங்க்ஷதி | ஶுபா⁴ஶுப⁴பரித்யாகீ³ - பாபவத் புண்யஸ்யாபி ப³ந்த⁴ஹேதுத்வாவிஶேஷாது³ப⁴யபரித்யாகீ³ | ய ஏவம்பூ⁴தோ ப⁴க்திமாந் ஸ மே ப்ரிய: || [௧௭]

(20) மனிதர்கள் எந்த வஸ்துவை அடைந்து, ஸந்தோஷப் படுவார்களோ, அது தற்செயலாய் வந்தாலும், ஸந்தோஷப்படாமை. (21) எந்த வஸ்துவைக்கண்டு பொறுக்க மாட்டார்களோ, அது வந்தாலும் பொறுமையில்லாமை. (22) பிள்ளை, பெண்டாட்டி சாகிறது, பணம் போகிறது முதலானவைகள் நேர்ந்தால், துக்கப் படாமை. (23) அந்தப் பிள்ளை பெண்டாட்டி முதலானவைகள் இல்லாதபோது அவைகளை ஆசைப்படாமை. (24) ஆத்மாவைப் பார்ப்பதற்கு இடைஞ்சலாயிருப்பதினால், பாபமும் புண்ணியமும் ஒரே மாதிரியென்று நினைத்து, பாபத்தைப்போல் ஸுகத்தைக் கொடுக்கக்கூடிய புண்ணியங்களையும் செய்யாமை. எப்படிப் பாபம் பண்ணுவதில்லையோ; அப்படியே பிள்ளை முதலான பலன்களைக் கொடுக்கக்கூடிய புண்ணியங்களையும் ஆத்மாவைப் பார்ப்பதற்கு இடைஞ்சல் என்கிற எண்ணத்தினாலே பண்ணுமை. இந்த குணங்களுள்ளவனாய் எவன் என்னிடத்தில் பக்தியுள்ளவனோ; அவனும் எனக்கு வேண்டியவன். [17]

ஸமஶ்ஶத்ரௌ ச மித்ரே ச ததா₂ மாநாவமாநயோ: |
ஶீதோஷ்ணஸுக₂து₃:கே₂ஷு ஸம: ஸங்க₃விவர்ஜித: ||௧௮||

துல்யநிந்தா₃ஸ்துதிர்மௌநீ ஸந்துஷ்டோ யேநகேந
சித் | அநிகேத: ஸ்தி₂ரமதிர்ப₄க்திமாந்மே ப்ரியோ நர: ||௧௯||

«அத்₃வேஷ்டா ஸர்வபூ₄தாநாம்» இத்யாதி₃நா ஶத்ருமித்ராதி₃ஷு த்₃வேஷாதி₃ரஹிதத்வமுக்தம் | அத்ர தேஷு ஸந்நிஹிதேஷ்வபி ஸமசித்தத்வம் ததோऽப்யதிரிக்தோ விஶேஷ உச்யதே | க்ஷேத்ரே ஸ்தி₂ரமதிகேந நிகேதநாதி₃ஷ்வஸக்தத்வம் அநிகேத: | ததே₃வ மாநாவமாநாதி₃ஷ்வபி ஸம[illegible] ஹ்ருதி₃ ஸமே ப்ரிய: || [௧௮-௧௯]

(25) ஒன்றிலும் பற்றில்லாமையாலே, சத்துருக்களும், ஸ்நேஹிதர்களும் கௌரவம் பண்ணினாலும், இளப்பம் பண்ணினாலும், குளிரிலும், சூட்டிலும், ஸுகத்திலும், துக்கத்திலும் ஒரேமாதிரியாயிருக்கை. (26) ஆத்மாவின் நினைவு நிலையாய் இருப்பதால்,

வீடு முதலானவைகளில் பற்று இல்லாமை (27) ஒருவன் வைதாலும், ஸ்தோத்திரம் பண்ணினாலும், பேசாமல் இருப்பது. (28) உலகத்தாரைப்போல, ஸ்தோத்திரம் பண்ணுகிறவர்களை ஸ்தோத்திரம் பண்ணுவதும், வைகிறவர்களை வைவது மில்லாமை. (தற்செயலாய்) கிடைத்ததைக்கொண்டு ஸந்தோஷப்படுவதால், ஒரு வஸ்துவுக்காக ஸ்தோத்திரம் செய்வதும், கொடுக்காவிட்டால வைகிறதுமில்லாமை இந்த குணங்களுள்ளவனாய் எவன் என்னிடத்தில் பக்தி பண்ணுகிறானோ; அவனாா எனக்கு வேண்டியவன். 1

1. 13-வது சுலோகம் முதல் எட்டு சுலோகங்களும் பக்தனைச் சொலலுகின்றன. அவைகளில எழு சுலோகங்கள் கர்மயோகம் பண்ணுகிறவனைச் சொல்லுகின்றன. அவனும் பக்தன்தான். பக்தியில்லாமல் ஞான யோகமும், கர்ம யோகமும் செய்ய முடியாது. எட்டாவது சுலோகம் அவனைக்காட்டிலும் வேறான பக்தியோகம் செய்கிறவனைச் சொல்லுகிறது. இவன் வேறு என்பது அந்த சுலோகத்திலிருக்கிற-வேற்றுமையைக்காட்டுகிற—"து"என்கிற சொல்லாலும்,பக்தர்களை "மத்பரமா:" (என்னையே உயர்ந்தப் பிரயோஜநமாக எண்ணுகிறவர்கள்) என்றும், எனக்கு மிகவும் வேண்டியவர்கள் என்றும் சொல்லுவதாலும், ஏற்படுகிறது.

கர்மயோகம் செய்கிறவன் தன்னை (1) உடம்பைக்காட்டிலும் வேறு; (2) பகவானுக்கு உட்பட்டவன்; (3) அவனுக்காகவே இருக்கிறவன்—என்று அறிந்து, பகவானைத்தவிர வேறொன்றிலும் ஆசை யில்லாமல், கர்மங்களை அவன் ஸந்தோஷத்துக்காகவே செய்யவேண்டியது. தான் உடம்பைக்காட்டிலும் வேறு என்கிற நினைவு 3ந்தாவது குணம். இந்த நினைவு யோகம் செய்யுங்காலத்தில் நிலையாயிருப்பதற்காக,யோகம் செய்யாத வேளைகளிலும் இதை நினைத்துக்கொண்டிருப்பது 9-வது குணம். இதற்காகவே மனதை வெளியே விடாமையாகிய 10-வது குணம். ஆத்மாவின் நினைவு நிலையாயிருகதால், வீடு முதலானவைகளிலும், தன் உடம்பு, இந்திரியங்கள், உடம்பைச் சேர்ந்தவைகள் இவைகளிலும் பற்றில்லாமையாகிய 4-வது, 26-வது குணங்கள் வரும். நல்லதும் பொல்லாததுமான விஷயங்களில் ஒரேமாதிரியா யிருப்பதாகிய 6, 7, 20—23, 25, 27-வது குணங்கள் தானே வரும். உடம்பு இருப்பதற்காக மாத்திரம் சாப்பாடு வேண்டுமானதால், 8-வது குணம் வரும். அதினால் 28-வது குணமும் வந்துவிடும். தானும் மற்றவர்களும் பகவானுக்கு உட்பட்டவர்கள், அவன் உடம்புகள் என்று அறிவதனால், 1-2-3-வது குணங்களும், 13-வது குணமும் வந்துவிடும். இவைகள எல்லாவற்றிற்கும் காரணம்

𑌅𑌤𑌃—𑌆𑌤𑍍𑌮𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌤𑍍 𑌭𑌕𑍍𑌤𑌿𑌯𑍋𑌗𑌨𑌿𑌷𑍍𑌠𑌸𑍍𑌯 𑌶𑍍𑌰𑍈𑌷𑍍𑌠𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑍍𑌯 𑌯𑌥𑍋𑌪𑌕𑍍𑌰𑌮𑌂 𑌉𑌪𑌸𑌂𑌹𑌰𑌤𑌿—

𑌯𑍇 𑌤𑍁 𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑌾𑌮𑍃𑌤𑌮𑌿𑌦𑌂 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌂 𑌪𑌰𑍍𑌯𑍁𑌪𑌾𑌸𑌤𑍇।
𑌶𑍍𑌰𑌦𑍍𑌦𑌧𑌾𑌨𑌾 𑌮𑌤𑍍𑌪𑌰𑌮𑌾 𑌭𑌕𑍍𑌤𑌾𑌸𑍍𑌤𑍇𑌽𑌤𑍀𑌵 𑌮𑍇 𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌃 ॥ ‖௨௦‖

𑌓𑌂 𑌤𑌤𑍍𑌸𑌦𑌿𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌦𑍍𑌗𑍀𑌤𑌾𑌸𑍂𑌪𑌨𑌿𑌷𑌤𑍍𑌸𑍁 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌯𑌾𑌂 𑌯𑍋𑌗𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇 𑌶𑍍𑌰𑍀𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌰𑍍𑌜𑍁𑌨𑌸𑌂𑌵𑌾𑌦𑍇 𑌭𑌕𑍍𑌤𑌿𑌯𑍋𑌗𑍋 𑌨𑌾𑌮 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑌂 𑌚𑌾𑌮𑍃𑌤𑌂 𑌚𑍇𑌤𑌿 𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑌾𑌮𑍃𑌤𑌂, 𑌯𑍇 𑌤𑍁 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌸𑌮𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑌕𑌂 𑌭𑌕𑍍𑌤𑌿𑌯𑍋𑌗𑌂 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌂 "𑌮𑌯𑍍𑌯𑌾𑌵𑍇𑌶𑍍𑌯 𑌮𑌨𑍋 𑌯𑍇 𑌮𑌾𑌂" 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌨𑍋𑌕𑍍𑌤𑍇𑌨 𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑍇𑌣 𑌪𑌰𑍍𑌯𑍁𑌪𑌾𑌸𑌤𑍇, 𑌤𑍇 𑌭𑌕𑍍𑌤𑌾𑌃 𑌅𑌤𑍀𑌤𑌰𑌾𑌂 𑌮𑌮 𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌃 ॥ ‖௨௦‖

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌦𑍍𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌵𑌿𑌰𑌚𑌿𑌤𑍇 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌗𑍀𑌤𑌾𑌭𑌾𑌷𑍍𑌯𑍇
𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

சாஸ்திரத்தில் நம்பிக்கை—11-வது குணம். இதினலேயே சாஸ்திரத்திற்குக் கட்டுப்பட்டு, 16-வது சுலோகத்தில் சொன்ன 14-வது முதல் 19-வது வரையில் உள்ள குணங்களைத் தேடுவன். பகவானுக்காகவே தான் இருப்பதை அறிந்தால், அவனிடத்திலேயே மனதும், எண்ணமும் வைக்கப்படும்—12-வது குணம். ஸ்வர்க்கம் முதலானவைகளுக்கு வேலை செய்யமாட்டான்—24-வது குணம். இப்படி இந்த சுலோகங்களில் சொல்லப்பட்ட 28 குணங்களும் கர்ம யோகத்திற்கு உதவியானவைகள்.

முதல்படியான கர்மயோகம் செய்கிறவனுக்கும்கூட இவைகள் வேண்டுமானல், மோக்ஷத்திற்காக பக்தி பிரபத்தி செய்கிறவனுக்கு இவை வேண்டாமோ? இவர்களுக்கு இவைகள் இருக்கின்றனவா? இல்லையா என்று தாங்களாவது, பிறர்களாவது பார்த்தார்களோ? பார்த்து இல்லையென்று அறிந்தார்களோ? வருத்தம் கிடக்கட்டும். நல்ல ஆசாரியர்களும் தாயார் பெருமாளும் காப்பாற்ற வேணும்.

அவ—ஆத்மாவைத் தியானிப்பவனைக் காட்டிலும் என்னை (பகவானை)த் தியானம் செய்கிறவன் உயர்ந்தவன் என்று சொல்ல ஆரம்பித்தார். 1 அதை இப்போது முடிக்கிறார்—

2 என்னை அடைவதற்கு உதவியான என்னுடையத் தியானத்தை என்னை அடைவதை (மோக்ஷத்தை)ப் போல் நினைத்து, இந்த அத்தியாயம் 2-வது சுலோகத்தில் சொன்னபடி எவர்கள் செய்கிறார்களோ; அவர்கள் எனக்கு அளவில்லாமல்3 வேண்டியவர்கள்.

ஸ்ரீமதே பகவதே பாஷ்யகாராய மஹாதேசிகாய நம:

பனிரெண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

---

1. அத்தியாயத்தின் ஆரம்பத்தில் அர்ஜுனன் ஒரு கேள்வி கேட்டான். அதற்குப் பதில் 2-வது முதல் ஏழு சுலோகங்களாலே பக்தியோகமே உயர்ந்தது என்று பகவான் சொன்னார். அதை இங்கே முடிக்கிறார். நடுவில் பதினொன்று சுலோகங்கள் பக்தி யோகம் செய்யமுடியாமையின் பிரஸ்தாபத்தால் வந்தவைகள்.

2. இந்த சுலோகம் 2-வது சுலோகம் சொன்னதையே சொல்லுகிறது.

3. கர்மயோகம் செய்கிறவர்கள் பகவானுக்கு வேண்டியவர்களானது 7-வது அத்தியாயம் 18-வது சுலோகத்தில் சொன்ன உதாரத்வத்தைப்பற்றி. அதாவது பக்தனுக்கு வேண்டியதைக் கொடுத்ததினால். பக்தியோகம் பண்ணுகிறவன் மிகவும் வேண்டியவனாயிருப்பது அதே சுலோகத்தில் சொன்ன பகவானுக்கு ஆத்மாவாயிருப்பதால்,

